

# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா
# அவர்கள் அரசின்
# மூன்றாண்டு சாதனைகள்


**தமிழரசு**

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள்தொடர்புத்துறையின்வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய வருடம் : சித்திரை – வைகாசி – ஆனி
மே – ஜூன் 2014
மலர் : 45 விலை ரூ.40 இதழ் : 11&12

"மக்கள்நலத்திட்டங்களைசெயல்படுத்துகின்ற எங்கள் பக்கம் மக்கள் இருக்கிறார்கள். மக்களின் பக்கம் நாங்கள் இருக்கிறோம்."

–மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**ஆசிரியர் - வெளியிடுபவர்:**
**ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
**கி. சாந்தி**
துணை இயக்குநர்(வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் :
**ச. ஜெயலலிதா**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்/
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
**இரா.இளவரசி**
**அ. மகேஸ்வரி**
**சு. கமலா**

உதவி ஆசிரியர்கள் :
**கே. சுப்பையா**
**மு. துரைசாமி**
**த. ஷேக் முகமது**

நிருபர் :
**மு. மணிமேகலை**

இதழ் உதவியாளர் / கணினி வடிவமைப்பு :
**அ. மதன்**

கணினி வடிவமைப்பு :
**இரா. பாலாஜி**
**கோ. முரளி கிருஷ்ணன்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணாசாலை, சென்னை–600 002.

தொலைபேசி : 28520407/ 28520408
நிகரி : 28520407
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

## இந்த இதழில்....

- **ஆதிதிராவிட – பழங்குடியின மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முனைப்பான திட்டங்கள்**
  ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை....1
- **வியத்தகு வேளாண் வளர்ச்சி – நாட்டின் உயர் உற்பத்திக்கான விருது**
  வேளாண்மைத்துறை....6
- **கால்நடைகள் மேம்பாட்டிற்கு கனிவான திட்டங்கள்**
  கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை....16
- **பிற்படுத்தப்பட்டோர் நலன் காணும் முற்போக்குத் திட்டங்கள்**
  பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை....27
- **விலைவாசியை கட்டுப்படுத்தி நிறைவான பயன் தரும் நிலையான திட்டங்கள்**
  கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை....32
- **தொடர்ந்து சேர்க்கப்படும் மின்நிறுவுத்திறன் தொடங்கப்படும் புதிய மின் திட்டங்கள்**
  எரிசக்தித்துறை....38
- **மாசைக் கட்டுப்படுத்தி மகிழ்ச்சி பொங்கும் சுற்றுச்சூழல்**
  சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை....44
- **வளமான வாழ்வுக்கு வழி வகுத்த திறமான வரவு செலவுத் திட்டங்கள்!**
  நிதித்துறை....52
- **நெசவாளர் நலன்காக்க ஆக்கம் நெசவுத் தொழில் செழிக்க ஊக்கம்!**
  கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை....55
- **எளிய மக்களுக்கும் உயர்தர மருத்துவச் சிகிச்சை**
  மக்கள்நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை....61
- **உயர் கல்வியில் ஒப்பில்லாப் புரட்சி!**
  உயர்கல்வித்துறை....67
- **சொக்கவைக்கும் சாலைப் பணிகள் சொகுசான சாலைப் பயணங்கள்**
  நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை....72
- **சட்டம் ஒழுங்கைக் கட்டி காக்கும் மாட்சிமிகு மக்கள் ஆட்சி**
  உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை....76
- **குடிசை வீடுகள் பொலிவு பெறும் நகர்ப்புரங்கள் நல்லமைப்புடன் பரிமளிக்கும்**
  வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை....93
- **வரலாறு காணாத முதலீடு வரலாற்றில் இது புது ஏடு!**
  தொழில்துறை....98
- **தகவல் தொழில்நுட்பம் செழித்தோங்க தன்னிகரில்லாத் திட்டங்கள்**
  தகவல் தொழில்நுட்பவியல்துறை....100

- **தொழிலாளர் நலம் காக்கும் தொகையான திட்டங்கள்**
  தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை ........ 102
- **சிறுதொழில் வளர்த்திடும் சீர்மிகு திட்டங்கள்**
  குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை........ 107
- **நகராட்சி கண்ட நல் வளர்ச்சி நல்லாட்சிக்கு ஒரு சாட்சி**
  நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ........ 109
- **பணியாளர் நலன் காக்கும் பாங்கான திட்டங்கள்**
  பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை ........ 117
- **மக்களுக்கு பயனளிக்கும் பொருட்கள் பலவற்றுக்கும் மதிப்புக்கூட்டு வரி விலக்கு!**
  வணிகவரி மற்றும் பதிவுத்துறை........ 119
- **புதிய கட்டடங்கள் உருவாக்கம் புதுமைத் திட்டங்கள் செயலாக்கம்**
  பொதுப்பணித்துறை........ 121
- **விரைந்த பட்டா மாற்றத்தால் நிறைந்த பயன் மக்களுக்கு**
  வருவாய்த்துறை ........ 132
- **ஊரகங்கள் செழிக்க உயர்வான திட்டங்கள்**
  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை........ 135
- **புதுமை சிற்பிகளாம் பள்ளிச் செல்வங்களை வார்த்தெடுக்க எண்ணற்ற சலுகைகள் – ஏராள உதவிகள்!**
  பள்ளிக்கல்வித்துறை........ 140
- **மகளிர் நலம் காக்கும் மகத்தான திட்டங்கள்**
  சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ........ 148
- **முதல் நிலைக்கு முன்னேற்றும் திட்ட வளர்ச்சியும் சிறப்பு முயற்சியும்**
  திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்துறை........ 154
- **உலகமெலாம் பரவிடும் தேமதுரத் தமிழோசை!**
  தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை........ 156
- **அழகு மிளிரும் அற்புதத் தலங்களுக்கு சிறப்பு சுற்றுலா கட்டமைப்புகள்**
  சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை ........ 169
- **சிறப்பான சிற்றுந்துகள் – செம்மையான பேருந்துகள் எழில்மிகு போக்குவரத்தின் இனிமையான பயணங்கள்**
  போக்குவரத்துத்துறை ........ 178
- **ஊக்கம் தரும் திட்டங்கள் மாற்றுத் திறனுக்கு மரியாதை!**
  மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ........ 182
- **தங்கம் வெல்வது இலட்சியம் தரணியை வெல்வது நிச்சயம்!**
  இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ........ 187
- **சட்டக்கல்வி மேம்பாட்டுக்கு திட்டமிட்ட செயலாக்கம்!**
  சட்டத்துறை........ 191
- **தியாகிகள் – தீரர்கள் நலம் பேணும் திட்டங்கள்!**
  பொதுத்துறை ........ 194
- **இல்லத்தரசிகளின் சுமை நீக்கும் இனிய மாணவர்க்கு நலம் சேர்க்கும்!**
  சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை........ 198
- **ஜனநாயகத்தின் பெருமை மக்களாட்சியின் மகிமை!**
  சட்டமன்றப் பேரவைச் செயலகம்........ 199

# ஆதிதிராவிட - பழங்குடியின மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முனைப்பான திட்டங்கள்



- தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க தனி நபருக்கு வழங்கப்படும் திட்ட அலகுத் தொகை ரூ.7.50 இலட்சம். அதில் 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம் என்ற இரண்டில் எது குறைவோ அது மானியம். இதுவரை வழங்கப்பட்ட மொத்த அலகுத் தொகை ரூ.497.78 கோடி அரசு மானியம் ரூ.152.42 கோடி.

- ஆதிதிராவிட / பழங்குடியின விடுதிகளில் தங்கியுள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு மாத உணவுப்படி ரூ.755 ஆகவும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.875 ஆகவும், உயர்வு. பள்ளி மாணவ, மாணவியரின் மொத்த மாத உணவுப்படி ரூ.6,38,66,960, கல்லூரி மாணவ, மாணவியரின் மொத்த மாத உணவுப்படி ரூ.1,10,66,125 மொத்த மாணவ,மாணவியரின் எண்ணிக்கை 97,239.

- 10 நடுநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.

- 779 ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திட, சிறப்பு மானியம் ரூ.39 கோடி.

- ரூ.162.11 கோடி செலவில் 5,24,568 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியருக்கு விலையில்லா மிதி வண்டிகள்.

- பழங்குடியினர் நலனுக்கென ரூ.735.48 கோடி ஒதுக்கீடு.

- அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக சிறப்பு நிதியுதவியாக ரூ.44.76 கோடி.

- தாட்கோ நிறுவனத்திற்குப் பங்கு மூலதனம் ரூ.33.15 கோடி.

- தாட்கோவால் பரிந்துரைக்கப்பட்ட தேசிய திரைப்பட முன்னேற்றக் கழகத்தில் திரைப்படத் தொழில் பயிற்சி முடித்த 43 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் அனுமதிக்கப் பட்ட ஆதிதிராவிட / பழங்குடியின / மதம் மாறிய கிறிஸ்துவ ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு "சுயநிதிக் கல்லூரிக்களுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த கற்பிப்புக் கட்டணம் உட்பட கட்டாயக் கல்வி கட்டணங்கள் அனைத்தையும் அரசே ஏற்க ஆணை. ரூ.1,681.42 கோடி செலவில் 21,27,842 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

- 12ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசாக ரூ.6,000ம், இரண்டாம் பரிசாக ரூ.4,000ம், மூன்றாம் பரிசாக ரூ.2,000ம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தப் பரிசுத் தொகை ரூ.7,68,000 பயன்பெற்ற மாணவியரின் எண்ணிக்கை 128.

- 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.3,000, ரூ.2,000 மற்றும் ரூ.1,000 ஆக உயர்வு.

- முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பரிசுத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.3,000/– ஆக உயர்வு. இதுவரை வழங்கப்பட்ட மொத்தப் பரிசுத்தொகை ரூ.196.94 இலட்சம் பயனடைந்தோரின் எண்ணிக்கை 7,485.

- அண்ணல் காந்தி நினைவு பரிசுத்தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியரில் ஒருவருக்கு பரிசுத் தொகை முதல் ஆண்டிற்கு ரூ.2,000/– ஆகவும், 5 ஆண்டுகளுக்கு ரூ.1,500/– ஆகவும் உயர்வு. மொத்தப் பரிசுத் தொகை ரூ.6,39,259 வழங்கப்பட்டுள்ளன. பயன் பெற்றோரின் எண்ணிக்கை 385 ஆகும்.

- உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு / தொழிற் கல்வி பயில்வோருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.7,500/– மற்றும் ரூ.8,000/– ஆக உயர்வு. இதுவரை 97,003 மாணவ, மாணவியர் பயன்பெற்றனர்.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில், 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சி அளிக்கும் தலைமையாசிரியர்களுக்கு ரூ.10,000/–ம், 100 விழுக்காடு தேர்ச்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு ரூ.5,000/–ம் ஊக்கப் பரிசு.

- போஸ்ட் மெட்ரிக் சிறப்பு உதவி திட்டத்தின் கீழ், ஆதி திராவிட விடுதியில் தங்காது பயிலும் மதம் மாறிய கிறிஸ்துவ மாணவ, மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.100 முதல் ரூ.175 மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியருக்குப் பராமரிப்புப்படி ரூ.175 முதல் ரூ.350 ஆகவும் உயர்வு.

- சோப்பு, எண்ணெய் செலவினங்களுக்காகப் பள்ளி விடுதி மாணவர்களுக்கு ரூ.50/– ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.75 ஆகவும் உயர்வு. இதுவரை பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.5,07,55,200 பயனடைந்தோர் எண்ணிக்கை 84,592 கல்லூரி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.1,13,82,300 பயனடைந்தோர் எண்ணிக்கை 12,647



- ஆதிதிராவிட / பழங்குடியின நல விடுதிகளில் மாணவ, மாணவியர்களுக்குக் கூடுதலாக 1,500 இருக்கைகள்.
- பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் இடைநிற்றலைத் தவிர்த்து தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்கக் கூடுதலாக ரூ.32 கோடி ஒதுக்கீடு. மேலும், 7, 8ஆம் வகுப்பிற்கு ரூ.28.51 கோடியில் விரிவுபடுத்துதல். ஒதுக்கிய மொத்தத் தொகை ரூ.14,873.08 இலட்சம் ஆகும். இத்திட்டத்தில் 26,71,466 பெண்கள் கல்வி பயின்று பயன்பெற்றனர்.
- மாநில சிறப்பு நிதியுதவியின் கீழ், ரூ.25 கோடி ஒதுக்கீட்டில், சுமார் 25 ஆயிரம் இளைஞர்களுக்குத் திறன் வளர் பயிற்சிகள், தொழில் முனைவோர், வேலை வாய்ப்புகள் தொடர்பான பயிற்சிகள் பயனடைந்த தொழில் முனைவோரின் எண்ணிக்கை 11,734ஆகும்.
- பத்தாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான கல்வி கட்டணங்களுக்கு ரூ.331.31 கோடி ஒதுக்கீடு. அரசு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ. 1,706.16 கோடி
- “ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு”ரூ.100 கோடிநிதி ஒதுக்கீடு.
- தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 93 ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள். ரூ.56.04 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.
- 1,080 மாணவ–மாணவியர் விடுதிகளில் இன்றியமையா கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.83.40 கோடி நிதி ஒதுக்கீடு.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையினைக் கடைப்பிடிக்காத கிராமம் ஒன்றுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த நிதி உதவி ரூ.10 இலட்சமாக உயர்வு.
- கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ.5.28 கோடி செலவில் 6,245 இரண்டடுக்குக் கட்டில்கள்.

- மத்திய அரசின் UPSC முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.50,000 ஆக உயர்வு. பயன்பெற்ற மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 54.

- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த 10 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடரல்லாத ஒரு எழுத்தாளருக்கும் சிறந்த படைப்புகளுக் கானப் பரிசுத்தொகை ஒருவருக்கு ரூ.40,000/– என உயர்வு. இதுவரை 22 படைப்பாளிகள் பயனடைந்துள்ளனர். இதுவரை ரூ.4,40,000 வழங்கப்பட்டுள்ளது.

- புதிதாக 54ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் தொடங்கப்பட்டது.

- ரூ.1.46 கோடி செலவில், 582 விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் சுகாதார நலனைப் பாதுகாக்க சுகாதாரக் குட்டை தகளி (Napkin Burner). பயன்பெற்ற மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 43,258 ஆகும்.

- ரூ.80.80 இலட்சம் செலவில் சமையல் பொருள்களைச் சரியான அளவில் விநியோகிக்க 1,616 விடுதிகளுக்கு எடை இயந்திரங்கள்.

- ரூ.30 கோடி செலவில் 200 ஆதி திராவிடர் நல தொடக்கப்பள்ளிகளைப் புதுப்பிக்கும் / பழுதுபார்க்கும் பணிகள்.

- ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.7,042 கோடி ஒதுக்கீடு. 15.29 சதவிகிதம் கூடுதல்

- கல்வி உதவித்தொகைக்கு ரூ.1,028.87 கோடி ஒதுக்கீடு. 32.20 சதவிகிதம் கூடுதல்

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வித் திட்டங்களுக்கான பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சமாக உயர்வு.

- முனைவர் பட்டம் மேற்கொள்ளும் 700 மாணாக்கர்களுக்கு வருடத்திற்கு ரூ.50,000/– நிதியுதவி. வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.3.50 கோடி. பயன் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 350.

- ரூ.2.88 கோடியில் 76 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்குச் சலவை இயந்திரங்கள்.

- ரூ.5.50 கோடியில் 100 மேல்நிலை ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு நவீன வகுப்பறைகள் (Smart Class Rooms).

- பழங்குடியினர் நலனுக்காகப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.489.48 கோடி ஒதுக்கீடு.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி I முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூ.50,000/– நிதி உதவி. இதுவரை பயன் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 32. செலவிடப்பட்ட தொகை ரூ. 16 இலட்சம்.

- பட்டயக் கணக்கர்கள்(Charted Accountants) / செலவுக் கணக்கர்கள் (Cost Accountants) புதிதாகத் தொழில் தொடங்கிட ரூ.50,000/– நிதி உதவி. பயனாளி ஒருவருக்கு ரூ.50,000 நிதிஉதவி.

- மகளிர் தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 8,406 ஆதி திராவிடப் பெண்களுக்கு நவீன தையல் இயந்திரம் மானியத்துடன் கூடிய விளிம்புக் கடனுதவி. ரூ.18.39 இலட்சம் கடன், ரூ.7.88 இலட்சம் அரசு மானியம். மொத்தம் ரூ.26.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் இரண்டு மாணவர்

மற்றும் மாணவியர்களுக்கு முதலாம் ஆண்டு பரிசுத் தொகை ரூ.1,600 ஆகவும், தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகை, ரூ.2,000/– ஆகவும் உயர்வு.

- உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சி.
- 70 விடுதிகளுக்கு, தலா ரூ.5 இலட்சம் விலையில் மொத்தம் ரூ.3.50 கோடி செலவில் 70 உணவு சமைக்க உதவும் நீராவி கொதிகலன்கள்.
- ரூ.1 கோடி செலவில் 50 பழங்குடியின மாணாக்கர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு உயர் தொழிற்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயில சிறப்புப் பயிற்சி.
- ரூ.7.50 கோடி அளவில் 100 பயனாளிகளுக்கு நில மேம்பாட்டுப் பணிகளுக்காக TAHDCO நிதியுதவி வழங்கும் திட்டத்தினை அனைவரும் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்துதல்.
- 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியரை ஊக்கப்படுத்த மாநில அளவில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசு ரூ.50,000/– இரண்டாம் பரிசு ரூ.30,000/– மூன்றாம் பரிசு ரூ.20,000/– வழங்கப்படுகிறது.



- தாட்கோ மூலம் 3,986 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 187.86 கோடி பொருளாதாரக் கடன். அரசு மானியம் ரூ.93.93 கோடி .
- திருநெல்வேலி மாவட்டத்தில் 11,000 ஆதி திராவிடர்களைக் கொண்ட சிவகிரி நகராட்சியில் மின்சாரத் தகனமேடை அமைக்க ஆணை.
- ரூ. 1 கோடி செலவில் 50 பழங்குடியின மாணக்கர்களுக்குத் தனியார் பயிற்சி நிறுவனத்தின் மூலம் IIT மற்றும் NIT ஆகிய உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து பயில சிறப்புப் பயிற்சி.

❖

# வியத்தகு வேளாண் வளர்ச்சி - நாட்டின் உயர் உற்பத்திக்கான விருது



- வரலாற்றிலேயே முதன்முறையாக 2011 ஆம் வருடம் ஜூன் மாதம் 6 ஆம் தேதி பாசனத்திற்காக மேட்டூர் அணை திறப்பு. இதனால் நெல் சாகுபடி பரப்பு 1,80,000 ஏக்கர் அதிகரிப்பு. 1,22,230 விவசாயிகள் பயன்.
- உரங்கள், வேளாண் கருவிகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களுக்கு 4% VAT வரி விலக்கு. 63.40 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.
- விவசாயிகளுக்கு டிஏபி உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைத்திட டான்பெட் நிறுவனத்திற்கு ரூ.429.94 கோடி வட்டியில்லா முன்பணம் மற்றும் கடன் உதவி.
- வேளாண் துறைக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.11,680 கோடி.
- நுண்ணீர் பாசனத்திற்குக் குறு/சிறு விவசாயிகளுக்கு 100% மானியம். இதர விவசாயிகளுக்கு 75% மானியம். நுண்ணீர் பாசன கருவிகள் பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 15,122. ரூ.121.54 கோடி அரசு மானியம்.

- நுண்ணீர் பாசன மானியத்திற்குக் குறு/சிறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் என்ற உச்ச வரம்பு நீக்கம்.
- 2,000 கிராமங்களில் 18.53 இலட்சம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி.
- ரூ1.36 கோடி செலவில் 3,198 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் தொழில் நுட்பத்துடன் பயறு வகை சாகுபடி. இதில் சொட்டு நீர்ப் பாசன முறையில் ரூ.35 கோடி நிதி செலவில் 9,652 ஏக்கர் பரப்பளவில் நடவு முறையில் துவரை சாகுபடி.
- மேம்படுத்தப்பட்ட பயறு சாகுபடித் திட்டத்தின் கீழ் 1700 கிராமங்களில் 2.70 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள் சாகுபடி.
- கரும்பு ஆதரவு விலை ஒரு டன்னுக்கு ரூ.2,650/– ஆக உயர்வு. 542.32 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்து மொத்தத் தொகை ரூ.11,070.44 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தானே புயலில் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ரூ.4.73 கோடி செலவில் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துக்களில் சிறுதளை விதைப்பைகள் விநியோகம். பயனடைந்த விவசாயிகள் எண்ணிக்கை 4,967.
- வேளாண்துறை அலுவலர்களுக்கு ரூ.13.87 கோடி செலவில் 213 புதிய வாகனங்கள்.
- உணவு தானிய உற்பத்தியில் 101.52 இலட்சம் மெ.டன் உற்பத்தி செய்து சிறப்பான சாதனை அடைந்ததற்காக மத்திய அரசால் தமிழக அரசுக்கு ‘கிரிஷிகர்மான் விருது.’
- திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றிட ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 8,421 கிலோ நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்த மதுரை மாவட்ட விவசாயி திரு. பி.சோலைமலை அவர்களுக்கு ரூ.5 இலட்சம் ரொக்க பரிசு.
- “அட்மா” திட்டத்தின் கீழ் 1,322 விரிவாக்க அலுவலர்கள் மற்றும் 8,054 உழவர் நண்பர்கள் நியமனம்.
- ரூ.42.78 கோடியில் விவசாயிகளுக்கு உழவர் பெரு விழாவில் இடுபொருட்கள் விநியோகம்.
- 13,000 கிராமங்களில் 32,123 ஏக்கர் பரப்பளவில் ரூ.42.18 கோடி செலவில் நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டம்.
- ரூ.66.80 கோடி நிதி செலவில் 1,32,887 ஏக்கர் பரப்பளவில் நடவுமுறையில் துவரை சாகுபடி தொழில்நுட்பம் பத்து மாவட்டங்களில் செயல்பாடு.
- ரூ.79.88 கோடி செலவில் 32,642 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா 80.86 இலட்சம் விவசாயிகள் பங்கேற்றுப் பயன் பெற்றனர். 18.35 இலட்சம் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டன. 11.21 இலட்சம் உழவர் ஒருங்கிணைந்த கையேடுகள் விநியோகம்.
- டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திடவும், உற்பத்தியினை அதிகரிக்கவும் ரூ.50.84 கோடி செலவில் நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட தொகுப்புத் திட்டம்.
- டெல்டா மாவட்டங்களில் மேட்டூர் அணையிலிருந்து நீர்வரத்து குறைவானதால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து சம்பா பயிரினை காப்பாற்றிட ரூ.21.06 கோடி செலவில் கூடுதல் தொகுப்புத் திட்டம் செயல்பாடு.
- மழையின்மை காரணமாக ஏற்பட்ட வறட்சி பாதிப்பிலிருந்து டெல்டா விவசாயிகளைக் காத்திட 5.32 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.30 கோடி செலவில் காப்பீடு நிறுவனத்திற்கு ஒரு பிரிமியத் தொகையை அரசே செலுத்தியது.
- டெல்டா மாவட்டங்களில் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியினை உறுதி செய்திட தடையில்லா மின்சாரம் மற்றும் ரூ.6 கோடி மதிப்பிலான இடுபொருள்கள். (உயிர் உரங்கள், நுண்சத்து மற்றும் ஜிப்சம்)
- குறுவை நெற்பயிர்களை காத்திட ரூ.12 கோடி மதிப்பிலான 6,000 எச்.டி.பி.இ. பைப்புகள்.

- டெல்டா மற்றும் டெல்டா அல்லாத பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 20.90 இலட்சம் பேருக்கு ரூ. 1,328.50 கோடி வழங்கப்பட்டது.
- ரூ.14.97 கோடி ஒதுக்கீட்டில் 10 மாவட்டங்களில் உழவர் மையங்கள்.

**தகவல் தொழில்நுட்பம் சார்ந்த விரிவாக்கம், வேளாண் தகவல் தொழில்நுட்பம்**

- விவசாயிகளுக்கு வேளாண் தகவல்களை அனுப்பும் முன்னோடித் திட்டமாக, வேலூர், விருதுநகர், திருச்சி, ஈரோடு, திருவாரூர், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள 837 களப்பணியாளர்களுக்கு GPRS, GIS மற்றும் GPS வசதிகளுடன் கூடிய கையடக்கக் கருவிகள் மற்றும் பிக்கோ மினி புரொஜெக்டர்கள் வழங்கப்பட்டன.
- வானிலை, இடுபொருள்கள் இருப்பு விவரம், பண்ணை அளவிலான உத்திகள், சந்தைப்படுத்துதல் மற்றும் திட்டப் பயன்கள் ஆகியவற்றை அறிந்து, உற்பத்தியிலுள்ள இடைவெளியைக் குறைக்கும் நோக்குடன், வட்டார மற்றும் துணை வட்டார அளவில் 125 இடங்களில், திருச்சி (26), ஈரோடு (36), திருவாரூர் (42) மற்றும் கோயம்புத்தூர் (21) மாவட்டங்களில் தொடுதிரை மையங்கள்.
- ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் பாரம்பரிய வேளாண்மைப் பொருட்களான சிகைக்காய் (சீகக்காய்) பருத்தி, இளநீர் ஆகியவற்றின் பயன்பாடு பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் திட்டம்.

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை**

- ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2,28,765 ஏக்கரில் ரூ.20.50 கோடி மதிப்பில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செயல்படுத்தப்பட்டுள்ளது.
- சாகுபடியினை மேம்படுத்திட 12,950 விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி முறைகளில் ரூ.28.12 இலட்சத்தில் பயிற்சி.
- ரூ7.37 கோடி செலவில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் பயனடையும் வகையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.
- 23,178 ஏக்கர் பரப்பளவில் ரூ.17.93 கோடி செலவில் தோட்டக்கலைப்பயிர்களில் 26 மாவட்டங்களில் துல்லியப்பண்ணையம் 8,840 அமைக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- ரூ.6 கோடி செலவில் தமிழகத்தில் 10 மாவட்டங்களில் தோட்டக்கலைத் தகவல் மற்றும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி நிதியில் தோட்டக்கலைத்துறையில் ஆரம்பம் முதல் இறுதிவரை கணினிமயமாக்கல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.46 கோடி செலவில் சென்னை, கோவை மற்றும் திருச்சி மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் “பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம்” செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 1,38,922 ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான பழச்செடிகள், மலர் செடிகள், தோட்டப்பயிர்கள் மற்றும் இடுபொருள்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன.
- குளிர்பதனக் கிடங்கு அமைத்தல், திசு வாழைச்செடிகள் மையம் அமைத்தல் ஆகியவை அமைப்பதற்காக ரூ.145.39 கோடி நிதியுதவி.
- காய்கறி மகத்துவ மையத்தில் 2 ஏக்கர் அளவில் நுண்ணீர்பாசனம், நீர்வழி உரமிடுதல் மற்றும் நிலப் போர்வை அமைத்தல் போன்ற நவீன தொழில் நுட்பங்களை உள்ளடக்கி தக்காளி, மிளகாய் மற்றும் கத்தரி சாகுபடி.
- 1,27,458 ஏக்கரில் ரூ.490.47 கோடி செலவில் தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கம்.
- 2,546 விவசாயிகள் பயனடையும் வகையில் 5,534.95 ஏக்கரில் நுண்ணீர்ப் பாசன முறை.

- இந்தியாவிலேயே முதன்முறையாக ரூ.100 கோடி செலவில் 5 குதிரைத் திறன் கொண்ட தானே சாயும் சூரிய சக்தி ஏ.சி மோட்டார் வசதியுடன் கூடிய 2,000 நுண்ணீர்ப் பாசன அமைப்புகள்.

- 422 இலட்சம் இனத் தூய்மையான நடவுச் செடிகள் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி.

- ரூ.14.23 கோடி செலவில் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளை நவீனப்படுத்திடவும், பண்ணை விளை நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

- நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் 24,596 எக்டர் பரப்பு விரிவாக்க இலக்கிற்கு 20,285 எக்டர் சாதனை அடையப்பட்டுள்ளது. இதற்காக ரூ.41.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.32.24 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ரூ.5.73 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா 15.10.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

- கொடைக்கானலில் உள்ள பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா மற்றும் செட்டியார் பூங்கா ஆகியவை ரூ.1.13 கோடி செலவில் சீரமைப்பு.

- சேலம் மாவட்டம் ஏற்காட்டில் ரூ.7.45 கோடி செலவில் அரசு தாவரவியல் பூங்காவும், ரூ.8.564 கோடி செலவில் ஐந்திணை மரபணு பூங்காவும் உருவாக்கம்.

- ரூ.3.50 கோடியில் கொடைக்கானல் அரசு தோட்டக்கலைப்பண்ணையில் ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் மாதிரி செயல்முறை பண்ணை, கன்னியாகுமரியில் ரூ.4 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ரூ.2 கோடி செலவில் தோட்டக்கலை பயிற்சி மைய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

**வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை**

- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.

- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 88 நவீன கிடங்குகள் 70 குளிர்பதன வசதி அமைப்பதற்காக ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.149.86 கோடி ஒதுக்கீடு.

- உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக, நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.22.38 கோடி ஒதுக்கீடு.

- விவசாயிகளுக்குப் பயிர் மற்றும் சந்தை சார்ந்த விவரங்களை வழங்குவதற்காகத் திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் அமைக்கும் பொருட்டு ரூ.1.17 கோடி ஒதுக்கீடு.

- தமிழகத்தில் உணவு பதப்படுத்துதலை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தினை மத்திய மற்றும் மாநில அரசின் 75:25 மானிய பங்களிப்புடன் செயல்படுத்திட ரூ.10.41 கோடி ஒதுக்கீடு.

- கிராமங்களின் அடிப்படை சந்தை கட்டமைப்பான ஊரக சந்தைகளை மேம்படுத்திட தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2.40 கோடி ஒதுக்கீடு.

- தனியார் தொழில் முனைவோரை உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட ஆர்வமூட்டிட ஸ்ரீரங்கம் மற்றும் கிணத்துக்கடவு பகுதியில் உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மையம் மற்றும் பயிற்சி நிலையம் அமைக்கும்பொருட்டு மாநில நிதித் திட்டத்தின்கீழ் ரூ.2.20 கோடி ஒதுக்கீடு.

- பரிவர்த்தனைக்கூடம், வாழை பழுக்க வைக்கும் கூடம், மிளகாய்க்கென ஒருங்கிணைந்த விற்பனை வளாகம், சேமிப்பு கிட்டங்கி, காய்கறி



மற்றும் பழங்களுக்கென குளிர்ப்பதன கிட்டங்கி, நறுமணப் பொருட்களுக்கான வணிக வளாகம் ஆகிய சந்தை உட்கட்டமைப்பு வசதிகளைத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் விற்பனைக் குழு நிதியில் ஏற்படுத்திட ரூ.18.91 கோடி ஒதுக்கீடு.

**வேளாண்மைப் பொறியியல் துறை**

- வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு வேளாண் இயந்திர மயமாக்குதல் திட்டங்களின் கீழ் 1,61,502 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.211.84 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.31.34 இலட்சம் செலவில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் 969 செயல்விளக்கங்கள்.
- ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயக் குழுக்களுக்கு ரூ.4.29 கோடி செலவில் விலையில்லா வேளாண் இயந்திரங்கள் வழங்குதல்.
- ரூ.68.66 இலட்சம் செலவில் 534 கிராமப்புற இளைஞர்களுக்குப் பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான பயிற்சிகள்.
- நதிப்பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகள், மலைப்பகுதிகள், பழங்குடியினர் வாழும் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் மண் அரிப்பினைத் தடுத்து வேளாண் நிலங்களை பாதுகாக்கவும், மண்ணின் ஈரப்பதத்தினைத் தக்கவைப்பதன் மூலம் மண்வளத்தைக் காத்து வேளாண் உற்பத்தித்திறனை அதிகரித்திடவும் நடவடிக்கை.
- மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் ரூ.62.24 கோடி செலவில் 36,576.72 எக்டர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 6,993 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத்திட்டத்தின் கீழ் 10 மாவட்ட பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் 65,194 எக்டர் பரப்பில் ரூ.154.18 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், பயிர்வளர்ச்சியின் முக்கிய காலகட்டத்தில் பாசனம் செய்வதற்கும், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் 1,458 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் ரூ.34.28 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் 26,721 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனப் பணிகள், 783 பண்ணைக் குட்டைகள், 811 நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் மற்றும் பாசனப் பகுதிகளில் குழாய் மூலம் பாசன வசதிகள் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.103.56 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- விவசாயிகள் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நில மேம்பாட்டுக் கருவிகள் வாடகைக்கு விடும் திட்டத்தின்கீழ் டிராக்டர்கள் மூலம் 4,74,777.5 மணி நேரம் உழவுப் பணிகள், புல்டோசர்கள் மூலம் 2,37,433 மணி நேரம் நில மேம்பாட்டுப் பணிகள், நெல் அறுவடை இயந்திரங்கள் மூலம் 48,297 மணி நேரம் அறுவடைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**விதைச் சான்றளிப்புத் துறை**

- விதைச் சான்றளிப்புத் திட்டத்தின்கீழ் 1,63,695 எக்டர் இலக்கிற்கு 1,39,703 எக்டர் பரப்பு பதிவு செய்யப்பட்டு, 2,98,642 மெ. டன் இலக்கிற்கு 2,62,401 மெ. டன் விதைகளுக்குச் சான்றளிப்பு.

- முதல் முறையாக 1,02,382 மெட்ரிக் டன் விதைகளுக்குச் சான்று வழங்கப்பட்டது.

- 16 புதிய வாகனங்கள் ரூ.93.86 இலட்சம் செலவில் கொள்முதல் செய்ய ஒப்புதல்.

**விதை ஆய்வு**

- விதை விற்பனை நிலைய ஆய்வுகளில் 1,96,745 எண்கள் இலக்கிற்கு, 1,92,643 எண்கள் விதை விற்பனைநிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதை மாதிரிகள் எடுத்தலில் 1,92,815 எண்கள் இலக்கிற்கு 1,72,463 எண்கள் விதை மாதிரிகள் தரப் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளன.

- ரூ.24.90 கோடி மதிப்பிலான 4,410 எண்ணிக்கை 4,963 மெ. டன் அளவுள்ள விதைக் குவியல்கள், தரக் குறைவானவை எனக் கண்டறியப்பட்டு விற்பனை தடை செய்யப்பட்டது.

- விதை சட்டமீறல்களுக்காக 1,050 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டு, 807 வழக்குகளில் அரசுக்கு சாதகமாக தீர்ப்புகள்.

**விதைப் பரிசோதனை**

- விதைப் பரிசோதனைத் திட்டத்தில் 2,52,505 எண்கள் இலக்கிற்கு, 2,56,053 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் அறிவிப்பு.

- அனைத்து விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் ரூ.21.58 இலட்சம் மதிப்பில் கணினி வசதிகள்.

- ஏழு விதைப் பரிசோதனை நிலையங்கள், மரபணு பரிசோதனை நிலையம் மற்றும் பி.டி. நஞ்சு பரிசோதனை நிலையம் ஆகியவற்றிற்கு ரூ.90.95 இலட்சம் மதிப்பில் புதிய, மேம்படுத்தப் பட்ட உபகரணங்கள்.

- ரூ.26 இலட்சம் செலவில் கண்ணம்பாளையத்தில் உள்ள இனத் தூய்மை பரிசோதனை பண்ணையில் புதிய குடோன் வசதி ஏற்படுத்துதல், கிணற்றின் உட்புற சுவர் கட்டுதல் மற்றும் தற்பொழுதுள்ள நீர்ப் பாசன வசதிகளை மேம்படுத்துதல்.

- விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் ரூ.1.13 கோடி செலவில் தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுத் தரம் மேம்படுத்தப்பட்டது.

- பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தில் (ISTA) உறுப்பினர் ஆக உள்ள அறிவிக்கை செய்யப்பட்ட கோவை விதைப் பரிசோதனைக் குழுமம்.

- பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் (ISTA) தரமேம்பாட்டு சோதனைகளில் தேர்ச்சி பெற்று பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளது. பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் (ISTA) அங்கீகாரம் பெறுவதற்கான தகுதி பெறுவது நாட்டின் அரசுத் துறைகளில்

இதுவே முதல் விதைப் பரிசோதனை நிலையம் ஆகும்.

**பயிற்சி**

- சான்று விதை உற்பத்தியைப் பெருக்கவும், தரமான விதைகளை உபயோகிப்பதில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், 1,37,555 விதை உற்பத்தியாளர், விதை விற்பனையாளர், விதை சாகுபடியாளர் மற்றும் உழவர்கள் ஆகியோருக்கு விதைச்சான்று மற்றும் விதைத் தரக் கட்டுப்பாடு பயிற்சி.
- விதை உற்பத்தியில் தொழில்நுட்பத் திறமை களை மேம்படுத்திட, அட்மா திட்டத்தின் கீழ் ரூ.57.25 இலட்சம் மதிப்பில் விதை உற்பத்தியாளர் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள்.
- அங்ககச் சான்றளிப்புத் திட்டத்தின்கீழ் 84,500 ஏக்கர் இலக்கிற்கு 67,732 ஏக்கர் பரப்பு பதிவு.
- ஜி.எஸ்.1 இந்திய நிறுவனத்திடம் இருந்து நிறுவன முற்சேர்க்கை எண் மற்றும் பார்கோடிங் வாங்கப்பட்ட, ரகசிய வார்த்தை மூலம் பாதுகாக்கப்பட்ட மூன்றாம் பிரிவு டிஜிட்டல் கையொப்பம் பெறப்பட்ட ரூ.1,60,000 மதிப்புள்ள ஏழு எண்கள் ஜி.பி.எஸ். கருவிகள் பெறப்பட்டுள்ளன.
- தகுதி வாய்ந்த அங்கக விவசாயிகளுக்கு வாய்ப்புச் சான்றிதழ் மற்றும் வணிகச் சான்றிதழ்.

**சர்க்கரைத் துறை**

- நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டத்தினைக் கொண்டு கரும்பு மகசூலை இரட்டிப்பாக்கி கரும்பு உற்பத்தியை 1,000 இலட்சம் டன்களாக உயர்த்த நடவடிக்கைகள்.
- ரூ.500/– இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1,000 எண் நிழல்வலைக் கூடங்கள் அமைத்து செதில் பரு நாற்றுகள் உற்பத்தி செய்து 7,500 ஏக்கரில் நடும் பணிகள்.

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை**

**ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம்**

- 2,413 நீர்வடிப்பகுதிகளில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி 90:10 என்ற விகிதத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதித் திட்டம் செயல்பாடு.
- ரூ. 380.90 கோடி செலவில் 3,17,415 எக்டர் நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள்.
- நிலவள மேம்பாட்டின் கீழ் 35,314 எக்டரில், நிலம் சமன்பாடு கோடை உழவு , சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள்.
- நீர்வள மேம்பாட்டின் கீழ் 2,099 கசிவு நீர்க்குட்டைகள், 9,144 பண்ணைக் குட்டைகள், 2,029 கால்நடைக் குட்டைகள், 4,621 அமிழ்வு நீர்க்குட்டைகள், 11,236 தடுப்பணைகள் மற்றும் 3,470 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தாவர வள மேம்பாட்டின் கீழ் 21,647 எக்டர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவன பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடு வளர்ப்புப் பணிகள்.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்**

- 17 மாவட்டங்களில் இத்திட்டம் 1,222 நீர்வடிப்பகுதிகளில் செயல்பாடு.
- ரூ.36.63 கோடி செலவில் 60,249 எக்டர் நிலம் மேம்பாட்டுப் பணிகள்.
- நிலவள மேம்பாட்டின் கீழ் 2,136 எக்டரில் நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நீர்வள மேம்பாட்டின் கீழ் 550 கசிவு நீர்க்குட்டைகள், 1,235 பண்ணைக் குட்டைகள், 322 கால்நடை குட்டைகள், 415 அமிழ்வு நீர்க்குட்டைகள், 1,119 தடுப்பணைகள் மற்றும் 762 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தாவர வள மேம்பாட்டின் கீழ் 6,556 எக்டர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவன பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப்பணிகள்.
- வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் 24 மாவட்டங்களில் 910 நீர்வடிப்பகுதிகளில் செயல்பாடு.

**ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்**

- ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1.13 இலட்சம் எக்டர் தரிசு நிலம் விளைநிலங்களாக மாற்றம்.
- நிலவள மேம்பாட்டின்கீழ் 2,267 எக்டரில் நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நீர்வள மேம்பாட்டின் கீழ் 417 கசிவு நீர்க்குட்டைகள், 894 பண்ணைக் குட்டைகள், 144 கால்நடைக் குட்டைகள், 771 அமிழ்வு நீர்க்குட்டைகள், 1,041 தடுப்பணைகள் மற்றும் 1,494 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தாவர வள மேம்பாட்டின் கீழ் 15,122 எக்டர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவன பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப் பணிகள்.
- தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் (நவப்ரா) திட்டத்தின் கீழ் 18 மாவட்டங்களில், 200 நீர்வடிப்பகுதிகளில் ரூ. 19.47 கோடி செலவில் 32,475 எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 460 பண்ணைக் குட்டைகள் 720 கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் 295 தடுப்பணைகள் கட்டுதல்.
- 25 மாவட்டங்களில் 155 நீர்வடிப்பகுதிகளில் 77 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நபார்டு) செயல்பாடு.
- இதுவரை ரூ.3.96 கோடி செலவில் 6,605 எக்டேர் நிலம் மேம்பாடு 1,918 எக்டரில் நிலமேம்பாட்டு பணிகள், 426 பண்ணைக்குட்டை அமைத்தல் மற்றும் 270 எக்டரில் தாவர மேம்பாட்டு பணிகள்.
- ரூ1.03 கோடி செலவில் நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டம் முதன் முறையாக தமிழகத்தில் செயல்பாடு.

**தானே நிவாரணம்**

- ரூ.791 கோடி செலவில் தானே புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மறுவாழ்வு வழங்கும் வகையில் சிறப்புத் தொகுப்புத் திட்டம்.
- பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒரு எக்டேருக்கு நெல்லுக்கு ரூ.10,000, இதர பாசனப் பயிருக்கு ரூ.7,500, மானாவாரி பயிருக்கு ரூ.4,000மும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.
- பாதிப்படைந்து முறிந்துபோன 2.13 இலட்சம் தென்னை மரங்களை வெட்டி அகற்ற ரூ.10.66 கோடி.
- உணவு உற்பத்தியினை உறுதிசெய்யவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும், பயறுவகை சிறுதளை விதைப்பைகள் ரூ.30.56 கோடி செலவில் 3.66 இலட்சம் பயனாளிகளுக்கு விநியோகம்.
- விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ரூ.4.54 கோடியில் 2.11 இலட்சம் தென்னங் கன்றுகள் நடவு.
- 21,696 ஏக்கர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட மரங்கள் ரூ.21.69 கோடி செலவில் அப்புறப் படுத்தப்பட்டன.
- 19,817.05 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி மறுநடவு 10.005 கோடியில் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.12.35கோடியில் ஆண்டுப்பயிர்கள்மறுசாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

**தேசியத் தோட்டக்கலை இயக்கம்**

- ரூ.164.45 கோடி மதிப்பில் 1,42,380 ஏக்கரில் தேசிய தோட்டக்கலை இயக்கம். ரூ.5 இலட்சம் செலவில் தேனியில் தேசிய அளவிலான வாழைக் கருத்தரங்கு.
- இண்டோ – இஸ்ரேல் திட்டத்தின் கீழ் “கொய்மலர் மகத்துவ மையம்”, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில், “காய்கறி மகத்துவ மையம்”, திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில், ரூ.18.98 கோடி செலவினத்தில் அமைத்திட நடவடிக்கை.

**பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்**

- பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ரூ.5.73 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா திறக்கப்பட்டது.
- ரூ.3.50 கோடியில் கொடைக்கானலில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் மாதிரி செயல்முறைப் பண்ணை, கன்னியாகுமரியில் ரூ.4 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ரூ.2 கோடி செலவில் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- இராமநாதபுரம் மாவட்டம் அச்சடிப்பிரம்பில் ஐந்திணை மரபணுப் பூங்கா ரூ.8.16 கோடியில் உருவாக்கப்பட்டு வருகிறது.

**அரசுத் தோட்டக்கலைப் பண்ணை**

- 5.42 கோடி இனத்துாய்மையான நடவுச் செடிகள் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றை விவசாயிகளுக்குத் தோட்டக்கலைத் துறையின் பல்வேறு திட்டங்களின் மூலம் வழங்கல்.
- ரூ.14.23 கோடி செலவில் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளை நவீனப்படுத்திடவும், பண்ணை விளை நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் திட்டம் தொடக்கம். இரண்டாம் கட்டமாக பிற பண்ணைகளை நவீனப்படுத்துவதற்கு ரூ.5.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருள்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (டான்ஹோப்)**

- ரூ.95 கோடி மதிப்பிலான இடுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் விநியோகம்.
- காய்கறிகள், பழங்கள், புளி, மிளகாய், எலுமிச்சை, திராட்சை மற்றும் வாழை போன்ற விளைபொருட்களுக்காக வணிக வளாகங்கள் மற்றும் குளிர்சாதன வசதி அமைப்புகளை, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உருவாக்குவதற்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.37.15 கோடி ஒதுக்கீடு.
- விவசாயிகளுக்குப் பயிர் மற்றும் சந்தை சார்ந்த விவரங்களை வழங்குவதற்காக திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் அமைக்கும் பொருட்டு ரூ.1.17 கோடி ஒதுக்கீடு.
- ரூ.1கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரம் விற்பனை வளாகம், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறைவிற்பனைக்கூடங்களில் குளிர்சாதன வசதி அமைப்புகளை உருவாக்கு வதற்காக, 75 சதவீதத் தொகையாக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு முகமையின் (அபீடா) நிதி உதவியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- தற்போது உள்ள சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களைக் கணினி மயமாக்குவதற்கும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.22.30 கோடி ஒதுக்கீடு.
- உணவுப் பதப்படுத்துதலை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தினை மத்திய மற்றும் மாநில அரசின் 75:25 மானியப் பங்களிப்புடன் செயல்படுத்திட ரூ.10.40 கோடி ஒதுக்கீடு.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

- திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் தொகுதியில் நாவலூர் குட்டப்பட்டில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நாட்டிலேயே முதன் முறையாக மகளிருக்காகப் பிரத்தியேகமான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

**பப்பாளி மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி**

- பப்பாளி மாவுப் பூச்சி தாக்கி 90 சதவிகிதம் சேதத்தை ஏற்படுத்தியது.

- பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய வேளாண்மையில் முக்கியப் பூச்சிகள் நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்டு, பெருக்கி 35,00,000 அசிரோபேகஸ் பப்பாயே பூச்சிகள் தமிழகமெங்கும் விடப்பட்டன. இதனால் ரூ.435 கோடி மதிப்புள்ள வேளாண் விளைப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டன. ரூ.265 கோடி மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்படவில்லை. இதன் மூலம் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்பட்டது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் தமிழ்நாட்டின் 28 மாவட்டங்களில் ரூ.14 கோடி திட்ட மதிப்பீட்டில், புதிதாக சமுதாய வானொலி நிலையங்களை நிறுவ ஏற்பாடு.

- தட்பவெப்பநிலை, வேளாண் விளைபொருட்களின் அன்றாட சந்தை விலை, விவசாயிகளின் வெற்றிக் கதைகள், பல்வேறு பயிர்த்திட்டங்கள் பற்றிய வேளாண் விஞ்ஞானிகளின் ஆலோசனைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் பற்றிய பல்வேறு செய்திகள் இச்சமுதாய வானொலி மூலமாக ஒலிபரப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெற்ற விருதுகள்**

- இந்திய வேளாண்மை வணிக மையம் வழங்கிய "தேசிய அளவிலான சிறந்த வேளாண் வணிக இயக்குனரகத்திற்கான" விருது.

- தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது மத்திய அரசின் இந்திய காப்புரிமை அலுவலகத்தால் நிறுவப்பட்டது. நிறுவனக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத்துறை மற்றும் அறிவுசார் சொத்துரிமை அலுவலகம், இந்திய அரசு ஆகியவை இந்திய தொழில்கள் கூட்டமைப்புடன் இணைந்து, "உயரிய இந்தியக் கல்வி நிறுவனங்களின் காப்புரிமை 2013" என்ற விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியது.

- ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் அடங்கிய இவ்விருதானது ஒன்பது கண்டுபிடிப்பிற்கான காப்புரிமை மற்றும் 57 கண்டுபிடிப்புகளுக்கான பதிவில் உள்ள காப்புரிமை விண்ணப்பங்களுக்காக வழங்கப்பட்டது.

- மகேந்திரா அண்ட் மகேந்திரா நிறுவனம் வழங்கிய சிறந்த மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்காக "கிருஷி சீக்ஷா விருது"

**மின் ஆளுகைக்கான தங்க விருது**

- 2011–ஆம் ஆண்டின் மின் ஆளுகைக்கான 'தங்க விருது' நிருவாகம் சீர்த்திருத்தங்கள் மற்றும் பொதுக் குறைகள் துணை மற்றும் இந்திய அரசாங்கத்தின் தகவல் தொழில் நுட்பத்துறைகள் இணைந்து தமிழ்நாடு வேளாண் துறைக்கு (AGRISNET) இணைய தளத்திற்கு வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் AGRITECH PORTAL மற்றும் AGMARKMET அடங்கும். ❖

கால்நடைப் பராமரிப்புத் துறை

# கால்நடைகள் மேம்பாட்டிற்கு கனிவான திட்டங்கள்

**கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்**

- விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் 21 மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு ரூ.126.01 கோடி செலவில் 36,000 பயனாளிகளுக்கு கறவைப்பசுக்கள் வழங்கப் பட்டுள்ளன. ஈன்ற கன்றுகள் 13,326.
- விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு ரூ.506.36 கோடி செலவில் 4,00,000 பயனாளிகளுக்குத் தலா 4 வெள்ளாடுகள் / செம்மறி யாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஈன்ற குட்டிகள் 11.57 இலட்சம்.
- நபார்டு RIDFXVII திட்டத்தின் கீழ் 360 கால்நடை நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டவும், 12 கால்நடைப் பண்ணைகளின் மேம்பாட்டிற்காகவும் ரூ.122.24 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 330 கால்நடை நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டன. 8 கால்நடைப் பண்ணைகள் மேம்படுத்தப்பட்டன. இதரப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.
- 450 கால்நடை மருந்தகங்களுக்குத் புதிய கட்டடம் கட்ட ரூ.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.50 கோடி செலவில் இத்துறையில் உள்ள 792 கட்டடங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப்பட்டு புனரமைக்கப் பட்டன. மேலும், ரூ.25.52 கோடி செலவில் 345 கால்நடை நிலையங்களில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



- கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (ESVHD) ரூ.8.96 கோடி செலவில், 24 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 90 கட்டடங்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. ரூ.16.56 கோடி செலவில், 142 புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.65 கோடி செலவில் 36,000 ஏக்கரில் கோ.4 தீவனப்பயிர்கள் விவசாயிகளின் சொந்த நிலங்களில் இறவையிலும், 16,000 ஏக்கர் மானாவாரியிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பசுந்தீவன உற்பத்தி 37.60 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிப்பு. 1,247 புல் நறுக்கும் கருவிகள் மற்றும் 2,500 புல் அறுக்கும் கருவிகள் விவசாயிகளுக்கு ரூ.6.31 கோடி மதிப்பில் 1 முறையே 75 மற்றும் 50 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1,954 ஏக்கர் விவசாயிகளின் நிலங்கள் நீர்த் தெளிப்பான் பாசனத்தின் கீழ் ரூ.4.10 கோடி மதிப்பில் 100 சதவீதம் மானியத்திலும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும் 1,954 நீர் தெளிப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.48.43 கோடி செலவில் 31 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன. 1620 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.1.51 கோடி செலவில் உழவர் பெருவிழாவில் 6,636 முகாம்களின் மூலம் 38,39,550 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 8,91,356 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- நாமக்கல் மாவட்டத்தைப்போல் பிற மாவட்டங்களிலும் கோழி வளர்ப்பை ஊக்குவித்திடும் ‘கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.47.35 கோடி நிதி ஒதுக்கீட்டில், 776 கறிக்கோழி பண்ணைகள் மற்றும் 2,042 நாட்டுக்கோழிப் பண்ணைகள்.

- ரூ.42.79 கோடி செலவில் 485 கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்வு.

- ரூ.35.86 கோடி செலவில் 585 கிளை நிலையங்கள் ரூ.6.93 கோடி செலவில் 100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தங்களாக தரம் உயர்வு. ஊரகக் கால்நடைக் கிளை நிலையங்களாகத் தரம் உயர்வு.

- டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் வறட்சி நிவாரணத் திட்டம் மூலம் ரூ.39.65 கோடி வழங்கப்பட்டு 32,360 ஏக்கர் நிலத்தில் 1 இலட்சம் மெ. டன் தீவன சோளம் உற்பத்தி செய்து 41,704 மெ.டன் ஆவின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- ரூ.12.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 125 தீவனக்கிடங்குகள் அமைக்கும் திட்டத்தின் மூலம் கால்நடைகளுக்கான 1 கிலோ உலர் தீவனம் ரூ.2.க்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் 60 தீவனக்கிடங்குகள் அமைக்கப்பட்டு 52 தீவனக்கிடங்குகளில் உலர் தீவனம் விற்கப்பட்டு வருகிறது.

- ரூ.1.07 கோடி செலவில் 50 புதிய கால்நடை கிளை நிலையங்களும், ரூ.1.42 கோடி செலவில் 20 புதிய கால்நடை மருந்தகங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

- புதியதாக 5 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களும் 11 உதவி இயக்குநர் அலுவலகங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

- 636 தற்காலிக கால்நடை உதவி மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

- கால்நடை ஆய்வாளர் நிலை – 2ஆக 289 பேர் பணி நியமனம் செய்யப்பட்டனர். 315 நபர்கள் கால்நடை ஆய்வாளர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக 20 மாணவர்கள் சேர்க்கை.
- உணவுப் பதனிடும் தொழில்நுட்பப் பாடத்தில் பிஎச்.டி, மற்றும் விலங்கியல் வணிக மேலாண்மைப் பாடத்தில் எம்.பி.ஏ ஆகிய இரண்டு புதிய பாடத் திட்டங்கள் தொடக்கம்.
- கணினி வழிக் கல்வித் திட்டத்தின் கீழ் கூடுதலாக பத்து முதுநிலைப்பட்டயப் படிப்புகள் தொடக்கம்.
- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கூடுதலாக 9 பேராசிரியர்கள் நியமனம்.
- கொடுவள்ளியில் உள்ள உணவு மற்றும் பால்வள தொழில்நுட்பக் கல்லூரியில் 23 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிட ரூ.1.62 கோடி ஒதுக்கீடு.
- இந்தியாவிலேயே முதல் முறையாக ரூ.6.48 கோடி செலவில் “விலங்கினங்களுக்கான ஆதார செல் ஆய்வு மையம்”.
- ரூ.5.10 கோடி செலவில் விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், பெரம்பலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆறு கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்.
- ரூ.4.77 கோடி செலவில் 5 கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களும் 2 நோய் பகுப்பாய்வு ஆய்வுகளும் நிறுவ நிதி ஒதுக்கீடு.
- விலையில்லா கறவைப் பசுக்களின் பால் உற்பத்தியைப் பெருக்க ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில் ‘‘தானுவாஸ் ஸ்மார்ட்’’ தாது உப்புக் கலவை உற்பத்தி.
- “கறவைமாடு வளர்ப்புத் தொழில்நுட்பங்களின் காட்சிப்படப் பேழை’’யை வர்த்தக மயமாக்கும் பொருட்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சென்னை மீடியா விஷன் நிறுவனத்துடன் 8.5.2013 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில், கால்நடை நலத்தில் ஓராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பு மற்றும் ஈராண்டு எம்.எஸ்.சி. பட்டப்படிப்பு வழங்கும்பொருட்டு ஹரியானாவில் உள்ள தேசிய கால்நடை நல நிறுவனத்துடன் 23.9.2013 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ரூ.115.55 கோடி செலவில் தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக நோய் ஆராய்ச்சி மையங்கள்.
- ரூ. 1.5 கோடி செலவில் தேனி, இராஜபாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள பல்கலைக்ளகழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்குப் புதியக் கட்டடங்கள்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், 08.10.2013 அன்று ஸ்பெய்ன் நாட்டு பார்சிலோனா பல்கலைக்கழகத்துடனும், 02.12.2013 அன்று அமெரிக்காவில் உள்ள லோமா லிண்டா பல்கலைக்கழகத்துடனும், 11.12.2013 அன்று ஸ்காட்லாந்திலுள்ள கிளாஸ்கோ பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்திலுள்ள நாட்டிங்காம் பல்கலைக்கழகத்துடனும் கல்வி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களில் கூட்டாக செயல்படுதல் மற்றும் மாணவர், ஆசிரியர் பரிமாற்றத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- தமிழக இளைஞர்களிடையே தொழில் முனைவோர்த் திறனைப் பிரபலப்படுத்தி ஊக்குவிக்கும் பொருட்டுத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சென்னையில் உள்ள தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் 23.06.2013 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ரூ.1.54 கோடி செலவில் இரண்டு தீவன பரிசோதனை ஆய்வகங்கள் மேம்படுத்தல். ❖

# பால் வளம் பெருகும் பயனுறு திட்டங்கள்!



- அதிகபட்சமாக 27.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 20.11.2012ல் ஆவின் நிறுவனம் சாதனை
- பால் பணம் பட்டுவாடா நிலுவையினை உடன் வழங்க ரூ.115.85 கோடி வழிவகை முன்பணம்.
- பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு 18.11.2011இல் பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.18/–இல் இருந்து ரூ–20/– ஆகவும், 1.1.2014 முதல் ரூ.20/– என்பது ரூ.23/– ஆகவும், 18.11.2011 முதல் எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.26/–இல் இருந்து ரூ.28/–ஆகவும், 1.1.2014 முதல் ரூ.28/–இல் இருந்து ரூ.31/– ஆகவும் உயர்த்தப்பட்டது.
- இலாபத்தில் செயல்படும் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் 17,043 உறுப்பினர்களுக்கு போனஸ், பங்கு ஈவுத் தொகை மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.26.79 கோடி.
- கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, மதுரை, சேலம் மற்றும் கன்னியாகுமரி

மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தாங்கள் ஈட்டிய இலாபத்திலிருந்து கூடுதல் விலையாக ரூ.99 கோடி வழங்கியதால் ஏறத்தாழ 3 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்.




- ரூ.126.01 கோடி செலவில் விலையில்லாக் கறவைப்பசுக்கள் வழங்கும் திட்டத்தின் பயனாளி களைக் கொண்டு 670 கிராமங்களில் புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கம்.
- ரூ.22.57 கோடி செலவில் 105 மொத்த பால் குளிர்விப்பான்கள் புதிதாக நிறுவப்பட்டன.
- ஸ்மார்ட் கார்டு திட்டம் அறிமுகம், Smart Card–ஐக் கொண்டு, ஆவின் நுகர்வோர் வீட்டிலிருந்தபடியே www.aavinmilk.com என்ற இணைய தளம் மூலம் மாதாந்திர பால் அட்டைகள் புதுப்பித்துக் கொள்ளும் வசதி.
- ஆவின் சாக்லேட், மேங்கோ மில்க்ஷேக், பால் பேடா, ஸ்ரீகந்த், மில்க் பிரெட், மில்க் கேக் மற்றும் ஏழு சுவைகளில் மில்க் ஷேக் அறிமுகம்.
- ரூ.1.50 கோடி செலவில் 100 புதிய ஆவின் பாலகங்கள் தொடக்கம். மூன்று ஆவின் நடமாடும் பாலகங்கள் தொடக்கம்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.1.2013 அன்று ஆவின் விற்பனை நிலையங்களில் புதிய 'ஊட்டி டீ' விற்பனை தொடங்கி வைக்கப்பட்டது.
- பால் விற்பனை இதுவரை நாளொன்றுக்கு 10.30 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதிகபட்சமாக 11.35 இலட்சம் லிட்டர் என்ற அளவை எட்டி சாதனை.
- இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மொத்த ஆண்டு விற்பனை வருவாய் ரூ.2,369 கோடியிலிருந்து ரூ.3,584 கோடியாக உயர்வு.
- இணையம் மற்றும் ஒன்றியத்தில் பணிபுரியும் 711 பணியாளர்களுக்குப் பதவி உயர்வு.
- மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்குச் சிறப்புத் துணை விதிகள்.
- ரூ.7 கோடியாக இருந்த உட்கட்டமைப்பிற்கான முதலீடு ரூ.87.12 கோடியாக உயர்வு.

❖ ❖ ❖

# மீன் வளமும் மீனவர் நலமும் ஒருங்கே காக்கும் ஒப்பற்ற திட்டங்கள்




- மீன்பிடி தடைக் காலத்தில் ரூ.1,000/– ஆக வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.2,000/- ஆக உயர்வு. 4,70,570 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.94.1 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கு ரூ.4,000/- வழங்கும் சிறப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் 2011 -2012 ஆம் ஆண்டில் 1,59,564 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.63.83 கோடியும் 2012-2013ஆம் ஆண்டில், 1,58,995 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.63.60 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் 1,78,500 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.71.45 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும் அண்மைக்கடல் பகுதியிலுள்ள மீன்பிடி அழுத்தத்தை குறைக்கவும், விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளை சூரை மீன் பிடிப்பிற்கு மாற்றியமைக்க அரசு ஒரு புதிய மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ. 5 கோடி ஒதுக்கப் பட்டு, இதுவரை 149 படகுகளுக்கு ரூ.3.44 கோடி மானியமாக வழங்கப் பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் புதிய சூரை மீன்படகுகள் வாங்கிட மானிய உதவியினை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக ஆக உயர்த்தி ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஆழ்கடல் சூரை மீன்பிடி படகு

கட்டுவதற்கான செலவினத்தில் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியம் வழங்கிட ரூ. 6.06 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் அரசு – தனியார் பங்களிப் புடன் செயல்படுத்திட முதற் கட்டமாக, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முறையே ரூ.14 கோடி மற்றும் ரூ. 23 கோடி செலவில் தகுதியான தனியாரை தேர்வுசெய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக திருவள்ளூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் தகுந்த இடங்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு கலந்தாலோசகர் விரைவில் தேர்வு செய்யப்படுவார். மூன்றாம் கட்டமாக தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்திடத் தகுந்த இடங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

- நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்க ரூ.18.10 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு 2012–2013ஆம் ஆண்டில் ரூ.8 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.54.64 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீன்வள தொழில்நுட்ப நிலையங்கள் அமைத்திட தலா ரூ.34.07 கோடி ஒப்பளிக்கப்பட்டு, 2012-2012ஆம் ஆண்டிற்கு தலா ரூ.7கோடி வீதம்நிதிவிடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் செயல்படத் தொடங்கி, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2013–14ஆம் ஆண்டிற்கு ரூ.5.5 கோடி வீதம் ஒப்பளிக்கப்பட்டு, அதனில் ரூ1 கோடி தற்போது வழங்கப்பட்டுவிட்டது. மீதம் ரூ.10 கோடி விரைவில் விடுவிக்கப்படும்.

- மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 2011-2012ஆம் ஆண்டில் 1,98,021 பயனாளிகளுக்கு ரூ.23.67 கோடியும், 2012–2013 ஆம் ஆண்டில் 1,98,449 பயனாளிகளுக்கு ரூ.23.65 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 2013–2011 ஆம் ஆண்டிற்கு 2,06,032 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.24.72 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்தின் கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் 1,58,919 மீனவ மகளிருக்கு ரூ.19.04 கோடியும், 2012 -2013 ஆம் ஆண்டில் 1,66,673 பயனாளிகளுக்கு ரூ.19.94 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டிற்கு 1,83,958 மீனவ மகளிர் பயனாளிகளுக்கு ரூ. 22.07 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- பாரம்பரிய மீன்பிடி படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் 2,450 பயனாளிகளுக்கு ரூ.6.46 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2012-2013ஆம் ஆண்டில் 1,398 மீனவ பயனாளிகளுக்கு ரூ. 4 கோடி.

- தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட 5,000 பாரம்பரிய மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் 1 லிட்டர் ரூ.25/- என்ற மானிய விலையில் வழங்கிட 2011-2012ஆம் ஆண்டிற்கு ரூ.47.23 கோடியும், 2012-2013ஆம் ஆண்டிற்கு ரூ. 47.60 கோடி மற்றும் 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ 53.87 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

- தமிழக அண்மை கடல் பகுதிகளில் மீன்வளத்தை அதிகரிக்க 17 இடங்களில் மீன் உறைவிடங்கள் நிறுவுவதற்கு ரூ.2.63 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 2012–2013ஆம் ஆண்டில் 105 மீனவ இளைஞர்களுக்குக் கடற்சார் கல்வி பயில ரூ.50 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது. மேலும் 2013–2014ஆம் ஆண்டிற்கு 100 மீனவ இளைஞர்களுக்கு ரூ 50 இலட்சம் அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் 65 மீனவ இளைஞர்களுக்கு மொத்தம் ரூ.25.25 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ்



ரூ. 16.23 கோடி செலவில் சென்னை மீன்பிடித் துறைமுகத்தினை நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல், தேங்காய்ப்பட்டினம் மற்றும் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய ரூ.258.67 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி கிராமத்தில் சுமார் ரூ.72 கோடி செலவில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மீன்பிடித்துறைமுகம் அமைக்க செய்யத்தக்கமைக்கான ஆய்வு நடைபெற்று வருகிறது.

- நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மத்திய மாநில நிதியுதவியுடன் ரூ.78.50 கோடி ஒப்பளிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.09.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கடலூர் மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகளுக்காகத் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியின் கீழ் ரூ.10.34 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணி முடிவுற்றுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம் ஆகிய இடங்களில் கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றி ஒப்படைத்தல் (BOOT) திட்டத்தின் கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல் முறையில் முட்டம் மீன்பிடி துறைமுகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் தோராயமாக ரூ. 50 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது. விரிவான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ரூ.78.93 இலட்சம் செலவில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஜெகதாப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள முடசலோடை ஆகிய இடங்களில் மீன் இறங்குதளங்களைப் புதுப்பிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும் ரூ7.78 கோடி செலவில் கடலூர் மாவட்டத்திலுள்ள முடசலோடையில் மீன்

இறங்கு தளத்தை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தேசியவேளாண்மைமற்றும்ஊரகவளர்ச்சிவங்கி - ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு (NABARD-RIDF) நிதியுதவியுடன் ரூ. 62.95 கோடி செலவில் தமிழ்நாட்டில் 11 மீன்இறங்கு தளங்களும், ரூ. 37.05 கோடி செலவில் 12 இடங்களில் அரசு மீன் விதைப் பண்ணைகள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. நான்கு இடங்களில் பணிகள் நிறைவுற்று மீதமுள்ள எட்டு இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- பாரம்பரிய மீனவர்கள் பயன்பெறும் வகையில் 10 இடங்களில், சூரிய சக்தி மற்றும் காற்று விசை மூலமாக இயங்கும் வழிகாட்டி விளக்குகள் ரூ.1.03 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

- அவசரகால சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.132.35 கோடி திருத்திய மதிப்பீட்டில், நாகப்பட்டினம் மற்றும் பழையாறில் மீன்பிடித்துறைமுகம் நவீனப்படுத்தும் பணி, நாகூர் மற்றும் அன்னன்கோயில் மீன்இறங்கு தளங்கள் நவீனப்படுத்தும் பணிகளுடன் ஆறுகளின் முகத்துவாரம் நிலைப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறும் வகையில் 10 மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அமைக்க ரூ.50 இலட்சம் செலவில் 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு இவை தற்போது செயல்பாட்டில் உள்ளது.

- நீர்த்தேக்கங்களில் மீன்வளத்தினைப் பாதுகாக்கும் பணிக்காக 38 கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குவதற்கு ரூ.107.11 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு 38 படகுகளும் 16 வெளிப்பொருத்தும் இயந்திரங்களும் வாங்கப்பட்டு, சார்நிலை அலுவலகங்களுக்கு நீர்தேக்கங்களின் பாதுகாப்புப் பணிக்காக விநியோகிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

  அ) சூ ரை மீ ன் பி டி ப் பு ப் ப யி ற் சி வழங்குவதற்காக கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குவதற்காகத் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் 2011–2012இன் கீழ் ரூ.84.97 இலட்சம் நிதி, மீன்வள தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. கண்ணாடி நாரிழைப் படகுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

  ஆ) பூண்டி நீர்த்தேக்கத்தில் மிதவைக் கூடுகளில் மீன்வளர்ப்பதற்காகத் தேசிய வேளாண்மை அபிவிருத்தி (தேசிய புரத இணை உணவு இயக்கம்) திட்டம் 2011–2012 இன் கீழ் ரூ.334 இலட்சம் நிதி மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மீன் வளர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.1.35 கோடி செலவில் பரங்கிப்பேட்டையில் ஒருங்கிணைந்த கடலோர மீன்வளர்ப்பு மாதிரிப் பண்ணை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.85.85 இலட்சம் செலவில் 1,300 கடல் மீனவர்களுக்கு பிற மாநிலங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ரூ.20.81 கோடி செலவில் அரசு மீன் பண்ணைகளை சீரமைத்தல், அலுவலர்களின் திறன் மேம்பாட்டு பயிற்சி, கணவாய் மீன் பிடித்தல், நவீன மீன் விற்பனை அங்காடிகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் உட்பட 2012-2013 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்த்தல், மீன் மற்றும் இறால் உற்பத்தியைப் புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றி பெருக்குதல், உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலை வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்திட ரூ.4.43

கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்தில் ஒரு மீன் சுத்தப்படுத்தும் நிலையம் ரூ.1 கோடி செலவில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் ரூ. 12.05 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், 2012-2013ஆம் ஆண்டிற்கு 14 மாவட்டங்களிலுள்ள 40 உபவடிநிலைப் பகுதிகளுக்குப் பல்வேறு மீன் உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ரூ.6.96 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ 3.56 கோடி நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் மீன்உற்பத்தியைப் பெருக்கிட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்திட கூடுகளில் மீன்வளர்த்தல் மற்றும் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்புப் பண்ணை அமைத்தல் போன்றவற்றிற்கு ரூ.12.92 கோடி ஒப்பளிக்கப்பட்டு மீன்வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் செயல்படுத்திட 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ. 5.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

- உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட பல்வேறு திட்டங்கள் ரூ.3.66 கோடி செலவில் 2012–2013ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டுள்ளன.

- நபார்டு – RIDF XIX திட்டத்தின் கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதலான வசதிகளை மேம்படுத்த அரசால் ரூ.75 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகளுக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- தரங்கம்பாடி, ஆற்காட்டுத்துறை, ஜெகதாப் பட்டினம் மற்றும் இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மாதிரித் திட்டம் மற்றும் முழுமையான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக அரசால் ரூ.2 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

- நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தியை அதிகரிக்க 2011–2012ஆம் ஆண்டில் ரூ. 79.04 இலட்சம் செலவில் 69.26 இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் ஆண்டில் ரூ. 25.87 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு விரலிகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 53 நீர்த்தேக்கங்களின் மீன்பிடிக்கும் உரிமையை குத்தகைக்கு விடும் கொள்கை முடிவினை தமிழக அரசு எடுத்துள்ளது. இதுவரை 16 நீர்த்தேக்கங்கள் ரூ.5.41 கோடிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

- 2012–2013ஆம் ஆண்டில், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டத்தின்கீழ் மீன்வள மேம்பாட்டிற்காக ரூ 66.60 இலட்சம், மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில் உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் இறால் வளர்ப்போருக்கு மானியம் வழங்கிட ரூ. 3.33 கோடி ஒப்பளிக்கப்பட்டு, ரூ. 2.79 கோடி மானியமாக பயனாளிகளுக்கு விடுவிக்கப் பட்டுள்ளது. இதன்மூலம் 118 எக்டேர் பரப்பளவில் நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களை சார்ந்த 77 உவர்நீர் மீன் பண்ணை விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- பல்வேறு நலத்திட்டங்களை மீன்துறை அலுவலர்கள் சீரிய மற்றும் விரைவாக நிறைவேற்றும் பொருட்டும் தமிழக அரசு

ரூ.1.14 கோடி செலவில் 19 ஈப்புகளை வழங்கியுள்ளது.

- ரூ. 1.83 கோடி செலவில் 21 நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் இயங்கி வருகிறன. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் ரூ.7.70 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் மீன் கையாளும் நிலையம் ரூ.93 இலட்சம் செலவில் சென்னை, சாந்தோமில் அமைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் மீன் கையாளும் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. மேலும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் இதற்குத் தேவையான நிதியுதவி ரூ. 63.07 இலட்சம் பெறப்பட்டு அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இவ்வரசு பொறுப்பேற்ற பின் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தில் 19 ஆண்டுகளுக்குப் பின்,6நபர்களுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 20 ஆண்டுகளுக்குப்பிறகு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் தகுதியான பணியாளர் களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடுமீன்வளர்ச்சிக்கழகம்முதல்முறையாக ரூ.44.55 இலட்சம் பங்கு ஈவுத் தொகையாகத் தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்நீலாங்கரையில் மீன்துறைக்குச் சொந்தமான இடத்தில் நவீன மீன்விற்பனை அங்காடி மற்றும் மீன் உணவகம் ரூ.89.08 இலட்சத்தில் அமைக்கப்படவுள்ளது.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.30.75 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த 20 மீனவ மகளிர்களை பிற மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு மீன் விற்பனை மற்றும் மீன் உபபொருட்கள் தயாரித்தல் பயிற்சி அளித்து அவர்களுக்குத் தலா ஒரு நடமாடும் மீன்விற்பனை ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் வையாவூர் மீனவ கிராமத்தில் நவீன மீன்விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் தேர்தல் 03.07.2013 அன்று நடைபெற்றது. தேர்ந்தேடுக்கப்பட்ட 17 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் 17.7.2013 அன்று பொறுப்பேற்றுள்ளனர்.

- மீனவர்களுக்கு விற்பனை வரிவிலக்களிக்கப் பட்ட டீசல் வழங்கிட கடலூர் துறைமுகம் மற்றும் ஜெகதாப்பட்டினம் மீனவ கிராமங்களில் டீசல் விற்பனை நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 175 விசைப்படகு மீனவர்களும் 292 நாட்டுப்படகு மீனவர்களும் பயனடைவர்.

- 2011-2012 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இத்துறையின் பல்வேறு பதவிகளுக்கான 412 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

- ரூ.250 கோடி மதிப்பீட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் மாமல்லபுரத்தில் கடற்காட்சியகம் நிறுவிட கலந்தாலோசனை மற்றும் விளம்பரச் செலவினங்களுக்காக அரசு ரூ. 2.5 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. செய்யத்தக்கமைக்கான அறிக்கை தயாரித்தல் மற்றும் பரிவர்த்தனை சேவையை வழங்கிடும் கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு செய்யத்தக்கமைக்கான ஆய்வு விரைவில் தொடங்கப்படவுள்ளது.

- சேத்துப்பட்டு ஏரியினை புனரமைத்து ரூ.42 கோடி செலவில் பொழுதுபோக்கு தூண்டில் மற்றும் பசுமைப் பூங்கா அமைப்பதற்கான விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இதற்கான 2012–2013 ஆம் ஆண்டிற்கு முதல் கட்டமாக ரூ.22 கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் நலம் காணும் முற்போக்குத் திட்டங்கள்

- வளமான பிரிவினரை நீக்கம்செய்யாமல் தொடர்ந்து 69 சதவிகித இடஒதுக்கீட்டினைச் செயல்படுத்தி சமூகநீதி நிலை நாட்டப்பட்டுள்ளது.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப் படும் ஆண்டுப் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீடு ரூ.4 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்வு.
- 51 தமிழாசிரியர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கம். இரண்டு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளி களாகவும் 4 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.
- பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவர்களுக்காக மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 15 பள்ளிகளில் ஆங்கில வழி பாலர் வகுப்புகள் ( LKG ) தொடக்கம்.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு வழங்கப் படும் பரிசுத்தொகை ரூ.10,000/– ரூ.7,000/– மற்றும் ரூ.5,000/– என உயர்வு. ரூ.69,000 மதிப்பீட்டில் 11 மாணவ, மாணவியர்கள்பயன்.



- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாகத் தேர்ச்சி பெறச்செய்யும் உயர்நிலை/மேனிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தலா ரூ.10,000/– பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் புதிய திட்டம் செயலாக்கம். ரூ.2.40 இலட்சம் மதிப்பில் 24 தலைமை ஆசிரியர்கள் பயன்.

- ரூ.2.74 கோடி செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள், குடிநீர் வசதிகள், ஆய்வக உபகரணங்கள், கழிப்பறைகள், கூடுதல் வகுப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள்.

- வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 208 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.200.43 கோடி ஒதுக்கீடு.

- சிறுபான்மையினருக்கான 6 விடுதிகள் உட்பட 56 விடுதிகள் துவங்கப்படவுள்ளது. விடுதிகளில் கூடுதலாக 10 விழுக்காடு மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம்.

- 500 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் புதிய சமையல் பாத்திரங்களும், ரூ.6.25 இலட்சம் செலவில் புதிதாக அரவை இயந்திரங்களும் வழங்கப் பட்டன.

- பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயின்று அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் ரூ.10,000/–, ரூ.7,000/–, ரூ.5,000/– என உயர்வு. ரூ98,000/– மதிப்பில் 14 மாணவ, மாணவியர்கள் பயன்.

- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தப்பட்டு, ரூ.63.80 இலட்சம் மதிப்பில் 1,681 மாணவ, மாணவியர்கள் பயன்.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பல்வகைச் செலவினம் முறையே ரூ.25/– மற்றும் ரூ.50/– என்பதிலிருந்து ரூ.50/– மற்றும் ரூ.75/– ஆக உயர்வு. ரூ.42.63 இலட்சம் மதிப்பில் 78,537 மாணவ, மாணவியர் பயன்.

- 120 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.53 இலட்சம் செலவில் எரிவாயு இணைப்புகள் (LPG).

- 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு ரூ.57 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள்.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் தலா 5 இடங்கள்.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.3,000/–, ரூ.2,000/–, ரூ.1,000/– முறையே ரூ.6,000/–, ரூ.4,000/–, ரூ.2,000/– என இரண்டு மடங்காக உயர்வு. ரூ.37.08 இலட்சம் மதிப்பில் 937 மாணவ, மாணவியர் பயன்.

- அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 4,38,749 மாணவ, மாணவியருக்கு ரூ.112.08 கோடி செலவில் மிதிவண்டிகள்.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 5,23,985 மாணவ, மாணவியருக்கு ரூ.115.71 கோடி செலவில் கல்வி உதவித் தொகை.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புளைச் சார்ந்த 8,597 பயனாளிகளுக்கு ரூ.3.10 கோடி செலவில் விலையில்லா தையல் இயந்திரங்கள்; 6,308 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி செலவில் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிருவாக மானியம் 45 இலட்சம் ரூபாயிலிருந்து, ஒரு கோடி ரூபாயாக உயர்வு.

- உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2,400லிருந்து 2,600 ஆக உயர்த்தப்பட்டு 750 ரூபாயாக உள்ள மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்வு. ரூ.5.90 கோடி மதிப்பில் 2,600 நபர்கள் பயன்.

- வக்ஃப் வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவையிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக் கொடைகளை வழங்க ஒருமுறை மானியமாக ரூ. 3 கோடி.

- தமிழ் மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிருவாக மானியம் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்வு.

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 67,111 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பயனாளிகளுக்கு ரூ.159.75கோடியும்,தமிழ்நாடுசிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 19,769 சிறுபான்மையினத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.50.42 கோடி கடன்.

- ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப் படுவதைப் போன்று 75,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்பு உதவித்திட்டத்தின் கீழ் கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்களும் ரூ.16.44 கோடி செலவில் முழுமையாக வழங்கப்படுகிறது.

- 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் 1,000 இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம் வரை வருடத்திற்கு ஒரு நபருக்கு ரூ.3,000/– வீதம் பரிசுகள் வழங்க “முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம்” என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- மாவட்ட அளவில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் 12 ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழிற் கல்லூரிகளிலும் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு முறையே தந்தை பெரியார் மற்றும் பேறிஞர் அண்ணா விருதுத்தொகை ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி ரூ.1.86 கோடி செலவில் 1,865 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 6,550 மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த ஒரு நபருக்கு ரூ.2,800/– வீதம் ரூ.1.83 கோடி செலவில் பயிற்சி.

- விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் இடையில் ஓய்வு பெறும்போது பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படுவது போன்று கல்வி ஆண்டு இறுதி வரை பணிபுரியும் வகையில் பணி நீட்டிப்பு.

- திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தில் (Skill Development Training) ரூ.80.74 இலட்சம் செலவில் பல்வேறு பயிற்சிகளைப் பெறும் 4,370 பயனாளிகளுக்கு ரூ.400/– மாதாந்திரப் பயிற்சிக் கால உதவித்தொகை வழங்கல்.

- 45 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் துப்புரவாளர் பணியிடங்கள் அனுமதி.

- மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதும் 2,41,129 மாணவ, மாணவியருக்கு ரூ.2.47 கோடி செலவில் சிறப்பு வழிகாட்டிகள் (Special Guide).

- 1,275 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.70.17 இலட்சம் செலவில் மின் அரைப்பான்கள்.
- 22 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.1.46 கோடி செலவில் பாதுகாப்புச் சுவர்கள் அமைப்பு.
- 105 கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 8,465 மாணவ, மாணவியருக்கு ரூ.3.71 கோடி செலவில் கட்டில்கள் வழங்கல்.
- பள்ளி வாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காகப் புதிதாக "வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி" உருவாக்கப்பட்டு ரூ.3 கோடி நிதி.
- மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகை ரூ.55.36 இலட்சம் வழங்கல்.
- கிறிஸ்த்துவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் ரூ.1 கோடி நிதி உதவி வழங்கும் திட்டம் மூலம் இதுவரை ரூ1.78 கோடி செலவில் 891 பயனாளிகள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டனர்.
- ரூ.2.50 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினருக்கு மொத்தம் 11 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவக்க ஆணை.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை யினர் விடுதிக் கட்டடங்களின் பராமரிப்பு பணிகளுக்காக ஒரு முறை ஒதுக்கீடாக ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி ரூ.23.24 கோடி அனுமதி.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குச் சொந்தக் கட்டடம்.
- 476 மாணவியர் விடுதிகள் மற்றும் 77 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு அவர்களின் நலனைப் பாதுகாக்க ரூ.1 கோடியே 39 இலட்சம் செலவில் தலா ஒரு சுகாதார எரி உலை (Sanitary Napkin Incinerator) வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- 1,294 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 80,064 மாணவ/ மாணவிகளின் நலனுக்காக ரூ.2 கோடியே 96 இலட்சம் செலவில் போர்வைகளும், பாய்களும், நூலகப் புத்தகங்களும் வழங்க ஆணை.
- 300 விடுதிகளுக்கு ரூ.18 இலட்சம் செலவில் பல்நோக்கு தீ அணைப்பான் கருவிகள் வழங்க ஆணை.
- விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவுகளுக்கான கட்டணத்தை பள்ளி விடுதி மாணவ/ மாணவியருக்கு ரூ.2/–லிருந்து ரூ.20/–ஆகவும் கல்லூரி விடுதி மாணவ / மாணவியருக்கு ரூ.3/–லிருந்து ரூ.40/–ஆகவும் உயர்த்தியும், இதற்காக ரூ.85 இலட்சம் ஒதுக்கீடு. 80,064 மாணவ, மாணவியர் பயன்.
- விடுதிகளில் நல்ல தரமான உணவு வழங்கப்பட வேண்டும் என்ற நல்நோக்கத்திற்காக எரிவாயு சிலிண்டர்களின் விலை ஏற்றத்தின் காரணமாக ஏற்பட்ட கூடுதல் செலவினத்தை அனுமதித்து விடுதி மாணவ/மாணவியரின் உணவுக் கட்டணத்தை பள்ளி விடுதிக்கு ரூ.650/–லிருந்து ரூ.755/– ஆகவும் கல்லூரி விடுதிக்கு ரூ.750/– லிருந்து ரூ.875/–ஆகவும் உயர்த்தி ஆணை. 81,164 மாணவ, மாணவியர்கள் பயன்.
- கல்லூரிகளுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்



திருவாரூர் மாவட்டம், நன்னிலம்
மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி
முகப்புத் தோற்றம்

திண்டுக்கல் மாவட்டம், பெரியகோட்டை
பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி
முகப்புத் தோற்றம்

வகுப்பைச் சார்ந்த 44,961 மாணவர்களுக்கு ரூபாய் 9 கோடியே 75 இலட்சம் செலவில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் உண்டி உறையுள் கட்டணங்கள் வழங்க ஆணை.

- 52 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.10.40 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்க ஆணை.

- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை மேம்படுத்த கள்ளர் சீரமைப்புக் கல்வி அலுவலருக்கு ரூ.9 இலட்சம் செலவில் ஓட்டுநர் பணியிடத்துடன் கூடிய வாகனம் வழங்க ஆணை.

- உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகப் பயின்று 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.15,000/– ரூ.10,000/– மற்றும் ரூ.5,000/– என உயர்வு. 6 சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பயன்.

- 10ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுத் தொகை ரூ.10,000/– ரூ.5,000/– மற்றும் ரூ.3,000/– என உயர்வு. 7 சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன்.

- 1,266 பிவ/மிபிவ/சீம மற்றும் சி.பா நல விடுதிகளுக்கு ரூ.1.1 கோடி செலவில் இட்லி வேக வைப்பான் வழங்க ஆணை.

- பிவ, மிபிவ/சீம நல விடுதிகளுக்கு ரூ.39 இலட்சம் செலவில் விளையாட்டுச் சாதனங்கள் வழங்க ஆணை.

- 50 பிவ/மிபிவ/சீம நல விடுதிகளுக்கு ரூ.6.25 இலட்சம் செலவில் அரவை இயந்திரம் வழங்க ஆணை.

- 52 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.26 இலட்சம் செலவில் விளையாட்டு பொருட்கள் வாங்க ஆணை.

- ரூ.1.20 கோடி செலவில் மசூதிகள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பு.

❖ ❖ ❖

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# விலைவாசியை கட்டுப்படுத்தி நிறைவான பயன் தரும் நிலையான திட்டங்கள்!




**வேளாண்மைப் புரட்சிக்கு வித்திடும் கூட்டுறவு நிறுவனங்கள்**

- வேளாண் உற்பத்தியை அதிகரிக்க 30,02,420 விவசாயிகளுக்கு ரூ.12,165.23 கோடி பயிர்க்கடன்.
- உரிய காலத்தில் பயிர்க் கடன்களைத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டு ரூ.384.65 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் தேங்காயைத் தரமான கொப்பரையாகத் துரிதமாக மாற்ற ரூ.1.47 கோடி செலவில் 25 சூரிய ஒளி தேங்காய் கொப்பரை உலர் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- பாமணி உர உற்பத்தி நிறுவனத்தில் உரிய எடையில் துரிதமாகச் சிப்பமிட ரூ.32/– இலட்சம் செலவில் அதிவேக சிப்பமிடும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.
- விவசாய வேலையாட்கள் பற்றாக்குறையினைக் களைய 1,236 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.25.60 கோடி அரசு மானியத்தில் ரூ.54.18 கோடி மதிப்பில் உழவு இயந்திரம், கதிரடிக்கும் இயந்திரம், மினி டிராக்டர் போன்ற இயந்திரங்கள் மற்றும் இதரக் கருவிகளுடன் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.
- மாநிலம் முழுவதும் டிஏபி உரம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாண் பெருமக்களுக்குத் தேவையான அளவில் உரிய நேரத்தில் கிடைக்கும் வகையில் கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கும் வட்டியில்லாக் கடன் ரூ.130.50 கோடியிலிருந்து ரூ.150/– கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- விவசாயப் பெருமக்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்களாக 1.93 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.842.95 கோடி கடன்.

**பயிர்க்கடன்**

- 5,25,923 ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு ரூ.1,875.91 கோடி.
- 5,95,561 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.2,361.05 கோடி.
- 18,53,687 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.7,245.57கோடி வழங்கப்பட்டுள்ளது.

**வளம் காணும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வு வளம் பெற**

- 18,449 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.60.23 கோடி வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.
- தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் மாற்றுத் திறனாளி உறுப்பினர்கள் 5 ஆண்டு சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன் 2,000 நபர்களுக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.10/– இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதிக அளவில் கடன் பெறும் பொருட்டு பங்கு மூலதன மானியமாக 2,000 நபர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.50/– இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர் மேம்பாட்டிற்கான மகத்தான பணி**

- மகளிர் தொழில் திறனை ஊக்குவித்து, பொருளாதாரத் தன்னிறைவு பெற 33,849 மகளிருக்கு ரூ.120.03 கோடியில் தொழில் முனைவோர் கடன்.
- பணிபுரியும் மகளிர் குடும்ப தேவைக்காக 27,909 மகளிருக்கு, ரூ.110.08 கோடி சம்பளக் கடன்.
- மகளிர் சுய தொழில் செய்து மேம்பட 2,11,645 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1,465.45 கோடி கடன்.
- நகர கூட்டுறவு வங்கிகளில் 2,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.10/– இலட்சம் வட்டியில்லா பங்கு மூலதனம் கடனாகவும், 2013–14ஆம் ஆண்டு 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.25/– இலட்சம் பங்கு மூலதனம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 4,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.20/– இலட்சம் வட்டியில்லாப் பங்கு மூலதனம் கடனாகவும், 2013–14ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் கடன் பெறும் அளவு உயர்த்தப்பட்டு 22,000 உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.5.5 கோடி பங்கு மூலதனம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் பேணும் கூட்டுறவு நிறுவனங்கள்**

- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களின் கடன் பெறும் தகுதியை உயர்த்தி, நபர் ஒன்றுக்கு ரூ.2,500 வீதம் 40,000 உறுப்பினர்களுக்கு ரூ.10 கோடி பங்கு மூலதனம் மானியம்.
- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனம் கடனாக 24,000 நபர்களுக்கு தலா ரூ.250/– வீதம் ரூ.60/– இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- நகரக் கூட்டுறவு வங்கிகளின் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் உறுப்பினர்களின் கடன்

பெறும் தகுதியினை அதிகரிக்கும் பொருட்டு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் 3,000 பேருக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.15/– இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டில் பங்கு மூலதனம் மானியமாக தலா ரூ.2500/– வீதம் 10,000 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு ரூ.2.50/– கோடி வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் உள்கட்டமைப்பு மற்றும் நிதியாதாரங்களை மேம்படுத்தி, நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்திட ரூ.30.88 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- மலைவாழ் மக்கள் வசிக்கும் இருப்பிடங் களுக்கே சென்று அவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்திட பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலாக 10 நகரும் நியாய விலைக் கடைகள்.
- மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்யும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் விற்பனைத் திட்டத்தின் கீழ், பொருட்களை கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்து பொது வணிக முத்திரையிட்டு விற்பனை செய்வதற்கு சாமை அரவை இயந்திரம் ரூ.1,50,000 மதிப்பில் நிறுவுவதற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.6,46,804 மதிப்புள்ள 2,496 கிலோ தேன், ரூ.4,57,840 மதிப்புள்ள 6,926 கிலோ புளி, ரூ.1,67,852 மதிப்புள்ள 2,415 கிலோ சாமை மற்றும் ரூ.2,91,760 மதிப்புள்ள 4,614 கிலோ வரகு விற்பனை.

**மக்கள் நலப்பணியில் கூட்டுறவு நிறுவனங்கள்**

- வீட்டுவசதி மற்றும் வீட்டு அடமானக் கடன்களாக 37,578 நபர்களுக்கு ரூ.746.77 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- நியாய விலையில் தரமான மருந்துகள் கிடைக்க 210 கூட்டுறவு மருந்தகங்கள் திறக்கப்பட்டன.
- மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2.62 கோடி நபர்களுக்கு ரூ.94,129.31 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளன.
- சிறு தொழில் மேற்கொள்ளவும், சிறு போக்குவரத்து வாகனங்கள் இயக்கவும், 1,19,045 நபர்களுக்குப் பண்ணைச் சாராக் கடன்கள் ரூ.712.33 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறு வணிகர்களை, கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் வகையில் சிறு வணிகக் கடன்கள் 4,18,179 நபர்களுக்கு ரூ.395.96 கோடி வழங்கப்பட்டுள்ளன.
- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ரூ.50/– இலட்சம் வீதம் சிறப்புக் காசுக் கடன் உதவி வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதன் மூலம், அத்தகைய சங்கங்களுக்கு வணிகத்திறனை ரூபாய் ஒரு கோடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு 72 சங்கங்களுக்கு ரூ.63.59 கோடி மதிப்பில் நிதியுதவி வழங்கப்பட்டு 15,255 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**நவீன மயமாக்கலும், வாடிக்கையாளர்களின் நலனும்**

- இந்தியாவில் இரண்டாவது மாநிலமாக, 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் வங்கியியல் உரிமத்தைப் பெற்று சாதனை.
- கூட்டுறவு வங்கிகளின் சிறந்த செயல்பாடு மற்றும் நவீன மயமாக்கப்பட்டதன் விளைவாகக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை ரூ.26,245.17 கோடியிலிருந்து ரூ.43,483.70 கோடியாக உயர்ந்துள்ளது.
- கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டி அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த ரூ.20.50 கோடி மாநில அரசின் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் தீர்வு முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் வணிக வங்கிகளுக்கு இணையான தொழில்நுட்ப தர அளவினை எட்டியுள்ளது.
- 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் கணினி சேவையை ரூ.8.80 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 783 கிளைகள் மைய வங்கியியல் சேவையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை வங்கியில் இந்தியாவில் எந்தப் பகுதிக்கும் நிதிமாற்றம் செய்ய மின்னணு வங்கியியல் சேவை

(E-Banking), நிகழ்நேர நிதி பரிமாற்றம் முறை (RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதி மாற்றம் (National Electronic Fund Transfer) ஆகிய வசதிகள்.

- மாவட்ட மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 102 கிளைகள் ரூ.11.93 கோடி செலவில் குளிர் சாதன வசதியுடன் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.
- ரூ.1 கோடிக்கு மேல் வணிகம் செய்யும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை, 3,854 லிருந்து 4,419 ஆக உயர்ந்துள்ளது.
- மக்களுக்கு சேவை புரியும் வகையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக 39 புதிய கிளைகள்.
- 4,529 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 3,474 சங்கங்கள் பாதுகாப்பு அறையுடன் செயல்பட்டு வருகின்றன.
- 4,095 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் கணினி மயமாக்கல் பணி முழுமையாக முடிவுற்றுள்ளது.
- 1,121 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குத் தலா ரூ.25,000/– வீதம் மொத்தம் ரூ.2.8 கோடி செலவில் கணினிகள் வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.
- டெல்டா பகுதிகளில் 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– என்ற வீதத்தில் ரூ.519.29 கோடி 3,51,895 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் 16,98,148 விவசாயிகளுக்கு ரூ.784.99 கோடி நிவாரணத் தொகை விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- தானே புயலால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு கடலூர் மாவட்டத்தில் 1,92,847 விவசாயிகளுக்கு ரூ.106.73 கோடியும், விழுப்புரம் மாவட்டத்தில் 79,771 விவசாயிகளுக்கு ரூ.25.94 கோடியும் அரசு நிவாரணம் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 37 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் அதன் பாதுகாப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில் ரூ.6.51 கோடி செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை அமைக்கப்பட்டுள்ளது.
- மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1,038 கிளைகளில், 30.04.2014 வரை 1,013 கிளைகளில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு காமிராக்கள்.

**விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில்**

- காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 52 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக 3,203 டன் காய்கறிகள் ரூ.9.09 கோடி அளவிற்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தோட்ட பயிரிடுவோர்க்கு கூட்டுறவு வங்கிகளின் வாயிலாக ரூ.82.58 கோடி அளவிற்கு காய்கறி சாகுபடிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- வெளிச் சந்தையில் நிலவிய புளி விலை ஏற்றத்தினை தடுக்கும் பொருட்டு சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கையின் கீழ் 182.367 மெட்ரிக் டன் புளி கொள்முதல் செய்யப்பட்டு ஒரு கிலோ புளி ரூ.60/– வீதம் 179.917 மெட்ரிக் டன் புளி பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- வெளிச்சந்தையில் விலை உயர்வை கட்டுப்படுத்த ரூ.50 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக விலைக்கட்டுப்பாட்டு நிதியம் உயர்த்தப்பட்டது.

**கணினி எடைமேடை**

- வேளாண் பெருமக்கள் தங்கள் விளை பொருட்களை உடனுக்குடன் துல்லியமாக எடைபோட ஏற்ற வகையில் பெருந்துறை, பவானி மற்றும் உசிலம்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.56.67 இலட்சம் மதிப்பீட்டில் கணினி எடை மேடைகள் நிறுவப்பட்டுள்ளன.

**சேமிப்பு கிடங்கு வசதியில் கூட்டுறவு நிறுவனங்கள்**

- விவசாயிகளின் விளை பொருளுக்கு ஆதாய விலை கிடைக்கும் வகையில் பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும், அதன் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்கவும் மொத்தம் 4,11,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,317 கிடங்குகள் ரூ.375.59 கோடி அரசு மானியத்துடன் ரூ.554.96 கோடி மொத்த மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டு 2,72,500



மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2,251 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**தானிய ஈட்டுக் கடன்**

- விவசாயிகளின் விளை பொருள்களுக்கு சந்தையில் நியாயமான விலை கிடைக்கும் வகையில் ரூ.652.28 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு அச்சகங்கள் நவீன மயமாக்கல்:**

- தனியார் அச்சகங்களுக்கு நிகராக 7 கூட்டுறவு அச்சகங்கள் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் நவீன மயமாக்கப்பட்டுள்ளது.

### உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## முழுமையான உணவு பாதுகாப்பு ஏனைய மாநிலம் வியக்கும் இணையில்லா செயல்பாடு

- 1.84 கோடி அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கும், 19,528 இலங்கை அகதிகளுக்கும் மற்றும் 63,988 காவலர் அட்டைதாரர்களுக்கும் ரூ.281 கோடி மதிப்பீட்டில் பொங்கல் பரிசுத் தொகுப்பு.
- 1.66 கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி. 6.97 கோடி பேர் பயன்.
- 19.02 இலட்சம் அந்தியோதயா குடும்ப அட்டைதாரர்களுக்கு 35 கிலோ விலையில்லா அரிசி. 79.88 இலட்சம் பேர் பயன்.

- காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 52 பண்ணைபசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக 3 ஆயிரத்து 203 டன் காய்கறிகள் ரூ. 9.09 கோடி ள அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தோட்ட பயிரிடுவோர்க்கு கூட்டுறவு வங்கிகளின் வாயிலாக ரூபாய் 82 கோடியே 58 இலட்சத்து 25 ஆயிரம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

- வெளிச்சந்தையில் விலை உயர்வை கட்டுப்படுத்த ரூ.100 கோடியில் விலை கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டது.

- நெடுந்தொலைவிலும், தொடர்பற்ற நிலையிலுமுள்ள பகுதிகளில் 859 புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 300 புதிய முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

- சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியன கிலோ ரூ.30/– என்ற விலையிலும், பாமாயில் லிட்டருக்கு ரூ.25/– என்ற விலையிலும் வழங்கப்படுகிறது. இதற்கான மானியத் தொகை ரூ.1,006.27 கோடி ஆகும்.

- தமிழக அரசு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகையாக, சாதா ரக நெல்லுக்கு ரூ.50/–ம் சன்னரக நெல்லுக்கு ரூ.70/–ம் கூடுதலாக குறைந்தபட்ச ஆதார விலையாக சாதாரக நெல்லுக்கு ரூ.1,310/–ம், சன்னரக நெல்லுக்கு ரூ.1,345/–ம் வழங்கப்படுகிறது.

- காரீப் பருவம் 2013–14–ல் விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை குறைக்கும் வகையில் 1,486 நேரடி கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாளது தேதியில் 3,84,222 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் 2,53,312 மெட்ரிக் டன் சன்னரக நெல் 1,30,910 மெட்ரிக் டன் சாதாரண ரக நெல். விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக இதுவரை ரூ.24.28 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

- தற்போதுள்ள அரிசி ஆலைகளை மேம்படுத்தும் விதமாக ரூபாய் 58.86 கோடி மதிப்பீட்டில் 14 அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.36 கோடி மதிப்பீட்டில் மீதமுள்ள 9 அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்படும்.

- 300 மூட்டைகள் மற்றும் அதற்கு அதிகமாக நெல் இருப்பு வைத்திருக்கும் விவசாயிகளின் விளை நிலங்களுக்கு சென்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்கிறது.

- வெளிச்சந்தையில் உயர்ந்து வரும் அரிசி விலையினைக் கட்டுப்படுத்த, வெளிச்சந்தையிலிருந்து ஒரு இலட்சம் மெ.டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு கிலோ அரிசி ரூ.20/– என்ற விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் அமுதம் கூட்டுறவு சிறப்பங்காடிகள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலைகளால் நடத்தப் பெறும் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் சிறப்பங்காடிகள் மூலமாகவும் மற்றும் தேவையின் அடிப்படையில் மாவட்டத் தலைநகரங்கள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- மாநில அரசின் சீரிய முயற்சியினால் மத்திய அரசால் அரிசிக்கு விதிக்கப்பட்ட சேவை வரிக்கு விலக்கு.

- மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சுற்றுக் கிளை (Circuit Bench) மதுரையில் திறக்கப்பட்டது. சென்னை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை (தெற்கு) மற்றும் (வடக்கு) நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு புதிய அலுவலக கட்டடங்கள் திறப்பு

- அத்தியாவசியப் பொருட்களின் கடத்தலை தடுக்கும் பொருட்டு, 74 காவலர்கள் உள்ளடக்கிய 12 புதிய குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வு அலகுகள் ரூபாய் 4.25 கோடி செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

❖

# தொடர்ந்து சேர்க்கப்படும் மின் நிறுவு திறன் தொடங்கப்படும் புதிய மின் திட்டங்கள்




- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டங்களின் பங்கு மற்றும் கூட்டு முயற்சி மின் திட்டங்கள் மூலம் 2,500 மெகாவாட் மின்சார நிறுவுத் திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைப்பு.
- தமிழ்நாடு மின்சார வாரியம் – தேசிய அனல் மின் கழகக் கூட்டு முயற்சி திட்டத்தின் (வல்லூர்) (3x500 மெகாவாட்) முதல் மற்றும் இரண்டாவது அலகுகள் 29.11.2012 மற்றும் 25.08.2013 அன்று செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.
- மேட்டூர் அனல் மின் திட்டம் நிலை–II வணிக ரீதியான மின் உற்பத்தியை 12.10.2013 அன்று தொடங்கியது.
- தமிழ்நாடு மின்சார வாரியம் – தேசிய அனல் மின் கழகம் கூட்டு முயற்சி, வல்லூர் அலகு 3, 28.02.14 அன்று மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. பங்கு – 350 மெகாவாட்.
- வடசென்னை அனல்மின் நிலையம் நிலை–II–ன் (2x600 மெகாவாட்) அலகு 1 வணிக ரீதியான உற்பத்தியை 2014–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கியுள்ளது. அலகு–2 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 1,225 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

- நீண்ட கால மின் தேவையை எதிர்கொள்ள, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 3330 மெகாவாட் மின்சாரத்தை 2014ஆம் ஆண்டு முதல் பதினைந்து ஆண்டுகளுக்குக் கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

- 660 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் நிறுவ 27.02.14 அன்று குர்கவானிலுள்ள லான்கோ இன்ப்ரா டெக் நிறுவனத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- உடன்குடி மிக உய்ய மின் திட்டத்தை (2x660 மெகாவாட்) அரசுத் திட்டமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாயிலாகச் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஆய்வில் உள்ளன.

- எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டத்திற்கான (2x660 மெகாவாட்) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன.

- உப்பூர் (2x800 மெகாவாட்) அனல் மின் திட்டத்தை செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- உடன்குடி விரிவாக்க (1x800மெகாவாட்) அனல் மின் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- தற்போதுள்ள எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு மாற்றாக 660 மெகாவாட் திறன் கொண்ட புதிய மாற்று மின் உற்பத்தி திட்டம் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- 2012–2013 ஆம் ஆண்டில் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை–I (3x210 மெகாவாட்) இந்திய சராசரி மின் சுமை காரணியான 69.93 விழுக்காட்டை விட அதிகபட்ச மின்சுமை காரணியுடன் 91.68 விழுக்காடுகள் பெற்று இயங்கியது.

- தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012 வெளியிட்டு, மூன்று ஆண்டுகளுக்குள் சூரிய மின் சக்தி மூலம் 3,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 708 மெகாவாட் அளவிலான சூரியஒளி மின்சாரம் உற்பத்தி செய்ய தனியார் உற்பத்தியாளர்களுக்கு இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 60 கிலோவாட் திறன் கொண்ட ரூ.55.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப் பட்டுள்ள மேற்கூரை சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைமை அலுவலகக் கட்டடத்தில் 30.12.2013 அன்று திறக்கப்பட்டது.

- ரூ.1,178.683 கோடி மதிப்பீட்டில் புதிதாக 107 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 3,110.088 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதை இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

- ரூ.5,000 கோடி முதலீட்டில் குறிப்பாக சென்னை நகர மின் கட்டமைப்பு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் ரூ.3,572 கோடி நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

- காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும்மின்சாரத்தைத் திறம்பட வெளியேற்ற 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய 400 கி.வோ. மின் கட்டமைப்புகள் தப்பக்குண்டு, ஆனைக்கடவு மற்றும் இராசிப்பாளையத்தில் ரூ.1,192 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் காற்றாலை மின்சாரத்தை வெளியேற்ற உதவும் மின் தொடரமைப்பை ரூ.1,593 கோடி செலவில் ஏற்படுத்தத்திட்டமிட்டுஇதற்கானநிதிஉதவியை ஜெர்மனி அரசின் KfW நிறுவனத்திடமிருந்து பெறக் கருதியுள்ளது.

- நிதிச் சீரமைப்புத் திட்டத்திற்குரூ.12,765 கோடி தமிழக அரசால் கடன் உத்தரவாதமாக அளிக்கப்பட்டுள்ளது.

- கூடுதல் கடன் பெற ரூ.34,413 கோடி தமிழக அரசால் கடன் உத்தரவாதமாக அளிக்கப் பட்டுள்ளது.






- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ. 26,255.35 கோடியை தமிழக அரசு நிதியுதவியாக அளித்துள்ளது.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 6,353.49 கோடி அளவிலான கடன் சுமையை தமிழகஅரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

- ஏழு நகரங்களில் கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்துதல் (SCADA) ரூ.139.79 கோடி செலவில் நடைமுறைபடுத்த மற்றும் 87 நகரங்களில் 28,022 தானியங்கி மின் திறன் காரணி கட்டுப்படுத்தும் கருவிகளை ரூ.150 கோடி செலவில் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மின்சாரத்தைச் சேமிப்பதற்கான ஒரு முயற்சியாக, விலையில்லா மின்சாரம் பெறும் 11.5 இலட்சம் குடிசை நுகர்வோரின் வீடுகளில் உள்ள இழை பல்புகளுக்குப் பதிலாக விலையில்லா சி.எப்.எல். (CFL) பல்புகள் அளிக்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.12.2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- 28.61 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை**

- 59,907 பசுமை வீடுகளில் சூரியசக்தியால் இயங்கும் மின் விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

- 19,000 சூரியஒளி தெருவிளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன; 21,035 சூரியஒளி தெருவிளக்குள் அமைக்கப்பட்டு வருகின்றன.

- முதலமைச்சரின் சூரிய மேற்கூரை ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் 1 கி.வாட். திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் கூடிய சூரிய மேற்கூரை அமைக்க 10,000 வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு இலக்கு நிர்ணயித்து, ஒருவருக்கு 1 கி.வாட்டிற்கு ரூ.20,000/– முதலீட்டு ஊக்கத்தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டு, இதுவரை 829 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

- 10 அரசுக் கட்டடங்களில் பல்வேறு திறன் கொண்ட சூரிய மின் கட்டமைப்புடன் இணைக்கக் கூடிய மொத்தம் 48.5 கி.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரை மின் நிலையங்கள் ரூ.44.20 இலட்சம் செலவில் நிறுவிட ஆணை.

- தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் பகுதி மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக 30 கி.வாட் மேற்கூரை சூரிய ஒளி மின் நிலையம் ரூ. 24.34 இலட்சத்தில் நிறுவ ஆணை.

- 103 பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர் மரபினர் மற்றும் சிறுபான்மை நலக் கல்லூரி விடுதிகளில் ஒவ்வொன்றும் 1 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையங்கள் நிறுவிட ஆணையிடப்பட்டு, 64 விடுதிகளில் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள கட்டடங்களில் சூரிய மேற்கூரை அமைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல், அதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், ஒப்பந்தப்புள்ளி பெற்று முடிவு செய்தல் போன்ற பணிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து வருகிறது.

**மின் ஆய்வுத்துறை**

- எரிசக்தி சேமிப்புத் தினமான 14.12.2011– அன்று அனுசரிக்கும் வகையில் ரூ.5.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் எரிசக்தி சேமிப்புக் குறித்து விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்த மாணவர்கள் பேரணி சென்னை மெரினா கடற்கரையில் நிகழ்த்தப்பட்டது.

- பன்னாட்டினர் அளவில் உள்ள ஆய்வுக் கூடங்களிடையே சோதனை மற்றும் அளவுகள் நிர்ணயம் ஒத்துக்கொள்ளப்படும் வகையில் சோதனைப் பணிகள் மேம்படுத்தப்பட ஏதுவாக இத்துறையின்கீழ் அமைந்துள்ள சோதனைக் கூடம், சோதனை மற்றும் அளவுகள் நிர்ணய ஆய்வுக் கூடங்களை ஏற்பளிக்கும் தேசிய வாரிய (NABL) அமைப்பால் ஜுலை 2012–ல் அங்கீகரிக்கப்பட்டது.

- எரிசக்தி சிக்கன நடவடிக்கைகளை தமிழ்நாடு முழுவதும் உள்ள வணிக வளாகக் கட்டடங்களில் மற்றும் 100 கிலோவாட் பளு மற்றும் அதற்கு மேல் உள்ள அனைத்துப் பெரிய கட்டடங்களிலும் அமலாக்கம் செய்யும் வகையில், கட்டடங்களில் கட்டட அனுமதிவழங்கும்பொழுது எரிசக்தி சிக்கன விதித் தொகுப்பு (Energy Conservation Building Code-ECBC) பின்பற்றப்பட வழிகாட்டும் வகையில் தமிழக அரசு தொழில்நுட்பக்குழுவினையும் ஆலோசனை மற்றும் கொள்கை வகுக்க மேல்மட்டக் குழுவினையும் அமைத்துத் தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

- பலதரப்பட்ட எரிசக்தி சிக்கனம் மற்றும் எரிசக்தி திறன் பற்றிய திட்டங்களைக் கண்காணிக்கவும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் எரிசக்தி சேமிப்பிற்க்கான கொள்கைகளை வகுக்கவும் மாநில எரிசக்தி சேமிப்பு இயக்கம் உருவாக்கம்.

- எரிசக்தித் திறனை அதிகரிக்கும் வகையில், அரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், தொழிற்சாலைகளில் உள்ள கட்டடத்தில் குறைந்தபட்சம் மூன்று நட்சத்திரக் குறியீடுள்ள மின் சாதனங்கள் மட்டுமே நிறுவப்படவேண்டும் என அரசு ஆணை.

- எரிசக்தியைத் திறம்பட உபயோகித்து மிச்சப்படுத்தும் வகையில் தொழிற்சாலை களுக்கு இலக்கை நோக்கி அடையும் வர்த்தகத் திட்டம் (PAT) என்ற பெயரில் திட்டம் அறிவிக்கப்பட்டுத் திட்டத்தின் கீழ்வரும் நுகர்வோருக்கு இத்திட்டம் குறித்து விளக்கி அதனை நிறைவேற்றுவதில் அவர்களுக்குள்ள




பங்கினை எடுத்துரைக்கும் வகையில் மாநில எரிசக்தி சேமிப்பு ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படும் தமிழ்நாடு மின் ஆய்வுத்துறை இரண்டு நாள் கருத்தரங்கை நடத்தியது.

- நன்னிலை சான்று வழங்கப்பட்ட புதிய மின் அமைப்புகளான சுயமான மின் உற்பத்தி நிலையம் (Independent Power Plants) கோஜெனரேஷன் மின் உற்பத்தி நிலையம் (Co-Generation Power Plants), கேப்டிவ் மின் உற்பத்தி நிலையம் (Captive Power Plants) மற்றும் தொழிற்சாலைகள், வணிக வாளகம் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பு அமைப்புகள் ஆகிய 715 அமைப்புகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 1,176 புதிய காற்றாலைகளுக்கு நன்னிலை சான்றுகள் வழங்கப்பட்டன.
- 2,687 புதிய மின் இயங்கேணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன
- 1,769 மின் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்கள் மற்றும் மின்பணியாளர்களான மின் மேற்பார்வையாளர்கள், மின் உற்பத்தி நிலைய இயக்குனர்கள், மின்கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர் போன்றவர்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடம், பன்னாட்டினர் அளவில் உள்ள ஆய்வுக்கூடங்களிடையே சோதனை மற்றும் அளவுகள் நிர்ணயம் ஒத்துக்கொள்ளப்படும் வகையில், சோதனை மற்றும் அளவுகள் நிர்ணய ஆய்வுக்கூடங்களை ஏற்பளிக்கும் தேசிய வாரிய (NABL) அமைப்பால் ஜூலை 2012–இல் அங்கீகரிக்கப்பட்டது.
- இதன் தொடர்ச்சியாக ஏற்பளிப்பில் உள்ள மின்சாரத்தை அளக்கும் திறன் பத்து இலட்சத்தில் 270 பங்கு அளவு (270 ppm- Parts Per Million) மிகத் துல்லியமாக அளக்கும் விதமாக அக்டோபர் 2013 லிருந்து மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக பத்து இலட்சத்தில் 1000 பங்கு துல்லியமாக அளக்கக் கூடிய மும்முனை மின் அளவிகளை (1000 PPM) உலகளாவிய தரத்தில் சோதனை

செய்ய முடியும். இந்தத் தரத்தில் தேசிய அளவில் மொத்தம் ஐந்து ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இந்த வசதி காரணமாக மின் உற்பத்தி நிலையங்களின் மின் அளவிகளைச் சோதனை செய்திட முடியும்.



- அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடத்தில் மேற்கொள்ளப்படும் மும்முனை மின் அளவு சோதனைகளை மேம்படுத்த ஏதுவாக மேம்படுத்தப்பட்ட மும்முனை மின் திறன் அளவி 2.46 கோடி ரூபாயில் ஜெர்மனியிலிருந்து அக்டோபர் 2013 – இல் கொள்முதல் செய்யப் பட்டுள்ளது. இந்த வசதி காரணமாக பத்து இலட்சத்தில் 200 பங்கு அளவு (200 ppm) மிகத் துல்லியமாக அளக்கக் கூடிய மும்முனை மின் திறன் அளவி மற்றும் மின் அளவிகளை உலகலாளவிய தரத்தில் சோதனை செய்ய முடியும். இதனால் தேசிய அளவில் உள்ள தேசிய பௌதிக ஆய்வுக்கூடம் – புது டெல்லி, ஆய்வுக் கூடத்திற்கு அடுத்தபடியாக உள்ள ஆய்வுக் கூடங்களில் ஒன்றாக மும்முனை மின் அளவை அளக்க அல்லது சோதனை செய்யும் நிலையில் இந்த ஆய்வுக் கூடம் இருக்கும். இதற்கான NABL ஏற்பளிப்பு பெற தேவையான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

- மின்னமைப்புகளில் மின் பாதுகாப்பினை கண்காணிக்கவும் மற்றும் உறுதி செய்யும் பொருட்டும், இத்துறையின் மின் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் சட்ட திட்ட ஆய்வுகளின் போது கையடக்க அளவில் 1. மின் கசிவு கண்டறியும் கருவி, 2. மின்னோட்டத்தை அளக்கும் கருவி மற்றும் 3. மின் தடை காப்பீட்டு சோதனைக் கருவி ஆகியன கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இக்கருவிகளைப் பயன் படுத்தி மின் ஆய்வாளர்கள், ஆய்வின்போது கள சோதனை செய்து மின்னமைப்பின் மிக முக்கியமான மின் அளவீடுகளான மின் கசிவு, மின்னோட்டம் மற்றும் மின் காப்பானின் மின் தடை ஆகியவற்றை உறுதி செய்து மின்சாரத்தினால் விளையக்கூடிய தீங்குகளை உபயோகிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்று பாதுகாப்பினை உறுதி செய்ய வழி வகை ஏற்படும்.

❖ ❖ ❖

# மாசைக் கட்டுப்படுத்தி மகிழ்ச்சி பொங்கும் சுற்றுச்சூழல்

- நுண்ணுயிரிகள் மூலம் ஊட்டி ஏரியினை தூய்மைப்படுத்தும் பணிகளுக்காக 2012–13ஆம் ஆண்டில் ரூ.6.89 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோவிலுக்குச் சொந்தமான நான்கு திருக்குளங்களை மறுசீரமைப்பதற்கு ரூ.4.04 கோடி நிதி ஒதுக்கீடு.
- சுற்றுச்சூழல் மன்றங்கள் பேரணிகள், போட்டிகள், சூழல் முகாம்கள், பசுமை தினங்கள் கொண்டாடுதல், ஆசிரியர்களுக்குச் சூழல் தொடர்பான பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் தொடர்பான நடவடிக்கைகளை இம்மன்றங்கள் மேற்கொள்ள ஏதுவாக 2013–2014ஆம் ஆண்டில் ரூ.2.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2011–2012ஆம் மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்துவது மற்றும் பிளாஸ்டிக் உபயோகத்தினால் சுற்றுச்சூழலுக்கு நேரிடும் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.
- சுற்றுச்சூழல் மன்றங்கள் உள்ள பள்ளிகளுக்குத் தலா 1,000 நீர், மண் மற்றும் 32 காற்று பரிசோதனை உபகரணங்கள் ரூ.41.27 இலட்சத்தில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப் பட்டுள்ளன.
- ரூ.30 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்குச்



சுற்றுச்சூழல் அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது

- அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீய விளைவுகள்

குறித்து விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

- 10 கல்வி மாவட்டங்களில் ரூ.20 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- மன்னார் வளைகுடாப் பகுதிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்களுக்காகவும், அது தொடர்பான வெளியீடுகளுக்கும் ரூ.20 இலட்சம் நிதிஒதுக்கப்பட்டுப்பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சூழல் நுண்பகுதிகளை மீளச் செய்வதற்கான நடவடிக்கைகள்**

- சென்னை சேத்துப்பட்டில் உள்ள ஏரியினைச் சுற்றி விளையாட்டு, மீன் பிடி மற்றும் சூழல் பூங்கா ரூ.22 கோடி செலவில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
- கயத்தாறில் 500 கிலோ வாட் Solar Photo Voltaic System உடன் இணைந்த 1.5 மெகா வாட் திறன் கொண்ட காற்றாலை ரூ.12 கோடி செலவில் நிறுவப்பட உள்ளது.
- வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி தேசிய பூங்கா, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம் மற்றும் பழவேற்காடு பறவைகள் சரணாலயம் ஆகியவற்றில் நுண்ணுயிரிகள் மூலம் சூழல் நடவடிக்கைகள் ரூ.4 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சோலைக் காடுகளில் உள்ள தாவரங்களை மறுஉற்பத்தி செய்யும் திட்டம் ரூ.2.07 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பிளாஸ்டிக் பயன்பாட்டினைக் குறைத்தல்**

- பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் மறு சீரமைக்கப்பட்டு வருகின்றன இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ.193.85 கோடியில் இதுவரை ரூ.189.08 கோடி செலவில் 1,397 கி.மீ நீளத்திற்குச் சாலைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. மேலும் இச்சாலைகள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளன.
- பிளாஸ்டிக் குவியல்களை சேகரிக்கவும் தூளாக்கும் இயந்திரங்களுடன் சேகரிக்கும் மையம் அமைக்க ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக மக்கும் பொருள்களாலான பைகள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மக்களுக்கும் ரூ.75 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் விநியோகிக்கப்படும்.
- பிளாஸ்டிக் குறித்த விழிப்புணர்வினை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த "Message on Wheels" என்ற திட்டம் ரூ.64 இலட்சம் செலவில் மாநிலம் முழுவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பத்து மாவட்டங்களில் பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து பயன்படுத்தும் பத்து மையங்கள் ரூ.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பிளாஸ்டிக் பயன்பாட்டினைக் குறைப்பதில் முக்கிய பங்காற்றிடும் மூன்று சுயஉதவிக் குழுக்கள், மூன்று சிறந்த கிராமங்கள் மற்றும் மூன்று சிறந்த சுத்தமான பசுமைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு ரூ.30 இலட்சம் செலவில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**சுற்றுச்சூழல் மன்றங்களை பலப்படுத்துதல் மற்றும் புதிய சுற்றுச்சூழல் மன்றங்களை உருவாக்குதல்**

- சுற்றுச்சூழல் மன்றங்களை உருவாக்குவதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வரும் நமது மாநிலத்தில் ஏற்கெனவே 1,869 சுற்றுச்சூழல் மன்றங்கள் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. 2012–2013ஆம் ஆண்டில் ரூ.80 இலட்சம் செலவில் மேலும் 3,200 சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 5,069 மன்றங்களின் தொடர் நடவடிக்கைகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.1.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் புதிதாக 3,200 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள் ரூ.80 இலட்சம் ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்**

- திருப்பூரில் கழிவு நீர் வெளியேறுவதில் பூஜ்ய நிலையினை எய்திட 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூ.179.34 கோடி விடுவிக்க ஆணைகள் வெளியிடப்பட்டன.
- ஒருமுறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்தாதிருக்க ரூ.32 இலட்சம் ஒதுக்கீட்டில் 32 மாவட்டங்களிலும் விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- கழிவு நீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்கையில் உயிரிழப்பினைத் தவிர்க்க ரூ. 25 இலட்சம் ஒதுக்கீட்டில் 3,000 தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- மறைமலைநகரில் புதிய மாவட்ட ஆய்வகம் ரூ.58 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 11.9.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.
- முதன்முறையாக வாரியத்தின் அனைத்து மாவட்டச் சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு 34 கையடக்கக் கணினி (Tablet Computer) ரூ.3.96 இலட்சம் செலவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.9.2012 அன்று வழங்கப்பட்டது .
- தமிழகத்தில் முதன் முறையாக சுற்றுச்சூழல் மேம்பாட்டில் சிறந்து விளங்கிய 12 தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 11.9.2012 அன்று பசுமை விருதுகள் வழங்கினார்கள்.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வகங்களுக்கு ரூ.1.28 கோடி செலவில் வாங்கப்பட்ட 86 மிதக்கும் மிண்துகள்கள் 10 (PM 10) கருவிகள் மற்றும் ரூ.11.33 இலட்சம் செலவில் வாங்கப்பட்ட 5 மிதக்கும் நுண்துகள்கள் 2.5 (PM 2.5) கருவிகள் மாவட்ட சுற்றுச்சூழல்– ஆய்வகங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.9.2012 அன்று வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு இடர்படி ரூ.60லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வசதி இந்த நிதி ஆண்டிலிருந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் வழங்கப்படுகிறது.
- நிருவாக வசதிக்கெனவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் இரண்டடுக்காகச் செயல்பட்டு வந்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் மாவட்டம், மண்டலம் மற்றும் தலைமை அலுவலகம் என மூன்றடுக்காக செயல்படுகின்றது.
- பொது மக்கள் மற்றும் தொழிற்சாலைகளின் வசதிக்கென அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கென ஒரு புதிய மாவட்ட அலுவலகம் அரியலூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலை களை முனைப்பாகக் கண்காணிக்க மேலும் ஒரு புதிய மாவட்ட அலுவலகம் பல்லடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.
- தொழில் நகரமான கோவை மாவட்டத்தில் உள்ள அநேக தொழிற்சாலைகளை கண்காணிக்க கோவை வடக்கிற்கென ஒரு புதிய மாவட்ட அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சியர்களுக்குப் பசுமை விருதுகளை வழங்கினார்கள்.

**அரசு ரப்பர் கழகம்**

- அரசு ரப்பர் கழகத்திலுள்ள பணியாளர்களுக்குத் தனியார் தோட்ட பால்வடிப்பாளர்கள் சம்பளத்தை விட நாள் ஒன்றுக்கு ரூ.29.15 கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.
- அரசு ரப்பர் கழகம் ISO 9001–2008 தரச் சான்று பெற்றுள்ளது.
- தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு 2013ஆம் ஆண்டு ரூ.1.38 கோடி போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

- வன உயிரின வார விழாவிற்காக ரூ.2 இலட்சம் வனத் துறைக்கு இக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய ரப்பர் கூட்டம் 2014க்காக ரூ.1 இலட்சம் இந்திய ரப்பர் ஆராய்ச்சி நிறுவனம், கோட்டயத்திற்கு இக்கழகத்தால் வழங்கப்பட்டது.
- அரசு ரப்பர் கழக பால் உற்பத்திக்காக ஏப்ரல் 2013 முதல் 3.3.2014 வரை தொழிலாளர்கள் மொத்தம் 2,96,779 மனித நாள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- 2012–2013ஆம் ஆண்டில் 157.85 எக்டேரில் உயர் மகசூல் தரக் கூடிய ரப்பர் மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

## வனத்துறை

## வன வளம் பெருகும் வண்ணமிகு திட்டங்கள்

- மாநிலத்தில் பசுமைப்பரப்பினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி மூன்றாண்டுகளில் ரூ.122.17 கோடி மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் 1 கோடியே 95 இலட்சம் மரக் கன்றுகள் ரூ.49.15 கோடி செலவில் நடவு செய்யப்பட்டுள்ளன.
- 2011–2012 முதல் 2018–2019 வரையிலான காலத்தில் ரூ.686 கோடி செலவில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் "தமிழ்நாடு உயிரி பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்" செயலாக்கத்திற்கு ரூ.187.11 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டு திட்ட மேலாண்மை பிரிவு உருவாக்கப்பட்டு, ஒரு அங்கமாக 1,000 கிராமங்களில் உள்ள தனியார் நிலங்களில் 1.73 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை – 2 ன் கீழ் ரூ.111.77 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- நகர்புறங்களில் குரங்குத் தொல்லைகளைத் தவிர்த்திட ரூ.3.53 கோடி அனுமதி வழங்கப்பட்டு இதுவரையில் ரூ. 1.84 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- வன வளங்களைப் பாதுகாத்து, உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட 13ஆவது நிதிக்குழு நிதியிலிருந்து ரூ.89.64 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, இத்திட்டத்திற்கென ரூ.16.54 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- ரூ.10.57 கோடி செலவில் 6,475 எக்டேர் நிலப்பரப்பில் தேக்கு மரங்கள் நடவு மற்றும் பராமரிப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.9.75 கோடி செலவில் தேக்கு மரங்கள் நடவு 6,300 எக்டர் பரப்பில் மேற்கொள்ளவும் முந்தைய ஆண்டில் எழுப்பப்பட்ட தோட்டங்களின் பராமரிப்பிற்கு ஒப்பளிப்பு பெறப்பட்டு ரூ.4.85 கோடி செலவில் 4,300 எக்டர் பரப்பில் நடவுப்பணிகளும் பராமரிப்புப்பணிகளும், மூன்றாவது ஆண்டு பராமரிப்புச் செலவுக்கு ரூ.1.48 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு ரூ.90 இலட்சம் செலவில் தோட்டப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.
- வன உயிரினங்களால் விளை நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பினைக் கட்டுப்படுத்த ஆசிய யானைகள் திட்டத்தின் கீழ் ரூ.32.59 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு அவற்றில் ரூ.23.98 கோடி செலவில் பல்வேறு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் புதியதாகப் புலிகள் சரணாலயம்.
- இராமநாதபுரம் மாவட்டம், சர்க்கரைக்கோட்டை நீர்த்தேக்கத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் காவேரி வடக்கு வன உயிரினச் சரணாலயம், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வனஉயிரினச் சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் வனஉயிரினச் சரணாலயம் மற்றும் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் கோடியக்கரை வனஉயிரினச் சரணாலயம் பகுதி "அ" மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பகுதி "ஆ" உருவாக்கம்.
- வன உயிரினப் பாதுகாப்புச் சுழல் நிதி ஏற்படுத்திட ரூ.1 கோடி வழங்கப்பட்டு அதனைப்

பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை.

- மலைப்பகுதி மாவட்டங்களில் பழங்குடி இளைஞர்களுக்கும் ஏற்கெனவே பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் பழங்குடி இன வேட்டை தடுப்புக் காவலர்களுக்கும் சம அளவு அடிப்படையில் வனக்காவலர் பணியிடங்கள் 30% ஒதுக்கீடு செய்திட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2011–2012ஆம் ஆண்டில், ரூ.12.73 கோடி செலவில் 1.19 கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன.
- மனித வனஉயிரின மோதல்களைத் தடுக்க, வனத்திற்குள் வனஉயிரின வாழ்விடங்களை மேம்படுத்தி தீவன வளங்களை ஏற்படுத்த ரூ.14.17 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒப்பளிக்கப்பட்டு, அவற்றில் ரூ.12.16 கோடி செலவில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுத் தொடந்து செயலாக்கப்பட்டு வருகிறது.
- மாநிலம் முழுவதும் 440 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் யானை புகா அகழிகள் ஏற்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரையில் ரூ.5.61 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில் பழங்குடியினரின் பயன்பாட்டிற்கென மலைப்பகுதியில் ரூ.13.92 கோடி செலவில் சாலைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன.
- தானே புயல் பாதித்த பகுதிகளான விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.12.96 கோடி மதிப்பீட்டில் மறு உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.9.89 கோடி இத்திட்டச் செயலாக்கத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில் ரூ.21.75 கோடி மதிப்பீட்டில் வனச்சாலைகள் பராமரிப்புப் பணிகள் பல்வேறு திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப் பட்டன.
- 2011–2012ஆம் ஆண்டில் ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் தொகுதியில், திருச்சி வனக்கோட்டம் மேல் அணைக்கட்டு காப்புக்காட்டில் வண்ணத்துப்பூச்சிப் பூங்கா மற்றும் நட்சத்திர வனம் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணமும் வண்ணத்துப்பூச்சி இனங் களின் பாதுகாப்பிற்காகவும் ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு இப்பூங்கா பொதுமக்களின் பார்வைக்கு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.
- 2012–2013 ஆம் ஆண்டில், வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ.27.13 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) நிறுவனம் அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அவற்றில் முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் ரூ.1.50 கோடி செலவில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- நபார்டு நிதியுதவியுடன் 10 மாவட்டங்களில் 50,000 எக்டர் தரங்குன்றிய வனப்பகுதிகளில் நீர்வளப் பாதுகாப்பு மற்றும் மரஅடர்த்தி மேம்பாட்டிற்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில், ரூ.44.38 கோடி செலவில் 49,173 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயலாக்கம்.
- 2013–2014ஆம் ஆண்டு முதல் 2017–2018 வரையான ஐந்தாண்டுகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் சோலைக்காடுகள் மீட்டெடுத்தல் மற்றும் மறுதளிர்ப்பிற்காக அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.
- 2013–2014ஆம் ஆண்டில் வனத்துறையில் சட்டப் பிரிவினைப் பலப்படுத்த மூன்று வழக்கறிஞர் பணியிடங்கள் (குற்றவியல் 1, பொதுநலம் 2) ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.
- 2013–2014ஆம் ஆண்டில், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன அருங்காட்சியகம் அமைத்திட ஒப்புதல் வழங்கப்பட்டு 3.3.2014 தேதிய நிலையில் ரூ.13 இலட்சம் இத்திட்டம் செயலாக்கத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.
- ரூ.5 கோடி மதிப்பீட்டில் வேலூர் அமிர்தி உயிரியல் பூங்கா மற்றும் திருச்சியில் திருச்சி



உயிரியல் பூங்காக்கள் மேம்பாட்டிற்கென ஒப்புதல் ரூ.43 இலட்சம் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

- வேட்டைத்தடுப்புக் காவலர்களுக்கு வழங்கப்பட்டுவந்த மாதாந்திர ஊதியம் ரூ.4,000/– என்று வழங்கப்பட்டதை ரூ.6,750/– என்ற வீதத்தில் உயர்த்தி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுதற்போதுஉயர்த்திவழங்கப்பட்ட ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட தமிழ்நாடு உயிரியல் பூங்கா அதிகார குழுமத்தின் கட்டுப்பாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்களின் வளர்ச்சிப் பணிகளை ரூ.6.94 கோடி செலவில் மேற்கொள்ள அரசின் ஒப்புதல் பெறப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 3.3.2014 தேதிய நிலையில் ரூ.6.67 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டில், வனப்பகுதிகளில், ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் சூரியசக்தி மூலம் வனஉயிரினங்களுக்குத் தேவையான குடிநீர் வசதியினை மேற்கொள்ள அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 3.3.2014 தேதியநிலையில் ரூ.1.06 கோடி இத்திட்டத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டில், வனவிலங்கு தாக்கி உயிரிழந்தால் வழங்கப்படும் இழப்பீடு ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகவும், பயிர்சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000இல் இருந்து ரூ.25,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுத் தற்போது அதன்படியே நிவாரணத் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. 2013–2014ஆம் ஆண்டில், பல்வேறுதிட்டங்களின் நிவாரணத் தொகை வழங்க ரூ.3.40 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 3.3.2014 தேதிய நிலையில் ரூ.2.46 கோடி நிவாரணத் தொகையாக பாதிக்கப்பட்ட நபர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.2.50 கோடி சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகப் பணிகளுக்குண்டான நிதிகள் 31.12.2012 முடிய பன்னாட்டு நிதி நிறுவனம் வழங்கி வந்தது. 1.1.2013 முதல் காப்பக பணிக்காகத் தமிழக அரசு 2013–2014 முதல் 2016–2017 வரை 4 ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு ரூ.2.50 கோடி வீதம் ரூ.10 கோடி ரூபாய் கொள்கையளவில் ஒப்பளிப்புச் செய்து 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டில் கட்டடங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ் ரூ.1.99 கோடி செலவில் செயல்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

- வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ / மாணவியருக்கு முதன்முறையாக பரிசாக ரூ.15,000 லிருந்து ரூ.50,000 வரை மாணவ, மாணவியர் பிரிவுகளில் தனி நபர் தரம் பிடித்தவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் ரூ.6.70 இலட்சங்கள் 25 மாணவ மாணவியருக்குப் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் 87.25 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏல விற்பனை மூலம் ரூ.39.40 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2013–14 ஆம் ஆண்டில், 3.3.2014 வரையிலான காலத்தில் 298.342 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.137.07 கோடி வருவாய் அரசு ஈட்டியுள்ளது.

- 458 கனமீட்டர் தேக்கு மரக்கட்டைகளின் ஏல விற்பனையின் மூலம் ரூ.85 இலட்சம் வருவாய் அரசு ஈட்டியுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில், 3.3.2014 தேதிய நிலையில் 3,448.766 கனமீட்டர் தேக்கு மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.11.53 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டில், ரூ.35.90 கோடி வருவாய் சமூக வனத்தோட்ட விற்பனை ஈட்டப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் 31.12.2013 வரை ரூ. 17.97 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில் 502 பஞ்சாயத்துக் குளங்களில் உள்ள சமூகக்காடுகள் தோட்டங்களை விற்பனை செய்து பஞ்சாயத்துப் பங்காக ரூ.7.81கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2012–2013ஆம் ஆண்டில் சமூகக்காடுகள் தோட்டங்கள் விற்பனை செய்யப்பட்டு பஞ்சாயத்துப் பங்காக ரூ.6.80 கோடி வழங்க அரசுக்குக் கருத்துரு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 2012–2013ஆம் ஆண்டில் 17,564.90 ஏக்கர் நிலப்பரப்பு காப்புக்காடாகவும் மற்றும் 8,949.33 ஏக்கர் பரப்பு காப்பு நிலங்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டது. 2013–2014ஆம் ஆண்டில், 03.03.2014 வரையில் 4,732.090 எக்டர் பரப்பளவு நிலங்கள் காப்பு காடுகளாகவும் மற்றும் 4,170.790 எக்டர் பரப்பளவு நிலம் காப்பு நிலமாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்**

- 6,22,353 மெட்ரிக் டன் கூழ் மரம் தமிழ்நாடு காகித ஆலை மற்றும் சேஷசாயி காகித ஆலை ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு.

- 11,267 எக்டேரில் தைல கூழ் மரங்கள் குளோனஸ் கன்றுகள் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- 2,484 எக்டேரில் தரம் குன்றிய மற்றும் உற்பத்தி இல்லாத முந்திரித் தோட்டங்கள் அதிக உற்பத்தி அளிக்கக் கூடிய வீரிய ரக முந்திரித் தோட்டங்களாக மாற்றம் செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- மூன்றாண்டில் ரூ.56.53 கோடி இலாபத்தை ஈட்டி சாதனை படைத்துள்ளது.

- பங்குதாரர்களுக்கு (அரசிற்கு) ஆதாய பங்களிப்பாக ரூ.203.04 கோடியை அளித்துள்ளது.

- ரூ.7.69 கோடியைக் கடனாகத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு வழங்கி நிதி நெருக்கடியிலிருந்து விடுபட உதவியுள்ளது.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்**

- 2010–2011ஆம் ஆண்டில் ரூ.16.83 கோடி நட்டத்திலிருந்து ரூ.8.74 கோடியாகக் குறைத்தது. இது மேலும் சிறப்பாக 2012–2013 மற்றும் 2013–2014 (6 மாதங்கள்) ரூ.6.40 கோடி இலாபத்தை ஈட்டியுள்ளது.
- 31.3.2013 வருடத்தில் 3.32 கோடி கிலோ பச்சை தேயிலை அறுவடை செய்யப்பட்டு, அதன் மூலம் 79 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் உற்பத்தி செய்தது. நடப்பு நிதியாண்டில், நிர்ணயித்த குறியீட்டளவான 3.90 கோடி கிலோ பச்சை தேயிலை அறுவடை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.
- 2012–2013ஆம் கணக் காண்டிற்கு, இக்கழக தொழிலாளர்கள் மற்றும் சி&டி பிரிவு ஊழியர்களுக்கு, அதிகபட்ச அளவான 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ரூ.4.77 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அரசு அளித்த மூலதன உதவித்தொகை ரூ.4 கோடியிலிருந்து இக்கழகத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்தும் வகையில் ரூ.2.68 கோடி செலவில் 23 புதிய இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 16 புதிய இயந்திரங்கள் பொருத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுவருகிறது.
- ரூ.40 இலட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகள்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, அரசு 2013–2014ஆம் ஆண்டில் ரூ.2.34 கோடி செலவில் இக்கழகத் தொழிலாளர்களின் குடிநீர் வசதியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ரூ.1.25 கோடி செலவில் தொழிலாளர் குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மூலதன பங்குத்தொகையில் ரூ.70 இலட்சம் செலவில் 40 தொகுப்பு கழிப்பிட வசதி செய்ய ஒதுக்கப்பட்டு, அவற்றில் எட்டு ரூ.12.29 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- தேயிலை பறிப்பவர்களுக்கு அரசால் உயர்த்தி வழங்கப்பட்ட ஊக்கத்தொகை மூலம், இக்கழகத் தொழிலாளர்கள் ரூ.1,000/– முதல் ரூ.3,000/– வரை கூடுதலாக வருமானம் ஈட்டுகின்றனர்.
- இக்கழகத் கள மேற்பார்வையாளர்களின் தின ஊதியம் மற்றும் திறன் படைத்த தொழிலாளர்களின் ஊதிய வித்தியாசம், போன்றவை உயர்த்தி தர வேண்டி அனைத்துத் தொழிற்சங்கங்களுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.
- இயற்கைக்கு உகந்த ஆர்கானிக் டீ தயாரிப்பதற்காக, குன்னூர் தேயிலைக் கோட்டத்தில் 7.5 ஹெக்டேர் பரப்பில் ஒரு தோட்டம் தனியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதிலிருந்து தயாரிக்கப்பட்ட தேயிலையி லிருந்து ஆர்கானிக் டீ தயாரிக்கப்பட்டு, சந்தைப்படுத்தப்பட உள்ளது. இதற்குரிய தகுதிச்சான்றிதழும் தற்போது பெறப்பட்டுள்ளது.
- 5.5.2013 அன்று நடைபெற்ற 'டேன்டீ நாள்' கொண்டாட்டத்தின் மூலம், இக்கழகத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களிடம் நட்புறவு மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டிலும் தேயிலைக் கொழுந்து பறிப்பதிலும் சாதனைப் படைத்த தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
- தேயிலை சில்லரை விற்பனை அதிகரிக்க தேயிலைத்தூள் பாக்கெட்டுகள் இஞ்சி, ஏலக்காய் மற்றும் மசாலா நறுமணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஒரு கிப்ட் பேக் நான்கு நறுமணங்களில் சந்தைப்படுத்தப் பட்டுள்ளது.

❖ ❖ ❖

# வளமான வாழ்வுக்கு வழிவகுத்த திறமான வரவு-செலவுத் திட்டங்கள்!




- தமிழ்நாடு வரலாற்றில் முதன்முறையாக தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ரூ.1 இலட்சம் கோடிகளைத் தாண்டிய வரவு – செலவுத் திட்டம்.
- மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகளின் மதிப்பீடு ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.
- 2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் உபரி ரூ.289.36 கோடி.
- மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் சதவீதம் 2.84–க்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- 13ஆவது நிதிக்குழுவின் நிர்ணயித்துள்ள வரம்பிற்குள்ளாக மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விழுக்காடு பராமரிப்பு.
- தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003இல் கூறப்பட்டுள்ள விதிகளின்படி நிதிநிலையின் போக்கு தொடர்பான விவரம் சட்டமன்றப் பேரவையில் தாக்கல்.
- ஓய்வூதியதாரர்களின் வாரிசுகளாக திருமணமாகாத/விவாகரத்தான/விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம்.







- அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்வு.
- ஓய்வூதியதாரர் இறக்கும்பொழுது வழங்கப்படும் நிதியுதவி ரூ.35,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்வு.
- தமிழக அரசுப் பணியில் பணிபுரிந்து, மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள்/ மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் ஈர்க்கப்பட்டுப் பணிபுரிந்து, ஓய்வுப் பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர் குடும்பப் பாதுகாப்பு விரிவு.
- ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ.2,000/– ஆக உயர்வு.
- ரூ.15 இலட்சம் கோடி முதலீட்டில் மாநிலத்தில் முக்கியக் கட்டமைப்புத் திட்டங்களை மேம்பாடு செய்யும்வகையில் ''தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023'' ஆவணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியீடு.
- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் தொடக்கம். 2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2,000 கோடி ஒதுக்கீடு. பொதுத் தனியார் கூட்டமைப்பின் கீழ் உள்கட்டமைப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து நிலவக்கூடிய இடைவெளியினை இத்தொகையில் 20 சதவீதத்தைப் பயன்படுத்திட அனுமதி.
- 14 வருவாய் வட்டங்களில் வங்கி சார்ந்த சார்கருவூலங்களைப் புதியதாக அமைத்தல்.
- ரூ.9.07 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டக் கருவூலம் மற்றும் 14 சார் கருவூலங்களுக்குப் புதிய கட்டடங்கள்.
- 9 வருவாய் வட்டத் தலைமையிடங்களில் 9 புதிய சார்கருவூலங்கள் அமைப்பு.
- ரூ.19.82 கோடி மதிப்பீட்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 33 சார்நிலைக் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிர்வாக அனுமதி.
- கருவூலக் கணக்குத் துறையில் கூடுதலாகக் கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலியில் புதியதாக மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் அமைத்தல்.



- ரூ.21.60 கோடி மதிப்பீட்டில் சென்னையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதி.
- ஓய்வூதியதாரர்/குடும்பஓய்வூதியதாரர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி நிதயுதவி ரூபாய் 2 இலட்சம் வரை நான்காண்டுகளுக்கு நிர்ணயம் செய்து கட்டணமில்லா மருத்துவச் சிகிச்சை வசதி பெற ஏற்பாடு.
- "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023" தொகுதி–II மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.02.2014 அன்று வெளியிடப் பட்டது.
- மலைப்பகுதிகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கான மலையிடப் பணிப் படியானது அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 20.02.2014 முதல் ரூ.900லிருந்து ரூ.1,500 ஆக உயர்வு.
- சராசரி கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டருக்கு 1,499 மீட்டருக்குள் உள்ள மலைப் பகுதிகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கான குளிர்காலப் படியானது, அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 20.02.2014 முதல் ரூ.250 லிருந்து ரூ.400 ஆக உயர்வு.
- சராசரி கடல் மட்டத்திலிருந்து 1500 மீட்டருக்கு மேலுள்ள மலைப் பகுதிகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கான குளிர்காலப் படியானது அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 20.02.2014 முதல் ரூ.350 லிருந்து ரூ.500 ஆக உயர்வு.

❖ ❖ ❖

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

# நெசவாளர் நலன் காக்க ஆக்கம் நெசவுத் தொழில் செழிக்க ஊக்கம்!



- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத் தொகையினை ரூ.400/–லிருந்து ரூ.1,000/–ஆக 01.01.2012 முதல் உயர்வு. 17,238 கைத்தறி நெசவாளர்கள் பயன்.
- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த மாத குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.550/–லிருந்து ரூ.1,000/–ஆக 01.01.2012 முதல் உயர்வு. 1,299 பயனாளிகள் பயன்.
- சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு தனது பங்காக வழங்கி வந்த 4 சதவிகிதத் தொகையினை நிறுத்தம் செய்ததனால் மாநில அரசின் பங்கான 4 பைசாவை 8 பைசாவாக உயர்த்தி வழங்கி ஆணையிட்டு 68,400 நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.
- கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குக் காலாண்டுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்த வட்டி மானியத் தொகை நவம்பர் 2012 முதல் மாதந்தோறும் கணக்கிட்டு

வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.28 கோடி வட்டி மானியத்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

- விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டுவரும் சேலைகளின் தரத்தினை உயர்த்தி, 60ஆம் நெம்பர் பாலிகாட் சேலைகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு இத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ரூ.486.36 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், சேலை மற்றும் வேட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு, 2012–2013 ஆம் ஆண்டு முதல் சேலை ஒன்றிற்கு ரூ.20.50–ம், வேட்டி ஒன்றிற்கு ரூ.10.30–ம் நெசவுக்கு முந்தையப் பணிகளுக்கானக் கூலியாகக் கூடுதலாக சேர்த்து வழங்கப் படுகிறது. இதன் மூலம் 8,600 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

- மூடப்பட்ட இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை ரூ.18.43 கோடி செலவில் நவீனப்படுத்தி திறக்க ஏற்பாடு.

- ரூ.105 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, பாரதி (கோவில்பட்டி), அண்ணா (தேனி) மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள் நவீனமயமாக்குதல்.

- ஈரோட்டில் உள்ள மூடப்பட்டிருந்த தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 10.06.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, உற்பத்தி மீண்டும் தொடங்கப்பட்டு, 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.4.20 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. இவ்வாலையை நவீனப்படுத்த ரூ.5.82 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருப்பூர் சாயக்கழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு பூஜ்ய கழிவுநீர் நிலையை எட்டும் பணிக்காக வட்டியில்லா கடனாக ரூ.179.34 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது, ரூ.300 கோடி மானியம்.

- திருப்பூரிலுள்ள 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களில் பூஜ்ஜிய கழிவுநீர் நிலையை எட்டும் பணிக்கு வங்கியிலிருந்து பெற்ற கடனில் அசலினை நேர்செய்யும் விதமாக , 2013–2014 ஆம் ஆண்டில் அரசு ரூ.150 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு 10,000 பசுமை வீடுகள் தலா ரூ.2.60 இலட்சம் செலவில் (வீடு கட்டுமானப் பணிக்கு ரூ.2.30 இலட்சம், சூரிய மின்சக்தி விளக்குகளுக்கு ரூ.30 ஆயிரம்) கட்டுவதற்கு ரூ.260 கோடியினை ஒதுக்கீடு செய்து, முதல் தவணைத் தொகையாக ரூ.92 கோடி விடுவித்து அரசு ஆணை. ஒவ்வொரு வீட்டிலும் தறி நிறுவ தேவையான இடவசதி செய்யப்பட்டுள்ளது.

- கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.479.79 கோடி செலவில் 1,51,290 கைத்தறி நெசவாளர்களுக்கு மாதமிருமுறை 100 யூனிட்டுகளும், 1,05,363 விசைத்தறி நெசவாளர்களுக்கு மாதமிருமுறை 500 யூனிட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- கைத்தறி தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், 718 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 520 தனியார் நெசவாளர்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) ஆகியன பயனடையும் வகையில் மொத்தம் ரூ.147.71 கோடி 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் 424 தொகுப்பூதிய பணியாளர்களுக்குச் சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- அதிக உற்பத்தியும், விற்பனையும் பெற்றுத்தரும் தேர்ந்த நெசவாளர் ஒருவரை ‘சிறந்த நெசவாளர்’

எனத் தேர்வு செய்து பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளருக்கு ரூ.1,00,000/– வழங்கப்பட்டது.

- நெசவாளர்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் 2,000 பெடல் தறிகள் வழங்குவதற்கு ரூ.8 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு, தலா ரூ.1,500/–வீதம் 25,000 விலையில்லா மின்மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் வழங்குவதற்கு ரூ.3.75 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ஆயத்த ஆடைப் பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்களில் 15,000 இளைஞர்களுக்கு 45 நாட்கள் பயிற்சி, பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.2,000/– மொத்தம் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் மூலம் கோயம்புத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை தறிக்கூடங்களில் 10 நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகள் நிறுவுவதற்கு ரூ.4.90 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## பட்டு வளர்ச்சித் துறை

- வெண்பட்டு உற்பத்தியில் தேசிய அளவில் முதலிடம்.

- 300 ஊராட்சிகளில் ‘பஞ்சாயத்துக்கு ஒரு பட்டு விவசாயி’ என்ற புதிய திட்டம் செயலாக்கம். இதன் மூலம் புதிய விவசாயிகள் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- மகாத்மாகாந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் அரசு பட்டுப்பண்ணைகளில் 50 பண்ணைக்குட்டைகள் நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை 37 பண்ணைக்குட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

- மல்பரி தோட்டங்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 75 சதவீதமாக வழங்கப்பட்டு வந்த மானிய உதவிகள் 100 சதவீதமாக உயர்வு. ஒரு ஏக்கருக்கான அலகு மதிப்பீடு ரூ.30,000 ஆக உயர்வு. உச்சவரம்பு 5.0 ஏக்கராக அதிகரிப்பு.

- ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்ய மானிய உதவி ஏக்கருக்கு ரூ.10,500/–ஆக உயர்த்தப்பட்டு அதிகபட்ச மானியமாக 5 ஏக்கர் மல்பரி பரப்பில் மல்பரி சாகுபடி செய்யும் விவசாயிக்கு ரூ.52,500/– வழங்கப்படுகிறது.

- நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைக் கொள்முதல் செய்ய ஒரு விவசாயிக்கு மானிய உதவி ரூ.52,500/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது

- பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்டுவதற்கான மானிய உதவிகள் 1,500 சதுர அடி பரப்பிற்கு மேல் பட்டுப்புழு வளர்ப்பு குடிலுக்கு ரூ.75,000/–லிருந்து ரூ.82,500 ஆகவும்; 1,000 முதல் 1,500 சதுர அடி பரப்பளவுள்ள குடிலுக்கு ரூ.50,000/–லிருந்து ரூ.87,500/– ஆகவும்; 700 முதல் 1000 சதுர அடி பரப்பளவு உள்ள குடிலுக்கு ரூ.25,000/–லிருந்து ரூ.63,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- 16,000 பட்டு விவசாயிகளுக்கு ‘பட்டு மலர்’ என்ற தமிழ் மாத இதழ் ஒரு இதழ் ரூ.2/– என்ற விலையில் விற்பனை.

- பாரம்பரியமாக பட்டு வளர்ப்பில் சிறந்து விளங்கும் மாநிலங்களை விட தமிழ்நாடு இருசுழற்சியின பட்டு உற்பத்தியில் முதல் நிலையினை எய்தியுள்ளது.

- மொத்த பட்டு முட்டைத்தொகுதிகள் விநியோகத்தில், நாட்டிலேயே அதிகபட்ச அளவாக 31விழுக்காடு இளம் பட்டுப்புழுக்களாக விநியோகிக்கப்படுகிறது.

- 100 பட்டு முட்டைத்தொகுதிகளுக்கான பட்டுக் கூடு உற்பத்தித்திறன், நாட்டிலேயே அதிகபட்ச அளவாக 70 கிலோகிராம் ஆக உள்ளது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகம்**

- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலம் ரூ.31 கோடிக்குக் கைவினைப் பொருட்கள் விற்பனை.
- பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் பணி புரிந்து வரும் கைவினைஞர்களின் ஊதியம் 1.6.2011 முதல் 100 விழுக்காடு உயர்த்தப்பட்டது. 2013 இல் மேலும் 50 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கப் பட்டுள்ளது. மாதந்தோறும் ரூ.15,000/–முதல் ரூ.20,000/– வரை ஊதியம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 40 கைவினைஞர்களுக்குப் பூம்புகார் மாநில விருதுகள் வழங்கப்பட்டன. 2013–2014 ஆம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கைவினைஞர்களுக்காக மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளன.
- ‘‘பூம்புகார் மாவட்டக் கைத்திறன் விருது’’ என்ற புதிய விருது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருதுடன் ரூ. 5,000/– ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் 199 கைவினைஞர் களுக்கு வழங்கப்பட்டது.
- ரூ.20 இலட்சம் செலவில் சுவாமிமலையில் பஞ்சலோகச் சிற்ப கைத்திறத் தொழிலில் மூன்று வருடப் பயிற்சி வகுப்பும், நாச்சியார்கோயிலில் பித்தளை விளக்குகள் கைத்திறத் தொழிலில் இரண்டு வருடப் பயிற்சி வகுப்பும், தஞ்சாவூரில், தஞ்சாவூர் கலைத்தட்டு கைத்திறத் தொழிலில் ஒரு வருட பயிற்சி வகுப்பும் நடைபெற்று வருகிறது.
- ரூ.83 இலட்சம் செலவில் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் 06.11.2013 முதல் 100 மகளிருக்கு ஓராண்டு தஞ்சாவூர் ஓவியப் பயிற்சியும், ரூ.6 இலட்சம் செலவில் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்தில் ஓராண்டு மரச்சிற்ப பயிற்சியும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
- அகில இந்திய அளவில் பிற மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களிலும் பல்வேறுக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து தமிழக கைவினைஞர்களின் பொருட்களுக்குக் கூடுதல் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு 661 கண்காட்சிகள் நடத்தப்பட்டன.
- கடந்த மார்ச் 2012லும் ஜனவரி 2013லும் சிங்கப்பூரில் கருத்துசார் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு அரசு தமிழக கைவினைப் பொருட்களின் விற்பனையை வெளிநாட்டில் மற்றும் வெளி மாநிலங்களில் அதிகரிக்கும் வகையில் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் ஒரு புதிய நிதி உதவி திட்டம் அறிமுகம். இத்திட்டத்தின்படி வெளிநாட்டில் மற்றும் வெளி மாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்குபெறும் கைவினைஞர்களுக்கு ஆண்டொண்டிற்கு தலா ரூ.25,000/– வீதம் உதவித் தொகையும், வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் கலந்து கொள்ளும் கைவினைஞர்களுக்கு ஆண்டொண்டிற்கு தலா ரூ. 50,000/– உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.
- அடுத்தத் தலைமுறை கைவினைஞர் களுக்கான கைத்திறன் போட்டி (GEN NEXT COMPETITION) 2013–2014 ஆண்டு முதல் அறிமுகம். 2013–2014 ஆம் ஆண்டில் 13 மையங்களில் போட்டி நடத்தப்பட்டு 66 இளம் கைவினைஞர்களுக்கு முதல் பரிசும், மேலும் 66 கைவினைஞர்களுக்கு இரண்டாவது பரிசும், மொத்தம் 132 கைவினைஞர்களுக்கு வெள்ளிப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டது.
- வயது முதிர்ந்த கைவினைஞர்களை கௌரவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதன் முதலாக “வாழும் கைவினைப் பொக்கிஷம்” எனும் புதிய விருதினை அறிமுகப் படுத்தி 2013–2014 ஆம் ஆண்டிற்காக 10 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலா ரூ.1இலட்சம் ரொக்கப்பரிசும், 8 கிராம் தங்கப் பதக்கமும், தாமிரப் பத்திரமும், சான்றிதழும் வழங்கப்படும்.

## கோ–ஆப்டெக்ஸ்

### கதர்கிராமத் தொழில்கள் செழிக்க உறுதுணையாகும் உன்னதத் திட்டங்கள்!

- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் ரூ.763.96 கோடி மதிப்பிற்குக் கைத்தறி துணி மற்றும் விசைத்தறி துணி இரகங்களை சில்லரை விற்பனை செய்துள்ளது.
- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக வளாகத்தில் கோ–ஆப்டெக்ஸ் ஜவுளி நூலகம் தொடக்கம். 450 க்கும் மேற்பட்ட ஜவுளி புத்தகங்கள், மாதாந்திர ஜவுளி இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன.
- கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக வளாகத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பில் ஜவுளி வடிவமைப்பகம் தொடக்கம். பட்டுச் சேலை, பருத்தி சேலை, படுக்கை விரிப்பு ஆகிய இரகங்களில் மென்பொருள் மூலம் சுமார் 650 புதிய வடிவமைப்புகள் அறிமுகம்.
- கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் ஜவுளி தரப்பரிசோதனைக் கூடம் அமைப்பு. இந்த மையத்தில் கோ–ஆப்டெக்ஸின் அங்கத்தினர் களாக உள்ள நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளின் தரம் ஆய்வு.
- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 2011–2012ஆம் ஆண்டில் ரூ.217.91 கோடி, 2012–2013ஆம் ஆண்டில் ரூ.244.61 கோடி மற்றும் 2013–2014ல் ரூ.301.44 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.
- 01.10.2008 முதல் 31.03.2012 முடிய பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள பணியாளர்களுக்கு நிலுவை ஓய்வூதியப் பயன்கள் வழங்க ரூ.36.86 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- 2012 – 2013 ஆம் நிதியாண்டு முதல் மாநில அரசும் கதர் ஆணையத்தைப் போன்று ஆண்டு முழுவதும் கதர் உற்பத்தி மீது 20 விழுக்காடு நிதியுதவியாக வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது. அதில் 15 விழுக்காடு கதர் விற்பனைக் கழிவாக நுகர்வோர்க்கு வழங்கப் படுகிறது.
- கதர் நெசவாளர்கள், சாயமிடுபவர்கள், நூற்பாளர்களுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை மானியமாக 5 விழுக்காடுத் தொகை நூற்பாளர் / நெசவாளர்களுக்கு, ஊக்கத் தொகை / கருணைத் தொகையாகக் கதர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், பட்டுத் தொழிலைப் பொறுத்தவரை இழைப்பவர்/சாயமிடுபவர் நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
- கதர் உற்பத்தியை அதிகரிக்க வாரியத்திற்கு ரூ.10 கோடி வழிவகை முன்பணமாக அரசு அனுமதித்துள்ளது, கதர் பாலியஸ்டர் பட்டு நெசவாளர்களுக்கு கூலித்தொகையினை அதிகரித்து வழங்கிக் கூடுதலாக நெசவாளர்களைச் சேர்த்து உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.10.81 கோடி மதிப்பிற்குக் கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- ஊரகப் பகுதிகளிலுள்ள கிராமிய நூற்பு நிலையங்களில் பணியாற்றும் 770 மகளிர் பயன்பெறும் வகையில் தலா ரூ.30,000 வீதம் 30 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள்.
- 68 சர்வோதய சங்கங்களுக்கு ரூ.24.74 கோடி தள்ளுபடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- கதர் நூற்போர் மற்றும் நெய்வோர் நல வாரியத்தில் 9,041 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு கல்வி உதவி, திருமண உதவி, ஈமச்சடங்கு உதவி மற்றும் விபத்தினால் ஏற்படும் இறப்புக்கான உதவி 270 நபர்களுக்கு ரூ.13.76 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- கதர் மற்றும் பாலிவஸ்திரா இரகங்கள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு 30விழுக்காடு கூலி உயர்த்தப்பட்டு 672 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கான ஓராண்டு கூடுதல் செலவு ரூ.38.76 இலட்சம் ஆகும்.





- பட்டு நெசவாளர்களுக்கு 50 விழுக்காடு கூலி உயர்த்தப்பட்டு 360 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கான ஓராண்டு கூடுதல் செலவு ரூ.25.09 இலட்சம் ஆகும்.
- தேனீ வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ள 440 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு தேனீப் பெட்டிகள், தேனீ குடும்பங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.30.01 இலட்சம் செலவில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் 6 கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.30 இலட்சம் நிதியுதவியில் புனரமைக்கப் பட்டது.
- கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் ரூ.76.36 கோடி மதிப்பிற்கு உற்பத்தி செய்து ரூ.113.19 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- பிரதமமந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 989 தொழில் முனைவோருக்கு ரூ.16.97 கோடி மானியம் வழங்கப்பட்டு 10,111 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மருந்தில்லா மருத்துவத்தின் அடிப்படையில் பொதுமக்களுக்கு இயற்கை சிகிச்சை அளித்திட சென்னை குறளகம் கதரங்காடியில் இயற்கை சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது.
- கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடும் பொருட்டு உட்புறம் துணியுடன் கூடிய காகித உறை தயாரிக்கும் இயந்திரம் ரூ.18 இலட்சம் மதிப்பில் கோவை மாவட்டம் கோவனூரில் நிறுவப்பட்டு வருகிறது.
- பண்ருட்டி, பெருமாள்மலை, செவ்வாப்பேட்டை ஆகிய 3 சோப்பு அலகுகளை நவீனப்படுத்திட ரூ.11 இலட்சம் செலவில் புதிய டிடர்ஜெண்ட் சோப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகிறது.
- பிடாகம் கைமுறை காகித அலகிலுள்ள பீட்டர் (BEATER) இயந்திரம் ரூ.4 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20 நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.
- கிராமப்புறங்களில் வசிக்கும் 1000 கைவினைஞர்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் பயிற்சி அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மண்பாண்டம், தேனீ வளர்ப்பு, தச்சு மற்றும் கருமார், தோல், சுடுமண் சிற்பங்கள், அகர்பத்தி மற்றும் ஆயத்த ஆடைகள் ஆகிய தொழில்களுக்கு முதற்கட்டமாக 395 கைவினைஞர்களுக்கு ரூ.42.94 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
- பட்டுப் பணி மாற்றகத்தில் பட்டு நூல் விற்பனை செய்தமைக்கான தொகையை நூற்பாலர்களுக்கு உடனே வழங்குவதை உறுதி செய்திட மின்னணு வர்த்தக சேவை (ECS).

❖ ❖ ❖

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை

# எளிய மக்களுக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை



- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகள், 23 முக்கியப் பரிசோதனைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சைகளுக்கு அனுமதி. 1.30 கோடி நபர்களுக்கு இத்திட்டத்திற்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- ஆண்டு வருமானம் ரூ.72,000/– மற்றும் அதற்குக் குறைவாக உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் பயன். முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் மற்றும் முகாமில் தங்காமல் காவல் நிலையத்தில் பதிவு செய்து பிற இடங்களில் வசிக்கும் இலங்கை அகதிகளும் இத்திட்டத்தில் பயனடையலாம். ஒரு குடும்பத்திற்கு நான்கு ஆண்டுகளில் ரூ. 4 இலட்சம் காப்பீடு.
- குடும்பத்தில் மாற்றுத் திறனாளியாக ஒருவர் இருந்தால், அக்குடும்பம் வருமான வரம்பு இன்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளியாகச் சேர்க்க ஆணை. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் உள்பட,

அங்கீகரிக்கப்பட்ட 820 மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம். ரூ.1,390 கோடி செலவில் 6.50 இலட்சம் நபர்களுக்கு சிகிச்சை அளிப்பு. இதில் அரசு மருத்துவமனைகளில் மட்டும் 2.49 இலட்சம் நபர்களுக்கு ரூ. 489.00 கோடி செலவில் சிகிச்சை.

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், ரூ. 1.5 இலட்சம் காப்பீட்டுத் தொகைக்கு மேல் செலவாகும். சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு அரசே முழு உதவித் தொகை வழங்கும் வகையில் ரூ.10 கோடி முதலீட்டில் சிறப்பு நிதி உருவாக்கம். இந்த நிதியிலிருந்து 1,136 பயனாளிகள் பயனடைந்தனர்.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி ரூ.12,000/– ஆக உயர்வு. ரூ.1806.81 கோடி செலவில் 20.07 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா ரூ.12,000 வீதம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி.
- ரூ.165 கோடி செலவில், கிராமப்புற வளரிளம் பெண்களுக்கு, விலையில்லா சானிடரி நாப்கின்கள். சராசரியாக 114.35 இலட்சம் கிராமப்புற வளரிளம் பெண்கள், 729 பெண் சிறை கைதிகள் மற்றும் 56 மனநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் 525 பெண் நோயளிகள் பயனாளிகள்.
- சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.143.14 கோடி செலவில் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை 21.2.2014 அன்று திறப்பு. 83 உயர் சிறப்புமருத்துவர்கள் மற்றும்232மருத்துவம்சாரா பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் மக்களின் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகளை வழங்கும் பொருட்டு, “நடமாடும் மருத்துவமனை” என்ற புதிய திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. 285 வாகனங்கள் நடமாடும் மருத்துவ மனைகளாக மாற்றப்பட்டு, களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், பழைய வாகனங்களைக் கழித்தொழித்து, 100 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திற்குக் கூடுதலாக இரண்டு நடமாடும் மருத்துவப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் மாதத்திற்கு 40 முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.117.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,
- ரூ.31.60 கோடி செலவில் 23 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 7 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள்.
- ரூ. 2.3 கோடி செலவில் 16 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டயாலிசிஸ் கருவிகள்.
- ரூ.86.35 கோடி செலவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்களைச் செயல்படுத்த உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகம் என்ற புதிய துறை உருவாக்கம்.
- கிண்டி, சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், பாளையங்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உணவு மாதிரிகளை ஆய்வு செய்ய நிறுவப்பட்டுள்ள 6 பகுப்பாய்வுக் கூடங்கள் மேம்படுத்தல்.
- இந்தியாவிலேயே முதன்முதலாக சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டு, இதுவரை 2,998 மருத்துவர்கள் மற்றும் 1,175 மருத்துவம் சாராப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமனம்.
- ரூ.18.54 கோடி செலவில் 134 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிப்பு.
- மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் ரூ.14.26 கோடி செலவிலும், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.14.73 கோடி செலவிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.15 கோடி செலவிலும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 15.06 கோடி செலவில் புற்றுநோய் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன .
- கிண்டி நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (கிங் நிலையம்) தடுப்பூசி உற்பத்தியை மீண்டும் தொடங்கவும்,






இந்நிலையத்தில் திசு வங்கி அமைக்கவும் ரூ.9.63 கோடி நிதி ஒதுக்கீடு.

➤ சென்னை அரசு பல் மருத்துவமனைக்கு ரூ. 13.66 கோடி செலவில் புதியக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. முதுகலை பல்மருத்துவ பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கையினை 35 லிருந்து 58 ஆக உயர்த்தத் தேவையான பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை பல்மருத்துவமனையை ஒரு ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்த ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு.

➤ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், பிரசவித்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய விவரங்களைக் கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்ய ஏதுவாக 9,397 கிராம சுகாதாரச் செவிலியர்களுக்கு ரூ.19.17 கோடி செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

➤ துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களை ஒருங்கிணைத்து 14,424 பணியாளர்களை நியமனம் செய்ய ஆணை.

➤ ரூ.97 கோடி மதிப்பில் சிவகங்கையில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி 100 மாணவர் களுடனும், ரூ.147.70 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் புதிய மருத்துவக் கல்லூரி 100 மாணவர்களுடனும் தொடங்கப் பட்டுள்ளன.

➤ சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை ஸ்டான்லி, சேலம் மோகன் குமாரமங்கலம், திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம், செங்கல்பட்டு மற்றும் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 410 மருத்துவ மாணவர் இடங்கள் உருவாக்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கை. மேலும் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 54 பட்ட உயர்படிப்பு இடங்களுக்கு அனுமதி.

- திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையை ரூ. 100 கோடி மதிப்பீட்டில் உயர் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்த ஆணை. முதல் கட்டமாக கட்டடம் கட்ட ரூ.53.97 கோடியும், விபத்துச் சிகிச்சைப் பிரிவு கட்ட ரூ.1.03 கோடியும் ஒதுக்கீடு.
- திருநெல்வேலி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவமனைகளின் அறுவை சிகிச்சை அரங்கங்கள் ரூ.20 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ரூ. 12.30 கோடி செலவில் புதிய செவிலியர் கல்லூரி அமைத்தல்.
- கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, திருவாரூர் மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவமனைகளில் அரசு – தனியார் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் நிறுவப்பட்டுப் பயன்பாடு.
- அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத 15 மாவட்டங்களிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் அளவிற்குத் தரம் உயர்த்த ரூ. 96 கோடி நிதி ஒதுக்கீடு. மேலும், 351 மருத்துவர் பணியிடங்களும் 918 இதர பணியிடங்களும் கூடுதலாக வழங்கி அரசாணை.
- நுண்கதிர்வீச்சாளர் பணியிடம் இல்லாத 98 அரசு மருத்துவமனைகளுக்குப் புதிதாக 98 நுண்கதிர்வீச்சாளர்களும், 13 மருத்துவ மனைகளுக்கு ஆய்வக நுட்பனர்களும் நியமனம். மேலும், 56 அரசு மருத்துவமனைகளில் கூடுதலாகக் கட்டப்பட்ட புதிய கட்டடங்களுக்கு 167 செவிலியர்கள் நியமனம் செய்ய ஆணை.
- சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா ரூ. 100 கோடி செலவில் பேறுசார் மற்றும் குழந்தைகள் நல மேன்மைமிகு மையங்கள் அமைத்திட ஆணை.
- எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவமனை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள தாய்சேய் நலப்பிரிவுகளுக்குக் கூடுதலாக 49 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 110 செவிலியர்கள் நியமனம். 19 அரசு மருத்துவக் கல்லூரிகளின் மகப்பேறு பிரிவிற்கு உயர் கவனிப்பு வழங்க கூடுதலாக 84 மருத்துவர்கள் நியமனம். மேலும், 55 சீமாங்க் மருத்துவமனைகளில் மகப்பேறு தீவிர சிகிச்சைப் பிரிவு தொடங்கவும், இங்குள்ள அறுவை சிகிச்சை அரங்கங்களுக்கும் கூடுதலாக 440 செவிலியர்கள் நியமனம் செய்யவும் ஆணை.
- ரூ. 4.5 கோடி செலவில், 27 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஆப்பரேட்டிங் லேப்ராஸ்கோப்பிக் கருவி (Operating Laparoscopy) நிறுவப் பட்டுள்ளது.
- ரூ. 7 கோடி செலவில், 4 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு சி.டி. ஸ்கேன் கருவிகள் வழங்கப் பட்டுள்ளன.
- ரூ. 1.30 கோடி செலவில் 30 மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகளில் ரத்தசெல் பகுப்பாய்வு மையங்கள் அமைத்திட ஆணை.
- ரூ. 3.92 கோடி செலவில் ஸ்ரீரங்கம் அரசுப் பொது மருத்துவமனை விரிவாக்கம்.
- சிவகாசி அரசு மருத்துவமனையில் ரூ. 4.50 கோடி செலவில் தீக்காயப் பிரிவை மேம்படுத்தவும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீக்காயப் பிரிவை ரூ. 5 கோடி செலவில், ஒரு ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்தவும் ஆணை.
- ரூ.74.85 கோடி செலவில் அரசு மருத்துவமனைகள் மேம்பாடு.
- தொலைதூரக் கிராம மக்களுக்கு உயர் மருத்துவ ஆலோசனை வழங்கிட ரூ. 5 கோடி செலவில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் Tele Medicine வசதிகள் உருவாக்கம்.
- ரூ.19.45 கோடி செலவில் 42 ஆரம்ப சுகாதார மையங்களில் தாய் சேய் நல மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- ரூ.1.20 கோடி செலவில் மாநில அளவிலான மருத்துவ உதவி தொலைபேசி சேவை (எண் 104) தொடக்கம்.
- ரூ.258.44 கோடி செலவில் 165 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், 122 மேம்படுத்தப் பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
- தேசிய ஊரக நலத்திட்டத்தின் கீழ் 260 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ. 42 கோடி செலவில் உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை முதலியவற்றில் உள்கட்டமைப்பு மற்றும் சிறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- 30 மாவட்டங்களில் ரூ.6.37 கோடி செலவில் பொது சுகாதாரத் துறை ஆய்வகங்கள். 378 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ. 58.59 கோடி செலவில் செவிலியர் குடியிருப்பு, 214 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ. 39.59 கோடி செலவில் மகப்பேறு பிரிவு கட்டடங்கள், 210 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.32.52 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணை.
- ரூ. 1.14 கோடி செலவில் ஸ்ரீரங்கம் தொகுதியில் மூன்று புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்.
- மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் உள்ள 31 அரசு மருத்துவமனைகளில் சுற்றுப்புற தூய்மை, பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற பணிகள் புற ஆதார முறையில் செய்ய 4,017 சுகாதாரப் பணியாளர்கள், 115 காவல் பணியாளர்கள், 314 மேற்பார்வையாளர்கள் மற்றும் 31 மேலாளர்கள் நியமனம். மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணி இயக்ககக் கட்டுப்பாட்டிலுள்ள 48 அரசு மருத்துவமனைகளில் தூய்மை, பாதுகாப்பு, சுகாதாரம், மின்சாரம் பராமரிப்பு, சமையல் பணி போன்ற பணிகளைப் புற ஆதார முறையில் செய்ய 1524 சுகாதாரப் பணியாளர்கள், 364 காவல் பணியாளர்கள், 58 தோட்டப் பணியாளர்கள், 86 மின்பணியாளர்கள், 83 சலவைப்பணி, 52 ஈயக்கம்மியர், 119 சமையலர், 189 மேற்பார்வையாளர்கள் மற்றும் 48 மேலாளர்கள் நியமனம்.
- 108 அவசர ஊர்தித் திட்ட சேவையின் கீழ் 632 வாகனங்கள் இயக்கம். அவசரகால மருத்துவ ஊர்திகள் மூலமாக 1.60 இலட்சம் கர்ப்பிணித்தாய்மார்கள், 15,420 பச்சிளம் குழந்தைகள் உட்பட 6.40 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர்.
- அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த 1,27,509 தாய்மார்களுக்கு மருத்துவ மனைகளில் இருந்து வீட்டிற்குச் செல்ல வாகன வசதி வழங்கப்பட்டுள்ளது.
- 118 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 7 அரசு மருத்துவமனைகளிலும் பல் மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் ரூ.3 கோடி செலவில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்கள்) பயிற்சி மையம் அமைக்க ஆணை.
- நான்காம் நிலை யானைக்கால் நோயாளர் களுக்கு மாதாந்திர உதவியாக ரூ.400/– வழங்கி ஆணை.
- செவிலியர் பயிற்சி மாணவர்களின் முதலாம் ஆண்டுக் கல்வி உதவித் தொகை ரூ. 400/– லிருந்து ரூ.600/– ஆகவும், இரண்டாம் ஆண்டுக் கல்வி உதவித் தொகை ரூ. 440/– லிருந்து ரூ.700/– ஆகவும், மூன்றாம் ஆண்டுக் கல்வி உதவித் தொகை ரூ. 480/– லிருந்து ரூ.800/– ஆகவும் உயர்வு. கல்வி உதவித்தொகை பெறாமலிருந்த 1,355 செவிலியர் பயிற்சி மாணவியர்க்கும் நீட்டிப்பு.
- சிசு மரண விகிதத்தைக் குறைப்பதற்காக அவசர கால சிசு பராமரிப்புச் சேவை தொடக்கம்.
- 20 அவசர கால ஊர்திகள் மலைப்பகுதிகளில் இயக்கம்.
- பதிவு செய்துள்ள பரம்பரை இந்திய முறை வைத்தியர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.500–லிருந்து ரூ.1,000 மாக உயர்த்தப் பட்டுள்ளது. இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.5.74 கோடி கூடுதல் செலவினம்.
- பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.5 கோடியிலும், கன்னியாகுமரி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.5 கோடியிலும், அறிஞர் அண்ணா அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.11.70 கோடியிலும் உயர்த்த நிதி ஒதுக்கீடு.



மேலும், 6 அரசு இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகள் மேம்படுத்தவும், தேவையான பணியாளர் நியமனம் செய்யவும் ரூ.35 கோடி நிதி ஒதுக்கீடு.

➢ இந்திய முறை மருத்துவத்திற்காக தனியாக ஒரு ஆராய்ச்சி ஆய்வுக் கூடம் ரூ. 12 கோடி செலவில் நிறுவவும், தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் (TAMPCOL) உள்கட்டமைப்பு வசதிகளை ரூ. 2 கோடி செலவில் மேம்படுத்தவும், தொற்றா நோய்கள் தடுப்பதற்கு இந்திய முறை மருத்துவத்தின் பயன் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ. 2.50 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

➢ அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் தொடர்பான மருத்துவ நிலையம் நிறுவ ரூ. 9.6 கோடி நிதி ஒப்பளிப்பு.

➢ இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையில் மாதாந்திர இதழ் தமிழில் வெளியிடுவதற்காக ரூ. 2 கோடியில் மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ அரசுப்பணியில் உள்ள இந்திய முறை மருத்துவர்களை வெளிமாநிலங்களில் உள்ள கல்லூரிகளில் கட்டணம் மற்றும் ஊதியத்துடன் உயர்படிப்பு படிப்பதற்கு அனுப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளது.

➢ உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2,669 எச்.ஐ.வி / எய்ட்ஸ் (ஆண்கள் மற்றும் பெண்கள்) நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தலா மாதம் ரூ.1,000/– ஓய்வூதியம்.

➢ புதிதாகத் தொடங்கப்பட்ட 73 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 24 மணிநேர பிரசவ பின்கவனிப்புச் சேவை விரிவாக்கம்.

❖ ❖ ❖

# உயர் கல்வியில் ஒப்பில்லாப் புரட்சி!









- 10 பல்கலைக் கழகங்களில் காணொலிக் காட்சியுடன் கூடிய செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள், மாணவர்களின் மொழித்திறன்களை உயர்த்தி அவர்களை உலகச் சந்தையில் போட்டியிடத் தயார்படுத்தும்வண்ணம் ஆங்கிலம், சீனம், ஜப்பான், ஜெர்மன் போன்ற அயல்நாட்டு மொழிகளைக் கற்பதற்கான தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டம் மற்றும் பாடத்திட்ட வளர்ச்சி மையங்கள் அமைத்திட ரூ.16.50 கோடி.

- 10 பல்கலைக்கழகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவக் கருவிகள் தயாரிக்கும் மையம் அமைப்பு, மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குத் தேவைப்படும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு தலைப்புகள் மற்றும் பாடங்களுக்கான தொடுஉணர் வரைகலை (Tractile Graphics) இடம்பெற்றுள்ள மற்றும் இடம் பெறாத பிரெய்லி புத்தகங்களை, இம்மையங்கள் வழங்கும். இந்த மையங்கள் அதிவேகமாகச் செயல்படும் பொருட்டு உயர் அழுத்த பிரேய்லி அச்சுப் பொறியும், தகவல் வங்கியை உருவாக்குவதற்காக தனிநபர் கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. கற்றலில்

திறன் குறைந்த மாணவர்களுக்கு உதவும் வண்ணம் பல்லூடகம் சார்ந்த கணினி உதவிப்பெட்டகமும் அளிக்கப்படும்.

- அரசு, அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள்/ பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் / பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 5,50,576 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப் பட்டுள்ளன.

- அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கச் சட்டம்.

- திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைப்பு.

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு முறை மூலம் பணியிட மாறுதல்.

- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் கல்வியாண்டுகளில் பி.இ. / பி.டெக் பொறியியல் கல்வி பயிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 135 மாணவர்கள் தங்களது பொறியியல் படிப்பைத் தொடர்ந்து பயில முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000/– வீதம் ரூ.33,75,000/– நிதியுதவி.

- 2010–2011 ஆம் ஆண்டில் 6.10 இலட்சமாக இருந்த உயர்கல்வி மாணவர்களின் சேர்க்கை 2013–2014 ஆம் ஆண்டில் 6.62 இலட்சமாக உயர்வு.

- முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குக் கல்விக் கட்டணத்தை அளிக்கும் திட்டத்தின் மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.530.8 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- அரசு கலை – அறிவியல் கல்லூரிகளின் கௌரவ விரிவுரையாளர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.6,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு. 2011–2012 முதல் 2012–2013 வரை ரூ. 32.48 கோடி மதிப்பில் 6,600 நபர்கள் பயன்.

- அரசு பொறியியல் கல்லூரியில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.5,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் பணிபுரியும் பகுதிநேர விரிவுரையாளர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.6,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு 151 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 135 விரிவுரையாளர்கள் தேர்வு.

- காஞ்சிபுரம் மாவட்டம் நெம்மேலி, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி மற்றும் நன்னிலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம், தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, விருதுநகர் மாவட்டம் சாத்தூர், தருமபுரி மாவட்டத்தில் அரூர், சேலம் மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் எடப்பாடி, கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர், திண்டுக்கல் மாவட்டம் வேடச்சந்தூர், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி, மதுரை மாவட்டம் திருமங்கலம், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் திருவெற்றியூர், இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம், வேலூர் மாவட்டம் அரக்கோணம் ஆகிய 22 இடங்களில் ரூ.30.88 கோடி செலவில் பல்கலைக்கழக உறுப்புக்கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டு 5,052 மாணவ, மாணவியர் உயர்கல்வி பயில்கின்றனர்.

- தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பின் அடிப்படையில்





மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிர்வாகக் கட்டடத்திற்கு சூரிய சக்தி வசதி ஏற்படுத்துதல்



மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மத்திய

(PPP mode), ரூ.128 கோடி முதலீட்டில், 3 முதுகலை பாடப்பிரிவுகளுடன் (Computer Science and Engineering, Software Engineering and Database System) ஸ்ரீரங்கத்தில் இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கல்விநிறுவனம்(Indian Institute of Information Technology) தொடங்கப்பட்டுள்ளது.

- ரூ.229.27 கோடி செலவில் ஸ்ரீரங்கம், கந்தர்வக்கோட்டை, சங்கராபுரம், பெருந்துறை, அரியலூர், ஊத்தங்கரை, ஜோலார்பேட்டை, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி செக்கானூரணி மற்றும் செய்யாறு ஆகிய 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு 736 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, 2,839 மாணவ, மாணவியர் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

- ரூ.339.41 கோடி செலவில் போடிநாயக்கனூர், தஞ்சாவூர்,தருமபுரி, ஸ்ரீரங்கம் ஆகிய ஊர்களில் புதிதாக அரசுப் பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டு 1,252 மாணவ, மாணவியர் பயன்.

- ரூ.100 கோடி செலவில் 93 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகள்.

- ரூ.71.29 கோடி நிதியில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான நாற்காலிகள், மேசைகள் மற்றும் கரும்பலகைகள் ஆகியவை டான்சி மூலமாக வழங்கப்பட்டுள்ளன. குடிநீர், கழிப்பறை, உணவுக்கூடம் உள்ளிட்ட வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 4,566 ஆசிரியர்கள், 58,398 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

- ரூ.150 கோடி செலவில் அண்ணா பல்கலைக்கழக மண்டல அலுவலகங்கள் மற்றும் உறுப்பு பொறியியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

- அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களை அயல்நாடு அனுப்பி கல்வி பயிற்றுவிக்கும் திட்டத்தின் மூலம் 25 மாணவர்களும், 5 பேராசிரியர்களும், இங்கிலாந்திலுள்ள பல்வேறு பல்கலைக்

கழகங்களுக்குச் சென்று பயில ஒருவருக்கு ரூ.15 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி செலவினத்திற்கு நிருவாக அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.2.70 கோடி செலவினம் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 14 மாணவர்களும், 3 பேராசிரியர்களும் இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றனர்.

- பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 4 உறுப்புக் கல்லூரிகள் ஸ்ரீரங்கம், நன்னிலம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டது. நாகப்பட்டினத்தில் உறுப்புக் கல்லூரி 300 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீரங்கம், பெரம்பலூர் பகுதிகளில் அமைந்த உறுப்புக் கல்லூரிகளில் தேசிய நூலகம் (மற்றும்) தகவல் பணி ஆய்வுத் தொகுப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் ரூ.11.40 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயிற்சி மையமும் ரூ.11.80 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி மையமும் அமைக்கப்பட்டுள்ளது.

- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டுமையம் அமைப்பதற்கு ரூ.5 கோடி ஒப்பளிப்பு.

- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களி லிருந்து பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்குக் கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கீடு. 1,150 மாணவ, மாணவியர் பயன்.

- கல்வித் தர மேம்பாட்டிற்காக உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழில் நிறுவனங்களையும், மாணவர்களையும் இணைக்கும் பாலமாக பல்கலைக்கழகங்கள் செயல்படும் பொருட்டு, 10 பல்கலைக்கழகங்களில் ரூ.2.50 கோடி செலவில் பல்கலைக்கழகம் – தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு மையங்கள் அமைத்திட ஆணை.

- தகவல் தொழில்நுட்பம் போன்ற நவீன வேலைவாய்ப்புத் தளங்களில், பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற பயிற்சி அளித்திட 9 பல்கலைக்கழகங்களில் ரூ.90 இலட்சம் செலவில் தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த எழுத்துப் பயிற்சி மையங்கள் நிறுவ ஆணை.

- உயிர் அறிவியல், மருத்துவ உயிர் அறிவியல், உயிர் தொழில் நுட்பவியல், மேலாண்மையியல் மற்றும் வணிகவியல் போன்ற உயர் படிப்புகளில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகள் மேற்கொள்ள உயர்தர தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்களுடன் 10 பல்கலைக்கழகங்களில் ரூ.2.50 கோடி செலவில் முதுகலை பட்ட மேற்படிப்பு சிறப்பு மையங்கள்.

- இணையதளத்தின் மூலமாக, மாணவர்கள் கற்கவும், ஆசிரியர்கள் ஆய்வு மேற்கொள்ளவும் பல்கலைக்கழக நூலகங்களை இணைய தளத்தில் நூலக வலைப்பின்னல் மூலம் கல்லூரிகளில் உள்ள நூலகங்களுடன் இணைப்பு.

- தற்பொழுது முதுகலை பட்டமேற்படிப்பு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதைக் கருத்திற்கொண்டு பெரம்பலூர், ஈரோடு, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களில் பல்கலைக் கழகங்களில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையங்கள்.

- கல்லூரி மாணவர்கள் இடையில் படிப்பை நிறுத்திவிடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, கல்லூரியில் மெதுவாக கற்கும் மாணவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் திட்டத்தை 24 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படுத்த ரூ.30 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

- வேலைவாய்ப்பிற்கு ஆளுமைத்திறன், பேச்சுத்திறன், குழுப்பணித்திறன் போன்ற

60 விதமான அடிப்படை மென்திறன்களை மாணவர்களுக்குக் கற்பிக்க 5 பல்கலைக் கழகங்களுக்குட்பட்ட 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மென்திறன் மையங்கள் ரூ.1.35 கோடி செலவில் அமைத்திட ஆணை.

- தொழில் முனையும் திறனை / தொழில்நுட்பத்தை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்கு அருகாமையில் உள்ள கிராமங்களில் அந்த அறிவை பரப்பச் செய்வதோடு ஆராய்ச்சி வழிமுறைகள் (ம) கண்டுபிடிப்புகள் பேணிக் காத்திட 9 பல்கலைக்கழகங்களில் ரூ.29.88 இலட்சம் செலவில் தொழில்நுட்பம் அடைகாப்பு மற்றும் பகிர்த்தளிக்கும் மையங்கள் அமைத்திட ஆணை.

- கணினி, ஒளி—ஒலி மற்றும் நவீன மின் ஒலிக் கருவிகளைப் பயன்படுத்தி கல்வி பயில 10 பல்கலைக்கழகங்களில் ரூ.50 இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வடிவக் கருவிகள் தயாரிக்கும் மையங்கள் அமைத்திட ஆணை.

- ரூ.23.20 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொடர்புத் தொழில் நுட்பப் பயிற்சி மையம் மற்றும் பெண்களுக்கான தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்துடன் கூடிய சுயவேலை வாய்ப்பு மையம்.

- ரூ.3.5 கோடி செலவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மை மையம்.

- ரூ.2.90 கோடி செலவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தினை பசுமை வளாகமாக மாற்ற ஆணை.

- ரூ.25 இலட்சம் செலவில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கல்வி மையம்.

- ரூ.1.68 கோடி செலவில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரிகளின் முழு நேர வகுப்பில் பயின்றுவரும் 6,000 மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை.

- ரூ.35 இலட்சம் செலவினத்தில் 15 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சித் திட்டம்.

- மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினை பிரபலமாக்குவதற்காக ரூ.7.50 இலட்சம் செலவில் 50 நிறுவனங்களுக்கு நிதியுதவி.

- இலங்கை தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு முதன் முறையாக பி.இ./பி.டெக்./ எம்.பி.ஏ. / எம்.சி.ஏ/ எம்.இ./ எம்.டெக்./ போன்ற இளநிலை மற்றும் முதுகலை கல்வி பயில நேரடி மாணவர் கலந்தாய்வில் கலந்து கொண்டு சேர்க்கை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம்—2 இன் கீழ் முதல் தவணையாக ரூ.10.08 கோடி நிதி ஒதுக்கீடு.

- ரூ.17.10 கோடி செலவில் 11 இருபாலர் அரசுக் கலை அறிவியல் கல்லூரிகளும், ஒரு அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியும், ஒரு பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒரு பல்கலைக்கழக உறுப்பு மகளிர் கலை அறிவியல் கல்லூரியையும் தொடங்க அனுமதி.

- 51 அரசு கல்லூரிகளில் 827 ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்கவும் 398 புதிய பாடப்பிரிவுகளை தொடங்கவும் ஆணை.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 797 புதியப் பாடப்பிரிவுகள்.

- ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் தமிழக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை நீட்டிப்பு.

❖ ❖ ❖

## நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

# சொக்க வைக்கும் சாலைப் பணிகள் சொகுசான சாலைப் பயணங்கள்




- சாலை மற்றும் பாலங்களின் கட்டுமானப் பணிக்காக ரூ.11,132.32 கோடி மானிய உதவி வழங்கப்பட்டு, ரூ. 8,950 கோடி செலவில் 29,522 கி.மீ. சாலைகள் மேம்பாடு மற்றும் ரூ.1,020.89 கோடி செலவில் 911 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.
- இரயில்வே பணி திட்டத்தின் கீழ், ரூ. 704.54 கோடி செலவில் 33 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

**சாலைகள்**

- ஒருங்கிணைந்த சாலைகள் உள் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.9,296.35 கோடி செலவில் 32,740 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் ரூ. 1,093.73 கோடி செலவில் 953 பாலம் / சிறுபாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- நபார்டு கடனுதவியுடன் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ் 662.12 கி.மீ. நீளமுள்ள 176 சாலைகள் ரூ.276.99 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. இதன் மூலம் 28 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பலன் அடைகின்றனர்.

- தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகள் திட்டத்தில் ரூ.517.24 கோடி செலவில் 625.55 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 4 பாலப் பணிகள்,

- புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் 540.63 கி.மீ. நீள 47 சாலைப்பணிகள் மற்றும் 6 பாலப் பணிகள் ரூ.349.91 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**புறவழிச்சாலைகள்**

- இளையான்குடி, எட்டுக்குடி, துறையூர், வந்தவாசி, பெரம்பலூர் (இரண்டு கட்டங்கள்) தாராபுரம் (இரண்டு கட்டங்கள்) பட்டுக்கோட்டை (முதற்கட்டம்) ஆகிய நகரங்களுக்கு புறவழிச்சாலை ரூ.77.14 கோடி மதிப்பில்அமைக்கப்பட்டுள்ளது.

- நபார்டு கடனுதவியுடன் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ் 231 பாலங்கள் ரூ.461.08 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, 31 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன் அடைகின்றனர்.

- சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ. 6.91 கோடி மதிப்பில் கூவம் ஆற்றின் குறுக்கே பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் கி.மீ. 6/6 இல் ஒரு பாலமும், ரூ.15.64 கோடியில் சென்னை அடையாற்றின் குறுக்கே திரு.வி.க. பாலத்திற்கு அருகில் மூன்று வழித்தடப்பாலமும் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாடு, கூவம் ஆற்றின் குறுக்கே GWT சாலை மற்றும் முகப்பேர் சந்திப்பில் கி.மீ.11/2 இல் உள்ள ஆற்றுப்பாலமும் எண்ணூர் முகத்துவாரத்தையும், எண்ணூர் அனல்மின் நிலையத்தையும் இணைக்கும் சாலையில் உள்ள பாலப் பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

**அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள்**

- பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ. 18.52 கோடி மதிப்பில் 66 கட்டடங்கள் மற்றும் ஒரு புதுப்பிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளன. கட்டடங்களின் விவரங்கள் பின்வருமாறு :

- விழுப்புரம், திருப்பூர், சென்னை மற்றும் சேலம் 4 வட்ட அலுவலகக் கட்டடங்கள்.

- தாராபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், வாணியம்பாடி, இராமநாதபுரம், தென்காசி, வேலூர், திருப்பூர், கோவை (தரஉறுதி) மற்றும் கடலூர் (விரிவு) ஆகிய 10 கோட்ட அலுவலகக் கட்டடங்கள்.

- சேலம், திருச்சி மற்றும் திண்டுக்கலில் ஆய்வகக் கட்டடங்கள்.

- செய்யார், துறையூர், அறந்தாங்கி, நாமக்கல் (தரஉறுதி), பாப்பிரெட்டிபட்டி, தேனி (தரஉறுதி), மதுரை, முதுகுளத்தூர், அம்பத்தூர், கிருஷ்ணராயபுரம், பாளையங் கோட்டை,சூலூர்,பள்ளிப்பட்டு,மணப்பாறை, ஆவுடையார்கோவில், வேதாரண்யம், கமுதி, திண்டுக்கல்(QC), சத்தியமங்கலம், உசிலம்பட்டி, சிவகாசி, பொள்ளாச்சி(QC), மதுராந்தகம் மற்றும் ஒரத்தநாடு ஆகிய 24 உட்கோட்ட அலுவலகக் கட்டடங்கள்.

- போடிநாயக்கனூர், மேட்டுப்பாளையம், துறையூர், சேலம், எடப்பாடி, பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி, விழுப்புரம், பெரியகுளம், ஏலகிரி, கோயம்புத்தூர், ஆனைமலை, கொடைரோடு,ஏற்காடு,வேலூர்,காரைக்குடி, பள்ளிப்பாளையம், இராயக்கோட்டை, பாளையம்பட்டி (விருதுநகர் மாவட்டம்) சங்கராபுரம், மற்றும் அந்தியூர் ஆகிய 21 பயணியர் மாளிகைகள்.



கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்
கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம்






- பரங்கிப்பேட்டை, செம்பனார்கோயில், எடப்பாடி மற்றும் உத்தமபாளையம் ஆகிய 4 இடங்களில் பிரிவு அலுவலகங்கள்.
- மலைப்பாளையம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புராதன கட்டடங்களுக்கு (பயணியர் மாளிகை) பாதுகாப்புப் பணிகள்.

**தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் II – க்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்புக் கழகத்தின் மூலம் ரூ.65 கோடி நிதி வழங்கப்பட்டு இத்திட்டத்தின் 2,049 கி.மீ நீளமுள்ள சாலைகள் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு பூர்வாங்க ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**நிருவாக உட்கட்டமைப்பு மேம்பாடு**

- எடப்பாடி, பெரம்பலூர் மற்றும் செய்யார் கோட்ட புதிய அலுவலகங்கள் தோற்றுவிக்கப் பட்டன.
- சாலைகளைப் பராமரிக்க உயரிய தொழில் நுட்பத்துடன் கூடிய புவியியல் தகவல் அமைப்பு, ஒருங்கிணைந்த திட்டம், மனிதவளம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு மற்றும் சாலை மேலாண்மை அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய e– பாதை என்ற மென்பொருள் நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்காக தொடங்கப்பட்டது. மேலும், ரூ. 3 கோடி மதிப்பில் இரண்டு நவீனத் தகவல் சேகரிப்பு உபகரணங்கள் (Advanced Data Collection Equipment) செயல்பாட்டில் உள்ளன.
- “தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்” என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது.




- மாநிலங்களுக்கிடையிலான சாலை இணைப்புத் திட்டத்தின் கீழ், 2011–12 ஆம் ஆண்டில் 20 கி.மீ. நீள 2 சாலைப் பணிகள் ரூ. 8.68 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ், 2013–14 ஆம் நிதியாண்டில் நிலுவைப் பணியாக எடுத்துக் கொள்ளப்பட்ட 30.40 கி.மீ. நீள ஒரு சாலைப் பணி ரூ. 18.47 கோடி மொத்த செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.
- சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மீஞ்சூர் –காட்டூர் –திருப்பாலைவனம் சாலையில் அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணி முடிவுற்றது.
- திட்டம் சாரா பணிகளின் கீழ், ரூ.2,747.51 கோடி செலவில் 13,507 கி.மீ. நீள சாலையில் புதுப்பிக்கும் பணிகள் முடிவுற்றன.
- சிறப்புப் பழுதுபார்த்தல் / காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் 24 எண்ணிக்கையிலான 263.72 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.136.18 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், சாதாரண பழுதுபார்த்தல் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் ரூ. 52.09 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**பாலங்கள்**

- பகுதி–II திட்டத்தின் கீழ், ரூ. 17.91 கோடி மதிப்பில் மாத்தூர் – திட்டக்குடி, குண்டு – உப்பலவாடி, திருச்சி – துறையூர் பாலம், பெருவிளைபாலம், ஆசாத்நகர், நசுவன்கரை, விளாத்திக்குளம்–பெருநாழி, நான்குனேரி – ஏர்வாடி ஆகிய 8 பாலப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், ரூ. 8.40 கோடி மதிப்பில், கடலூர் மாவட்டத்தில், நொச்சிக்காட்டில் ஒரு உயர்மட்டப்பாலம் கட்டப்பட்டுள்ளது.
- நபார்டு கடனுதவியுடன் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ், 8 பாலங்கள் ரூ.16.94 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டு, இதன் மூலம் 7 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பலன் அடைகின்றனர்.
- நபார்டு கடனுதவியுடன் கிராமச் சாலைகளை மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ், 4 பாலங்கள் ரூ.4.37 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, இதன் மூலம் 3 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன் அடைகின்றனர்.

❖ ❖ ❖

## உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# சட்டம் ஒழுங்கை கட்டி காக்கும் மாட்சிமிகு மக்கள் ஆட்சி



**காவல்துறை**

- தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகம், காவலர் பயிற்சி கல்லூரி, காவலர் தேர்வு பள்ளிகள் மற்றும் 13 பணியிடை பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் ரூ.163 கோடி ஒப்பளிப்பில் உள்பயிற்சி கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- ஐந்தாண்டுகளில் காவலர்களுக்கான குடியிருப்பு தேவைகளை 100 சதவீதம் நிறைவு செய்ய முடிவு; 6,078 குடியிருப்புகள் கட்டுமானப் பணி.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், மகளிருக்கான பாதுகாப்பை உறுதி செய்திட அவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களை தடுத்திட 13 அம்ச செயல் திட்டம் அறிவிப்பு.
- காவல் துறையில் 16.01 சதவிகித பெண்கள் பங்கேற்புடன் தமிழகம் முதலிடம். 2012ஆம் ஆண்டில் 1,835 பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
- ரூ.72 இலட்சம் செலவில் 26 ஆயுதப்படை தலைமையிடங்கள் மற்றும் 10 தமிழ்நாடு சிறப்புக் காவல்படை தலைமையிடங்களிலும் காவல்துறை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்காக 36 புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள்.
- ரூ.1.32 கோடி செலவில் சேலம் மற்றும் திருநெல்வேலியில் டெட்ரா தொழில்நுட்ப நவீன கட்டுப்பாட்டு அறைகள் (Tetra Based

Modern Control Room) நிறுவப்பட்டுள்ளன. ரூ.4 கோடி செலவில் கோவை மற்றும் மதுரையில் நவீன கட்டுப்பாட்டு அறைகள் நிறுவும் பணி.

- ரூ.30.45 கோடி செலவில் சென்னை மற்றும் திருச்சியில் உள்ள காவல் ஆணையரகங்களுக்கு இலக்கு அடிப்படையில் (Digital Based) இயங்கும் காவல் வானொலி தொடர்புத் திட்டம் ஒப்பளிப்பு.
- நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை பணியாளர்கள் ஆகியோருக்கு காவல்துறை சிறப்பு அங்காடிகள் ஆவடி, மதுரை மற்றும் திருச்சியில் தொடக்கம். இதன்மூலம் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட காவல் குடும்பங்கள் பயன்.
- அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் குடும்பத்தினருக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி உச்சவரம்பை விட மருத்துவ செலவு அதிகமாகும் போது அதனை ஈடுசெய்ய ரூ. 2 கோடி காவல் துறை கருணைக் கொடை நிதியத்திற்கு வழங்கல்.
- ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை 11,622 முதல் 16,000 ஆக உயர்த்த சிறப்பு நடவடிக்கை. அவர்களுக்கான தினப்படி ரூ.65லிருந்து ரூ.150 ஆக உயர்வு. மேலும் சென்னைப் பெருநகர ஆணையரகத்தில் இரவுப் பணிக்கான படி ரூ. 200 ஆக உயர்வு.
- 117 சிறுவர் மற்றும் சிறுமிகள் குழு அமைப்பு. 2013 – 2014ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 3 கோடி செலவில் 400க்கும் மேற்பட்ட குழுக்கள் அமைத்திட ஒப்பளிப்பு. இக்குழுக்களுக்கான ஆண்டு மானியம் ரூ.66,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்வு.
- சென்னையில் உள்ள காவலர்களுக்கான படைக்குடியிருப்பு ரூ. 3 கோடி செலவில் புதுப்பிப்பு.
- கூடங்குளம் அணு மின் திட்டத்திற்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, காவல் துறையினர் மிகவும் கவனமுடன் நிலைமையை கையாண்டனர்.
- இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் மத்திய அரசு கலந்துகொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி போராட்டக்காரர்களுக்கு எதிராக திறம்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப் பட்டது.
- பயங்கரவாதிகள் மற்றும் மத அடிப்படைவாதிகளிடமிருந்து, தங்களது உயிருக்கு ஆபத்தை எதிர்கொண்டுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த 167 முக்கிய நபர்கள் / முக்கிய பிரமுகர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், ஹட்கோ காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பல்லபள்ளி கிராமத்தில் சட்டத்திற்குப் புறம்பாக வைத்திருந்த 544 எலெக்ட்ரிக் டிடோனேட்டர்கள், 187 ஜெலட்டின் குச்சிகள், 675 கிலோ அமோனியம் நைட்ரேட் பறிமுதல் செய்யப்பட்டது.
- கொளத்தூர் காவல் நிலைய (சேலம்) எல்லைக்குட்பட்ட பாலமலை கிராமத்தில் கஞ்சா பயிரிடப்பட்டு (ரூ.1.20 இலட்சம் மதிப்புள்ள சுமார் 120 கிலோ எடை கொண்டது) இருந்தது காணப்பட்டது. தடை செய்யப்பட்ட அப்போதைப் பொருளானது கைப்பற்றப்பட்டு எதிரிகள் கைது செய்யப்பட்டனர்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர், கடந்த ஒரு வருட காலத்தில் மத அடிப்படைவாதிகள் கைது செய்யப்பட்ட பணிகளில் ஈடுபட்ட 251 காவல் பணியாளர்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.2.65 கோடி வெகுமதி அளித்தார்.
- 2,27,577 கள்ளச் சாராய வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு 29,292 பெண்கள் உள்பட 2,30,699 குற்றவாளிகள் கைது.
- ரூ.22.96 கோடி மதிப்பிலான 57.41 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிப்பு.
- ரூ.5.37 கோடி மதிப்பிலான 5.38 இலட்சம் லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டது.
- ரூ.13.90 இலட்சம் மதிப்பிலான 46,354 லிட்டர் கள் கைப்பற்றப்பட்டு அழிப்பு.
- ரூ. 21.23 கோடி மதிப்பிலான 21,23,529 இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மதுபானம், போலி மற்றும் அண்டை மாநில மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது.
- மதுவிலக்கு குற்றத்தில் ஈடுபட்ட 7 டிராக்டர்கள், 35 லாரிகள், 9 ஜீப்கள், 109 வேன்கள், 506 கார்கள், 131 ஆட்டோக்கள் மற்றும் 3,800 மோட்டார் சைக்கிள்கள் உட்பட மொத்தம் 4,597 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.
- மதுவிலக்கு குற்றத்தில் ஈடுபட்ட 2,140 வாகனங்கள் ஏலத்தில் விடப்பட்டு



ஏலத்தொகை ரூ.3.44 கோடி அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

- 636 தீவிர மதுவிலக்குக் குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக்காவல் சட்டம் 14/1982–இன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
- 637 மதுவிலக்கு தொடர் குற்றவாளிகள் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 52–E–இன் கீழ் ஊரை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.
- மொத்தம் ரூ.6.31 கோடி நீதிமன்ற அபராதமாக செலுத்தப்பட்டுள்ளது.
- 2010ஆம் ஆண்டின் முடிவில் 71–ஆக இருந்த கரும்புள்ளி கிராமங்களை 31.10.2013இல் 12 ஆக குறைக்கப்பட்டது. கரும்புள்ளி கிராமங்களே இல்லாத நிலையினை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- விஷச்சாராய சாவுகள் ஏதும் நிகழவில்லை.
- குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைப்பின்னல் திட்டம் (CCTNS) தொடங்கப் பட்டுள்ளது. இதற்கென ரூ.5 கோடி ஒப்பளிப்பில் 1,000 புதிய கணினிகள்.
- தமிழகத்திலுள்ள (1482) காவல் நிலையங்களும் வலைதள அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டு காவல் நிலைய தகவல்கள் சென்னையில் உள்ள மாநில தகவல் தொகுப்பு மையத்திலுள்ள பிரதான கணினியில் தொகுக்கப்படுகிறது.
- தமிழக காவல்துறை பெருமையடையும் வகையில், குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைதள அமைப்பினை செயல்படுத்தியதில் இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது.
- மாநில குற்ற ஆவண காப்பகத்தில் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் 34 உருவபடங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் 5 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் உருவப்படம் துல்லியமாக பொருந்தியுள்ளது.
- இதுநாள் வரையில் பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டுவந்த சரித்திர பதிவேடு குற்றவாளிகள் பற்றிய விவரங்களை மின் ஆளுமை திட்டத்தின் கீழ் கணினியில் பதிவு செய்யும் பொருட்டு மாநில குற்ற ஆவண காப்பகத்தின் சொந்த முயற்சியால் "HISS" மென்பொருள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் வாயிலாக பல்வேறு சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தொடர்புடைய (Property offences) 308 சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.
- குற்றவழக்குகளில் 2,483 பேர் கைது செய்யப்பட்டு ரூ.31.43 கோடி மதிப்புள்ள சொத்துகள் கைப்பற்றப்பட்டன.
- உரிமம் இல்லாத புதிய படங்களின் திருட்டு வீடியோ குறுந்தகடுகளின் விற்பனையை முற்றிலும் ஒழிக்க அனைத்து வீடியோ கடை உரிமையாளர்களுடனும் சந்திப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





- போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு 3,127 வழக்குகளைக் கண்டுபிடித்து 3,181 குற்றவாளிகளை கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து 3,166.385 கிலோ உலர் கஞ்சா, 1.534 கிலோ ஹெராயின், 1 கிலோ மெத்தகுலோன், 1.520 கிலோ ஹாசிஸ் ஆயில், 2.600 கிலோ எப்பிட்ரின் 800 கிராம் கொகெய்ன் ஹெராயின், 1.015 கிலோ பிரவுன் சுகர் போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 389.50 கிலோ கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. மொத்த மதிப்பு ரூ. 7.07 கோடி.
- 41 போதைப் பொருள் குற்றவாளிகளை குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- நெடுஞ்சாலை ரோந்துப்பணியை வலுப்படுத்தும் பொருட்டு 138 ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.16.35 கோடி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டது.
- சென்னை காவல் கான்வாய் பணி, ரோந்துப் பணிகளுக்கு என ரூ.14.40 கோடி செலவில் 191 வாகனங்கள் வாங்கி வழங்கப்பட்டன.
- ரூ.9.26 இலட்சம் செலவில் தமிழக அதிரடி படைக்கு ஒரு தார் ஈப்பு ஒன்றும், முதலமைச்சரின் பாதுகாப்பு பணிக்கு ரூ.2.16/– கோடி செலவில் 19 இன்னோவா வாகனங்களும், நுண்ணறிவு பிரிவுக்கு புல்லட் புரூப் கார்பியோ ஜீப்பு ஒன்று ரூ.55 இலட்சம் செலவிலும் வாங்கி வழங்கப்பட்டன.
- ரூ.88.40 கோடி செலவில் காவல்துறை நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- ரூ.45.48 இலட்சம் மதிப்பில் புதியதாக 6 காவல் நகரம் / மாவட்டங்களில் தொடங்கிய ஆள் கடத்தல் தடுப்பு பிரிவுக்காக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. 1,454 மாணவ, மாணவியர் பரிசு பெற்றுள்ளனர்.
- சிறப்பு உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவர்களுக்கு ஆண்டுக்கு அவர்கள் செலுத்தும் கல்விக்கட்டணமோ அல்லது 20 ஆயிரம் ரூபாயோ இதில் எது குறைவோ அந்த தொகை அவர்கள் மேற்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது.
- 301 மாணவர்களுக்கு ரூ. 46 இலட்சம் வழங்கப்பட்டு பயன். சிறப்பு கல்வி உதவித்தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/– ஆகவும், விடுதி கட்டணம் சேர்த்தும் வழங்கப்படும் என அறிவிப்பு.
- காவல்துறையினர் பணியின்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறந்தால்

ரூ.5 இலட்சம், நிரந்தர உடல் ஊனத்திற்கு ரூ. 2 இலட்சம், ஒரு கண், பாதம், விரல்களை இழந்தால் ரூ.1 இலட்சம், தீக்காயம், துப்பாக்கி சூடு (ம) எலும்பு முறிவுகளுக்கு ரூ. 50,000/– சிறுகாயத்திற்கு ரூ. 10,000/– வழங்கல். இதுவரை 125 நபர்களுக்கு ரூ.96.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலுள்ள பணியாளர்களுக்கு வழங்கிவந்த தொகை ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணை. ரூ.33.40 இலட்சம் ஒதுக்கீட்டில் 28 பயனாளிகள் இதுவரை பயன்பெற்றுள்ளனர்.
- ரூ.14 கோடி ஆண்டு செலவினத்தில் காவலர்களுக்கு தங்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களை 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.
- மறைந்த காவல் ஆளிநர்களின் 514 குடும்பத்தாருக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நடப்பு ஆண்டில் ரூ.13. 39 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து ஓட்டுநர் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை சீருடை படி மாதந்தோறும் ரூ.250/–லிருந்து ரூ.350/– ஆக உயர்வு.
- அனைத்து காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை இடர்படி மாதந்தோறும் ரூ.300/–லிருந்து ரூ.400/– ஆகவும் துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.350/–லிருந்து ரூ.450/– ஆக உயர்வு.
- சிறப்பு தனிப்படையில் பணியாற்றும் அனைத்து ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடர்படி ரூ.2000/–லிருந்து ரூ.3000/– ஆக உயர்வு.
- உணவு பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையில் பணியாற்றும் காவலர்கள் முதல் தலைமை காவலர்கள் வரை மிகை நேர படியினை நாள் ஒன்றிற்கு ரூ.200/– ஆக உயர்வு.
- காவலர் விளையாட்டு போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெங்கலம் பதக்கம் பெறும் காவல் ஆளிநர்களுக்கான பண வெகுமதி ரூ.5 இலட்சம் ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.2இலட்சம் ஆக உயர்வு. மேலும் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் குழுக்களில் அனைவருக்கும் தலா ரூ.50,000/– வழங்க ஆணை.
- மத்திய பிரதேசம் மாநிலம் போபாலில் நடைபெற்ற 56ஆவது அகில இந்திய காவல் பணி திறன் போட்டிகளில் சுழல் கோப்பை மற்றும் பதக்கங்கள் வென்ற காவல் ஆளிநர்களுக்கு ரூ.61.50 இலட்சம் வழங்கி ஆணை.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை காவலர் தேர்வில் ஆதரவற்ற விதவைகளுக்கு, பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டில் 10 சதவீதம் ஒதுக்கீடு செய்து ஆணை.
- அரசு சட்டக் கல்லூரியிலுள்ள நூலகங் களுக்கு புத்தகங்கள் வாங்கிட ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு.
- 10 மாவட்டங்களில் புதிதாக போக்குவரத்து காவல்நிலையங்கள் அமைத்தல்.
- திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளுக்கு சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் பதவிகள் தோற்றுவித்தல்.
- ரூ. 74.40 இலட்சம் செலவில் 31 மாவட்டங்களில் உள்ள காவல் கண்காணிப்பாளர்களுக்கு உதவும் பொருட்டு 31 சட்ட ஆலோசகர் பதவிகள் வழங்க ஆணை.
- திருப்பூர் மாவட்டம், சிறப்பு பிரிவிற்காக (ஒரு விரல் ரேகைப் பிரிவு, புகைப்படப்பிரிவு, நாய்ப்படைப்பிரிவு, சுருக்கெழுத்துப்பிரிவு, காவல் தொலைத்தொடர்பு பிரிவு, நடமாடும் தடய அறிவியல் பிரிவு) புதிதாக பதவிகள் தோற்றுவித்தல்.
- பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மங்களமேட்டில் புதிதாக உட்கோட்டம் அமைத்தல்.
- சீர்காழி மற்றும் மயிலாடுதுறையில் இரண்டு நிரந்தர மதுவிலக்கு சோதனைச் சாவடி மற்றும் நடமாடும் சோதனைச் சாவடியும் அமைத்தல்.
- திருச்சி மாநகரத்திற்கு வழங்கப்பட்ட 2 காவல் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை நிலை உயர்த்தி காவல் ஆய்வாளர்கள் பதவிகளாக ஸ்ரீரங்கம் மற்றும் தங்கமலை குற்றப்பிரிவிற்கு வழங்குதல் தொடர்பாக அரசாணை.
- 2013–2014ஆம் வருடத்திற்கென 10,099 நபர்கள் இளைஞர் காவல்படையில் பணியமர்த்தம்.
- தமிழ்நாடு காவல்துறையில் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்துவதற்காக 9 புதிய பதவிகள் (1 காவல் துணைக் கண்காணிப்பாளர், 1 காவல் ஆய்வாளர், 2 உதவி காவல் ஆய்வாளர்கள், 5 காவலர்கள்) தோற்றுவிப்பு.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 12 புதியதாக குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப்பிரிவு தோற்றுவிப்பு.
- விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் காவல் நிலையத்தை ஆய்வாளர் தரத்திற்கு உயர்வு.
- மாநிலங்களுக்கிடையே 37 சோதனைச் சாவடிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று நிரந்தர சோதனைச் சாவடிகளும் தோற்றுவிப்பு.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் போக்குவரத்து நுண்ணறிவுப்பிரிவு வழங்கி ஆணை.
- 15 மாவட்டங்களில் உள்ள ஆயுதப்படைப் பிரிவிற்கு கூடுதலாக 32 ஆயுதப்படைப்பிரிவு நிறுமங்களும் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வத்திராயிருப்புக்கு ஒரு ஆயுதப்படை நிறுமமும் வழங்கி ஆணை.
- 7 காவல் ஆய்வாளர்கள் மற்றும் 29 காவல் உதவி ஆய்வாளர்கள் தோற்றுவிப்பு.
- மதுரை மாநகர காவல் அதிகார எல்லையை விரிவுபடுத்தி மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளை இணைத்து அறிக்கை.
- திருப்பூர் மாவட்டத்திற்கு இரண்டு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு தோற்றுவிப்பு.
- காவல் நிலையங்களில் பணிபுரியும் காவல் அதிகாரிகள், சமூக அலுவலர் (Liaison Officer) என பெயரிடப்பட்டு கிராம பஞ்சாயத்து தலைவர் மற்றும் பொதுமக்களிடம் சமூக உறவு கொண்டு அனைத்து சட்டம் ஒழுங்கு தகவல்களை சேகரிக்க அரசாணை.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கருமத்தம்பட்டியை மையமாக கொண்டு புதிய உட்கோட்டம் தோற்றுவிப்பு.
- தமிழக அரசு 2012–2013 மற்றும் 2013–2014 ஆண்டுக்கு நுண்ணறிவுப் பிரிவின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் காவல் ஆய்வாளர்களுக்கு வினைத்திறமிக்க கைப்பேசிகள் (Smart Phones) மற்றும் காவல் துறையில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் காவல் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள் அனைவருக்கும் CUG SIM கார்டுகள் மற்றும் மதுவிலக்கு அமல்பிரிவு தலைமையிடத்தில் இலவச அவசர அழைப்பு வழி (Prohibition help line) வழங்குவதற்கு ரூ.3.77 கோடி மதிப்பில் நிதி ஒப்பளிப்பு.
- ரூ. 432.52 கோடி செலவில் பல்வேறு பகுதிகளில் காவல்துறைக்கு புதிய கட்டடங்கள், குடியிருப்புகள் மற்றும் வளாகங்கள்.
- சென்னை, எழும்பூர், காவலர் மருத்துவமனையை தரம் உயர்த்தி நவீன கருவிகள் வாங்குவதற்கு ரூ.4.31 கோடி ஒதுக்கீடு.
- 40 வயது முடிவடைந்த காவல் ஆளிநர்களுக்கு ஒவ்வொரு வருடமும் அரசாங்க மருத்துவமனைகளில் பண செலவில்லா முழு உடல்கூறு பரிசோதனை செய்ய ஆணை.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து வனத்துறையில் பணிபுரியும் ஆளிநர்களுக்கென மானியவிலை பல்பொருள் அங்காடி திட்டம்.
- காவல் நிலையங்களுக்கு ஒதுக்கப்படும் நிரந்தர முன் பணம் ரூ.5,000இலிருந்து ரூ. 10,000 ஆக உயர்வு.
- சென்னை பெருநகர் காவல் ஆணையரகத்தில் பணிபுரியும் அனைத்து காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி நாள் ஒன்றுக்கு ரூ.100/– லிருந்து ரூ.200/– ஆகவும் அதே போல், சென்னை அல்லாத பிற இடங்களில் தற்போது வழங்கப்பட்டுவரும் உணவுப்படி நாள் ஒன்றுக்கு ரூ.75/–லிருந்து ரூ.150/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- சிறப்பு தனிப்படையில் பணியாற்றும் அனைத்து ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கடின படி ரூ.900/– ஆக வழங்க அறிவிக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்பட்ட 6805 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு .

**குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்**

- ரூ.84.25 இலட்சம் செலவில் குற்ற வழக்குத் தொடர்வு இயக்கத்தின் 390 சட்ட அலுவலர்களின் பயன்பாட்டுக்காக சட்டப் புத்தகங்கள் வாங்கப்பட்டன.
- ரூ. 5 இலட்சம் செலவில் இயக்குநரக பிரிவு அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 11 கணினிகள்.
- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிலை – 2, அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர்களாக 23 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம்.




- ரூ. 5.11 கோடி செலவில் குற்ற வழக்கு தொடர்பு இயக்ககத்தைச் சார்ந்த 390 குற்றவியல் வழக்குரைஞர்களின் பயன்பாட்டிற்கென உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளை இணையம் மூலம் பெறும் வசதிகள், கணிணி பயிற்சி வழங்குதல், மடிக்கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் வழங்குதல், சட்ட புத்தகங்கள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

jla m¿éaš Jiw

- தடய அறிவியல் துறை கணினிமயமாக்கம்.
- 2013ஆம் ஆண்டில் 53,629 வழக்குகள் ஆய்வு.
- ரூ.53.25 இலட்சம் செலவில் கோவை மற்றும் திருச்சி வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் குருதிவடிநீரியல் பிரிவு துவக்கம்.
- தடய அறிவியல் துறையின் துப்பாக்கி நிபுணரின் கருத்தின் அடிப்படையில் தில்ஷன் கொலை வழக்கு கண்டுபிடிக்கப்பட்டது.
- மாண்புமிகு அமைச்சர் மரியம்பிச்சை அவர்களின் மரணம் பற்றிய காரணம் தடய அறிவியலாளரின் நுண்ணிய மதிநுட்பத்தால் தீர்வு காணப்பட்டது.
- பம்பாயில் நடந்த தடய அறிவியலாளர் அகில இந்திய மாநாட்டில், "குழந்தை பாலியல் வன்முறை மற்றும் கொலைக் குற்றம் புரிந்தவரை மரபணு சோதனை மூலமாக அடையாளம் காணல்" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை மிகச் சிறந்த ஆய்வுக்கட்டுரையாக தேர்வு.
- தடய அறிவியல் துறையில் 2014–ஆம் ஆண்டு (மார்ச் வரை) பெறப்பட்ட 43,912 சம்பந்தப்பட்ட 15,430 வழக்குகளும் ஆய்வு செய்யப்பட்டன.
- காவல் நவீனமயமாக்கல் மற்றும் பகுதி–2 திட்டம் மூலமாக தடய அறிவியல் துறை நவீனமயமாக்கப்பட்டது.
- தடய அறிவியல் துறையில் 50 பணியாளர்கள் வேலைவாய்ப்பகம், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்**

- தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகமானது இந்நாள் வரை 1,971 வீடுகள் உங்கள் சொந்த இல்லத் திட்டத்தின் கீழும், 34,672 காவல் வாடகை குடியிருப்புகள், 951 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை ஊழியர் குடியிருப்புகள், 1,025 சிறை துறை ஊழியர்கள் குடியிருப்புகள், 545 காவல் நிலையங்கள், 572 ஒய்வறைகள், 15 மாவட்ட காவல் அலுவலகங்கள், 9 ஆயுதப்படை வளாகங்கள், 19 துயில் கூடங்கள், 142 நாய் பட்டறைகள், 18 சிறப்பு புலனாய்வுத் துறை காவல் நிலைய கட்டடங்கள், 5 சிறப்பு பிரிவு சிறப்பு புலனாய்வுத் துறை காவல் நிலைய கட்டடங்கள், 4 நவீன கட்டுப்பாட்டு அறைகள், 4 மண்டல தடய அறிவியல் துறை கட்டடங்கள், 16 ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை கட்டடங்கள், 4 காவல் துறை

துணை தலைவருக்கான சரக அலுவலகங்கள், 4 காவல் துறை தலைவருக்கான மண்டல அலுவலகங்கள் மற்றும் 4 மாநகர காவல் அலுவலகங்களும் கட்டி முடித்துள்ளன.

- இந்தியாவிலேயே முதன்முறையாக அறிவிக்கப்பட்ட உங்கள் சொந்த இல்லத் திட்டத்தின் கீழ் 36,000 வீடுகள் கட்ட அரசு ஆணை வழங்கியுள்ளது. இதற்காக ரூ.287.96 கோடி வீட்டு கடனுதவியாக மேலக்கோட்டையூர் உங்கள் சொந்த இல்லத் திட்ட ஒதுக்கீட்டாளர்களுக்கு, அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
- 5,087 குடியிருப்புகள் ரூ.341.68 கோடி செலவிலும், 175 காவல் நிலையங்கள் ரூ.68.32 கோடி செலவிலும் மற்றும் 35 இதர கட்டடங்கள் ரூ.73.08 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

- வீர, தீர செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்) 2012 ஆம் ஆண்டில் 5 பணியாளர்களுக்கும் மற்றும் 2013 ஆம் ஆண்டில் 3 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது. இப்பதக்கம் பெறுவோருக்கு மாதம் ரூ.500 பணப்பயன்.
- ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் கோட்டம், சின்னசேலம், மதுரை கோட்டம், டி.கல்லுப்பட்டி மற்றும் திருநெல்வேலி கோட்டம், ஆலங்குளம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைப்பு.
- ரூ.97.97 இலட்சம் செலவில் சிவகங்கை மற்றும் ஊட்டியை தலைமை இடமாக கொண்டு புதிய கோட்டங்கள்.
- சென்னை மாநகரப் பயன்பாட்டிற்காக ரூ.45.70 கோடி செலவில் 54 மீட்டர் உயரம் செல்லக்கூடிய வானோக்கு உயர்வு ஏணி கொண்ட ஊர்தி ஒன்று மற்றும் 101 மீட்டர் உயரம் வரை நீளக்கூடிய வானோக்கி உயர ஏணி கொண்ட ஊர்திகள் இரண்டு கொள்முதல்.
- ரூ. 3.20 கோடி செலவில் மாநகரங்களின் உபயோகத்திற்கு 9 மேம்படுத்தப்பட்ட நவீன இரக நீர்தாங்கி வண்டிகள், உயர் அழுத்த பம்ப் பொருத்தப்பட்ட விரைந்து செல்லும் திறன் கொண்ட 8 சிறிய இரக நீர்தாங்கி வண்டிகள், வெட்டும் விரிக்கும் திறன்கள் ஒருங்கிணைந்த 22 கோம்பி கருவிகள்.
- ரூ.96 இலட்சம் செலவில் அம்பத்தூர், திருச்சி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் உபயோகத்திற்கு 4 சிறிய நுரைத் தகர்வு ஊர்திகள்.
- ரூ.71 இலட்சம் செலவில் துறையின் பயன்பாட்டுக்காக 14 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 2 இரு சக்கர வாகனங்கள்.
- தீயணைப்போர் பதவியில் ஏற்படும் காலியிட மதிப்பீட்டினை தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்திற்கு நேரிடையாக அளிக்க இயக்குநருக்கு அதிகாரம்.
- பணியாளர்களின் உணவுக் கட்டணமானது நாள் ஒன்றிற்கு சென்னையில் பணிபுரிபவர்களுக்கு ரூ. 80 லிருந்து ரூ. 100 ஆகவும் மற்றும் புறநகரில் பணி புரிபவர்களுக்கு ரூ.55 லிருந்து ரூ.75 ஆகவும் உயர்த்தப்பட்டு, பின்னர் காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக சென்னையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ.100 லிருந்து ரூ 200 ஆகவும் மற்றும் பிற பகுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ. 75 லிருந்து ரூ. 150 ஆகவும் உயர்வு.
- காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக உதவிக் கோட்ட அலுவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர்படி ரூ. 180 லிருந்து ரூ.400 ஆகவும் மற்றும் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி ரூ.210 லிருந்து ரூ.450 ஆகவும் உயர்வு.
- மோப்ப நாய்ப்படைப் பிரிவிலுள்ள மோப்ப நாய் ஒவ்வொன்றிற்கும் உணவுக் கட்டணம் நாளொன்றிக்கு ரூ.85/–லிருந்து ரூ.200/– ஆக உயர்வு. மாதாந்திர பராமரிப்புக் கட்டணம் ரூ.250/– லிருந்து ரூ. 300/– ஆக உயர்வு.
- "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ், வீடுகள் பெற காவல்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் தகுதியுடையவர்களாக சேர்த்து ஆணை.
- ரூ.28 கோடி செலவில் தீயணைப்புப் பணியாளர்களுக்கு தீயிலிருந்து பாதுகாக்கும் 1,980 ஜோடி தற்காப்பு உடைகள்.
- ரூ.5.99 கோடி மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புபணித்துறைத் தலைமையகத்திற்கு புதிய கட்டடம் உருவாக்கம்.

- தீயணைப்போர் ஓட்டி மற்றும் யந்திரகம்மியர் ஓட்டுநர் பதவிகளில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறுவதில் இருந்து தேக்க நிலையினை களையும் வகையில் 165 யந்திரகம்மியர் ஓட்டுநர் பதவிகள் நிலைய அலுவலர் (போக்குவரத்து) பதவியாக தரம் உயர்வு.
- 791 நபர்கள் தீயணைப்போராக பணி நியமனம்.
- பல்பொருள் அங்காடிகள் மூலம் குறைந்த விலையில் பொருட்களை பெறும் சலுகையினை காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் பெற்றிட ஆணை நீட்டிப்பு.
- கோட்ட அலுவலர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்களுக்கான குழு காப்பீட்டுத் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்வு.
- பணியின்போது உயிரிழக்கும் பணியாளர்களது குடும்பத்தினருக்கு பணியாளர்களுக்கான குழு காப்பீடு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொகை ரூ.1இலட்சத்திலிருந்து ரூ. 2இலட்சமாக உயர்வு.
- ரூ.92.12இலட்சம்செலவில்நீலகிரிமாவட்டத்தின் பயன்பாட்டிற்கு உரிய மீட்பு உபகரணங்களுடன் 4 பிக் அப் வேன்கள்.
- ரூ.9.50இலட்சம்செலவில்மூச்சுக்கருவிகளுக்கு பிராணவாயு நிரப்புவதற்கு தேவைப்படும் ''மூச்சு காற்று நிரப்பும் கருவி'' **(Breathing Air-Compressor)** ஒப்பளிப்பு.
- கோட்ட அலுவலர் என்ற பதவி பெயரானது "மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 550 தீயணைப்போர்களுக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான பயிற்சி அளித்திட ரூ 21.29 இலட்சம் ஒப்பளிப்பு.
- இனி வருங்காலங்களில், வீரதீர செயலுக்கான "தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணி பதக்கம்" (அண்ணா பதக்கம்) பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர பதக்கப்படி ரூ. 500/–க்கு பதிலாக ரொக்க பரிசாக ரூ. 5 இலட்சம் வழங்கிட உத்தரவு.
- துரைப்பாக்கம், வேளச்சேரி, விருகம்பாக்கம், மதுரவாயில் மற்றும் மேடவாக்கம் ஆகிய 5 இடங்களில் மொத்தம் ரூ. 3.7 கோடி செலவில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்க ஒப்பளிப்பு.

**சிறைச்சாலைகள்துறை**

- சிறைகளில் உள்ள நவீன சாதனங்களை பராமரிக்க ஒரு ஆய்வாளர் (தொழில் நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர் (தொழில் நுட்பம்) பணியிடங்கள் ஆண்டொன்றுக்கு ரூ.15.26 இலட்சம் செலவில் தோற்றுவிப்பு.
- சிறைவாசிகளை சீர்த்திருத்துவதற்காக 9 புதிய மனயியல் நிபுணர் பணியிடங்கள் ஆண்டொன்றுக்கு ரூ.45.08 இலட்சம் செலவில் தோற்றுவிப்பு.
- சென்னை, கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறை தலைவர் அலுவலகத்தில், ஆண்டொன்றுக்கு ரூ.1.10 இலட்சம் செலவில் புதிதாக ஒரு சட்ட ஆலோசகர் பதவி உருவாக்கம்.
- ரூ. 1.39 கோடி மதிப்பீட்டில் புழல் சிறை வளாகத்தில் பார்வையாளர் காத்திருப்பு அறை, சோதனையிடும் அறை மற்றும் வழிக்காவலர்கள் அறை போன்ற கூடுதல் வசதிகளை ஏற்படுத்திட ஆணை.
- ரூ. 40.40 இலட்சம் செலவில் சிறையினுள் தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்திட புழல் மத்தியசிறை–1 மற்றும் பாளையங்கோட்டை மத்தியசிறைக்கு எக்ஸ் கதிர் மூலம் பொருட்கள் சோதனையிடும் ஊடுகருவி.
- ரூ.8.75 கோடி செலவில் சிறைத்துறைக்கென சென்னை எழும்பூரில் புதிய நிருவாக தலைமையிட கட்டடம்.
- ரூ. 7.65 கோடி செலவில் திருச்சி, சேலம், மதுரை மற்றும் கடலூர் மத்தியசிறை களப்பணியாளர்களுக்கு 100 குடியிருப்புகள்.
- ரூ.36.52 இலட்சம் செலவில் சிறைத்துறை பயன்பாட்டிற்கென துப்பாக்கி குண்டுகள்.
- ரூ. 14.95 இலட்சம் செலவில் மத்தியசிறை–கோவை, மத்தியசிறை–1 மற்றும் 2, பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, புழல், வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, சேலம், பாளையங்கோட்டை மற்றும் திருச்சியில் உள்ள பெண்கள் தனிக்கிளைச்சிறைகளின் பயன்பாட்டிற்காக 155 வாக்கி டாக்கி கருவிகள்.
- ரூ. 4.32 இலட்சம் செலவில் மத்தியசிறை, மதுரை, கோவை, கடலூர் மற்றும் வேலூர் ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு 8 தடைபடா மின்வழங்கும் கருவிகள்.

- ரூ. 5.25 இலட்சம் செலவில் மத்தியசிறை திருச்சி, மற்றும் சேலம் ஆகியவற்றுக்கு 6 பன்முக கதவு வடிவ உலோகம் கண்டுபிடிக்கும் கருவி.
- ரூ.2.10 இலட்சம் செலவில் மத்தியசிறை–சேலம், மதுரை, மத்தியசிறை–2–புழல், பெண்கள் தனிச்சிறை–புழல், வேலூர் மற்றும் திருச்சி ஆகியவற்றின் பயன்பாடிற்கு வீடியோ கேமிரா கருவிகள்.
- சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.12/– என வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.100/– ஆக உயர்வு.
- சிறைத்துறையின் அனைத்து களப் பணியாளர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட குழு காப்பீட்டுத் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
- தமிழக முதலமைச்சரால் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக்காவலர்களுக்கு பொங்கல் தினத்தன்று வழங்கப்படும் பதக்கத்திற்கான மாதாந்திர பதக்கப்படி ரூ.100/– லிருந்து ரூ.200/–ஆக உயர்வு.
- ரூ. 25.93 இலட்சம் செலவில் கிளைச்சிறைகள், தனிக்கிளைச்சிறைகள், பார்ஸ்டல்பள்ளிகள் மற்றும் மாவட்ட சிறைகளின் பயன்பாட்டிற்கு 50 கணிப்பொறிகள் மற்றும் இணைந்த பிற கருவிகள்.
- ரூ.80.72 இலட்சம் செலவில் சிறைதுறையின் பல்வேறு அலுவலகங்களுக்கு புதிய வாகனங்கள்.
- "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் கட்டப்படவுள்ள 2,673 வீடுகளில் சிறைத்துறையில் பணிபுரியும் இரண்டாம் நிலைக்காவலர்கள் முதல் சிறை அலுவலர் வரையிலான 56 களப்பணியாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு.
- ரூ.23 இலட்சம் செலவில் 10 மத்திய சிறைகள், நான்கு சரக சிறைத்துறைத் துணைத்தலைவர் அலுவலகங்கள், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம், மூன்று பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல்பள்ளி–புதுக்கோட்டை ஆகிய அலுவலகங்களில் 9 தொலை இயக்கி அஞ்சல் முத்திரை இயந்திரங்கள். (Remotely controlled Franking Machines)
- சிறைகளில் பணியாற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான சீருடைப் பணியாளர்களுக்கு சீருடை தைப்பதற்கான தையற்கூலி, காவல்துறையினருக்கு வழங்கப்படுவதற்கு இணையாக ரூ.250/–ல் இருந்து ரூ.450/–ஆக உயர்த்தி ஆணை.
- ரூ.2.21 கோடி செலவில் மத்திய சிறைகளில் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் வகையில், 60 மேம்படுத்தப்பட்ட சிசிடிவி கேமராக்கள்.
- ரூ. 35 கோடி செலவில் அனைத்து மத்திய சிறைகளிலும் மேற்கூரை சூரிய ஒளி உற்பத்தி (Roof top Solar Photo Voltic) முறையினை அமைத்திடும் பொருட்டு முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட ரூ.5 இலட்சம் ஒப்பளிப்பு.
- ரூ. 3 கோடி செலவில் புழல் மத்திய சிறை வளாகத்தில் முன்னோடித் திட்டமாக சூரிய சக்தி மின்னாக்கி (Pilot Solar Power Generator plant) அமைத்திட ஆணை.
- ரூ.96.18 இலட்சம் செலவில் வேலூர், கடலூர், சேலம் மற்றும் புழல் மத்திய சிறைகளில் எக்ஸ் கதிர் மூலம் பொருட்கள் சோதனையிடும் ஊடு கதிர் (Baggage scanner) கருவி.
- சிறைவாசிகளை மனநல ரீதியாக திருத்துவது குறித்து ஆராய்ச்சி செய்ய, தகுதி வாய்ந்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் குழு அமைப்பு இதற்கென ரூ.1 கோடி நிதி அங்கீகாரம்.
- ரூ.1.63 கோடி செலவில் சிறைவாசிகள் தமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் பேசுவதற்கு 9 மத்தியசிறைகளில் 54 தொலைபேசி சேவை மையங்கள் அமைப்பு.
- சிறைச்சாலைகளில், உற்பத்தி மற்றும் பராமரிப்பு பிரிவுகளில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியம், செயல் திறன் வாய்ந்த நபர்களுக்கு ரூ. 60/–லிருந்து ரூ.100 ஆகவும் பகுதி செயல் திறன் வாய்ந்த நபர்களுக்கு ரூ. 50/–லிருந்து ரூ.80 ஆகவும் செயல் திறனற்ற நபர்களுக்கு ரூ. 45/–லிருந்து ரூ.60 ஆகவும் உயர்வு.
- சிறைவாசிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் காணொளி காட்சி (Video Conferencing) மூலமாக அவர்களின் நீதிமன்ற காவலை நீட்டிப்பு செய்வதற்காக ரூ. 3.19 கோடி செலவில் 28 நீதிமன்றங்களில் அதற்கான சாதனங்கள் அமைப்பு.

- ரூ.5.85 இலட்சம் செலவில் சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 'ஆ' வகுப்பு தண்டனை சிறைவாசிகளுக்கான சீருடை அரைக்கால் சட்டையிலிருந்து முழுக்கால் சட்டையாக மாற்றம்.
- ரூ. 6.90 இலட்சம் செலவில் 16 கிளைச்சிறைச்சாலைகள், பார்ஸ்டல் பள்ளிகளில் குடிநீர் வசதிக்கென சவ்வூடுபரவல் முறையில் குடிநீர் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள்.
- தமிழ்நாடு திறந்த வெளிப்பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் தமிழகச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு, கல்வி கட்டணத் தொகையிலிருந்து முழு விலக்கு.
- ரூ.45 இலட்சம் செலவில் புழல் மத்திய சிறை–1இல் நவீன அடுமனை (Bakery Unit).
- அனைத்து மத்திய சிறைகளிலும் வியாபார அமைப்பு (Prison Bazaar) ஏற்படுத்திட ஆணை. இதற்கென ரூ.10 இலட்சம் சுழல்நிதி ஒதுக்கீடு.
- ரூ.2.5 கோடி செலவில் புழல் மத்திய சிறை வளாகத்தில், கழிவு நீரை மறு சுழற்சி மூலம் சுத்திகரிப்பு செய்திட BOOT முறையில் நவீன சுத்திகரிப்பு நிலையம்.
- ரூ. 3.6 கோடி செலவில் பழமையான அனைத்து மத்தியசிறைகளில் தற்போது உள்ள கழிப்பிட வசதிகளை மாற்றி, சுகாதார வசதி மேம்படுத்தி ஆணை.
- ரூ.18 இலட்சம் செலவில் மத்தியசிறைகளிலுள்ள தச்சு தொழிற்கூடங்களை நவீனமாக்கம்.
- ரூ.5 இலட்சம் செலவில் சிறை மருத்துவமனைகளின் மருத்துவ வசதிகளை மேம்படுத்தி அவசரகாலமருத்துவஊர்திகளுக்கு உயிர்காக்கும் கருவிகள் வழங்கல்.
- ரூ.1.3 கோடி செலவில் அனைத்து மத்தியசிறைகள், பெண்கள் தனிச்சிறை மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் பார்வையாளர்கள் மேலாண்மை திட்டம் செயல்பாடு.
- சிறைவாசிகளின் சொந்தப் பணக்கணக்கிலிருந்து மேற்கொள்ளும் வாராந்திர செலவினத் தொகை உச்ச வரம்பு 'அ' பிரிவு சிறைவாசிகளை பொறுத்தமட்டில் ரூ.375/–லிருந்து ரூ.750/– ஆகவும், 'ஆ' வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.225/– லிருந்து ரூ.450/– ஆகவும் உயர்வு.
- ரூ.43.68 இலட்சம் செலவில் சிறைவாசிகளின் பயன்பாட்டுக்கென முகசவர ரேசர்கள்.
- ரூ. 1.99 கோடி செலவில் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரும் பெண் தண்டனை சிறைவாசிகளுக்கென கோவையில் புதியதாக பெண்கள் தனிச் சிறை.
- காவல்துறை பணியாளர்கள் பெறுவதைப் போன்றே அனைத்து பொருட்களையும் மானிய விலையில் "காவல்துறை பொருள் வழங்கீட்டு மையத்தில்" (Police Canteen) பெற்றுக்கொள்வதற்கான சலுகை சிறைத்துறை பணியாளர்களுக்கும் நீட்டிப்பு.
- காணொலிக் காட்சி மூலமாக விசாரணை சிறைவாசிகளின் நீதிமன்ற காவலை நீட்டித்திட தமிழ்நாட்டில் உள்ள சிறைகள் மற்றும் நீதிமன்றங்களின் ரூ.6.92 கோடி செலவில் 60 இடங்களில் காணொலி காட்சி சாதனங்கள்.
- ரூ.14.55 இலட்சம் செலவில் 96 ஆண் கிளைச்சிறைகளில் உள்ள சிறைவாசிகளின் பயன்பாட்டிற்கென ரேடியோ மற்றும் தொடர்புடைய சாதனங்கள்.
- ரூ.1.50 கோடி செலவில் கோவை மத்திய சிறையில் நான்கு நவீன விசைத்தறிகள்.
- ரூ.1.75 கோடி செலவில் தென் மாவட்டங்களிலிலுள்ள நீதிமன்றங்களில் தண்டனை பெற்று வரும் பெண் தண்டனை சிறைவாசிகளுக்கென மதுரையில் புதியதாக பெண்கள் தனிச் சிறை .
- திருப்பூர் மாவட்டத்தில் ரூ.9.96 கோடி செலவில் மாவட்ட சிறை வளாகம்.
- செங்கல்பட்டு தனிக்கிளைச்சிறை ரூ.2.62 கோடி செலவில் மாவட்ட சிறையாக மாற்றம்.
- ரூ.12.95 கோடி செலவில் தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட சிறை, பார்ஸ்டல்பள்ளி மற்றும் பெண்கள் இணைப்புச் சிறை.
- ரூ.14.94 கோடி செலவில் தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட சிறை.

**போக்குவரத்துத் துறை (உள்துறை)**

- தென்காசி திண்டிவனம், ஒசூர், தாராபுரம் மற்றும் செங்குன்றம் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்.
- திருச்சி (கிழக்கு) குன்றத்தூர், ஈரோடு, சேலம்,கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் (தெற்கு)

ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் புதிதாக உருவாக்கம்.

- பூந்தமல்லி, சங்கரன்கோவில் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்வு.
- போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகங்களுக்கு 54 ஈப்புகள்.
- ரூ. 109.46 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பம் (உள் வருகை மற்றும் வெளி செல்கை) சோதனைச் சாவடிகள் நவீனமயம்.
- ரூ.10.56 இலட்சம் மதிப்பீட்டில் கோவை மாவட்டம், கோபாலபுரம் போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடிக்கு சொந்தக் கட்டடம்.
- ரூ.57.82 இலட்சம் மதிப்பீட்டில் வேலூரை தலைமையிடமாகக் கொண்டு வேலூர் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் துவக்கம்.
- ரூ.2.77 கோடி செலவில் சோழிங்கநல்லூர், அம்பத்தூர், வாணியம்பாடி, மயிலாடுதுறை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்வு.
- திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை பகுதி அலுவலகத்திற்கு சொந்தக்கட்டடம் கட்ட தேவையான நிலம் இந்து சமய அறநிலைய மற்றும் ஆட்சித் துறையிடமிருந்து ரூ. 1.32 கோடி வழங்கி கொள்முதல்.
- பொறியியல் சாராத சாலைப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து 9 மாவட்ட ஆட்சியர்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டு துறைகளுக்கும் ரூ.14.25 கோடி நிதி ஒதுக்கீடு.
- மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள ரூ. 60 இலட்சம் மற்றும் அரசு உதவியுடன் இயங்கும் 11 அவசர விபத்து சிகிச்சை மையங்களுக்கு ரூ.52.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ரூ.20 கோடி வழங்கல்.
- சென்னை மாநகர ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணத்தினை குறைந்தபட்சம் ரூ.25/– முதல் 1.8 கி.மீ.க்கும், அதனை அடுத்து ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.12/– என கட்டணம் உயர்த்தி நிர்ணயம்.
- ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் புதிய இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்) அலுவலகங்கள் துவக்கம்.
- ரூ.11.25 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள் இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களாக தரம் உயர்வு.
- ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள்.
- பவானி மற்றும் துறையூர் பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்.
- ரூ.71.30 இலட்சம் மதிப்பீட்டில் 70 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 பகுதி அலுவலகங்களுக்கு வருடுபொறி (Scanner) வழங்குதல்.
- ரூ.18.04 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீபெரும்புதூர், கள்ளக்குறிச்சி, வேடசந்தூர் மற்றும் பாலக்கோடு ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு சர்வர், யு.பி.எஸ் மற்றும் நகல் எடுக்கும் கருவிகள் வழங்குதல்.
- ரூ.11.36 இலட்சம் மதிப்பீட்டில் கோபாலபுரம் (கோவை), அம்பராம்பாளையம் (கோவை), லோயர்கேம்ப் (தேனி) மற்றும் பண்ணாரி (ஈரோடு) ஆகிய சோதனைச் சாவடிகளுக்கு சர்வர்கள் வழங்குதல்.
- ரூ.54.06 இலட்சம் மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் உள்ள பழைய சர்வர் மற்றும் அச்சுப்பொறிகளை மாற்றி புதியன வழங்குதல்.
- ரூ.10 கோடி செலவில் 14 இடங்களில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுத்தளங்கள் அமைத்தல்.

**நீதிமன்றங்கள் துறை**

- ரூ.9.61 கோடி மதிப்பீட்டில் மதுரையில் அமைக்கப்படவுள்ள நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு புதிய கட்டடம்.




- ரூ.2.47 கோடி செலவில், நீதித்துறை பயிற்சிக் கழகம் மூலமாக நீதித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்பட்ட எழுத்தர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பூதியம் ரூ. 5,000/–லிருந்து ரூ. 7,500/–ஆக உயர்வு.
- 10 நடமாடும் நீதிமன்றங்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்துவதற்கும் மற்றும் மதிப்பு கூட்டு வரி செலுத்துவதற்கும், ரூ.6.24 இலட்சம் கூடுதல் தொகை அளிப்பு.
- குடும்பநல வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்கென மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ரூ.8.06 கோடி செலவில் திருநெல்வேலி, திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், வேலூர், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் குடும்பநல நீதிமன்றங்கள் அமைப்பு.
- அனைத்து மாவட்டங்களிலும் ரூ.1.34 கோடி செலவில் பெரம்பலூர் நீங்கலாக 31 மாலை நீதிமன்றங்கள் அமைப்பு.
- ஊழல் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள 4 சிறப்பு நீதிமன்றங்களுக்கு ரூ.4 இலட்சம் செலவில் கணினி உபகரணங்கள்.
- ரூ.1.07 கோடி செலவில் மோட்டார் வாகன விபத்து வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென தருமபுரியில் மாவட்ட பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் மற்றும் சார்பு நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைப்பு.
- சென்னையில் விடுமுறை கால குடும்பநல நீதிமன்றத்தில் பணிபுரியும் நீதிபதி மற்றும் பணியாளர்களுக்கு 2012, 2013 ஆண்டுகளுக்கு ரூ.28.84 இலட்சம் செலவில் தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.1.09 கோடி செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் விழுப்புரம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றம்.
- குடும்பநல நீதிமன்றத்தில் பணிபுரியும் குடும்பநல ஆலோசகர்களுக்கு நாள் ஒன்றுக்கு

அளிக்கப்படும் கட்டணத்தொகை ரூ.200ல் இருந்து ரூ.400 ஆக உயர்வு.

- ரூ.9.75 இலட்சம் செலவில் குற்றவியல் நடுவர் நீதிபதி நிலையிலான 39 விரைவு நீதிமன்ற நீதிபதிகளுக்கு தொலைபேசி வசதிகள்.
- தருமபுரி மாவட்டம் ஒசூரில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பு.
- தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமாக மாற்றம்.
- ரூ.1.10 கோடி செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பு.
- ரூ.11.78 இலட்சம் செலவில், திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் மதுரையிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகம் ஆகியவற்றுக்கு சுற்றுச்சுவர்கள்.
- ரூ.4.88 கோடி மதிப்பீட்டில், மதுரையில் அமைந்துள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி, மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் தங்குவதற்கான ஐந்து மாளிகைகள் கட்டுதல்.
- ரூ.3.88 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இணைப்புக் கட்டடத்தின் பின்புறம் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டுமானம்.
- ரூ.2.07 கோடி செலவில் சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுமானம்.
- ரூ.72.20 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, தளவாடங்கள் வைப்பறை மற்றும் காவலர்கள் ஓய்வு அறை.
- அம்பாசமுத்திரத்திலுள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்.
- ரூ. 1.5 கோடி செலவில், மதுரையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, தளவாடங்கள் வைப்பறை மற்றும் காவலர்கள் ஓய்வு அறை.
- ரூ.15.50 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பு.
- ரூ.22.21 கோடி செலவில் சென்னையிலுள்ள ஐந்து பாரம்பரிய நீதிமன்றக் கட்டடங்கள் பராமரிப்பு.
- ரூ.25இலட்சம்செலவில்சென்னைஉயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலுள்ள நீதிபதிகளின் குடியிருப்புகளுக்கு டீசல் மின்னாக்கி (Diesel Generator).
- ரூ.15.90 இலட்சம் செலவில் உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு ஒளிநகல் இயந்திரம் மற்றும் இதர உபகரணங்கள்.
- ரூ.5.03 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், கடலூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு தீயணைப்பு கருவிகள்.
- ரூ.92.15 இலட்சம் செலவில் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள நீதித்துறை அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள்.
- அரசு ஒப்புதலின்படி, மாநில சட்ட பணிக்குழுவிற்கு ஏழு அரசு சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை.
- அரசு வழக்காடுதல் துறைக்கு 10 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிப்பு._
- ரூ.4.59 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் மாற்று தீர்வு மைய கட்டடம்.
- ரூ.2.65 கோடி செலவில் பதிமூன்றாவது நிதி குழுவின் பரிந்துரையின்படி நீதித்துறை அதிகாரிகளுக்கு (Training to Mediators) பயிற்சி.
- ரூ.2.22 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர்களுக்கு மடிக்கணினி மற்றும் துணைக் கருவிகள்.
- 35 நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவியாக 35 தட்டச்சர் பதவிகள் மற்றும் 35 அலுவலக உதவியாளர் பதவிகள் முறையே ரூ.12,000/–, ரூ.8,000/– தொகுப்பூதியத்தில் உருவாக்கம்.
- நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு தலா ஒரு உதவி குற்ற வழக்கு நடத்துநர் பதவி உருவாக்கம்.

- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் அலுவலக இருப்பிடத்திற்கு இரண்டு கண்காணிப்பாளர் (சமையற்கலை) மூன்று உணவு பரிமாறுபவர் பதவிகள் புதியதாக உருவாக்கம்.

- ரூ.84.25 இலட்சம் செலவில் குற்ற வழக்கு இயக்ககத்தின் வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்காக சட்டப்புத்தகங்கள்.

- தமிழ்நாடு குற்ற வழக்குத் தொடர்வுத்துறையில் அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–2 பணிக்கு 2009–2010ஆம் ஆண்டிற்கான காலியிடப் பணிகளுக்கு தகுதியான 23 நபர்கள் தேர்வு.

- ரூ.5.10 கோடி செலவில், குற்ற வழக்கு தொடர்வுத்துறையைச்சார்ந்த அரசு குற்றவழக்கு நடத்துநர்களுக்காக மடிகணினி, அச்சு இயந்திரம் உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை ஆன்லைன் வாயிலாகப் பெறுதல், சட்ட புத்தகங்கள் வாங்குதல் மற்றும் கணினிப் பயிற்சி.

- சென்னை பெருநகரத்திலுள்ள 12 காவல் மாவட்டங்களை நிருவகிக்கும் காவல் துணை ஆணையர்களுக்கு, குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் பிரிவுகள் 107 முதல் 110 இன் படி செயலாக்க நீதிபதியாக செயல்படும் அதிகாரம்.

- ரூ.54.27 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் II, III & V மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதி ஆகியோரின் அலுவலக பயன்பாட்டிற்கு மூன்று டொயோட்டோ இன்னோவோ வாகனங்கள்.

- இறந்த வழக்குரைஞர்களின் சட்ட முறையில–ான வாரிசுதாரர்களுக்கும் நியமனதாரர்களுக்கு வழக்குரைஞர்கள் நலநிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5.25 இலட்சமாக உயர்வு.

- தமிழ்நாடு வழக்குரைஞர் நலநிதிக்கு ஆண்டுதோறும் ரூ.4 கோடி அரசின் மானியமாக வழங்க ஆணை.

- தமிழ்நாடு மாநில நீதிப்பணியில் உரிமையியல் நீதிபதிகளாக 172 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம்.

- நிலுவையில் உள்ள வழக்குகளை தரமான, வெளிப்படையான முறையில் அணுகிடும் அரசின் தீர்மானத்திற்கேற்ப தமிழ்நாடு மாநிலத்திற்கென தனி வழக்காடும் கொள்கை உருவாக்கம்.

- ரூ.163 கோடி நிதிஒப்பளிப்பில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித்துறையின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

- நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு வழங்கப்படும் வருடாந்திர மானியம் ரூ.15 இலட்சத்திலிருந்து 2012–2013 ஆம் ஆண்டிற்கு மட்டும் ரூ.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- 2013 ஆம் ஆண்டிற்கான மாவட்ட நீதிபதி பதவியிடங்களுக்கான தேர்வு நடத்துவதற்காக ரூ. 12 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள 23 மாவட்ட நீதிபதிகளுக்கு (பயிற்சி) உதவி செய்வதற்காக பணியாளர்கள் மற்றும் கணினி வழங்குவதற்காக ரூ.1.72 கோடி ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

- 10 நடமாடும் நீதிமன்றங்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்துவதற்கும் மற்றும் மதிப்பு கூட்டு வரி செலுத்துவதற்கும், ரூ.6.24 இலட்சம் கூடுதல் தொகை அளிப்பு.

- ரூ. 2 இலட்சம் செலவில் பெரம்பலூர் மாவட்டம் மகளிர் நீதிமன்றத்திற்கு ஓட்டுநர் பதவி உருவாக்கம்.

- ரூ.2.46 கோடி செலவில் மாநிலத்திலுள்ள சார்பு நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வசதி அளித்தல்.

- ரூ. 55 இலட்சம் செலவில் மகளிர் விரைவு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு குளிர்சாதன மகிழுந்து அளித்தல்.

- ரூ. 2.5 இலட்சம் செலவில் 10 கூடுதல் மகளிர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு தொலைபேசி வசதி அளித்தல்.

- ரூ. 60.38 இலட்சம் செலவில் 18 மாநகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கு தலா ஒரு தட்டச்சர் பதவி உருவாக்கம்.

- ரூ. 4.68 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றத்திற்கு ஓட்டுநர், இரவு காவலர் மற்றும் மசால்சி (Masalchi) பதவிகள் உருவாக்கம்.

- நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ் மாவட்ட மற்றும் சார்நிலை நீதிமன்றங்களிலுள்ள மின்னாக்கிகளுக்கு டீசல் வாங்குவதற்காக ரூ.13.20 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு.
- ரூ.29 கோடி செலவில் 29 மாவட்டங்களில் 29 மாற்று தீர்வு மையக் கட்டடம்.
- ரூ.171.43 கோடி செலவில் நீதித்துறை அதிகாரிகள், சமரசம் செய்பவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு பயிற்சி.
- ரூ.2.47 கோடி செலவில் நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி.
- ரூ.5.31 இலட்சம் செலவில் மாநில நீதித்துறை பயிற்சி கட்டட வளாகத்தில் அமைந்துள்ள உயர்நீதிமன்ற விருந்தினர் மாளிகைக்கு அறைகலன்கள் .
- ரூ.8.88 கோடி செலவில் மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) மாபெரும் மக்கள் நீதிமன்றம் (மெகா லோக் அதாலத்) மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம்.
- ரூ.2.40 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் 150ஆவது ஆண்டு விழா.
- ரூ.12.91 இலட்சம் செலவில் மாநில தலைமை வழக்குரைஞர் அவர்களுக்கு புதிய டொயோட்டா இன்னோவா கார் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2.23 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கு மடிக்கணினி மற்றும் துணைக் கருவிகள்.
- ரூ.20 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மாற்று தீர்வு மைய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா.
- ரூ.1.53 இலட்சம் செலவில் மாநில தலைமை வழக்குரைஞர் அலுவலகத்திற்கு அறைகலன்கள் மற்றும் கணிப்பொறி.
- ரூ.1.04 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு 250 கணிப்பொறிகள் உள்பட கணிப்பொறி உபகரணங்கள்.
- ஒவ்வொரு விழாவிற்கும் ரூ.1.50 இலட்சம் வீதம் ஆண்டுக்கு ரூ.3 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், குடியரசு தின விழா மற்றும் சுதந்திர தின விழா.
- சென்னை உயர்நீதிமன்ற 150ஆவது ஆண்டு கொண்டாட்டத்தின் துவக்க விழாவின் நினைவாக சென்னை உயர்நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் பணியாளருக்கு ஒரு ஊதிய உயர்விற்கு நிகரான ரொக்கத்தை பரிசாக ஒரு முறை மட்டும் வழங்கி ஆணை.
- அனைத்திந்திய மகளிர் வழக்கறிஞர்களின் தேசிய மாநாட்டை நடத்துவதற்காக தமிழ்நாடு மகளிர் வழக்கறிஞர்களின் கூட்டமைப்பிற்கு ரூ. 20 இலட்சம் மானியம்.
- தமிழ்நாடு வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் இறந்து போவதன் பேரில், தமிழ்நாடு வழக்கறிஞர்களுடைய எழுத்தர்கள் நலநிதியத்தின் உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் அல்லது நியமனதாரர்கள் / சார்ந்தவர்களுக்கு செலுத்தப்படும் நிதி உதவி ரூ. 50,000 லிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்வு.
- 35 நீதிமன்ற மேலாளர்களின் உபயோகத்திற்காக 35 மடிகணினிகள் 10 ஜிகாபைட் அளவுள்ள தகவல் அட்டைகள் இரண்டு வருடத்திற்கான திட்ட அமைப்புடன் தலா ரூ.68,793/– வீதம் மொத்தம் ரூ.24.08 இலட்சம் செலவில் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- கடலூர் மாவட்டம் திட்டக்குடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஒரு உதவியாளர் பதவி உருவாக்க தொடரும் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.1.25 இலட்சம் ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு குற்றவழக்கு தொடர்வு துறையில் அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–2 பணிக்கு, 124 நபர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பணியமர்த்தம்.
- பொருளாதார குற்றப்பிரிவில் ஒரு மூத்த சட்ட ஆலோசகர் பணியிடமும் அவருக்கு உதவி செய்ய ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடமும் ரூ.6.13 இலட்சம் செலவில் புதிதாக தோற்றுவிப்பு.

- அனைத்து மாவட்டங்களிலுள்ள காவல் கண்காணிப்பாளர்களுக்கு உதவியாக ரூபாய் 74.40 இலட்சம் செலவில் ஒரு சட்ட அலுவலர் பதவி தோற்றுவிப்பு.
- சென்னை மத்திய குற்றப்பிரிவிற்கு ரூ. 7.20 இலட்சம் செலவில் ஒரு சட்ட ஆலோசகர் பதவி தோற்றுவிப்பு.
- மாநிலத்தில் உள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துனர்களுக்கும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்க ரூ.78.87 இலட்சம் ஒப்பளிப்பு.
- குற்ற வழக்கு தொடர்வு துறையில் புதியதாக பணியமர்த்தப்பட்டுள்ள நிலை–2, அரசு உதவி வழக்கு நடத்துனர்களுக்கு அடிப்படை பயிற்சியாக இரண்டு வாரம் உள்ளரங்க பயிற்சியும், அதைத்தொடர்ந்து ஒரு வாரம் நீதிமன்றங்களில் செயல்முறை பயிற்சியும் அளிக்க ரூ.3.26 இலட்சம் ஒப்பளிப்பு.
- மாநிலத்திலுள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துனர்களுக்கும் 71 சட்டங்களை உள்ளடக்கிய கைபேசியில் பயன்படுத்தும் மென்பொருள் வழங்க ரூ.4.83 இலட்சம் ஒப்பளிப்பு.
- குற்ற வழக்குத்தொடர்வு இயக்ககத்தின் வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்காக சட்டப்புத்தகங்கள் வாங்குவதற்கு 2011–2012ஆம் ஆண்டில் ரூ.8.96 இலட்சம் ஒப்பளிப்பு.
- ரூ. 10.31 கோடி செலவில் மாவட்ட நீதிபதிகள் தரத்தில் உள்ள நீதிபதிகளின் அலுவலக பயன்பாட்டிற்காக குளிர்சாதன வசதியுடன் கூடிய 134 வாகனங்கள்.

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

- கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டு தண்டனை பெற்ற மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும், கள்ளச்சாராய தொழிலிலிருந்து விடுபடவும் கடந்த ஆண்டுகளில் கடனாக வழங்கப்பட்டு வந்த மறுவாழ்வு நிதி 2011 – 2012 ஆம் ஆண்டு முதல் முற்றிலும் மானியமாக வழங்கவும் இந்த நிதித் தொகையை ரூ.2.20 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தி, ஆண்டுதோறும் வழங்கவும் ஆணை. இதன்படி 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் ரூ.15 கோடி வழங்கப்பட்டு, 3,376 பயனாளிகள் பயன்.
- மதுவகைகளை அருந்துவதால் ஏற்படும் தீங்குகள் மற்றும் அபாயங்களை மக்களுக்கு விளக்கும் வகையில் ரூ.1 கோடி செலவில் மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தும் திட்டம் செயலாக்கம்.

❖ ❖ ❖

**கண்ணயராக் காவல் பணி**

காவல் பணி என்பது கடினமான பணி. சட்டம், ஒழுங்கினை திறம்பட பராமரிப்பது; குற்றங்கள் நிகழாமல் தடுப்பது; நிகழ்ந்துவிட்ட குற்றங்களை புலனாய்வு செய்து குற்றவாளிகளை கண்டுபிடிப்பது; அவர்களை சட்டம் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தருவது போன்ற கடினமானப் பணிகளை காவல்துறை மேற்கொண்டு வருகிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

# குடிசை வீடுகள் பொலிவு பெறும்
# நகர்ப்புரங்கள் நல்லமைப்புடன் பரிமளிக்கும்




**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

- ரூ. 1,956.03 கோடி செலவில் 18,340 புதிய குடியிருப்புகள்.
- ஒதுக்கீடு பெற்றுள்ள சுமார் 37,352 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.153.30 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் மீட்பு.
- மாற்றுத்திறனாளிகளுக்கான வீடு ஒதுக்கீடு 1 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக உயர்வு.
- ஒதுக்கீடுபெற்று விற்பனைப் பத்திரம் பெறக்கூடிய நிலையில் இறுதித்தொகையை வட்டியுடன் செலுத்த இயலாது இருந்த 12,689 ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டி தள்ளுபடி.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA)**

- சென்னை மஞ்சம்பாக்கத்தில் 11.64 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.22 கோடி மதிப்பீட்டில், 400 சரக்குந்து வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி.
- வண்டலூர் வாலாஜாபாத் மாநில நெடுஞ்சாலையையொட்டி வண்டலூர் இரயில் நிலையம் மற்றும் வெளிவட்டச்சாலைக்கு (Outer Ring Road) அருகில் 65.3 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு புறநகர் பேருந்து முனையம்.
- சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் 3,655 சதுர மீட்டர் பரப்பளவில் சுமார் 2,500 இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் 50 நான்கு சக்கர வாகனங்கள் (Cars) நிறுத்தும் அளவிற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் இரண்டு அடுக்குத் தரைதள வாகனம் நிறுத்துமிடம் அமைக்கும் பணி.
- மறைமலைநகர் புதுநகர் திட்டப்பகுதி சித்தாமனூரில் 32.26 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.14 கோடி மதிப்பீட்டில் 30 தொழிற்கூடங்கள்.
- கோயம்பேடு வணிக வளாகத்தில் 14.41 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.128.41 கோடி மதிப்பீட்டில் 492 உணவு தானிய சிறப்பு வளாகம்.
- சென்னை கோயம்பேடு ஒப்பந்த வாகனப் பேருந்து நிலையத்தினை சுமார் 15.97 ஏக்கர் நிலப்பரப்பில் மேம்படுத்த ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி தனியார் கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளப்பட்டது.
- சென்னை கோயம்பேடு வணிக வளாகத்தில் உள்ள மொத்த சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களைப் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிக்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலம் ஒப்பளிக்கப்பட்ட திட்டத்தொகை ரூ.33.625 கோடிகள் செலவில் மறுசீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- சென்னைக்கு அருகில் மணலியை அடுத்து இடையாஞ்சாவடி கிராமத்தில் சுமார் 19.91 ஏக்கர் நிலப்பரப்பில் 300 வீட்டு மனைகளும் 30 பிற மனைகளும் உள்ளடக்கிய திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது.
- கருணாகரச்சேரி மற்றும் அன்னம்பேடு கிராமங்களில் அமையவிருக்கும் சரக்குந்து முனையத்தின் அபிவிருத்திக்காக 117.25 ஏக்கர் பரப்புள்ள நிலப்பகுதியினைக் கையகப்படுத்த அரசாணை பெறப் பட்டுள்ளது.
- சென்னைமாதவரத்தில்8ஏக்கர்நிலப்பரப்பில் நகரங்களுக்கிடையான துணைப் பேருந்து முனையம் அமைப்பதற்காக அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

- சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சென்னை, திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலைய திட்டப்பகுதி, நொச்சி நகர் திட்டப்பகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப்பகுதியிலும், இராஜீவ்காந்தி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்படக் கூடிய இடங்களான திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலும் ரூ.350 கோடி செலவில் 7,801 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு.
- 13ஆவது நிதி குழுவின் மாநில சிறப்பு மானிய உதவியினை கொண்டு சென்னை மற்றும் பெரு நகரங்களில் 5,243 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.300 கோடி செலவில் அமைப்பதற்கான செயல் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அவற்றுள் 4,283 குடியிருப்புகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டு 1,671 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் முடிவுற்று திறக்கப்பட்டுள்ளன.
- அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்புப் பணிகள் ரூ.19.92 கோடி செலவில் 118 திட்டப்பகுதிகளில் தொடங்கப் பட்டு, 96 திட்டப்பகுதிகளில் பணிகள் முடிவுற்று இதுவரை ரூ.152.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.




- ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத்திட்டத்தின் கீழ், தென் சென்னையில் 12,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.539.43 கோடி செலவில் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன.மேலும் 13,468 குடியிருப்புகள் ரூ.920.61 கோடி செலவில் கட்டுவதற்கான பணிகள்.

- 5,069 விற்பனைப் பத்திரங்கள் (குடியிருப்புகள் 2,376 மற்றும் மனைகள் 2,693) வழங்கப்பட்டுள்ளன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, சென்னை மற்றும் இதர நகரங்களில் 3,500 பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் ரூ.280 கோடி செலவில் கட்டும் பணிகள்.

- இராஜீவ் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 10 நகரங்களில் 4.96 இலட்சம் குடிசைவாழ் குடும்பங்கள் கணக்கெடுப்பு.

- தமிழகத்தில் 12 குடிசைப்பகுதிகளில் ரூ. 246.67 கோடி மதிப்பீட்டில் 3,603 கான்கிரீட் குடியிருப்புகள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்ட மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு ரூ. 21.88 கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளது. திருச்சி கரிகாலன் தெருவில் 305 குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதர 11 திட்டங்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

- கோவை சூலூர் பகுதியில் 108 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.3.16 கோடி செலவிலும், சேலம் எருமபாளையம் பகுதியில் 400 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.10.50 கோடி செலவிலும் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முறையே 10.10.2012 மற்றும் 23.12.2013 அன்று திறந்து வைக்கப்பட்டு இக்குடியிருப்புகள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

- 8,474 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து விட்டு சென்னை B.S.மூர்த்தி நகர் பகுதியில் 100 அடுக்குமாடிக் குடியிருப்புகள்

மற்றும் வியாசர்பாடி பகுதியில் 150 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.9.02 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ளன.

- சென்னை மற்றும் இதர நகரங்களில் ரூ.26 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பழுதுபார்ப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் 2023 க்கு முன் குடிசைப் பகுதிகளற்ற மாநகரங்கள் மற்றும் நகரங்கள்.
- புதிய கட்டுமானத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நல்ல தரமான வீடுகள்.

**நகர் ஊரமைப்பு இயக்ககம்**

- ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் வழங்கப்பட்டு வந்த தலா ரூ.50 இலட்சம் மானியம், ரூ.1 கோடியாக உயர்வு.
- போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நிறைவேற்றும் திட்டங்களின் மானியத் தொகை மாநகராட்சிகளுக்கு ரூ.1 கோடியாகவும், நகராட்சிகளுக்கு ரூ.50 இலட்சமாகவும் உயர்வு.
- 30நகராட்சிகள்மற்றும்4மாநகராட்சிகளுக்கு ரூ.4.86 கோடி போக்குவரத்து அபிவிருத்தித் திட்ட மானியம்.
- புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 15 புராதன நகரங்களுக்கு மானியமாக ரூ.4.22 கோடி விடுவிப்பு.
- பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 35 பூங்காக்களுக்கு ரூ.1.83 கோடி மானியம்.
- கோயம்பேடு மொத்தவிற்பனை வளாக மேம்பாடுப் பணிக்கு ரூ.33.62 கோடி.
- காஞ்சிபுரம் மற்றும் திருப்பூர் உள்ளூர் திட்டப்பகுதிகள் மற்றும் ஓசூர் புதுநகர் வளர்ச்சிக் குழும விரிவாக்கப் பணிகள்.
- கோவில்பட்டி, ராஜபாளையம், கோபிசெட்டிபாளையம், தருமபுரி, கீழக்கரை, காயல்பட்டினம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் – தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்களாக அரசு அறிவிப்பு.
- புதிய தொழில்நுட்ப உதவியுடன் நில உபயோக வரைபடம் தயாரிக்கும் பணி ரூ.41 கோடி மதிப்பில் செயல்படுத்த அரசாணை. பாரதிதாசன் பல்கலைக்கழகம் மூலம் ரூ.4.91 கோடி மதிப்பில் 8,447 சதுர கி.மீ. தற்கால நில உபயோக வரைபடம் தயாரிக்க முதல்கட்ட பணிகள் தொடக்கம்.
- அரசு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 113–சி–ற்கு வழிமுறைகள் வெளியீடு.

**உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி**

- உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.1,069.74 கோடி செலவில் 22 பெரிய உட்கட்டமைப்பு உத்தேசங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிகளை உருவாக்குதல்**

- கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் பகுதியான திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய கூட்டு உள்ளூர் திட்டக்குழுமங்கள் விரிவாக்கம் செய்து அரசால் ஆணை வெளியீடு.
- நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட பேரணாம்பட்டு, காங்கேயம், வெள்ளக்கோயில், கூடலூர் (தேனி மாவட்டம்) மற்றும் ஜெயங்கொண்டான் ஆகியப் பகுதிகள் தனித்த உள்ளூர் திட்டக்குழுமங்களாகவும், தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்களாக இருந்த கிருஷ்ணகிரி மற்றும் ஊட்டி ஆகியவற்றினை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிகளாகவும் உயர்த்தி அரசால் ஆணை.
- மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமப்பகுதிக்கு முழுமைத் திட்டம் அரசால் ஒப்புதல்.
- நுண்ணிய அளவில் 130 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்து / மறு ஆய்வு செய்தல் பணி நிறைவு.
- மேட்டுப்பாளையம் மற்றும் பொள்ளாச்சி உள்ளூர் திட்டப்பகுதிகள் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப்பகுதியின் விரிவாக்கப் பகுதியில் ஒருங்கிணைத்து அரசாணை




பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி உள்ளூர் திட்டப் பகுதியினை நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமப்பகுதியில் ஒருங் கிணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்**

- 2011 – 2012 ஆம் ஆண்டில் உறுப்பினர் களிடமிருந்து ரூ.105.98 கோடி கடன் வசூல் செய்யப்பட்டது.
- கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் கடன்பெற்ற குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு முறையே 75, 50 மற்றும் 25 விழுக்காடு வட்டித் தொகை மற்றும் 100 விழுக்காடு அபராத வட்டித் தொகையையும் அரசால் தள்ளுபடி செய்து அறிவிக்கப்பட்டது. இத்தள்ளுபடித் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களிடமிருந்து திட்டக்காலத்தில் ரூ.451.16 கோடி வசூல்.
- கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் வீடுகட்ட வழங்கப்படும் கடன்கள் 1.9.2009 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையை மாற்றி தற்போது தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு 100 சதவிகிதம் தவணைத் தொகை செலுத்திய 72 சங்கங்களுக்குப் புதிய கடன்கள் வழங்க அனுமதி. இது நாள் வரை 28 உறுப்பினர்களுக்கு ரூ.1.35 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் அலுவலகக் கட்டடம் இணைய நிதியிலிருந்து ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க அரசால் அறிவிப்பு.
- 2012–2013 ஆம் ஆண்டில் 11 உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் செங்கல்பட்டு மண்டல அலுவலகங்களில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளை வலைதளம் மூலமாக வரைபடங்களைக் கூராய்வு செய்ய மின்னணு ஆளுகைத் திட்டத்தினை செயல்படுத்த வேண்டி உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து ரூ.2.20 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

## தொழில் துறை

# வரலாறு காணாத முதலீடு வரலாற்றில் இது புது ஏடு!






- ரூ.31,706/– கோடி முதலீட்டில் 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 1,54,717 நபர்களுக்கு நேரடி / மறைமுக வேலை வாய்ப்பு.

- மேலும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் மூலமாக 35 நிறுவனங்கள் ரூ.14,897/– கோடி முதலீடு. ஆக மொத்தம் கடந்த மூன்றாண்டுகளில் 68 தொழில் நிறுவனங்கள் ரூ.46,603/– முதலீடு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறியீடாக விளங்கும் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross State Domestic Product – at constant prices) அளவீட்டின்படி தமிழ்நாடு ரூ.4.28 இலட்சம் கோடியுடன் இந்தியாவின் இரண்டாவது சிறந்த வளர்ச்சியடைந்த மாநிலமாக விளங்குகிறது.

- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் லார்சன் அண்டு டியூப்ரோ நிறுவனம் இணைந்து ரூ.3,375 கோடி முதலீட்டில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில், எண்ணூர் துறைமுகம் அருகில், இந்தியாவிலேயே மிகப்பெரிய துறைமுக வசதியுடன் கூடிய எல் & டி கப்பல் கட்டுமானத் தளம் நிறுவியுள்ளது.

- ரூ.920 கோடி முதலீட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில், 100 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் பூங்கா.

- தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில், திடக்கழிவுப் பொருள்களைக் கொண்டு ரூ.130 கோடி செலவில் நாளொன்றுக்கு 600 மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட புதிய சிமெண்ட் தொழிற்சாலை துவக்கம். காகித ஆலைக்குள் சிமெண்ட் தயாரிக்கப்படுவது இந்தியாவிலேயே இதுவே முதல் முறையாகும்.

- தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், உபயோகப்படுத்திய காகிதங்களிலிருந்து மை நீக்கம் செய்யப்பட்ட காகிதக்கூழ் தயாரிக்க ரூ.164 கோடி மூலதனத்தில் நாளொன்றுக்கு 300 டன் உற்பத்தித்திறன் கொண்ட பிரிவினை நிறுவியுள்ளது. மேலும் ரூ.167 கோடி




மூலதனத்தில் நீராவி மற்றும் மின்சக்தி உற்பத்தி அமைப்புகளை சீரமைத்துப் புதுப்பிக்க, மூன்று பழைய குறைந்த மின்திறன் கொண்ட கொதிகலன்களை மாற்றிவிட்டு ஒரு புதிய அதிகத் திறன் கொண்ட கொதிகலனும், 18.5 மெகாவாட் குறைந்த திறன் கொண்ட இரண்டு மின்னாக்கிகளை மாற்றிவிட்டு, 41 மெகா வாட் அதிகத் திறன் கொண்ட ஒரு மின்னாக்கியையும் நிறுவி உள்ளது.

- தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மூலம் ரூ.1,500 கோடி முதலீட்டில், திருச்சிராப்பள்ளி மொண்டிப்பட்டியில் சுமார் 874 ஏக்கர் நிலப்பரப்பில் ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்குக் காகித அட்டை ஆலை நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தின் மூலம் தொழில் முனைவோருக்கு வெளிச்சந்தையில் வழங்கும் வட்டி வீதத்தை விட 3% குறைந்த வட்டியில் 2,299 நிறுவனங்களுக்கு ரூ.589.28 கோடி கடனுதவி.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME) மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடனில், தொழில் முனைவோரின் பங்களிப்பினை 10 சதவீதமாகக் குறைக்கும் திட்டம் அறிமுகம். இத்திட்டத்தின் கீழ், ரூ.11.83 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு 180 பயனீட்டாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

- சிப்காட் தொழில் பூங்காக்களின் உட்கட்டமைப்புவசதிகளைமேம்படுத்த, ரூ.100 கோடி நிதியுடன் தொழில் உட்கட்டமைப்பு தொகுப்பு நிதி உருவாக்கம்.

- சிப்காட் நிறுவனத்தின் மூலம் 12 மாவட்டங்களில் 20 தொழிற் பூங்காக்கள் உருவாக்கம்.

- கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசால் நிர்ணயிக்கப் படும் மாநில பரிந்துரை விலை (State Advisory Price) டன்னுக்கு ரூ.2,650 ஆக உயர்வு.

- தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் ரூ.34.25 கோடி மதிப்பீட்டில் மேலூரில் 100% ஏற்றுமதிக்கான புதிய கிரானைட் கற்பலகைகள் மெருகூட்டும் தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூ.62.84 கோடி அளவிற்கு கருப்பு கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்துள்ளது.

**புவியியல் மற்றும் சுரங்கத்துறை**

- புவியியல் மற்றும் சுரங்கத்துறை மூலம், ஈட்டப்பட்ட கனிம வருவாய் ரூ.2,743.13 கோடி.

- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், 1,44,230 மெ. டன் டூனைட் விற்பனை.

- தமிழ்நாடு உப்பு நிறுவனம் 6.02 இலட்சம் டன் உப்பு உற்பத்தி. 2012–2013ஆம் நிதியாண்டில் உயர்ந்தபட்சமாக 1.79 இலட்சம் டன் உப்பு உற்பத்தி.

❖ ❖ ❖

தகவல்
தொழில்நுட்பவியல் துறை

# தகவல் தொழில்நுட்பம் செழித்தோங்க தன்னிகரில்லாத் திட்டங்கள்!




- 10 மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளியிலேயே இணையத்தின் வாயிலாக பதிவு செய்து, வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை அலுவலகத்திலிருந்து பதிவு செய்ததற்கான அட்டையை, தங்களுடைய தகுதிநிலை மாறாமல் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் மின் ஆளுமை திட்டங்களைச் செயல்படுத்த, தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் 1.8.2011 அன்று முதல் தொடக்கம்.

- தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் , சென்னை மெட்ரோ ரயில் திட்டம், தமிழகத்

தேர்தல் ஆணைய வாக்காளர் பட்டியல் திட்டம், விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர், மடிக்கணினி வழங்கும் திட்டம் போன்ற அரசாங்க இணையப் பதிவுகள்/ செயற்பாடுகள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் வாயிலாகச் செயல்பாடு. மாநில குற்ற ஆவணக்கூடம், சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, வேளாண்மைத்துறை, நகராட்சி நிர்வாகம் (இ – அலுவலகம்), தமிழ்நாடு மின்னணு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆகிய அரசுத்துறைகள் மாநில தரவு மையத்தை பயன்படுத்தி வருகின்றன.

- தேசிய அளவில் தமிழகம் முதன் முதலாகக் தகவல் பாதுகாப்பு நிருவாகம் மற்றும் தரவு மைய இயக்கங்கள் ஆகியவற்றுக்கான ISO/ IEC 20000–1:2005 மற்றும் 27001:2005 தரச் சான்றிதழ்களைப் பெற்றது.
- மாநில தரவு மையத்திற்கு ரூ. 4.21 கோடி கூடுதல் நிதி, பேரிடர் மீட்பு மையம் அமைக்க ரூ.93.37 இலட்சம் நிதி, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு இரண்டாம் கட்டத்திற்கு ரூ.33.99 கோடி நிதி, பதிலி இணைப்பிற்கு ரூ. 4.72 கோடி நிதி மற்றும் கணினி சர்வர் பண்ணைக்கு ரூ.1.83 கோடி நிதி.
- விரிவாக்கப்பட்ட மின் மாவட்டத் திட்டங்களை மாநிலம் முழுதும் செயல்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மின் ஆளுமை சங்கங்கள் அமைப்பு.
- இணையதளத்தில் மக்களுக்குப் பயன்படும் தகவல்கள் மற்றும் மின் ஆளுகை சேவைகளைச் சிறப்பாக வெளியிட்டதற்காகத் தமிழ்நாட்டுக்கு 2012–ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் “ வெப் ரத்னா” விருது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 16,20,085 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவை சென்னை நீங்கலாக தமிழகம் முழுவதும் 2.9.2011 அன்றும், சென்னையில் 20.10.2012 அன்றும் தொடக்கம்.
- அரசு கேபிள் டிவி குறைந்த மாதக் கட்டணம் ரூ.70. 65.84 இலட்சம் சந்தாதாரர்கள்; 90 முதல் 100 அலைவரிசைகள் வழங்கல், 24,916 ஆப்பரேட்டர்கள் மூலமாக இயக்கம்.
- ரூ.10 கோடி செலவில் கிராமப்புற வணிகவெளிப்பணி மையங்கள் ஊக்குவிப்பு.
- சென்னையில், 14 நகர்ப்புற பொது இ–சேவை மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 24.02.2014 அன்று காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டன. இம்மையங்கள் மூலம் வருவாய்த்துறையின் கீழ் வழங்கப்பட்டு வரும் மின் மாவட்டச் சேவைகள் மற்றும் இதர அரசு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசு இ-சேவை வலைதளம் மற்றும் மின்மாவட்டத் திட்டத்தைச் சென்னை மற்றும் இதர 25 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தும் திட்டம் காணொலிக் காட்சி வாயிலாக 24.2.2014 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.

❖ ❖ ❖

## தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

# தொழிலாளர் நலம் காக்கும் தொகையான திட்டங்கள்!



- 17 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் புதியதாக 8,73,972 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு 13,01,446 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் ரூ.309.69 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 87,437 பயனாளிகளுக்கு ரூ.3.73 கோடி செலவில் நலத்திட்ட உதவிகள்.

- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை மின்னணு பரிமாற்றம் மூலம் வங்கிகள் வழியாக வழங்கும் முன்னோடித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம்.

- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து 60 வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கு மாத ஒய்வூதியம் ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்வு. இதன் மூலம் 13,430 பயனாளிகள் பயன்.

- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் மூலம் 60 நபர்களுக்கு ரூ.12.75

இலட்சம் செலவில் கனரக வாகனங்களை இயக்க திறன்மிகு பயிற்சி.

- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் ரூ.11.44 இலட்சம் செலவில் 430 நபர்களுக்குக் கூடுதல் பயிற்சி பெற்றுக் கொள்ள திறன் மிகு பயிற்சி கட்டணம்.
- தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்" (Tamil Nadu Unorganised Drivers Welfare Board) எனப் பெயர் மாற்றம்.
- ரூ.32.04 இலட்சம் செலவில் கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்ச்சி முகாம்கள்.

**குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு**

- குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு சட்டத்தின் கீழ் 63 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.6.32 இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.
- தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 335 சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று வந்த 11,366 மாணவர்களில் 4,151 மாணவர்கள் முறையான பள்ளிகளில் சேர்ப்பு.
- மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களில் 876 மாணவர்கள் தற்போது மருத்துவம், பொறியியல் மற்றும் கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மேற்படிப்பினை பயில்கின்றனர்.
- குழந்தைத் தொழிலாளர் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ.250/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தப்பட்டு அவர்களது கல்வி காலம் முழுமைக்கும் வழங்கப்படுகிறது.
- 111 குழந்தைகளில், 34 குழந்தைத் தொழிலாளர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்கள் மற்றும் SSA பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 11 குழந்தைத் தொழிலாளர்கள் அவர்கள் ஏற்கெனவே பயின்று வந்த பள்ளிகளில் மீண்டும் சேர்க்கப்பட்டனர். 33 குழந்தைத் தொழிலாளர்கள் குழந்தைகள் உதவி மையம் மற்றும் அரசு இல்லங்களில் சேர்க்கப்பட்டனர்.
- சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாணவர்களுக்காக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற முன்னாள் குழந்தைத் தொழிலாளர் செல்வி. கே. மஞ்சுவுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார்.
- பீடித் தொழிலாளர்கள் வீடு கட்ட நிர்ணயிக்கப்பட்ட மொத்தச்செலவான ரூ.45,000 இல் தொழிலாளியின் பங்குத் தொகையான ரூ.5,000/–ஐ மானியமாக வழங்கிய தமிழ்நாடு அரசு, தற்போது அரசுப் பங்குத் தொகையை ரூ.60,000/–ஆக உயர்த்தி வழங்கி, 1 இலட்சம் ரூபாயில் வீடு கட்ட ஏற்பாடு. 2013–2014–ஆம் ஆண்டில் 200 வீடுகள் கட்டுவதற்கு ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- எடையளவுச் சட்டத்தின் கீழ் 9,78,008 ஆய்வுகளில் ரூ.61,78,37,375/– முத்திரை கட்டணமும் ரூ.2,86,03,808/– இணக்கக் கட்டணமாகவும் வசூலிப்பு.
- பொட்டலப் பொருள்கள் விதியின் கீழ் 4,22,170 ஆய்வுகளில் ரூ. 7,08,861/– பதிவுக் கட்டணமும் ரூ.19,00,00,052/– இணக்கக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டது.
- தொழிற்சாலைகள் சட்டம் 1948 இன் கீழ் புதிதாக 6,788 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு அதன் விளைவாக 2,13,087 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்குப் பணிநிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம், 1981 இன் படி, 7,346 தொழிற்சாலைகளில் 1,05,993 தொழிலாளர்கள் பணிநிரந்தரம். கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதியின் கீழ் 3,082 கட்டுமான நிறுவனங்கள் புதிதாகப் பதிவு.
- 14,811 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 272 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள். 58,871




தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 1,238 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் .

- 2011 ஆம் ஆண்டிலிருந்து மாநில பாதுகாப்பு விருதுகளுக்கான முதல் பரிசு ரூ.2,500/– லிருந்து ரூ.5,000/–ஆகவும், இரண்டாம் பரிசு ரூ.1,500/–லிருந்து ரூ.4,000/–ஆகவும் உயர்வு.
- தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகளின் எண்ணிக்கை 2012–ஆம் ஆண்டு முதல் 24–லிருந்து 43–ஆக உயர்வு.
- பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம் சிவகாசியில் தொடங்கப்பட்டு, 47 குழுக்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 1,497 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- பட்டாசுத் தொழிற்சாலைகளைக் கண்காணிக்க நடமாடும் கண்காணிப்புக் குழு ஒன்று (Mobile Team) விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு, இதுவரை 372 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு கல்வித் தகுதியினை 35.52 இலட்சம் பதிவுதாரர்கள் ஆன்லைன் மூலம் பதிவு செய்துள்ளனர்.
- வேலைவாய்ப்பகங்கள் மூலம் 64,230 நபர்களுக்கு வேலை.
- 2008, 2009 மற்றும் 2010 வருடத்தில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு புதுப்பித்தல் சலுகை வழங்கியதன் மூலம் 1,27,695 பேர் பயன்.
- 15 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங் களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட ரூ.22.5 கோடி ஒதுக்கீடு.
- 26,119 தொழிற்பயிற்சி நிலைய மாணவர் களுக்கு ரூ.2.48 கோடி செலவில் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபட கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- 13,725 தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு ரூ.6.36 கோடி செலவில் விலையில்லா மிதிவண்டிகள்.
- 26,650 தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 36.49 கோடி செலவில் இரண்டு இணை சீருடைகள் மற்றும் 1 இணை விலையில்லா காலணிகள்.
- அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்கள் பயன்பெறும் வகையில் 23,320 பேருக்கு, ரூ.41.25 கோடி செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

**அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கும் பயிற்றுநர்களை ஊக்குவித்தல்**

- சிறந்த பயிற்றுநருக்கான (Best Trainer) ரொக்கப் பரிசுத் தொகை ரூ.1,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.
- மாநில அளவிலான திறனாய்வுப் போட்டியில் சிறந்த பயிற்சியாளருக்கு வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.5,000/– லிருந்து ரூ.25,000/– ஆக உயர்வு.
- கடலூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.2.30 கோடி செலவில் சொந்தக் கட்டடம்.
- ரூ.1.64 கோடி மதிப்பீட்டில், கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி இணை இயக்குநர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிருவாக ஒப்புதல்.
- அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை, அரசு உதவிபெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களும், பெறுவதற்கு ரூ.6.07 கோடி நிதி ஒதுக்கீடு.

**புதிய பயிற்சி பிரிவுகள் தொடங்குதல்**

- பழங்குடியின மாணவச் செல்வங்கள் பயன்பெற்றிட ரூ.24.50 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் அனைத்துப் பிரிவினரும் பயன்பெற்றிட ரூ.26.39 கோடி செலவில் 5 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள்.

**வினாத்தாள்களை தமிழில் வழங்குதல்**

- அகில இந்திய தொழிற் தேர்வில் தேசிய தொழிற் பயிற்சி குழுவால் ஆங்கிலம் மற்றும் இந்தியில் வழங்கப்பட்டு வந்த வினாத்தாள்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது முயற்சியால் முதன் முதலாகத் தமிழ் மொழியில் வழங்கப்பட்டது.
- தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிரப்பப்படாமல் உள்ள 50% இடங்கள் ஏழை இளைஞர்களுக்கு ஒதுக்கீடு. ரூ.14.85 கோடி செலவில் மாநகராட்சி, நகராட்சி எல்லையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையக் கட்டணம் ரூ.12,000 மற்றும் கிராமங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையக் கட்டணம் ரூ.10,000 ஆகியவற்றை அரசே ஏற்பு.
- ரூ.13 கோடி செலவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.100–லிருந்து ரூ.500/–ஆக உயர்வு.
- ரூ.15 கோடி செலவில் 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் புனரமைப்பு.
- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்குத் திறன் அடையாள அட்டை (smart card)

**திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

- ரூ.8.25 கோடி செலவில் 1,00,280 நபர்களுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் திறன் மேம்படல் பயிற்சி.
- மாநிலத் திறன் மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு ரூ.75 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்வு

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் சித்த, ஆயுர்வேத, ஓமியோபதி, யுனானி மற்றும் யோகாசனப் பிரிவுகள் துவங்குதல்**

- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் 20 இடங்களில் சித்த மருத்துவப்பிரிவுகள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், 8 இடங்களில் ஆயுர்வேதம் பிரிவுகள், 3 இடங்களில் ஓமியோபதி பிரிவுகள், 3 இடங்களில் யுனானி பிரிவுகள் மற்றும் 5 இடங்களில் யோகாசனப் பிரிவுகள் துவக்கம்.
- தக்கலை, மணவாளக்குறிச்சி, வெப்படை, பள்ளிகொண்டா, அன்னூர், சர்கார் சாமக்குளம், படப்பை, சிவகங்கை, மதுராந்தகம், பஞ்சட்டி, ஓரகடம், செங்கல்பட்டு, கொடைக்கானல், வாழப்பாடி, நிலக்கோட்டை, செய்யாறு மற்றும் புஞ்சைபுகளூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்.
- 16.05.2011 முதல் 20.03.2014 வரை 11,335 தொழிற்தாவாக்கள் பெறப்பட்டன. அவற்றுள் 9,833 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன.




- தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு குறித்து 9.1.2014 அன்று தொழிலாளர் ஆணையர் அவர்கள் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி சுமார் 70,820 தொழிலாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

- தமிழ்நாட்டிலுள்ள (திண்டுக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்கள் நீங்கலாக) தோல் பதனிடும் தொழிற்சாலை நிருவாகங்கள் மற்றும் தொழிலாளர்கள் இடையே ஊதிய உயர்வு கோரிக்கைகள் தொழிலாளர் தனித்துணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுமார் 50,000 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

- தமிழ்நாட்டில் உள்ள 89 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் பேச்சு வார்த்தை மூலம் சமரசம் செய்யப்பட்டு 1,55,119 தொழிலாளர்களின் பணி பாதுக்கப் பட்டது.

- தமிழ்நாட்டில் உள்ள 23 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட கதவடைப்பு பேச்சு வார்த்தை மூலம் சமரசம் செய்யப்பட்டு 4,742 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப் பட்டது.

- புதுதில்லியில் சார்க் உறுப்பினர் நாடுகளால் நடத்தப்பட்ட குழந்தைத் தொழிலாளர் தொடர்பான பயிலரங்கு தொடக்க நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக திரு. இராமலிங்கம் என்பவரும், தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்துவரும் திரு. மோகன் என்பவரும் கலந்துக்கொண்டு, தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துக்கொண்டனர்.

- மெக்கானிக் பணியிலிருந்து மீட்கப்பட்ட சென்னை சேர்ந்த திரு. ஜெயக்குமார், டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு சட்டம் பயின்று வருகிறார். மேலும், தீப்பெட்டி செய்யும் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட விருதுநகரைச் சேர்ந்த திருமதி ராஜேஸ்வரி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

- முன்னாள் குழந்தைத் தொழிலாளியாக இருந்த 12 வயதுடைய செல்வன் கவின் என்பவரால் தேசிய அளவில் நடைபெறவுள்ள தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில், சமர்ப்பிக்க தேர்வு செய்யப்பட்ட 'மனித ஆற்றல் இழப்பு' என்ற ஆய்வுக் கட்டுரைக்கு மேன்மை பொருந்திய மேதகு ஆளுநர் டாக்டர் கே. ரோசய்யா அவர்களால் 09.12.2013 அன்று செல்வன் கவினுக்கு இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது. ❖

# சிறு தொழில் வளர்த்திடும் சீர்மிகு திட்டங்கள்



- படித்த இளைஞர்களை தொழில் முனைவோராக்கும் வகையில் ரூ.1 கோடி வரையில் 25 விழுக்காடு மானியம் மற்றும் 3 விழுக்காடு வட்டிச் சலுகையுடன் கடனுதவி அளித்திடும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் 2012–2013ஆம்ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டு, தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற 569 தொழில் முனைவோருக்கு ரூ.307 கோடி கடனுதவி வழங்கப்பட்டு, ரூ.46.57 கோடி மானியம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் 840 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட உள்ளன.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டு மானியம் 15 விழுக்காடு என்பது 25 விழுக்காடாக உயர்த்தப்பட்டு 4,470 தொழில் முனைவோருக்கு ரூ.180 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 32 மாவட்ட தொழில் மையங்களையும் ரூ.50 கோடி செலவில் மறுசீரமைக்க ஆணையிடப்பட்டு 5 மாவட்டங்களில் கட்டடப்பணிகள் முடிவடைந்துவிட்டன. ஏனைய மாவட்டங்களில் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.
- குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 7 இடங்களில் ரூ.53.38 கோடி திட்ட மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் அமைப்பு.

- குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு 20 விழுக்காடு குறைந்த மின்னழுத்த மானியமாக ரூ.18 கோடியும் மின்னாக்கி மானியமாக ரூ.39.48 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.
- மதிப்பு கூட்டு வரிக்கு ஈடாக 100 விழுக்காடு மானியம் அளித்திடும் திட்டத்தின் கீழ் ரூ. 9.50 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 16,189 பயனாளி களுக்குக் கடன் வழங்கப்பட்டு அவர்களின் தொழில் 1திட்ட மதிப்பீடான ரூ. 49.45 கோடியில் 13,776 பணியாளர்களுக்கு ரூ.41.48 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை ஆற்றல் வாய்ந்த நிறுவனமாகச் சீரமைத்திட சென்னை, கிண்டியில் நவீன பயிற்சி வளாகம் கட்டுவதற்கு ரூ.4.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.



- தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலைகளை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் 12 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.5.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் பயனாளிகளான சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக் கான ஆதார விலையாக கிலோவுக்கு ரூ.2 வீதம் ரூ.17.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் எனும் சேகோசர்வ் நிறுவனத்தின் உதவியுடன் சிறு தொழில் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி பொருள்கள் ரூ.1,134.31 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- அரியலூரில் புதிய மாவட்டத் தொழில் மையம் தொடங்கப்பட்டது.
- திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் அமைந்துள்ள மத்திய மின் பொருள் பரிசோதனை கூடத்தின் சோதனை வசதிகளை மேம்படுத்திட ரூ.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- காக்களூர் மற்றும் பெருங்குடியில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.1 கோடி வழங்கப்பட்டது.
- குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சிறு தொழில் குழுமங்கள் அடையாளம் காணப்பட்டன.
- நாமக்கல் அருகே கனரக வாகனங்கள் கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கென தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கூட்டுமுயற்சி முறையில் ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் தனியாக ஒரு தொழிற்பேட்டை ❖

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# நகராட்சி கண்ட நல் வளர்ச்சி நல்லாட்சிக்கு ஒரு சாட்சி




**ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்**

- ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடிப்படை கட்டமைப்பு – வசதிகளான, குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடைத் திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பூங்காக்கள், பேருந்து நிலையம் அமைத்தல் ஆகிய 5,579 பணிகள் ரூ.1,665.80 கோடியில் மேற்கொள்ளப்பட்டு 4,828 பணிகள் நிறைவு பெற்றன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ரூ.37.58 கோடி செலவில் மாநகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகள் எளிதாக உபயோகிக்கும் கழிப்பறைகள், அலுவலகக் கட்டிடம், ஜெட்ராடிங் இயந்திரம், தூர் வாரும் இயந்திரம், மழை நீர் வடிகால் ஆகிய 184 பணிகள் அனுமதிக்கப்பட்டு, 154 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 3 ஆண்டுகளில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.192.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,672 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எரிவாயு மின்கூடம், நவீன இறைச்சிக் கூடம், கழிவறைகள் கட்டுமானப்பணி, குடிநீர் அபிவிருத்தி திட்ட பணி, பாதாள சாக்கடை திட்டம், மண்டல அலுவலகம் கட்டும் பணி, மழை நீர் வடிகால் பணி, பேருந்து நிலையம், அலுவலக கட்டடம் அமைத்தல் ஆகிய பணிகளில் 3,379 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.







- இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், ரூ. 124.02 கோடி மதிப்பீட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 120 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அரியலூர் நகராட்சியில் அங்காடி மேம்பாட்டு பணி, சின்னமனூர் நகராட்சியில் வாராந்திர சந்தை அங்காடி பணி, குடிநீர் விநியோகம், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், அலுவலக கட்டடம் அமைத்தல் ஆகிய 59 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்க்கும் வகையில், 844 புதிய கழிப்பறைகள் கட்டும் பணி மற்றும் 1,220 பழைய கழிப்பறைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.114.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில் 233 புதிய கழிப்பறைகளும், 1,183 பழைய கழிப்பறைகளை மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணமாக ரூ.197.22 கோடி செலவில் கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், சிறிய குழாய் பம்புகள், குழாய் கிணறுகளுக்கான உதிரி பாகங்கள், லாரி மூலம் தண்ணீர் வழங்குதல், சின்டெக்ஸ் தொட்டிகள், வாடகை ஜெனரேட்டர்கள் வாங்குதல் ஆகிய வசதிகள் திருச்சி மாநகராட்சி மற்றும் 114 நகராட்சிகளுக்கு 11 மழை பற்றாக்குறை மாவட்டங்களுக்கும், 20 இதர மாவட்டங்களுக்கும் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு மற்றும் மரபு சாரா எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி 252 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. 37. 89 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. 11 பிளாஸ்டிக் சேகரிப்பு மையங்கள், 14 பிளாஸ்டிக் துகள்களாக்கும் இயந்திரங்கள், 3 மாநகராட்சிகள் மற்றும் 11 நகராட்சிகள் ஆகியவற்றில் ரூ. 80.00 இலட்சங்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- 2013–2014ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி 73.05 கி.மீ. நீளத்திற்கு, தார் சாலைஅமைக்க ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 139 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில்

ரூ.4.14 கோடி செலவில் 57 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடைத்திட்டம், குடிநீர் திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 1,623.82 கி.மீ நீளமுள்ள சாலைகளை சீரமைக்க மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு ரூ. 652.11 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு 3,172 சாலை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 2,591 சாலை பணிகள் ரூ. 480.23 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு இயக்கத்தின் கீழ் வரும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் 51 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 7வருட திட்டக்காலத்திற்காக ரூ.2,339.08 கோடி மதிப்பீட்டில் 92,272 குடியிருப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் 45,300 குடியிருப்புகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 94 நகரங்களான மாநகராட்சி, நகர்ப்புரங்களில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் குடியிருப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 566.11 கோடி மதிப்பீட்டில் 37,715 குடியிருப்புகளில் 31,343 குடியிருப்புகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### சென்னை மாநகராட்சி

- கூலித் தொழிலாளிகள் மற்றும் அடித்தட்டு மக்களுக்காக 200 அம்மா உணவகங்களும், 3 அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் அனைத்து மாநகராட்சிகளிலும் மொத்தம் 294 அம்மா உணவகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், சாம்பார் சாதம், பொங்கல், எலுமிச்சை/ கருவேப்பிலை சாதம் முறையே ஒன்று 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும், இரண்டு சப்பாத்தியுடன் பருப்புக்கடைசல் 3 ரூபாய்க்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

- சென்னை மாநகரின் உட்கட்டமைப்பை உலகதரத்திற்கு இணையாக மேம்படுத்த சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழக அரசினால் ரூ.1,161 கோடி நிதி சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது. இதுவரை சுமார் 563 கி.மீ. நீளமுடைய சாலைகளும், 100 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால் கால்வாய்களும் 169 கி.மீ. நீளமுடைய நடைபாதை பணிகளும், 8,400 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைக்கும் பணிகளும் சுமார் ரூ.605 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

- சென்னை மாநகராட்சியால் தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் மூலம் ரூ.59.50 கோடி செலவில் 66 கி.மீ. நீளமுள்ள 106 பேருந்து தடசாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் மாநகராட்சியின் மூலதன நிதிமூலம் ரூ.88 கோடி செலவில் 31 கி.மீ. நீளமுடைய 247 பேருந்து தடசாலைகளும் செப்பனிடப்பட்டன. கடந்த மூன்றாண்டுகளில் ரூ.1,239 கோடி செலவில் 11,386 உட்புற பிளாஸ்டிக் சாலைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அவற்றில் 4,068 சாலை பணிகள் முடிவுற்றுள்ளன.

- சென்னை மாநகராட்சியால் கடந்த 3 ஆண்டுகளில் ரூ. 85.77 கோடி மதிப்பீட்டில் இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன மேம்பாலம், வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை, கூவம் நதி குறுக்கே மேத்தா நகர் ஆபீசர்ஸ் காலனி முதல் தெருவை வெங்கடாசலபதி தெருவுடன் இணைத்து பாலம், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே இந்திரா நகர் 2ஆவது நிழற்சாலையையும் ராஜீவ்காந்தி சாலையையும் இணைக்கும் பாலம், விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே பாரி தெருவில் வாகனப்பாலம், விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே சின்மயா நகர் காளியம்மன் கோயில் தெருவில் ஏற்கெனவே உள்ள பாலத்திற்கு அருகில் புதிய பெட்டக வடிவ பாலம், ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகன சுரங்கபாதை, மணியக்கார சத்திர தெருவில் வாகன சுரங்கபாதை, வள்ளலார் நகர் மேம்பாலப்பணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- சென்னை மாநகராட்சியின் பிரதான பகுதிகளில் உள்ளது போல சீரான மற்றும் நவீன வகை மின்



சக்தி சேமிக்கும் விளக்குகள் (LED) ரூ. 322 கோடி செலவில் 1,10,000 எண்ணிக்கையில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சென்னை மாநகராட்சி மூலம் 850 கி.மீ. நீளத்திற்கு மழைநீர்வடிகால்வாய் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற வடிகால்வாய் பணிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், 343கி.மீ நீளத்திலான மழைநீர் வடிகால்வாய் கடந்த 3 வருடங்களில் ரூ. 480 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- ரூ. 18.05 கோடி செலவில் சென்னை மாநகர மக்களின் கலாச்சார மற்றும் பண்பாடு, தேவைகளை நிறைவேற்ற சென்னை மாநகராட்சி 900 பேர் அமரக்கூடிய கலையம்சம் பொருந்திய குளிரூட்டப்பட்ட கலையரங்கம் செனாய் நகரில் கட்டப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மக்களின் நலனுக்காக பல்வேறு கட்டடங்கள் ரூ. 71 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றுக்கு 5,000 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகளை சென்னை மாநகராட்சி, 17,026 எண்ணிக்கையிலான நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக தருவிக்கப்படும் துப்புரவு பணியாளர்கள், 320 நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக வாகனங்கள், 37 அதிக சுமை ஏற்றும் கனரக வாகனங்கள், 177 டிப்பர் வாகனங்கள் மற்றும் 12 இயந்திர பெருக்கிகள், 57 சக்கரத்தடை வாகனங்கள் மற்றும் 21 முன்பின் பளு தூக்கிகள் ஆகியவற்றை கொண்டு அகற்றப்படுகிறது.

- கடந்த மூன்று ஆண்டுகளில் 200 புதிய பூங்காக்கள் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ரூ.57 கோடி மதிப்பீட்டில் உத்தேசிக்கப்பட்டு 87 புதிய பூங்காக்கள் ரூ. 23 கோடிகளில்

பசுமை போர்வையை உண்டாக்க உருவாக்கப் பட்டுள்ளது.

**பேரூராட்சிகள் இயக்குநரகம்**

- நபார்டு திட்டத்தின் கீழ் 1,117 எண்ணிக்கையிலான 1,509.20 கி.மீ நீளத்தில் சாலைகள் ரூ.200.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.
- 2012–2013 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின் கீழ் 143 பேரூராட்சிகளிலுள்ள 234 ஊரணிகள் ரூ.54.32 கோடி மதிப்பீட்டிலும், 244 பேரூராட்சிகளில் 376 நவீன சுகாதார வளாகங்கள் ரூ.45.20 கோடி மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.785.00 கோடி செலவில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலை, வடிகால், குடிநீர் வழங்கல், பாதாளச்சாக்கடை, சிறுபாலம் அமைத்தல், தெரு விளக்கு அமைத்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை என 6,886 உட்கட்டமைப்பு பணிகள் எடுக்கப்பட்டு 6,230 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 13ஆவது நிதிக்குழு மான்யத்தின் கீழ் அடிப்படை மானியமாக ரூ.220.77 கோடியும், செயல்திறன் மானியமாக ரூ.13.47 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.
- திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழிப்பதற்காக 463 புதிய சுகாதார வளாகங்களும், 296 பழைய சுகாதார வளாகங்கள் புனரமைப்பும் ரூ.60.73 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 502 எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி தலைப்பின் கீழ் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.122.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் அலுவலகக் கட்டடம், குடிநீர் அபிவிருத்தி, திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாயக் கூடம், பேருந்து நிலையம், மயான மேம்பாடு, போன்ற 354 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 317 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான இடைவெளி நிரப்பு நிதி தலைப்பின் கீழ் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ 61.41 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் மொத்தம் 360 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 322 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- பகுதி – II திட்டத்தின் கீழ் ரூ. 26.41 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அலுவலகக் கட்டடம், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், சிறுபாலம், நவீன இறைச்சிக்கூடம், திடக்கழிவு மேலாண்மை பணிகள், பேரூராட்சிகளுக்கு கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வழங்குதல் உள்பட மொத்தம் 620 பல்வேறு அடிப்படை கட்டமைப்பு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 608 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.152.69 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ் 628.14 கி.மீ நீளமுள்ள 778 பணிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ. 44.50 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் 185 சாலைகள், பிளாஸ்டிக் சாலைகளாகவும், ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 15 பேரூராட்சிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை தூளாக்கும் இயந்திரக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ. 4.53 கோடி மதிப்பீட்டில் அங்கன்வாடிகளை புனரமைப்பு செய்தல் மற்றும் அங்கன்வாடியில் குழந்தைகள் கழிப்பிடம் கட்டுதல் ஆகிய 1,504 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.9.93 கோடி மதிப்பீட்டில் சிறப்பு திட்டமாக மாற்றுத்திறனாளிகளுக்கு 503 பேரூராட்சி களில் 532 பிரத்யேக கழிப்பிடங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2012–2013 ஆம் ஆண்டில் ரூ. 38 கோடி மதிப்பீட்டில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 3,242 எண்ணிக்கையிலான வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.



- 2013–2014 ஆம் ஆண்டில் பருவமழை குறைவாக பொழிந்த 11 டெல்டா மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளில் தட்டுப்பாடின்றி சீரான குடிநீர் வழங்கும் பணிகளுக்காக மாநில இயற்கை இடர்பாடு நிதியிலிருந்து ரூ. 15.86 கோடி மதிப்பீட்டில் 689 குடிநீர் வழங்கல் பணிகளும், பேரூராட்சியின் சொந்த நிதியிலிருந்து ரூ. 8.14 கோடி மதிப்பீட்டில் 256 குடிநீர் வழங்கல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று எஞ்சிய 20 மாவட்டங்களில் இயற்கை இடர்பாடு நிதியிலிருந்து 41 குடிநீர் வழங்கல் பணிகள் மேற்கொள்ள ரூ.0.98 கோடியும், பேரூராட்சிகளின் சொந்த நிதியிலிருந்து ரூ. 17.35 கோடி மதிப்பீட்டில் 639 பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2013–2014 ஆம் ஆண்டில் 77 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ள ரூ. 48.58 கோடி சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

- ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் கீழ் 17,327 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஊரகக் குடியிருப்புகள் தவிர, 6,374 அரசுப் பள்ளிகளுக்கும், 12,777 அங்கன்வாடி மையங்களுக்கும் மற்றும் 280 அரசு விடுதிகளுக்கும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மொத்தத்தில் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.2,746.85 கோடி செலவில், 71.90 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மாநிலம் மற்றும் மத்திய அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- ரூ.133.19 கோடி மதிப்பீட்டில், நகரக் குடிநீர்த் திட்டங்களின்கீழ், 30 நகரங்களுக்கான (5 நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகள்) குடிநீர் திட்டங்கள் 7.43 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளன.

- ரூ.164.22 கோடி மதிப்பீட்டில் சின்னமனூர், மறைமலைநகர், நாமக்கல், திருவண்ணாமலை, இராமநாதபுரம், தருமபுரி மற்றும் பெரம்பலூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் 4.64 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம் மூலம் ரூ.1,536.06 கோடி செலவில் 28.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 3 நகராட்சிகளுக்கும், 15 பேரூராட்சிகளுக்கும் மற்றும் 5,583 ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது.
- மூன்றாண்டு காலகட்டத்தில் மொத்தமாக 112.17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.4,580.32 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

- ரூ.61.19 கோடி திட்ட மதிப்பீட்டில் பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- ரூ.12.94 கோடி செலவில் 1.30 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் போரூர் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.
- நெம்மேலியில் மத்திய அரசின் முழுமையான நிதியின் கீழ், ரூ. 785.75 கோடி திட்ட மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர வளர்ச்சித்திட்டம்**

**இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்**

- ரூ. 25.10 கோடி ஒதுக்கீட்டில் 35 ஜெட்ளராடிங் இயந்திரங்களும், 30 சூப்பர் சக்கர் இயந்திரங்களும், 20 ஜெட்டிங் கம் சக்ஷன் இயந்திரங்களும் மற்றும் 116 டீ சில்டிங் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**குடிநீர் திட்டம்**

- ரூ. 582.49 கோடி ஒதுக்கீட்டில் குடிநீர் இணைப்புகள் இல்லாத குடிசைப் பகுதிகளில் வாழும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு குடிநீர் விநியோக குழாய்கள் பதித்தல், புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல், அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் மற்றும் 9 பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டப் பணிகள் சென்னை மாநகரங்களில் நடைபெற்று வருகின்றன.

**கழிவுநீரகற்றும் திட்டம்**

- சென்னை நகரிலும் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு சிறப்புக் கண்ணோட்டத்துடன் உட்கட்டமைப்பு மற்றும் கழிவுநீரகற்றும் திட்டங்களுக்காக ரூ. 557.51 கோடி ஒதுக்கீட்டில் கழிவுநீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல், பிரதான கழிவுநீரேற்று குழாய்கள் பெரிதாக்குதல், பிரதான கழிவுநீரேற்று குழாய்களை புதிய வழிதடத்தில் அமைத்தல் போன்ற திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் தென் சென்னையில் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரூர் கிராமத்தில் அமைத்தல்.
- ரூ. 1000 கோடி மதிப்பீட்டில் நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தின் அருகில் தற்சமயம் காலியாக உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 7 பகுதி அலுவலகங்கள் மற்றும் 81 பணிமனைகள் கட்டுவதற்கு ரூ. 20 கோடியை வாரியம் ஒதுக்கியுள்ளது. இதற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மாதவரம் பகுதிக்கு ரூ.55 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வசதியினை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- வாரியத்தின் குடிநீர் ஊர்திகள் செல்லும் வழித்தடத்தினை கண்டறிதல் குடிநீர் விநியோகத்தினை கண்காணிக்கவும், குடிநீர்



ஊர்திகளின் நடமாட்டத்தை, கண்டறியவும் புவியிடம் காட்டும் அமைப்பு (**Global Positioning System**) பொருத்த திட்டப் பணிகள் முடிவுற்றது.

- செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை வரை இரண்டாவது பிரதான குழாய் அமைக்க ரூ.41.35 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- தாம்பரம், பல்லாவரம், பம்மல் போன்ற பகுதிகள் பயன்பாட்டிற்காக 22 கி.மீ. நீளத்திற்கு பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பிலிருந்து தாம்பரம் வரை பிரதான குடிநீர் குழாய் அமைத்திட அரசு ரூ.93.48 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ரூ.150 கோடி மதிப்பீட்டில் சென்னையின் நீர்வழித் தடங்கள் மற்றும் நீர் ஆதாரங்களில் கழிவுநீர் கலந்து மாசுபடுவதை 179 இடங்களில் தடுத்திடும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.02.2014 அன்று துவக்கி வைத்த திட்டங்கள்**

- ரூ. 460.57 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட ஆலந்தூர், அம்பத்தூர், திருவொற்றியூர், மதுரவாயல் ஆகிய இடங்களுக்கான ஒருங்கிணைந்த குடிநீர் திட்டப்பணிகளையும், அண்ணாபூங்கா, தென்மண்டல நீரேற்று நிலையம், கே.கே.நகர் ஆகிய பகுதிகளின் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளையும் துவக்கி வைத்தார்கள். மேற்கண்ட திட்டங்களால் 17.74 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெறுவார்கள்.

- ரூ. 86.04 கோடி மதிப்பீட்டில் மாதவரம், அம்பத்தூர் பகுதி 3, சிப்பம் 1 மற்றும் 5 பகுதிகளில் முடிவுற்ற ஒருங்கிணைந்த கழிவுநீர் திட்டப் பணிகளை துவக்கிவைத்தார்கள். மேற்கண்ட திட்டங்களால் 1.55 இலட்சம் மக்கள் கழிவுநீர் இணைப்புகளையும் பெற்று பயனடைவர்.

- 21.02.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 66 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

❖ ❖ ❖

## பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

# பணியாளர் நலன் காக்கும் பாங்கான திட்டங்கள்

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும் இணையவழி விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- இணைய வழி விண்ணப்பப்படிவம், இரு மொழிகளில் இருப்பதுடன் பயன்பாட்டிற்கு எளிதாகவும், விண்ணப்பதாரரின் அடிப்படை மற்றும் முக்கிய விவரங்களைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது அடிப்படை விவரங்களை குறைந்த கட்டணத்தில் (ரூ.50) கையொப்பம் (ம) புகைப்படத்துடன் நிரந்தரமாகப் பதிவு செய்யும் முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

- தேர்வுக்கூடங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு அனைத்துத் தேர்வுக்கூடங்கள்/ அறைகள் ஒளிப்பதிவுக் கருவிகளின் வழியாகக் கண்காணிக்கப்படுகின்றன. வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் வகையில் நேர்காணல் தேர்வின் அனைத்து நடவடிக்கைகளும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

- மாற்றுத்திறனாளிகளின் வசதியினைக் கருத்தில் கொண்டு அனைத்துத் தேர்வுக் கூடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். தேவைப்படின் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

- தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகள் முறைகேடுகள் ஏதுமின்றி நேர்மையாகவும், விரைவாகவும் நடத்தி, முடிவுகளை வெளியிட தேர்வாணையம் கணினி வழித் தேர்வுகள் அறிமுகம்.

- தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களின் விரிவான விடை எழுதுதல் விடைத்தாள் நகலினை தேர்வாணையத்திலேயே இணையதளத்தின் மூலம் பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், கொள்குறி வகையைச் சார்ந்த விடைத்தாள் நகல் தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்கள் கோரும் பட்சத்தில் வழங்கப்படுகிறது.

- தேர்வாணையம், பணி (ம) அலகு ஒதுக்கீட்டில் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு கலந்தாய்வு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கலந்தாய்வு முறையில் காலிப்பணியிடம் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

- தேர்வாணையம், அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் மாறுதல் வழி நியமனம் தொடர்புடைய கருத்துருவினை கூர்ந்தாய்வு செய்த பின்னர் துறைப் பதவி உயர்வு குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து பதவி உயர்வினை வழங்குகிறது. இம்முறையில் தேர்வாணையம் ஒற்றைச் சாளர முறையினை அறிமுகப்படுத்திச் செயல்படுத்துகிறது.

- தேர்வாணையவரலாற்றிலேயே முதன்முறையாக தொகுதி 4 தேர்விற்கு 17.06 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 14.12 இலட்சம் விண்ணப்பதாரர்கள் அனுமதி.

- ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (தொகுதி – 2) தேர்விற்கு 7,77,984 விண்ணப்பதாரர்கள் இணைய வழியாக பதிவு செய்ததில், 6,65,607 விண்ணப்பதாரர்கள் தேர்விற்கு அனுமதி.

- ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி – 1) முதனிலைத் தேர்வு 20.7.2014 அன்று நடைபெற உள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2014–2015ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத் திட்ட அறிக்கையின் படி 3,686 காலிப் பணியிடங்களுக்கான தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- தேர்வாணைய வரலாற்றில் முதன் முறையாக, தொகுதி – 4 (2013) தேர்வில் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை, தேர்வாணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (தொகுதி – 2(அ)) (2,269 காலிப் பணியிடங்கள்) தேர்விற்கு இதுவரை சுமார் 6,00,000 விண்ணப்பதாரர்கள் இணைய வழியாக பதிவு செய்துள்ளனர். இத்தேர்வு 29.6.2014 அன்று நடைபெற உள்ளது.

- 2,342 காலிப் பணியிடங்களுக்கான கிராம நிருவாக அலுவலர் 2013–2014 தேர்விற்கான அறிவிக்கை 17.3.2014 அன்று தேர்வாணைய இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. இத்தேர்வு 14.6.2014 அன்று நடைபெற உள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பல்வேறு துறைகளுக்கான 34,274 காலிப் பணியிடங்களுக்கான தேர்வு அறிவிக்கை வெளியீடு.

- திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்வு.

- ‘பகவான் வைகுந்தசுவாமி பிறந்தநாள்’ வரையறுக்கப்பட்ட விடுமுறை நாளாக அறிவிப்பு.

- மத்திய தேர்வாணையம் நடத்தும் அகில இந்திய குடிமைப் பணி தேர்வுகளை எதிர் கொள்ளும் மாணவச் செல்வங்களின் பயனுக்கென ரூ. 10.14 கோடி மதிப்பீட்டில் சென்னையில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட புதிய பயிற்சி மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.10.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ரூ.36.23 கோடி மதிப்பீட்டில் பவானி சாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையம், ஒரு முன்னோடிப் பயிற்சி நிலையமாக மாற்றம்.

- பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்(ஆய்வு–3) துறை மூலமாக தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் உட்பட 11 மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகங்களுக்கு ரூ.85 இலட்சம் செலவில் 11 ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.7,90,000/– இலட்சம் மதிப்பீட்டில் புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் யு.பி.எஸ்–கள் வழங்கப்பட்டுள்ளன.

- சென்னை பார்க் டவுன் பகுதியில் ரூ.19.86 கோடி மதிப்பில் 6 தளங்களுடன் கூடிய புதிய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலக வளாகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.9.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2012ஆம் ஆண்டில் 30,157 நபர்கள் போட்டித்தேர்வுகளின் வாயிலாகத் தேர்வு.

❖ ❖ ❖

# மக்களுக்கு பயனளிக்கும் பொருட்கள் பலவற்றுக்கும் மதிப்புக் கூட்டுவரி விலக்கு




## வணிகவரித்துறை

- 135 சார்பதிவகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் 29 சார்பதிவகங்கள் உள்ளடங்கிய 17 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள் மற்றும் 4 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள் சூரிய சக்தியின் மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் அமைப்புடனும் கட்டுவதற்கு ரூ.104.90 கோடி ஒதுக்கீடு.
- ரூ.230.96 கோடி ஒதுக்கீட்டில் வணிகவரித் துறையை முழுமையான கணினிமயமாக்கும் திட்டம்.

### வரிவிலக்கு

- வேளாண் இடுபொருள்கள் மற்றும் உபகரணங்கள், இரசாயன உரங்கள், அனைத்து வகையான பூச்சிக் கொல்லிகள், களைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், திவலைப் பீய்ச்சிகள், தெளிப்பான்கள், சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் ஆகியவற்றின் மீதான மதிப்புக் கூட்டுவரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டு ஆண்டொன்றிற்கு ரூ.87 கோடிக்கு வரிவிலக்கு.
- 1.36 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில், வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு மீதான விலையை மத்திய அரசு உயர்த்திய போதிலும் அந்தச் சுமையிலிருந்து மக்களைக் காத்திட சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டுவரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டு ஆண்டொன்றிற்கு ரூ.120 கோடி வரிவிலக்கு.
- பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு 01.04.2012 முதல் கோதுமை, ஓட்ஸ், இன்சுலின், கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள், பாலூட்டும் புட்டிகள், பாலூட்டும் ரப்பர் மற்றும் தலைக்கவசம் ஆகிய பொருள்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.5.37 கோடி அளவிற்கு மதிப்புக் கூட்டு வரி நீக்கம்.
- மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்கள், தீக்குச்சி தயாரிப்பதற்கான

மரக்குச்சிகள் மற்றும் மரப்பட்டைகள், சானிடரி நாப்கின்கள் மற்றும் டயாபர்கள், காம்பேக்ட் ப்ளோரசண்ட் விளக்குகள் மற்றும் காம்பேக்ட் ப்ளோரசண்ட் குழல் விளக்குகள் ஆகிய பொருள்கள் மீதான மதிப்புக் கூட்டுவரி 14.5 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைப்பு, ஆண்டொன்றிற்கு ரூ.47 கோடி அளவிற்கு வரிச் சலுகை.

- 32 இடங்களில் 59 வணிகவரி அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.42.26 கோடி நிதி ஒதுக்கீடு.
- வரி வருவாயினை சிறப்பான வகையில் மேற்கொள்ள ஏதுவாக வணிகவரித்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ.86.91 இலட்சம் செலவில் 16 வாகனங்கள்.
- வணிகவரித்துறையில் சோதனைச் சாவடிகளை நவீனமயமாக்குவதற்கு, சோதனைச் சாவடிகளுக்கு நிலம் கொள்முதல் செய்தல், கட்டடம் கட்டுதல், கூடுதல் பணியாளர்கள் நியமனம், வாகனங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் இதர தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ.33.36 கோடி ஒதுக்கீடு.
- வணிகவரி பயிற்சி நிலையத்திற்கு ரூ.10 இலட்சம் கூடுதல் நிதி.
- தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதி 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்வு.
- வணிகர்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- வணிகவரித்துறையில் பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 15 பேருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை.

## பதிவுத்துறை

- பொதுமக்களுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான சேவையை வழங்கும் வகையில் வலைதள அடிப்படையிலான மென்பொருள் தயாரித்தல் முதல் செயல்படுத்துதல் வரையிலான திட்டத்திற்கு ரூ.117.34 கோடி ஒதுக்கீடு.
- 01.11.2011 முதல் 31.01.2012 வரையிலான மூன்று மாத காலங்களுக்குச் "சமாதானத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு 23,804 ஆவணங்கள் பதிவுதாரர்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டு, இதன் மூலம் அரசுக்கு ரூ.140.83 கோடி வருவாய்.
- 01.04.2012 முதல் விற்பனை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையை 6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைத்து அரசு ஆணை.
- முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்குப் பெறுவதற்கான உச்சவரம்பை ரூ.5,000/– லிருந்து ரூ.25,000/– ஆக உயர்வு.
- பதிவுத்துறையில் உயர் அலுவலர்களுக்கு ரூ.1.22 கோடி செலவில் 23 பொலிரோ வாகனங்கள்.
- அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP Cameras) நிறுவுவதற்கு ரூ.3.50 கோடி ஒப்பளிப்பு.
- பதிவுத்துறை அலுவலர்களுக்கு 627 மின்னணு கையொப்பமிடும் சான்றிதழ்கள் வழங்குவதற்கு ரூ.3.50 இலட்சம் ஒப்பளிப்பு.
- தடையில்லா மின்சாரம் கிடைக்க ஏதுவாக முதற்கட்டமாக 150 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு மின் ஆக்கிகள் வழங்குவதற்கு ரூ.4.82 கோடி ஒப்பளிப்பு.
- பதிவுத்துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் தீயணைப்பு சாதனங்கள் வைப்பதற்கு ரூ.4.78 கோடி நிதி ஒதுக்கீடு.
- பதிவுத்துறையின் பணியாளர்களுக்குத் துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள் குறித்து பயிற்சி வழங்குவதற்காகச் சென்னையில் பதிவுத்துறைப் பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. 2013–2014 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சி மையத்திற்கு தேவையான கணினி மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் வாங்கக் கூடுதல் நிதியாக ரூ.30 இலட்சம் ஒதுக்கி ஆணை.
- பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை பாதுகாப்பதற்காக மின்னணுமயமாக்கும் திட்டம்.
- ஆவணங்களை குறிப்பிட்ட நாளில் பதிவு செய்வதற்கு சார்பதிவாளரிடம் இணையதளம் மூலம் முன்பதிவு செய்துகொள்ளும் முறை அறிமுகம்.
- பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியரின் 17 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம்.

❖ ❖ ❖

# புதிய கட்டடங்கள் உருவாக்கம் புதுமைத் திட்டங்கள் செயலாக்கம்!





**கட்டடங்கள்**

- ரூ.117.92 கோடி செலவில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 335 கால்நடை மருந்தகங்கள், 15 கால்நடை மருத்துவமனைகள், 3 கால்நடை நோய் நுண்ணறிவு மையங்கள், 2 பாலிகிளினிக் மையங்கள், 5 கருவூட்டல் மையங்கள் மற்றும் 12 கால்நடை பண்ணைகள் ஆகிய கட்டடங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றன.
- ரூ.44 கோடி செலவில், கால்நடைத் துறையின் 798 கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் முடிவுற்றன. மேலும் ரூ.20 கோடி செலவில் கால்நடைத் துறையில் 345 கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.
- ரூ.5.20 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள கால்நடை விதை முடக்க உற்பத்தி பிரிவுக் கட்டடத்தினை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.6 கோடி செலவில் காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, சேலம், பெரம்பலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், இராமநாதபுரம், தஞ்சாவூர், கடலூர், தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 20 இடங்களில் கால்நடை மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளன.
- ரூ.12.75 கோடி செலவில் 85 கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 47 பணிகள் முடிவுற்றன. 38 பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.1.56 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள ஒரத்தநாடு கால்நடை அபிவிருத்தி பண்ணையில் உழவர்களுக்காகப் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளன.
- ரூ.3.40 கோடி செலவில் தேசிய வேளாண்மை திட்டம் 2012–2013இன் கீழ் Liquid Nitrogen Bulk Storage Tanks (Silos) 10 மாவட்டங்களில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.16.56 கோடி செலவில் ESVHD 2012–2013இன் கீழ் 142 ஊரக கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 30 பணிகள் முடிவுற்றன. 112 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.33.42 கோடி செலவில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மையத்தில், புதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகம், இதரக் கட்டடங்கள் மற்றும் உட்புறச்சாலைகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.2.40 கோடி செலவில் சென்னை அரசுப் பல் மருத்துவக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான விடுதியின் கூடுதல் தளம் கட்டும் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டன. மின்தூக்கி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.2 கோடி செலவில் சென்னை, கீழ்பாக்கம் வளாகத்தில் உள்ள மருத்துவக் கல்வி இயக்குநரகம் மற்றும் தேர்வுக்குழுக் கட்டடத்தின் இரண்டாம் தளம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.
- ரூ.4.35 கோடி செலவில் சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனை வளாகத்தில், சிறுநீரகவியல் துறையில் விபத்து மற்றும் உடலியக்க மருத்துவக் கட்டடத்தின் கூடுதல் தளங்கள் கட்டும் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டது.
- ரூ.5.06 கோடி ஒதுக்கீட்டில் 23 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகளில், 12 பணிகள் முடிக்கப்பட்டன, 5 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன, 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன, 4 பணிகள் கைவிடப் பட்டுள்ளன.
- ரூ.3.36 கோடி ஒதுக்கீட்டில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நூலகக் கட்டடப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. வண்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.25 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கான 575 விடுதிகளுக்கான கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.3.44 கோடியில் செலவில் சென்னை பூங்கா நகரில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.31.5 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்டக் குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.40 இலட்சம் செலவில் நாமக்கல்லில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்டக் குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

- ரூ.40 இலட்சம் செலவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்டக் குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.262.86 கோடி செலவில் தமிழகத்தின் 12 கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்குப் பேரிடர் பாதுகாப்பு மையக் கட்டடங்கள் கட்டும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் கடலோரப் பகுதிகளில் பேரிடர் குறைப்புத் திட்டம் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.4.50 கோடி செலவில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தங்கும் விடுதிகள் கட்டும் பணிகளில், கட்டட அடித்தளம் அமைக்கும் பணி முடிவுற்று, கான்கிரீட் தூண்கள் கூரைவரை உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.8.10 கோடி செலவில் திண்டுக்கல், காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணிகளில், கான்கிரீட் தூண்கள் அமைக்கும் பணி கூரை மட்டம் வரை உயர்த்துதல், செங்கல் சுவர்கள் மற்றும் வெளிப்புறச் சுவர்கள் கட்டுதல், பார்வையாளர்கள் அமரும் இடங்கள் ஆகியவை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ரூ.105 கோடி செலவில் திருவள்ளூர் மாவட்டம், பெத்திகுப்பத்தில் நவீனப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சுங்கச்சாவடி அமைக்கும் பணிகளில், வாகனங்கள் உள்வருதல் பாதையின் பக்கச்சுவர் அமைக்கும் 2.70 மீட்டர் வரை முடிவடைந்துள்ளது. வாகன வெளியேறுதல் பாதையின் பிரதான கட்டடத்தின் அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- ரூ.1.83 கோடி செலவில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் சோதனைச் சாவடி அமைக்கும் பணிகளில், வட்டாரப் போக்குவரத்து அலுவலகப் பிரதான கட்டடப் பணிகள் முடிவடைந்தது, சோதனைச் சாவடி பக்கத் தடுப்பு சுவர் மற்றும் தரைதளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.6.90 கோடி செலவில் காஞ்சிபுரம் மாவட்டம், நன்மங்கலத்தில் உள்ள TBGP திட்ட மேலாண்மை பிரிவிற்கு அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகளில், இரண்டாவது தளம் கூரை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. மேலும் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ரூ.61 கோடி செலவில் புதிய கலையரங்கமும் மற்றும் ரூ.2 கோடி செலவில் மாநில செய்தி நிலையமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ரூ.2 கோடி செலவில் சென்னை எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.2.32 கோடி செலவில் சென்னை இராயபுரம் பகுதியில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் கட்டும் பணிக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- ரூ.60 இலட்சம் செலவில் சிவங்கை மாவட்டம், சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

- ரூ.2.10 கோடி செலவில் தஞ்சாவூரில், கல்லணையில் கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் கட்டும் பணி முடிவுற்று, 12.02.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

- ரூ.15.61 கோடி செலவில் தமிழ்நாட்டில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும்

குழந்தைகள் இல்லம், கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்ல கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும் செயற் பணியாளர் குடியிருப்புகளுக்குப் புதிய கட்டடங்கள் 9 இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.30 இலட்சம் கோயம்புத்தூரில் உள்ள அரசு கண்ணாடி அறிவியல் பயிற்சி மையக் கட்டடம் செலவில் புதுப்பித்தல் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.2 கோடி செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள சோதனை ஆய்வகக் கட்டடங்களை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.2.15 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்பு பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.1 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய பதிவு அறை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.90.20 இலட்சம் செலவில் திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் புதிய விருந்தினர் மாளிகை கட்ட ஆணை.
- ரூ.1.35 கோடி செலவில் மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் துறைக்கென ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.7.50 கோடி செலவில் சேலம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.19.82 கோடி மதிப்பீட்டில் 33 சார்நிலைக் கருவூலக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.100 கோடி செலவில், திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமம், ஸ்ரீரங்கத்தில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிக்கான 20 கட்டடங்களில் 7 கட்டடப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு 21.08.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நடப்பு ஆண்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டு கல்லூரி நடைபெற்று வருகிறது.
- ரூ.6.54 கோடி செலவில், தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.4.89 கோடி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு நீதிபதிகளுக்கான (5 எண்ணிக்கை) குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.3.88 கோடி செலவில், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.1.25 கோடி செலவில் தேனி மாவட்டம், லோயர் கேம்பில் திரு. கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணி முடிவுற்று 15.01.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.7.70 கோடி செலவில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் – செயற்கை நீரூற்று, புல்வெளி, நடைபாதை, எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் புதுப்பிக்கும் பணி, பொதுமக்கள் அமரும் இடம், மின் பணிகள், அலுமினிய கைப்பிடி சுவர் மற்றும் இதர பணிகள் அனைத்தும் முடிவுற்று, 09.12.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.1.20 கோடி செலவில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் – செயற்கை நீரூற்று அமைத்தல், வண்ணம் பூசுதல், புல்வெளி அமைத்தல்,



கிரானைட் கற்கள் அமைத்தல், புல்தரை அமைத்தல் ஆகிய பணிகள் முடிவுற்று, 09.12.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- ரூ.11.61 கோடி செலவில் சென்னை, கிண்டி சர்தார் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டபம் வளாகம் புதுப்பிப்புப் பணிகளில், வ.உ.சி நினைவிடம், திறந்தவெளி அரங்கம் ஆகிய இடங்களில் புல்வெளி அமைக்கும் பணி, வாகனங்கள் நிறுத்துமிடம், கழிப்பறைகள் கட்டும் பணி ஆகியவை முடிவுற்றது. இராஜாஜி மணிமண்டபத்தின் பின்புறத்தில் குழாய்கள் அமைத்தல் மற்றும் பிற நினைவகங்களுக்கு வண்ணம் பூசுதல், கிரானைட் தரை அமைத்தல், வழிகாட்டும் பலகை பொருத்துதல் ஆகிய பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

- ரூ.28 கோடி செலவில் சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டட முகப்புத் தோற்றத்தினை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.25 கோடி செலவில் தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.25 கோடி செலவில் கடலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.94.50 கோடி செலவில், கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள், கால்நடை நோய் நுண்ணறிவு மையம் மற்றும் இதர மையக் கட்டடங்கள் ஆகிய 450 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ரூ.2 கோடி செலவில் சென்னை பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான பள்ளியில் விடுதியுடன் கூடிய நவீனச் சமையலறைக் கட்டடம் கட்டுதல் பணி முடிவுற்றது.

- ரூ.2.10 கோடி செலவில், 5 சமூக நல மையங்களில் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.2.60 கோடி ஒதுக்கீட்டில், 26 குழந்தைகள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மையக் கட்டடப் பணிகள் முடிவடைந்தன.
- ரூ.3 கோடி ஒதுக்கீட்டில் 15 இடங்களில் உயிர் உரம் தயாரிக்கும் பிரிவுகளுக்கு சேமிப்புக் கிடங்கு கட்டும் பணிகளில், 15 இடங்களில், 13 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 3 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.1.30 கோடி ஒதுக்கீட்டில் குடுமியான் மலையில் மையக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் நுண்உணவுக் கலவை தயாரிப்பு மற்றும் வழங்கும் கிடங்கு அறை கட்டும் பணிகளில், பிரதான கட்டடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. துணைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவைக் கொண்டாடும் வகையில் எழில்மிகு அலங்கார நினைவு வளைவு அமைக்கும் பணி முடிவுற்று 20.6.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.52.14 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.42.33 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.150.42 கோடி மதிப்பில் 2012–2014ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவ மாணவியர் தங்கி பயில சூரிய எரிசக்தி வசதியுடன் கூடிய 152 விடுதிகள் கட்டும் பணிகளில், 79 பணிகள் முன்னேற்றத்திலும் 59 பணிகள் துவங்கப்படவுள்ளன.
- ரூ.28.09 இலட்சம் செலவில், தேசிய பால்வள உலக வங்கி திட்டத்தின்கீழ் உதகமண்டல கால்நடைப் பண்ணை விரிவாக்கப் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.1.40 கோடி செலவில் 10 இடங்களில் நிலையான சோதனை மையக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.21.60 கோடி செலவில், சென்னை நந்தனத்தில் நிதித்துறையின்கீழ் செயல்படும் அரசு அலுவலகங்களுக்கு 1,20,000 சதுர அடியில் ஒருங்கிணைந்த கட்டட வளாகம் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.
- ரூ.10.85 கோடி செலவில், நாகர்கோவில் மாவட்டம், வாள்வச்சகோஷ்டம் (ரூ.95 இலட்சம்), சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, (ரூ.57 இலட்சம்), வேலூர் மாவட்டம், ஆற்காடு, (ரூ.57 இலட்சம்), வேலூர் (ரூ.275 இலட்சம்), கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர், கடலூர் மாவட்டம், சிதம்பரம் (ரூ.161 இலட்சம்), திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி (ரூ.165 இலட்சம்) ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.
- ரூ.12.34 இலட்சம் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வணிகவரி அலுவலக வளாகத்தில் வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.1,387.15 கோடி செலவில், தூத்துக்குடி மாவட்டம், வெப்பலோடை (ரூ.248.75 இலட்சம்), திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் (ரூ.287.15 இலட்சம்), விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை (ரூ.275.75 இலட்சம்), தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு (ரூ.288.35 இலட்சம்), தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் (ரூ.287.15 இலட்சம்) ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- ரூ.36.50 இலட்சம் செலவில், மதுரை மாவட்டம், மதுரையில் வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.111 இலட்சம் செலவில், நாகர்கோவில் (2 எண்ணிக்கை), நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கடல்சார் பொருத்துநர் பயிற்சிக்காக கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.2.20 கோடி செலவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.25 கோடி செலவில், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள 5,000 கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தினை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.11 கோடி செலவில், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகத்தில் 26 அலுவலகங்களின் ஒருங்கிணைந்த வளாகக் கட்டடம் மற்றும் கூட்ட அரங்கு கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.27 கோடி செலவில், உதகமண்டலத்தில் 28 அலுவலகங்கள் கொண்ட கூடுதல் ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்டும் மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.19.80 கோடி செலவில், கோயம்புத்தூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 4 தளங்கள் கொண்ட அலுவலக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.12.12 கோடி செலவில், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம், திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம், காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர், வேலூர் மாவட்டம் ஆம்பூர் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி (ஒவ்வொன்றும் ரூ.202 இலட்சம்) மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.2.83 கோடி செலவில், 20 இடங்களில் வருவாய் ஆய்வாளர் அலுவலக கட்டடம் மற்றும் குடியிருப்பு (ஒவ்வொன்றும் ரூ.14.16 இலட்சம்) கட்டும் பணி மேற்கொள்ளப் படவுள்ளது.
- ரூ.8.66 கோடி செலவில், 114 இடங்களில் கிராம நிருவாக அலுவலக கட்டடம் மற்றும் குடியிருப்பு (ஒவ்வொன்றும் ரூ.7.60 இலட்சம்) கட்டும் பணி மேற்கொள்ளப் படவுள்ளது.
- ரூ.10.13 கோடி செலவில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில், ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் (மூன்றாம் தளம்) கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.66.24 இலட்சம் செலவில், 26 இடங்களில் வட்டாட்சியர் அலுவல கட்டடம், 11 இடங்களில் வட்டாட்சியர் குடியிருப்பு, 2 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் 1 இடத்தில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.30 கோடி செலவில், 11 சார்பதிவாளர் அலுவலகங்களுடன் கூடிய 4 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகக் கட்டடம் மற்றும் 35 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் (ஒவ்வொன்றும் ரூ.55 இலட்சம்) கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.1.58 கோடி செலவில், சென்னை கிண்டி வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் புதிய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.2 கோடி செலவில், கோவை (ரூ.54 இலட்சம்), மதுரை (ரூ.54 இலட்சம்) மற்றும் திருநெல்வேலி (ரூ.54.50 இலட்சம்) ஆகிய இடங்களில் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் மற்றும் மதுரை மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் (ரூ.36.50 இலட்சம்) கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

➢ ரூ.2 கோடி செலவில், கரூர் மாவட்டம், கரூரில் மகளிர் தொழிற்பயிற்சி நிலைய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

➢ ரூ.10.43 கோடி செலவில், உலக வங்கி நிதியுதவியுடன் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய கட்டடத்தினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

➢ ரூ.220 இலட்சம் செலவில், சென்னை சேப்பாக்கம் வளாகத்தில், நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலக கூடுதல் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

➢ ரூ.59.27 கோடி செலவில் சென்னை, பெருங்குடியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு புதிய வளாகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இக்கட்டப் பணிகள் 20.08.15க்குள் முடிக்கப்படும்.

➢ ரூ.6.88 கோடி செலவில் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு 17 வகுப்பறைகள் முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலக அறை கொண்ட கட்டடம் கட்டும் நடைபெற்று வருகிறது.

➢ சிவகங்கை மாவட்டத்தில், வேலுநாச்சியார் அவர்கள் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுவரும் வளாகத்தில் வீரத்தாய் குயிலிக்கும் ரூ.27.50 இலட்சம் செலவில் நினைவு சின்னம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

➢ ரூ.120 இலட்சம் செலவில், தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

➢ ரூ.77 இலட்சம் செலவில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி மண்டபத்தைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

➢ ரூ.130 இலட்சம் செலவில், திண்டுக்கல் மாவட்டத்தில், ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோர்ருக்கு ஒரே வளாகத்தில் மணிமண்டபம் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

## நீர்வள ஆதாரத்துறை

➢ காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைகள் மத்திய அரசின் அரசிதழில் 19.02.2013 அன்று வெளியிடப்பட்டதன் மூலம் மாநிலத்தின் உரிமை நிலை நாட்டப்பட்டுள்ளது.

➢ உலக வங்கி கடனுதவியுடன் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் ரூ.777.60 கோடி செலவில் 2,383 ஏரிகள், 295 அணைக்கட்டுகள் மற்றும் 4,091.72 கி.மீ. நீள வரத்து வாய்க்கால்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

➢ செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெருந்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.164.27 கோடி மதிப்பில் 509 தடுப்பணைகள் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

➢ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.09.2013 அன்று திருவள்ளூர் மாவட்டம், கண்ணன் கோட்டை மற்றும் தேர்வை கண்டிகை கிராமங்களின் அருகே ரூ.330 கோடி மதிப்பில் ஒரு புதிய நீர்தேக்கத்தினை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு பணி முன்னேற்றம்.

➢ ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் வாய்க்காலின் மைல் 3–3–000 முதல் 9–7–000 வரை ரூ.50 கோடி மதிப்பில் புனரமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

➢ உலக வங்கியின் கடனுதவியுடன், ரூ.745.49 கோடி மதிப்பில் அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டப் பணி முன்னேற்றம்.

➢ ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புக் குழுமத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரில் வெள்ள பாதுகாப்பினை உறுதி செய்திட ரூ.633.03 கோடி மதிப்பிலான பணிகள் முன்னேற்றம்.

➢ ரூ.200 கோடி மதிப்பில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள்

அமைப்பதன் மூலம் கடலோரப் பாதுகாப்பை உறுதி செய்திடவும், ரூ.200 கோடி மதிப்பில் பாரம்பரிய நீர் நிலைகளைச் சீரமைக்கும் பணி முன்னேற்றம்.

- ரூ.234 கோடி மதிப்பில் கரூர் மாவட்டத்தில், மாயனூர் கிராமம் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- ரூ.184.50 கோடி மதிப்பில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சமமட்டக் கால்வாயில் தொலைகல் எல்.எஸ். 0/000 கி.மீ. முதல் 49/300 கி.மீ. வரையுள்ள பகுதிகளை புனரமைக்கும் பணி முன்னேற்றம்.

- ரூ.130 கோடி மதிப்பில் சோழவரம், போரூர், அயனம்பாக்கம் மற்றும் நேமம் ஏரிகளின் நீர்த்தேக்கக் கொள்ளளவை உயர்த்தவும், செம்பரம்பாக்கம் ஏரியினை புனரமைத்து அதன் முழு நீர்த்தேக்கத்திறனை மீட்கும் பணி முன்னேற்றம்.

- ரூ.18 கோடி மதிப்பில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களிலுள்ள சாயல்குடி கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பணி முன்னேற்றம்.

- ரூ.19.82 கோடி மதிப்பில் திருவாரூர் மாவட்டம், காவேரி மற்றும் வெண்ணாறு உப வடிநிலங்களில் செயற்கை முறையில் 1,335 நிலத்தடி நீர்ச்செறிவூட்டுத் துளைகள் அமைக்கும் பணி முன்னேற்றம்.

**நபார்டு திட்டங்கள்**

- கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமராவதி ஆற்றுப்பாசனத் திட்டத்தில் உள்ள 16 பழைய அணைக்கட்டுகள் 18 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டு, 6,154 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெற்றுள்ளது.

- திருச்சி மாவட்டம், குடமுருட்டி ஆற்றில் ரூ.16.72 கோடி மதிப்பிலான வெள்ளத் தடுப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன.

- இராமநாதபுரம் மாவட்டம், களரி வாய்க்கால் மற்றும் வலதுபுற பிரதான கால்வாய் மூலம் ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில், வைகையாற்றின் குறுக்கே மந்திவலசை அருகே ரூ.14.20 கோடி மதிப்பில் படுகை அணை அமைக்கும் பணி முடிவுற்று 4,007 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெற்றுள்ளது.

- பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமாந்துறை கிராமத்தில் விஸ்வகுடி அருகில் கல்லார் ஓடையின் குறுக்கே ரூ.19 கோடி மதிப்பில் ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி முன்னேற்றம்.

- தஞ்சாவூர் மாவட்டம் காவேரி ஆற்றின் உபநதி மற்றும் வடிகால்களின் குறுக்கே ரூ.67.68 கோடி மதிப்பில் 11 மட்டச் சுவர்கள் மற்றும் 14 தடுப்பணைகள் கட்டும் பணி முன்னேற்றம்.

- கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாதோப்பு (நீர் ஒழுங்கி) அணைக்கட்டை ரூ.23.65 கோடி மதிப்பில் புனரமைத்து, அடைப்பு பலகை இயக்க அமைப்பினை மின்மயமாக்கும் பணி முன்னேற்றம்.

- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் வடவார் நீட்டிப்பு கால்வாயின் தொலைகல் 33.01 – 44.82 கி.மீ. வரை ரூ.23 கோடி மதிப்பில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றம்.

- இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் வட்டம், வலசை கிராமம் அருகே கீழ் நாட்டார்கால் மற்றும் 16 கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகை ஆற்றின் குறுக்கே ரூ.19.86 கோடி மதிப்பில் படுகை அணை கட்டும் பணி முன்னேற்றம்.

- ரூ.19.70 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் வட்டம் கமுதகுடி கிராமம் அருகே கூத்தாங்கல் வரத்து வாய்க்கால் மூலமாக 36 கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டும் பணி முன்னேற்றம்.




- ரூ.19.50 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், குன்னப்பநேந்தல் கிராமம் அருகே பார்த்திபனூர் நீர் ஒழுங்கிக்குக் கீழ்ப்பகுதியில் வைகையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி முன்னேற்றம்.
- ரூ.19 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், தெளிச்சாத்தநல்லூர் கிராமம் அருகே 14 கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டும் பணி முன்னேற்றம்.
- ரூ.17.50 கோடி மதிப்பில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வெள்ளாற்றின் குறுக்கே பெலாந்துறை நீர் ஒழுங்கியை புனரமைக்கும் பணி முன்னேற்றம்.
- தஞ்சாவூர் மாவட்டம், கல்லணைக் கால்வாய் தொலைக்கல் 0.75 கி.மீ. முதல் 58.67 கி.மீ. வரையும், கள்ளப்பெரம்பூர் ஏரியையும் ரூ.130.34 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு, 6,075 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.
- தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பகுதியில் கல்லணைக் கால்வாய் 58.67 கி.மீ. முதல் 92.20 கி.மீ. வரை ரூ.28.58 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு 68,977.50 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.
- ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் ரூ.17.45 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு 24,792.5 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.
- கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை வாய்க்கால் மற்றும் ஏரிகளில் ரூ.22.50 கோடி மதிப்பில் புனரமைப்புப் பணி முன்னேற்றம்.
- மதுரை மாவட்டம், நிலையூர் வாய்க்காலினைப் புனரமைத்து, அதன் நீர் கடத்தும் திறனை அதிகரித்து, நிலையூர் நீட்டிப்பு வாய்க்காலுக்கு நீர் வழங்க ரூ.23.50 கோடி மதிப்பிலான பணிகள் முடிவுற்று 4,023 எக்டேர் ஆயக்கட்டுப் பயன்.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை மற்றும் முத்தரசநல்லூர் கிராமங்களுக்கு அருகே காவேரி ஆற்றின் குறுக்கே ரூ.32 கோடி மதிப்பில் தடுப்பணை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், கடலோரப் பகுதியில் அமையப் பெற்ற கடலரிப்புத் தடுப்புச் சுவரை உயர்த்திப் புனரமைத்து கடல் அலைகளால் ஏற்படும் அரிப்பு மற்றும் ஊடுருவலை ரூ.26.58 கோடி மதிப்பில் தடுக்கும் பணி முன்னேற்றம்.
- அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம் மருதையாறு ஆற்றின் குறுக்கே அம்பலவார் கோட்டையில் சுண்டக்குடி சாலை வரை உயர்மட்ட பாலம் ரூ.10 கோடி மதிப்பில் அமைக்கும் பணி முன்னேற்றம்.
- தூத்துக்குடி மாவட்டம், பேய்க்குளம், பொட்டைக்குளம் மற்றும் கோரம்பள்ளம் கண்மாய்களை ரூ.20.07 கோடி மதிப்பில் மேம்படுத்தும் பணி முன்னேற்றம்.
- திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே ரூ.35 கோடி மதிப்பில் தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றம்.
- ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம் காளிங்கராயன் வாய்க்கால் தொலைக்கல் 0–0–000 மைல் முதல் 3–3–000 மைல் வரை 41 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கும் பணி முன்னேற்றம்.
- பாசனத்திற்கான நிதி ஒதுக்கீடு – ரூ.3,313 கோடி.
- காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க நடவடிக்கை.
- ரூ.50 கோடி மதிப்பீட்டில் மரபு சார்ந்த 176 நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணி முன்னேற்றம்.
- பெண்ணையாறு – பாலாறு இணைப்பு – இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் தல ஆய்வுக்கு அனுமதி கோரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.
- மதுரை மாவட்டம், திருமங்கலத்தின் அருகே ஆனைபாப்பான்குளம் கண்மாய் உபரி வாய்க்காலுக்கு ரூ.11 கோடி மதிப்பில் நிரந்தர மறுகட்டமைப்பு மற்றும் வெள்ளப் பாதுகாப்பு பணிக்கு ஆணை.
- ரூ.6.80 கோடி மதிப்பில் திண்டுக்கல் மாவட்டம், அகரம் கிராமத்தின் அருகே கொடகனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணிக்கு ஆணை.
- ரூ.4.10 கோடி மதிப்பில் திண்டுக்கல் மாவட்டம், திருகூர்ணம் கிராமத்தின் அருகே கொடகனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணிக்கு ஆணை.
- மதுரை மாவட்டம், திருமங்கலத்தின் சாத்தான்குடி அணைக்கட்டிலிருந்து மேலக்கோட்டை அணைக்கட்டு வரையிலான தெற்காற்றினை ரூ.3.06 கோடி மதிப்பில் சீரமைக்கும் பணிக்கு ஆணை.
- ரூ.16.83 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டு வட்டம், பாலூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே உபமேற்பரப்பு அணை அமைக்கும் பணிக்கு ஆணை.
- தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் சென்கன்பசுவன்தலவு கண்மாயில் இருந்து எண்டப்பட்டி கண்மாய், கொண்டசலமணசுலு கண்மாய் மற்றும் இடையிலுள்ள இதர 8 கண்மாய்களுக்கும் சின்னாற்றின் வெள்ள உபரி நீரினை வழங்கும் பொருட்டு ரூ.10.20 கோடி மதிப்பில் வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிக்கு ஆணை.
- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வாலிப்பாறை மற்றும் கோவிந்த நகரம் கிராமங்கள் வைகையாற்றின் குறுக்கே ரூ.4.95 கோடி மதிப்பில் இரண்டு தடுப்பணைகள் கட்டும் பணிக்கு ஆணை.
- ரூ.1,560 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா கடைமடை பகுதிகளில் நீர் ஒழுங்கிகளை மீள அமைத்து வடிகால்களை மேம்படுத்தும் பணி.

❖ ❖ ❖

# விரைந்த பட்டா மாற்றத்தால் நிறைந்த பயன் மக்களுக்கு

- **இயற்கை இடரினால் ஏற்பட்ட மனித உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகை ரூ.1,00,000-லிருந்து ரூ.2,50,000-ஆக உயர்வு. மேலும், மாடு ஒன்றுக்கு ரூ.10,000-லிருந்து ரூ.20,000-ஆகவும் ஆடு ஒன்றுக்கு ரூ.1,000 -லிருந்து ரூ.2,000-ஆகவும் மற்றும் கோழி / சேவல் ஒன்றுக்கு ரூ.30-லிருந்து ரூ.100-ஆகவும் உயர்வு.**

- **தீ விபத்தில் முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.5,000/-ஆகவும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.1,000/-லிருந்து ரூ.2,500/-ஆகவும் நிவாரண உதவித் தொகை உயர்வு.**

- **காவிரி டெல்டா மாவட்டங்களில் இயற்கைச் சீற்றத்தின் காரணமாக 50%-க்கு அதிகமாக நெற்பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்வு.**

- **தமிழகத்தில் வறட்சியால் டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பயிர் இழப்பை அளவிட்டு விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய நிவாரணம் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய நிவாரண பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் தலைமையில் மூத்த அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது.**

- 50 சதவீதத்திற்கு அதிகமாக நெற்பயிர் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதி விவசாயிகளின் 3,61,000 ஏக்கர் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் நிவாரணத் தொகை வழங்க ரூ.541.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.524.25 கோடி 3,52,613 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

- **வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு ரூ.804.24 கோடி நிவாரணம்.**

- **ரூ.366.16 கோடி செலவில் வறட்சி பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர் வசதி.**

- **சென்னை தவிர இதர மாவட்டங்களில் தேசிய**





ஊரகவேலைஉறுதிஅளிப்புத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள 100 நாட்கள் பணிவரம்பு 150 நாட்களாக உயர்வு.

- டெல்டா மாவட்டங்களில் கால்நடை தீவன பற்றாக்குறையைப் போக்கும் வகையிலும் பண்ணைக் குட்டைகளில் உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கெனவும் மொத்தம் ரூ.47.85 கோடி மதிப்பீட்டில் பணிகள்.
- வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனைத் திரும்ப் செலுத்துவதில் உள்ள சிரமத்தினை கருத்தில் கொண்டு அவர்கள் பெற்றுள்ளகூட்டுறவுக்கடன்கள்மாற்றியமைப்பு.
- கூடுதலாகக்குடிநீர்தேவைக்கெனதற்போது செயல்படுத்தப்பட்டுவரும்நடைமுறையிலுள்ள திட்டங்களின்கீழ்ரூ.492.37கோடியும்வழங்கல்.
- 34 புதிய வட்டங்களும் மேலும், ஸ்ரீரங்கம் மற்றும் இலுப்பூர் ஆகிய 2 புதிய வருவாய்க் கோட்டங்களும் உருவாக்கம்.
- ரூ. 295.06 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர், கடலூர் மற்றும் திருப்பூர் ஆகிய 3 மாவட்ட ஆட்சியர் அலுவலக• பெருந்திட்ட வளாகம் நீலகிரி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், கன்னியாகுமரிமற்றும்புதுக்கோட்டைஆகிய நான்குமாவட்டஆட்சியர்அலுவலகங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டவும் தாம்பரம், உடுமலைப்பேட்டை,தூத்துக்குடி,ஸ்ரீரங்கம், அம்பத்தூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய7வருவாய்கோட்டாட்சியர்அலுவலகக் கட்டடங்கள் மற்றும் புதுக்கோட்டையில் கோட்டாட்சியர்குடியிருப்புக்கட்டடம்கட்டவும் 32 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும்23இதரகட்டடங்கள்கட்டவும்அரசால் நிருவாக அனுமதி வழங்கி ஆணை.
- ரூ. 35.56 கோடி மதிப்பீட்டில் 20 குறுவட்ட வருவாய்ஆய்வாளர்களுக்குக்குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் கிராம நிருவாக அலுவலர்களின் அலுவலகக் கட்டடங்கள்கட்டவும்மேம்படுத்திடவும்ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும்கிரைண்டர்வழங்கும்திட்டம்மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2011ஆம் ஆண்டு செம்படம்பர் 15ஆம் நாளன்று திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் தொடக்கம்.
- மலைப்பாங்கான பகுதிகளில் மின் விசிறிக்குப் பதிலாக மின் அடுப்புகள்1,34,428 விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 95 இலட்சம் எண்ணிக்கையில் 89.13 இலட்சம்விலையில்லாமின்விசிறி,மிக்சிமற்றும் கிரைண்டர்கள் விநியோகம்.
- 12 கிராம நிருவாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள்,குறுவட்டநிலஅளவர்களுக்கும் மடிக்கணினிமற்றும்பிரிண்டர்வழங்குவதற்காக ரூ.25.40கோடிநிதிஒப்பளிப்புசெய்துஆணை.



- அம்மா திட்டத்தின் மூலம் மாநிலத்திலுள்ள கிராமங்களில் நடைபெற்ற முகாம்களில் 38.16 இலட்சம் மனுக்களின் மீது தீர்வு.

- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2,567.61 கோடியில் 30.18 இலட்சம் பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது. உறுப்பினர்களின் இறப்புக்குப்பின் அவர்தம் குழந்தைகளுக்கு தொடர்ந்து பயன்.

- நீண்ட கால நிலுவை இனங்கள் முடிவு செய்யப்பட்டு, நடப்பு காலத்தில் நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உபரியாக அறிவிக்கப்பட்ட 615 ஏக்கர் நிலம் 368 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நிலஉடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உள்பட) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 6 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன. இதன் படி புதிதாக 4 வருவாய் நீதிமன்றங்கள் லால்குடி, மன்னார்குடி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்டு, மொத்தம் நிலுவையில் உள்ள 29,412 வழக்குகளில் 16,442 வழக்குகள் முடிக்கப்பட்டு, 12,970 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.7.2011 அன்று தொடங்கப்பட்ட விரைவுப்பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளில், 44.08 இலட்சம் பட்டா மாறுதல் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 2.48 இலட்சம் பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.**

- தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட 31 மாவட்டங்களில் மொத்தம் 88,98,385.73.46 ஹெக்டேருக்கு நிலவருவாய்த் தொகை ரூ. 585 கோடி தள்ளுபடி செய்ய ஆணை.

- நத்தம் மற்றும் நகர நில அளவைத்திட்டம் மூலம் 98,612 பட்டாக்கள்.

- வரன்முறைப்படுத்தப்பட்ட திட்டத்தில் 49,173 வீட்டு மனைப்பட்டாக்களும், வழமையான திட்டத்தில் 3,50,446 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டது.

- 5,354 **கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம். கருணை அடிப்படையில்** 1,248 **பேர் பணி நியமனம்.**

- **வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ.**54.65 **கோடி செலவில் கால்நடைத் தீவனம் விநியோகம்.**

- **கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டப்பணிகள் ரூ.** 1,481.80 **கோடி செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த அரசால் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.**

- 2012-2013 **மற்றும்** 2013-2014 **ஆம் கல்வியாண்டுகளில்** 6 **முதல்** 12 **ஆம் வகுப்புகள் வரை பயிலும்** 25.31 **இலட்சம் மாணவ, மாணவியர்க்கு அவரவர் பள்ளிகளிலேயே சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றுகள் வழங்கப்பட்டன.**

❖ ❖ ❖

# ஊரகங்கள் செழிக்க உயர்வான திட்டங்கள்!



- முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களுக்கு சுமார் 300 சதுர அடியில் தலா ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். ஓர் ஆண்டுக்கு 60,000 வீடுகள் என, ரூ. 3,420 கோடி செலவில் 3 ஆண்டுகளில் 1,80,000 வீடுகள்.
- ஊரகப் பகுதிகளின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவையான அனைத்துக் குக்கிராமங்களுக்கும் அளித்து வளர்ச்சிப்

பணிகளை மேற்கொள்ளும் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்ட (தாய்) த்தின் கீழ் ரூ.2,180.00 கோடி செலவில் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

- ஊரகப் பகுதிகளில் தற்போது உள்ள தெருவிளக்குகளுக்குப் பதிலாக, புதுப்பிக்கத் தக்க எரிசக்தியின் பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில் ரூ.138.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் 59,000 சூரியசக்தியுடன் கூடிய தெருவிளக்குகள் அமைக்கும் பணி.

- ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ.558.72 கோடி செலவில் 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைப்பு, 41,149 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் பராமரிப்பு மற்றும் 38,089 ஊராட்சி சொத்துக்கள் பராமரிப்பு.

- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1.75 கோடி என்பது 2011–2012ஆம் ஆண்டு முதல் ரூ.2 கோடியாக உயர்த்தப்பட்டு இதுவரை ரூ.890.46 கோடி செலவில் 39,271 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ.225 கோடி ஒதுக்கீட்டில் 38,035 பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.132.82 கோடி செலவில் 27,250 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளை விரைந்து செயல்பட்டு நிதி ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்பெறும்.

- மின்சார செலவினை குறைத்திடவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை ஊக்குவித் திடவும் 50 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களில் ரூ.6.05 கோடி செலவில் சூரிய சக்தியினைப் பயன்படுத்தி மின்வசதி செய்யப்படுகிறது.

- ஒருங்கிணைந்த பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.283.10 கோடி செலவில் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான புதிய கட்டடங்கள், சமையலறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஏற்படுத்தித் தருதல், பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட 27,965 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.


- ஊரகப்பகுதிமக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை மற்றும் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.266.68 கோடி செலவில் 5,431 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ஊரகப் பெண்களுக்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களைப் போலவே ஊரகப் பகுதியைச் சார்ந்த ஆண்களின் சுகாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் வீதம், ரூ.35 கோடி செலவில் 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- நபார்டு வங்கியின், ஊரக உள் கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.592.05 கோடி செலவில் 3,267.97 கி.மீ நீளத்திற்கு 1,231 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலைகள் அமைத்திடும் திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்று சூழலை பாதிக்காத 1305 பிளாஸ்டிக் சாலைகள் ரூ.717.97 கோடி செலவில் 2,820.14 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன.

- இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ரூ.3,593.42 கோடி செலவில் 3,34,779 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



- மகாத்மாகாந்திதேசியவேலைஉறுதிதிட்டத்தின் கீழ் ரூ.11,076.02 கோடி செலவில் 111.09 கோடி மனித சக்தி நாள்கள் உருவாக்கப்பட்டன.

- நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாடுத் திட்டத்தின் கீழ் ரூ.535.94 கோடி செலவில் 12,818 உள் கட்டமைப்பு வசதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் 9,952.16 கி.மீ நீளமுள்ள 4,946 சாலைப் பணிகள் மொத்தம் ரூ.1,769.53 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன் 8ஆவது கட்டத்தின் கீழ் ரூ.290 கோடி செலவில் 598 கீ.மீ நீளமுள்ள 210 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- பதின்மூன்றாம் நிதிக்குழு மானிய சாலைப் பணிகள் திட்டத்தின்படி ரூ.411.31 கோடி செலவில் 2,267 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஊரகப் பகுதிகளில் நிலையான சொத்துக்களை உருவாக்குவதும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களைநிலைப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ்ரூ.314.17கோடி செலவில்2,927.32 கி.மீ நீள 2,749 பணிகள் முடிக்கப்பட்டன.

- மாநிலநிதிக்குழுமானியத்திட்டத்தின்படி 1,123.34 கி.மீ நீளமுள்ள 1,004 சாலைப்பணிகள் ரூ.184.33 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

- ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2,441.60 கி.மீ நீளமுள்ள 1,246 சாலைப்பணிகள் ரூ.250 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 757.57 கி.மீ நீளமுள்ள 387 சாலைப்பணிகள் ரூ.75.30 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சிகளுக்கு பிரித்து வழங்கும் மூன்றில்

இரண்டு பங்கு நிதி, ஊரகப்பகுதிகளில் செயல்படுத்தப்படும் முன்னுரிமைப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.192.80 கோடி செலவில் 1,029 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகம்**

- 2011–12 ஆம் ஆண்டில் 65,000 சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன.
- ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 15,000 வீதம் 22,214 சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்குத் தலா ரூ.10,000 வீதம் 31,144 சுய உதவிக் குழுக்களுக்கும் ஆக மொத்தம் 53,358 குழுக்களுக்கு சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் இணைப்பாக ரூ.14,061.95 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தரமதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற 8,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 80 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- 31,160 இளைஞர்களுக்குத் தொழிற் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதில் 11,807 இளைஞர்கள் “திறன் ரசீதுத் திட்டம்” மூலம் கணினிப் பயிற்சி பெற்றுள்ளனர்.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழிற்திறனை மேம்படுத்துவதற்காக 8,091 பெண்களுக்குத் தொழிற்திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2.68 கோடி செலவில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருள்களை மாணவர்களிடையே பிரபலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் 32 மாவட்டங்களில் 241 “கல்லூரிச் சந்தைகள்” நடத்தப்பட்டு ரூ.333.89 இலட்சம் மதிப்பிலான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களைச் சார்ந்த 60 வட்டாரங்களில் உள்ள 4.59 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தனி நபர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருள்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட 7 “மகளிர் மேளா” விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.
- மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்திட கண்காட்சிகள் நடத்தப்பட்டு ரூ.4.68 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தை உருவாக்கி தற்போது செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் சுய உதவிக் குழு உற்பத்தி பொருள்களை மேம்படுத்தி மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களுக்கு அரசு, “மதி” வர்த்தக பெயர் மற்றும் வணிகச் சின்னத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. “மதி” வர்த்தகப் பெயர் மற்றும் வணிக சின்னம் பதிவு செய்யப்பட்டு அதற்குரிய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

- மகளிர்சுயஉதவிக்குழுஉற்பத்திப்பொருள்களை இணையம் மூலம் சந்தைப்படுத்தும் வகையில், "மதி பஜார்" (Mathi Bazaar) எனும் பெயரில் புதிய இணைய தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டு முதல் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் மகளிர் சுய உதவிக்குழு பெண்களை ஊக்குவித்திட 2 சுய உதவிக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 2012–2013ஆம் ஆண்டு முதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் 100% கற்றவர்களாக உருவாக்கும் 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குத் தலா ரூ. 50,000/– வீதம் விருது.

- 150 நகர்புற அண்டை வீட்டுக் கூட்டமைப்பு களுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.1.50 கோடி ஊக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து மகளிர் திட்டத்தின் கீழ் 3,176 பெண்கள் வங்கி முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கச் செயல்பாடுகள்**

- 2013–2014ஆம் ஆண்டு செயல் திட்டக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு, தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டங்களுக்காக ரூ.255.77 கோடி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம், 31 மாவட்டங்களில் 170 வட்டாரங்களில் 5,814 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

- ரூ.10 இலட்சம் வீதம் 2,390 வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல் தவணையாக ரூ. 4 இலட்சம் வீதம் ரூ. 95.60 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருள்களின் தரமும் விற்பனையும் மேம்பட "ஒரு கிராமம் – ஒரு உற்பத்தி பொருள்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் 151 தொழில் தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை மேம்படுத்துவதற்காக ரூ.10.75 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

**சுனாமி மறுவாழ்வுத் திட்டம்**

- மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இராஜீவ்காந்தி மறு வாழ்வுத் திட்டத்தில் 1,102 வீடுகள் ரூ. 30 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் 99 பணிகள் ரூ. 4.97 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- அவசரகாலசுனாமி மறுகட்டமைப்புத்திட்டத்தின் கீழ் உலக வங்கி கடனுதவியுடன் எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய 14,349 வீடுகளை மீளக்கட்டுதலில் 14,282 வீடுகள் ரூ. 528.28 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- அவசர காலத்தில் வெளியேறுவதற்கான சாலைகள் மற்றும் வழிகாட்டும் பலகைகள் அமைக்கும் 143 பணிகளில் 142 பணிகள் ரூ. 21.58 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**புதுவாழ்வுத் திட்டம்**

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு ரூ. 605.23 கோடி நிதி.

- ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்ட அமைப்புகளுக்கு ரூ.207.17 கோடி நிதி.

- 1,38,320 மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு சுயதொழில் தொடங்க தனிநபர் கடன்.

- வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி பெற்ற 90,606 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு.

- வாழ்வாதாரத் தொழில்களைக் கொண்டு 57,261 பேரைக் கொண்டு 2,896 தொழிற் குழுக்கள் உருவாக்கம்.

❖ ❖ ❖

# புதுமைச் சிற்பிகளாம் பள்ளிச் செல்வங்களை வார்த்தெடுக்க எண்ணற்ற சலுகைகள் - ஏராளமான உதவிகள்!

- அனைவருக்கும்தரமானகல்வியை வழங்கிடபள்ளிக்கல்வித்துறைக்கு கடந்த மூன்றாண்டுகளில் ரூ. 44,851.78 கோடி ஒதுக்கீடு.
- 2013–2014ஆம் கல்வியாண்டில் பயிலும்மாணவ,மாணவியருக்கு விலையில்லா நலத்திட்டங்களை வழங்குவதற்காக தனியே 100 சதவிகிதம் மாநில அரசின் நிதியாக ரூ. 2,559.48 கோடி ஒதுக்கீடு.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி கற்க உதவும் அனைத்து உபகரணங்கள், சீருடைகள் போன்றவை வழங்கப்படுவதால் பள்ளிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கை தொடக்கக் கல்வியில் 2.23 சதவிகிதமும், இடைநிலைக் கல்வியில் 2.9 சதவிகிதமும் உயர்ந்துள்ளது.
- மூன்றாண்டுகளில் பன்னிரண்டாம் வகுப்புப் பயின்ற 16.16 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.1,637.78 கோடி செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.
- இடைநிலைக் கல்வியை இடைநிற்றலின்றித் தொடர





சிறப்பு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.1,500/–, 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.2,000/– கல்வி ஊக்கத் தொகையாக அவர்களின் பெயரில் முதலீடு செய்யப்படும். மேல்நிலைக் கல்வி முடிந்தவுடன் வழங்கும் வகையில் ரூ.1,047.69 கோடி ஊக்கத்தொகை பெற்று 63.83 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

➢ பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இணைச் சீருடை இரண்டு இணையாகவும், பின்னர் 4 இணையாகவும் உயர்த்தப்பட்டு, 2011–2012ஆம் கல்வியாண்டில் 46.88 இலட்சம் மாணவ, மாணவியருக்கும், 2012–2013ஆம் கல்வியாண்டில் 47.07 இலட்சம் மாணவ, மாணவியருக்கும், 2013–2014ஆம் கல்வியாண்டில் 45.86 இலட்சம் மாணவ, மாணவியருக்கும் ரூ. 845.94 கோடி செலவில் 468.48 இலட்சம் இணைச் சீருடைகள் வழங்கப்பட்டன.

➢ மலைவாழ் பகுதிகளில் உள்ள மதிய உணவு உட்கொள்ளும் 1.03 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ. 4.12 கோடி செலவில் விலையில்லா கம்பளிச் சட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

➢ ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2011–2012இல் 69.25 இலட்சம் பேருக்கும், 2012–2013இல் 92 இலட்சம் பேருக்கும், 2013–

2014இல் 97.70 இலட்சம் பேருக்கும் ரூ. 523.97 கோடி செலவில் வழங்கப்பட்டன.

- ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தில் 2012–2013 இல் 81.02 இலட்சம் பேருக்கும், 2013–2014 இல் 86.71 இலட்சம் பேருக்கும் ரூ.213.65 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- 2012–2013ஆம்ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 1.05 கோடி மாணவ, மாணவியருக்கு ரூ.147.57 கோடி செலவில் புத்தகப் பைகளும், ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் 55.68 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.20.24 கோடி செலவில் கணித உபகரணப் பெட்டிகளும், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 63.91 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.11.66 கோடி செலவில் கிரையான்ஸ்/ வண்ணப் பென்சில்களும்,ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் 55.67 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.16.42 கோடி செலவில் நில வரைபடப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

- 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா ஒரு இணை காலணிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.112.62 கோடி செலவில் 84.92 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்தனர்.

- 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 18.83 இலட்சம் பேருக்கு ரூ.577.39 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

- 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2011–2012இல் 46.88 இலட்சம் மாணவ, மாணவியருக்கும், 2012–2013இல் 48.63 இலட்சம் மாணவ, மாணவியருக்கும் 2013–2014இல் 53.40 இலட்சம் மாணவ, மாணவியருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

- 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளி மாணவ, மாணவியருக்குமான இலவச பேருந்து பயணச்சலுகைத் திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் ஆண்டில், 14.02 இலட்சம் பேரும், 2012–2013ஆம் ஆண்டில், 14.02 இலட்சம் பேரும், 2013–2014 ஆம் ஆண்டில் 23.73 இலட்சம் பேரும் பயனடைந்துள்ளனர்.

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் தாய், தந்தை இழந்த மாணவர்களின் பெயரில் ரூ.50,000 வீதம் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாகச் செலுத்தப்படும் திட்டத்தின் கீழ், 1,080 மாணவ, மாணவியர் பயன் பெற்றனர்.

- 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு முடித்துச் செல்லும் மாணவ, மாணவியர் தாங்கள் பயின்ற பள்ளியிலேயே வேலைவாய்ப்புப் பதிவு செய்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கான பதிவு அட்டை அவரவர் பள்ளியிலேயே உடனுக்குடன் அளிக்கப்பெறுகிறது.

- 6, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதி, இருப்பிட மற்றும் வருவாய்ச் சான்றிதழ்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் சார்ந்த வட்டாட்சியரிடமிருந்து பெற்று வழங்கப்பட்டு வருகிறது. 6,41,242 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் குறித்த அனைத்து விவரங்களையும் பதிவு செய்யும் கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமைத் திட்டம் ரூ. 99.47 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு 56,573 பள்ளிகள், 5,63,644 ஆசிரியர்கள் மற்றும் 1,35,21,004 மாணவர்கள் சார்ந்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- பள்ளிகளையும், ஒவ்வொரு பள்ளி செல்லும் குழந்தையையும் தொடர்ந்து கண்காணிக்கும்

புவியியல் தகவல் முறைமையுடன் இணைந்த கல்வி மேலாண்மைத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் 5 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

- மாணவர்கள் சார்ந்த அனைத்து விவரங்களும் தற்போது கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு மாணவ, மாணவியர்க்கும் **ஸ்மார்ட் கார்டு** வழங்கும் திட்டம் திருச்சி மாவட்டத்தில் 5 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தமிழகம் முழுதும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

- மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மனஅழுத்தத்தைக் குறைக்க 10 நடமாடும் ஆலோசனை மையங்கள் ரூ.1.27 கோடி செலவில் அமைக்கப்பட்டு, இதுவரை 208 பள்ளிகளிலுள்ள 46,794 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

- மாநில அளவில் பள்ளிகளில் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.1.17 கோடி ஒப்பளிப்புடன் ரூ. 22 இலட்சம் செலவில் போட்டி நடத்தப்பட்டது. 11,25,628 மாணவர்கள் பங்கேற்று 24 மாணவர்கள் வெற்றியாளர்களாகத் தேர்வு.

- பின் தங்கிய ஒன்றியங்களிலுள்ள மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் கல்வியில் பின் தங்கிய 26 ஒன்றியங்களில் தலா ஒரு மாதிரிப் பள்ளி வீதம் 26 மாதிரிப் பள்ளிகள் ரூ.78 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு ஆணை. இப்பள்ளிகள் அமைக்கப்படுவதினால் 14,560 மாணவ,மாணவிகள் தரமான கல்வி பெறுவதற்கு வழிவகை.

- 13 மாவட்டங்களில் உள்ள கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் உள்ள குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில், அனைவருக்கும்இடைநிலை கல்வித் திட்டத்தின் கீழ் 44 மாதிரிப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு ரூ.90.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. திட்ட மதிப்பில் மாநில அரசின் 25 சதவிகித பங்களிப்பான ரூ. 22.63 கோடிக்கும் கூடுதல் நிதியாக ரூ.57.23 கோடி ஒப்பளிப்பு. 25,520 மாணவ, மாணவியர் கல்வி பெற வழிவகை.

- 13 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் ரூ.61.10 கோடி மதிப்பில் 44 மாணவியர் விடுதிகள் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்களிப்பான ரூ.6.10 கோடிக்கும் கூடுதல் நிதியாக ரூ. 45.44 கோடி ஒப்பளிப்பு. 4,400 மாணவியர் பயன்.

- 45 தொடக்கப் பள்ளிகளில் பழைய கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.6.57 கோடியும், அரியலூரில் உள்ள மூன்று பள்ளி கட்டடங்களுக்கு ரூ.29 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 6,594 அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு 2013–2014ஆம் ஆண்டில் மொத்த மாணவர் சேர்க்கை 1,14,640 ஆக உயர்ந்துள்ளது.

- அரசுப் பள்ளிகளுக்கு 52,417 ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 20,875 பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை.

- அரசுப் பள்ளிகளுக்கு ஆசிரியர் அல்லாத 11,002 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.மேலும் 8,900 பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை.

- காலிப் பணியிடங்களில் தற்காலிக அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்க ரூ.20.18 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டு, 2,645 தற்காலிக முதுகலை ஆசிரியர்களும் 3,300 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டனர்.

- பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 51,447லிருந்து 43,838ஆக குறைந்தது.

- தொலைதூர மற்றும் மலைப்பகுதி குடியிருப்புகளில் வசிக்கும் 11,002 மாணவ,

மாணவியருக்கு ரூ.3.29 கோடி செலவில் போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டது.

- ரூ.1.34 கோடி செலவில் தொலைதூர, மலைப்பகுதி குடியிருப்புகளில் வசிக்கும் 4,483 குழந்தைகளுக்கு வழித்துணையாளர் வசதி அளிக்கப்பட்டது.
- புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி வசதிக்கு ரூ.4.30 கோடி ஒதுக்கப்பட்டு 8,838 குழந்தைகள் அரசு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.
- நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு சேர்க்கைக்கான இடஒதுக்கீட்டின்படி, பள்ளி நுழைவு நிலை வகுப்பில் 49,864 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு மற்றும் முப்பருவமுறை ஆகிய இருதிட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் ரூ.48 கோடியில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் தரம் உயர்வு.
- பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் ரூ.1,684.20 கோடியில் தலைமை ஆசிரியர் அறைகள், புதிய பள்ளிகளுக்கு வகுப்பறைகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் வகுப்பறைகள், குடிநீர்வசதி, சமையற்கூடங்கள், சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறை வசதி, சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளான மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம், மாற்றியமைக்கப்பட்ட கழிப்பறை வசதி ஆகியவை தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
- அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.74.77 கோடி மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் பள்ளிக் கட்டடப் பணிகள்.



**தொலைதூர இடங்களிலுள்ள பள்ளிகளை ஒருங்கிணைத்தல்**

- தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்கும் பொருட்டு மாநில அரசால் இணைய தளம் வாயிலாக “பள்ளிகளிலுள்ள வகுப்புகளை இணைத்து ஒருங்கிணைந்து பயிலும் திட்டம்” (Collaborative Learning through – Connecting Class Room) என்ற புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திறன்மிக்க ஆசிரியர்கள், மாவட்ட வள மையத்திலிருந்தோ அல்லது தாங்கள் கற்பிக்கும் பள்ளிகளில் இருந்தோ தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளிலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்குப் பாடங்களைக் கற்பிக்க இயலும். இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில், முதற்கட்டமாக 288 அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 44,800 மாணவ மாணவிகள் பயன்பெற்றிட பள்ளிகளிலுள்ள வகுப்புகளை இணைத்து 24 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்து பயிலும் திட்டம் 19.2.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வி வசதி அளிப்பதற்காக ரூ.16.30 இலட்சத்தில் மாநில ஆதார வள மையம் அமைக்கப்பட்டது.

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.181.02 கோடியும், 390 பள்ளிகள் பயனடையும் வகையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.185 கோடியும், 1,851 வகுப்பறைகள் மற்றும் 698 அறிவியல் ஆய்வகங்கள் அமைத்திடும் பொருட்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் கூடுதல் நிதியுதவியாக ரூ.71.18 கோடியும் ஆகமொத்தம் ரூ.437.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நிர்மல் பாரத் அபியான், நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதி / ஊராட்சி ஒன்றிய நிதிகளின் கீழ் அரசுப் பள்ளிகளில் 34,796 கழிப்பறைகளும், 34,193 அரசுப் பள்ளிகளில் குடிநீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கழிப்பறைகளின் பராமரிப்பிற்காக நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.6.54 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- புவியியல் தகவல் முறைமையைப் பயன்படுத்தி பள்ளிகளுக்குத் தேவைப்படும் 54 குடியிருப்புகளில் 100 சதவீதம் மாநில அரசின் நிதி உதவியுடன் புதிய தொடக்கப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- 300 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், 208 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், மேலும் மத்திய / மாநில அரசு நிதி உதவியுடன் 65 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 552 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டன.

- முதன்முறையாக பொதுத் தேர்வுத் தொடர்பான ஆவணங்களான பெயர் பட்டியல், நுழைவுச் சீட்டு மற்றும் வருகைச் சான்றிதழ் போன்றவை தேர்வர்களின் புகைப்படத்துடன் கூடியதாகத் தயாரிக்கப்படுகிறது.

- விடைத்தாள்களில் மாற்றெண்ணிடும் முறைக்குப் பதிலாக பட்டக் குறியீடு (Bar Code) முறை அறிமுகப்படுத்தப்பட்டு 2013ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைப் பல்கலைக்கழகம், கல்வி வளர்ச்சிக் குறியீடுகளின் (Educational Development India) அடிப்படையில் வெளியிடும்

மாநிலங்களின் தரவரிசையில், தேசிய அளவில் கல்வி வளர்ச்சி குறியீட்டில் முதன்மை மாநிலமாக தமிழகம் உள்ளது.

- 2009–2010ஆம் ஆண்டில் ஐந்தாம் நிலையில் இருந்த தமிழகம் 2011–2012 ஆம் ஆண்டு மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் மூன்றாவது நிலைக்கு உயர்ந்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | கல்வி வளர்ச்சிக் குறியீடு தேசிய அளவில் தமிழ்நாடு |
|---|---|
| 2009–10 | 5 ஆம் நிலை |
| 2010–11 | 4 ஆம் நிலை |
| 2011–12 | 3 ஆம் நிலை |
| 2012–13 | 3 ஆம் நிலை |

- முதல் இரு நிலைகளில் உள்ள இலட்சத்தீவுகள் மற்றும் புதுச்சேரி மாநிலங்கள் மிகச் சிறிய யூனியன் பிரதேசங்களாகும்.

- மாணவர்களின் கற்றல் அடைவு நிலை குறித்து மேற்கொண்ட ஆய்வில், மொழிப் பாடம், கணிதம் மற்றும் சூழ்நிலை அறிவியல் பாடத்திட்டத்தில் சராசரி அடைவு நிலையை விட அதிகம் பெற்று தமிழ்நாடு முதன்மையான இடத்தில் உள்ளது.

- குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதற்கான விதிகளை முதன் முதலாக அரசிதழில் வெளியிட்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.

- பள்ளிகளில் தகவல் தொழில்நுட்பம் – 4,340 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதி 'உருவாக்கி, உரிமையாக்கி, இயக்கி மாற்றுதல்' (Built, Own operate and Transfer – BOOT Model) மாதிரியின் அடிப்படையில் ரூ.277.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருச்செந்துரை, அயிலாப்பேட்டை, எட்டரை, சோமரசம்பேட்டை மற்றும் இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவுசார் வகுப்புகள் ஏற்படுத்த தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.1.25 கோடி ஒப்பளிப்பு.

- நடுவண் அரசுத் திட்டத்தின் கீழ், நாமக்கல், தேனி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் அறிவுசார் பள்ளிகள் தொடங்க தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.1.25 கோடி ஒதுக்கீடு.

- மாணவர்கள் நலன் கருதி மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுக்குப் புகைப்படம் இருபரிமாணப்பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் இரகசியக் குறியீடுகளுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் போலி மதிப்பெண் சான்றிதழ்கள் முற்றிலும் தடுக்கப்படும்.

- சிறப்புத் துணைத் தேர்வுக்கு மூன்று பாடங்கள் மட்டுமே எழுத அனுமதிக்கப்பட்ட நிலையினை மாற்றி மார்ச் / ஏப்ரல் பருவத் தேர்வுகளில் தோல்வியுற்ற அனைத்துப் பாடங்களையும் ஜூன் / ஜூலை பருவ சிறப்புத் துணைத் தேர்வு எழுதுவதற்கு 2012ஆம் ஆண்டுமுதல் அனுமதி.

- அரசுப் பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் சலுகைகளைப் பள்ளிச் செல்லாக் குழந்தைகளுக்காக நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் அதாவது பள்ளிக்கு வெளியே மாற்றுப் பள்ளிகளிலும், உண்டு உறைவிடப் பள்ளிகளிலும், தேசிய குழந்தைத் தொழிலாளர் நலத் திட்ட நலப் பள்ளிகளிலும், கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயாக்களிலும், சமூக நலப் பாதுகாப்புக்கான சிறார் பள்ளிகள், கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இசைப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் வழங்க ஆணை.

- தமிழகத்தில் எழுத்தறிவு பெறாத வயது வந்தோருக்கு முதன்முறையாகக் கணினி வழியாக கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு 40 மையங்கள் "மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்" ஆகத் தரம் உயர்வு. இத்திட்டம் அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.2.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1 கோடி மதிப்பில் கணினி சார்ந்த கல்வி உபகரணங்கள்.

- ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் மாநிலத்தின் மையப் பகுதியான திருச்சியில் ரூ.3 கோடி செலவில் ஆசிரியர் இல்லம் புதிதாகக் கட்ட ஆணை. தென் மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்த இல்லம் பயனுள்ளதாக அமையும்.

- சென்னை சைதாப்பேட்டையில் தற்போது செயல்பட்டு வரும் 20 ஆண்டுகள் பழமையான ஆசிரியர் இல்லம் நவீன முறையில் புதுப்பிக்க ஆணை. சென்னைக்கு வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ. 3 கோடியில் கூடுதலாகப் புதிய கட்டடம்.

- மாவட்ட நூலக அலுவலகங்களில் பணியாற்றும் 32 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் தங்களது பணியைச் செம்மையாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் செய்வதற்கு ஏதுவாக ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்க ஆணை.

- மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் வாசிப்புத் திறனை அதிகரிப்பதற்காக கோயம்புத்தூர் மாவட்ட நூலகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு வசதிகளுடன் கூடிய தனிப்பிரிவு.

- ஆசிரியர்களுக்குச் சேரவேண்டிய பண, பணி மற்றும் இதரப் பலன்களை உரிய நேரத்தில் பெற அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க அனைத்துக் கல்வி அலுவலகங்களிலும் சிறப்பு ஆசிரியர் குறைதீர்க்கும் முகாம் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளும் மாணவ/ மாணவியர் நலன் கருதி பள்ளி வளாகம், அதன் சுற்றுப்புறம் மற்றும் வாகனங்கள் பராமரித்தல் தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் பள்ளிக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி, மின்சாரம், இருக்கைகள், முதலுதவி, மாணவர்கள் கூடும் நேரங்களில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள், பள்ளி வாகனங்களை இயக்குவது குறித்துப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- மாணவ / மாணவியரின் தாய்மார்கள், வாரத்தில் ஒரு நாள், ஐந்து பேர் கொண்ட குழுவாகச் சென்று பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளையும் பள்ளி வேலை நாட்களில் பார்வையிட அனுமதித்தல் வேண்டும். இவர்களின் பார்வைக் குறிப்புகள் பார்வைப் புத்தகத்தில் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டும். தாய்மார்களைத் தேர்வு செய்யும் போது பல்வேறு வகுப்புகளில் இருந்தும் பிரதிநிதிகள் உள்ளடக்கியவாறு அமைதல் வேண்டும் என்றும் ஆணை.

- விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியினை தலைமை இடமாகக் கொண்டு புதிதாகக் கல்வி மாவட்டம் தோற்றுவிப்பு.

- தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கென ஆங்கில மொழி உச்சரிப்புக் கட்டகம் (Module) முதற்கட்டமாக 1,600 பள்ளிகளில் ரூ. 1.19 கோடி மதிப்பீட்டில் அறிமுகம்.

- 2012–2013 இல் 1 முதல் 8ஆம் வகுப்புகளுக்கு முப்பருவக் கல்வி முறை மற்றும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2013–2014இல் 9ஆம் வகுப்புக்கும் நீட்டிக்கப்பட்டது.

❖ ❖ ❖

# மகளிர் நலம் காக்கும் மகத்தான திட்டங்கள்



- ரூ.123.93 கோடி மதிப்பீட்டில் 15,399 அங்கன்வாடி மையங்களில் பழுதுகள் நீக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.29.52 கோடி மதிப்பீட்டில் 16,402 அங்கன்வாடி மையங்களில் 9,306 குழந்தைகளுக்கேற்ற கழிப்பறை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ரூ.601.91 கோடி செலவில் 15,313 அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, 3,023 அங்கன்வாடி மையங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.
- ரூ.22.25 கோடி செலவில் 36,069 அங்கன்வாடி மையங்களுக்குச் சமையல் எரிவாயு அடுப்பு,

எரிவாயு இணைப்பு மற்றும் அடுகலன் வழங்கி நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

- ரூ.26.40 இலட்சம் செலவில் 2,200 அங்கன்வாடி மையங்களுக்கு 4,400 தானியங்கள் சேமிப்பு கலன்களும், ரூ.1.09 கோடி செலவில் 6,800 அங்கன்வாடி மையங்களுக்கு 13,600 உணவுப் பொருள் கொள்கலன்களும் வழங்கப்பட்டுள்ளன.

- ஒரு மையத்திற்கு ரூ.2,000 வீதம் ரூ.40 இலட்சம் செலவில், 2,000 அங்கன்வாடி மையங்கள், ஒரே மாதிரியான வண்ணம் தீட்டிப் புதுப்பொலிவு.

- சென்னை, வேலூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அங்கன்வாடி மையங்களில் பயிலும் 2 முதல் 5 வயது வரையுள்ள 3,72,128 குழந்தைகளுக்கு ரூ.9.30 கோடி செலவில் வண்ணச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.488.36 கோடி மதிப்பீட்டில் 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள 28.24 இலட்சம் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளரிளம் பெண்களுக்கும் இணை உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

- ரூ.12.34 கோடி மதிப்பீட்டில் 20,558 அங்கன்வாடி மையங்களுக்கு மின் இணைப்பு வசதி ஏற்படுத்த நிர்ணயிக்கப்பட்டு 20,139 மையங்களில் மின் விசிறி மற்றும் விளக்குகள் பொருத்தி மின் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அங்கன்வாடி பணியாளர்களாக 10,641 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதனால் 2–5 வயதுள்ள குழந்தைகளுக்கு சனிக்கிழமை அன்றே ஞாயிற்றுக்கிழமைக்கென சமைக்கத் தகுதியான சத்துணவு வழங்கப்படுகிறது.

- ரூ.7.12 கோடி செலவில் இளம் பெண்கள், குழந்தைகள், பச்சிளம் குழந்தைகளுக்கான 82,760 எடை பார்க்கும் கருவிகள் வழங்க நிர்ணயிக்கப்பட்டதில் 40,634 எடைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.73.27 கோடி செலவில் அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டு, 32,714 சத்துணவு பணியாளர்களும் 30,125 அங்கன்வாடி பணியாளர்களும் பயனடைந்துள்ளனர்.

- ரூ.2.72 கோடி செலவில் 54,439 அங்கன்வாடி மையங்களில் உள்ள 17.31 இலட்சம் குழந்தைகளின் தன்சுத்தம் பேண சுகாதாரப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.50 இலட்சம் செலவில், அங்கன்வாடி குழந்தைகளுக்கான 2,000 எடை பார்க்கும் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.1.20 கோடி செலவில் 10,000 அங்கன்வாடி மையங்களில் முன்பருவ கல்விக்கென நீதிக்கதைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.5.79 கோடி மதிப்பீட்டில் 9,602 அங்கன்வாடி மையங்களில் புகையில்லா சமையலறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- ரூ.658.92 கோடி செலவில் 2,60,369 படித்த ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.25,000 வீதம் நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் வீதம் 1,041.48 கிலோ தங்கம். மேலும் ரூ.144.69 கோடி செலவில் பழைய திட்டத்தின் கீழ் 61,766 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000 வீதம் திருமண நிதியுதவி.

- பட்டம் / பட்டயம் பெற்ற 1,18,125 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.590.63 கோடி திருமண நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் வீதம் 472.50 கிலோ தங்கம்.



- திருமண நிதியுதவித் திட்டங்களில் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000 லிருந்து ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டு 1,355 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

- ரூ.25 கோடி செலவில் பணிபுரியும் மகளிருக்காக 20 தங்கும் விடுதிகள் கட்டுதல்.

- "முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ், ரூ.314.95 கோடி செலவில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் 84 பெண் குழந்தைகள் உள்பட 1,75,308 பெண் குழந்தைகள் பயன்.

- தொட்டில் குழந்தைத் திட்டம் ரூ.34.20 இலட்சம் செலவில் திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு, இதுவரை 88 குழந்தைகள் மீட்பு.

- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் 1992–1995 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 16 பெண் குழந்தைகளுக்கு ரூ.6.06 இலட்சம் மதிப்பில் திருமண உதவித் தொகை மற்றும் தலா 4 கிராம் தங்கம்.

- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் முதிர்வுத் தொகை பெற வயது 18 ஆக தளர்த்தப்பட்டு, ரூ.4.38 கோடியில் 6,206 பயனாளிகள் பயன்.

- 7 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசுக் குழந்தைகள் காப்பகங்களில் தங்கி +2 படித்து முடித்த மாணவியர் 480 பேருக்கு ரூ.1.51 கோடி உயர் கல்வி நிதி உதவி.



- ரூ.85 இலட்சம் செலவில் குழந்தை திருமணத் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார விளம்பரப் படங்களைத் தயாரித்து திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு.

- ரூ.49 இலட்சம் செலவில் 5 குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் 2 அரசு சேவை இல்லங்கள் ஆகியவற்றில் 824 குழந்தைகள் பயன்பெறும் வகையில் சமையலறைகள் நவீனமயமாக்கம்.

- ரூ.309.68 கோடி அரசு செலவில் நான்கு இணை சீருடைகள் சத்துணவு உண்ணும் 47.07 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- 10,953 சத்துணவுப் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- ஆண்டொன்றுக்கு ரூ.1,588.65 கோடி செலவில் 54.62 இலட்சம் குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் 8.33 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.5 கோடி செலவில் எவர்சில்வர் தட்டு மற்றும் குவளைகள் (Tumbler) வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.5.86 கோடி செலவில் 2,652 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

- பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 63,426 குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.5 கோடி செலவில் சிறு தானிய உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- மாவட்டந்தோறும் முன்னோடி வட்டாரங்களில் 91,881 குழந்தைகளுக்கு ரூ.3.10 கோடி செலவில் புதிய வகை கலவை சாதங்கள் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

- மதிய உணவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வகை கலவை சாதங்களை தயாரித்திட ஏதுவாக சத்துணவு மையங்களுக்கு ரூ.5.43 கோடி செலவில் 42,695 மிக்சிகள்.

- புதிய வகை கலவை சாதங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள முன்னோடி வட்டாரங்களில்



ரூ.62.14 இலட்சம் செலவில் கரண்டிகள் மற்றும் கடாய்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 14,130 சத்துணவு மையங்களில் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் ரூ.359.70 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.500/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தப்பட்டு, ரூ.3,061.03 கோடி செலவில் 37.23 இலட்சம் பயனாளிகள் பயன்.

- பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 3 கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு 8,23,552 பயனாளிகள் பயன்.

- ரூ.4.22 கோடி செலவில், சமூகப் பாதுகாப்பு மாத ஓய்வூதியத் திட்டம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு ரூ.1,000/- வீதம் 4,416 பயனாளிகள் பயன்.

- இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் வயது வரம்பு 65 லிருந்து 60 ஆகக் குறைப்பு. 12,82,582 பயனாளிகள் பயன்.

- ரூ. 54 கோடி செலவில், 54,000 நவீனரக தையல் இயந்திரங்களை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கடன் மூலமாக மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வாங்கி வழங்கவும், 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியாக ரூ.5.40 கோடி அரசு மானியமாக வழங்கவும் ஆணை.

- ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெற வயது வரம்பு 45 லிருந்து 18 ஆக குறைப்பு. 2,07,855 பயனாளிகள் பயன்.

- ரூ.48.60 இலட்சம் செலவில், 10 மாவட்ட துணி வெட்டும் மையங்களுக்கு கூடுதல் வசதிகள் வழங்கல்.
- ரூ.88.39 கோடி செலவில் மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் சீருடை தைப்பதற்கான தையற்கூலி இரு மடங்காக உயர்வு. 42,984 மகளிர் பயன்.
- திருநங்கைகளின் 51 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 கோடி மதிப்பில், 25 விழுக்காடு மானியமாக ரூ.55 இலட்சமும், வங்கிக் கடனாக ரூ.1.65 கோடியும் வழங்கப்பட்டது.
- ரூ.2.60 கோடி செலவில் 26 அரசுக் குழந்தைகள் இல்லங்களில் வசதிகள் அதிகரிக்கப்பட்டு 2,450 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
- ரூ.6.50 இலட்சம் செலவில் 2,450 குழந்தைகள் பயன்பெறும் வகையில் உயிர்காக்கும் மருந்துகள், உணவுப் பொருள்களை பாதுகாத்துப் பயன்படுத்திட குளிர்ப்பதனப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.2.10 கோடி செலவில், செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் நான்கு குழந்தைகள் இல்லங்களில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு, 800 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.
- ரூ.43.11 இலட்சம் செலவில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்வேறு வகையான உள்ளுறையும் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள 1,200 குழந்தைகள்/ பெண்களுக்கு நவீனத் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.
- ரூ.35.18 இலட்சம் செலவில் சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் செங்கல்பட்டு, அரசு சிறப்பு இல்லத்தில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தி மேம்படுத்தப்பட்டுள்ளன.
- ரூ.30.80 இலட்சம் செலவில் செங்கல்பட்டு, சிறுவருக்கான அரசினர் சிறப்பு இல்லத்தில் உள்ளுறையும் இளம்சிறார்களுக்காக புதிய துயிலிடம் கட்டப்பட்டு 100 சிறுவர்கள் பயனடைந்து வருகின்றனர்.
- ரூ.17.50 இலட்சம் செலவில் 1,050 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 5 குழந்தைகள் இல்லங்களுக்கு துணி துவைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.1.30 இலட்சம் செலவில் 26 சிறுவர் இல்லங்களிலுள்ள 2,450 குழந்தைகளுக்கு, விளையாட்டுப் பொருட்கள்.
- ரூ.6.27 இலட்சம் செலவில் வடசென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் திறந்த வெளி தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.9 இலட்சம் செலவில் 2,450 நபர்கள் பயன்பெறும் வகையில் 9 வரவேற்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு வரவேற்பு பைகள்.
- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கை களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.1.28 கோடி நிதி ஒப்பளிப்பில் 1,069 திருநங்கைகள் பயன்.
- சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்திற்கு மின்தடையின் போது தடையற்ற மின்சாரம் அளிக்க ரூ.26.46 இலட்சம் மதிப்பீட்டில் டீசல் ஜெனரேட்டர் (100 KVA)
- ஆண்டொன்றுக்கு ரூ.1,436.49 கோடி செலவில் 35.21 இலட்சம் அங்கன்வாடி குழந்தைகள், வளரிளம் பெண்கள், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனுறும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.
- சிறந்த சமூக சேவையாற்றும் பெண்மணி ஒருவருக்கு ஆண்டுதோறும் சர்வதேச மகளிர் தினத்தன்று ‘ஔவையார் விருது’.

❖ ❖ ❖

# முதல் நிலைக்கு முன்னேற்றும் திட்ட வளர்ச்சியும் சிறப்பு முயற்சியும்!



- மூன்றாண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.88,663 கோடியாக நிர்ணயம்.
- பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, ரூ. 2,11,250 கோடி ஒதுக்கீட்டளவில் செயல் படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**மாநிலத் திட்டக்குழு**

- பகுதி II திட்டத்தின் கீழ் அனைத்து துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் மற்றும் ஆளுமையை மேம்படுத்துதல் மேலும் புத்தாக்கம், வளர்ச்சிக்கான மற்றும் பலன் பெறக்கூடிய திட்டங்களுக்காகவும் ரூ.450 கோடி அளவிற்கு புதிய திட்டங்களை மாநிலத் திட்டக்குழு பரிந்துரை செய்தது.
- ரூ.100 கோடியில் மிகவும் பின் தங்கிய 100 வட்டாரங்கள் மற்றும் அதன் உள்ளடக்கிய நகர உள்ளாட்சி அமைப்புகளின் ஏற்றத்தாழ்வுகளை சரி செய்ய ‘மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி’ திட்டம்.
- 15 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பின் தங்கிய வட்டாரங்களில் சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு, வருமானம் ஆகியவற்றை மேம்படுத்த 35 திட்டங்களுக்கு ரூ. 17.85 கோடி அளவில் மாநில அளவிலான அதிகார குழு ஒப்புதல் அளித்தது. அத்திட்டங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மாநிலத் திட்டக்குழு மனித வள மேம்பாட்டிலுள்ள இடைவெளியை கண்டறிய மாநில மற்றும் 31 மாவட்டங்களுக்கான மனித மேம்பாட்டு அறிக்கையை ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிதி உதவியுடன் தயாரிக்க திட்டமிட்டுள்ளது.
- 42 பயிலரங்குகள் / கருத்தரங்குகள் மாநிலத் திட்டகுழுவில் நடத்தப்பட்டு அவற்றின்

பரிந்துரைகள் புத்தகங்களாக தயாரிக்கப்பட்டு பல்வேறு துறைகளின் முக்கிய பொருள்கள் குறித்து ஐந்து ஆராய்வுகள் ரூ.24.1 இலட்சம் அளவில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

- 'தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்' மூலமாக ரூ.1.37 கோடிகளில் 13 ஆராய்வுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

- மத்திய திட்டக்குழு , மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.68.45 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

- மத்திய திட்டக்குழு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.141.87 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் மண்வளப்பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, ஊரகச் சாலைகள், உள்ளாட்சி நிறுவனங்களின் மேம்பாடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா, பட்டுவளர்ச்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம், சிறுபாசனம் ஆகிய துறைகளில் செயல்படுத்தப்படுகிறது.

- நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், தாவரவியல் பூங்காவிற்கு அருகில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 10.12 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கம், பொருட்காட்சிக்கூடம், அருங்காட்சியகம் மற்றும் நிலையான விற்பனை அரங்கங்களுடன் கூடிய பழங்குடியினர் பண்பாட்டு ஆதார மையம்.

- ஆண்டு தோறும் தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை ஆவணம் தயாரித்து வெளியிட்டு வருகிறது.

- தமிழ்நாடு புள்ளிவிவர அமைப்பை வலுப்படுத்த, இந்திய புள்ளியியல் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் மொத்த தொகையான ரூ.40.76 கோடியில், முதற்கட்டமாக மத்திய அரசின் பங்குத் தொகையான ரூ.11.54 கோடியுடன் மாநில அரசின் பங்கு தொகையாக ரூ.72 இலட்சத்தையும் சேர்த்து, ரூ. 12.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.4.39 கோடியில் டி.எம்.எஸ். வளாகத்தில் பொதுப்பணித்துறையினரால் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை தலைமையிடத் திற்கான கூடுதல் கட்டடம்.

- ரூ.1.87 கோடி மதிப்பீட்டில் துறைத் தலைமையிடத்திற்கு ஒரு சீருந்து, மாவட்ட அலுவலகங்களுக்கு 31 ஈப்புகள், மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஒரு சீருந்து மற்றும் ஒரு ஈப்பு வாங்கப்பட்டுள்ளன.

- 13ஆவது நிதிக்குழு பரிந்துரையை ஏற்று மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் வீதம் 31 மாவட்டங்களுக்கு ரூ.31 கோடியை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

## சிறப்பு முயற்சிகள் துறை

### சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

- 45 கி.மீ நீளத்திலான இரண்டு வழித்தடங்களில் 24 கி.மீ சுரங்கப்பாதையாகவும், 21 கி.மீ உயர்த்தப்பட்ட வழித்தடமாகவும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் செயல்பாடு.

- உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் கட்டுமானப் பணிகளில் 80 சதவீதமும், மெட்ரோ நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகளில் 50 சதவீதமும், டிப்போ கட்டுமானத்தில் 80 சதவீதமும் நிறைவு.

- 12 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைக் கொண்டு 12 கி.மீ நீளத்திற்கு சுரங்கப்பாதை அமைப்பு.

- பிரேசிலில் இருந்து வந்து சேர்ந்த முதல் இரயில் பெட்டித் தொடரின் சோதனை ஓட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6.11.2013 அன்று கோயம்பேடு பணிமனையில் கொடியசைத்து துவக்கம்.

- 110 கி.வோ./33 கி.வோ மற்றும் 110 கி.வோ/25 கி.வோ மின்சக்தி பெறும் துணை மின் நிலையம் கோயம்பேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான மின் சக்தி 6.11.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கம்.

- பிரேசிலில் இருந்து இதுவரை 7 இரயில் பெட்டித் தொடர்களும், ஆந்திரமாநிலம் ஸ்ரீசிட்டியிலிருந்து 2 இரயில்பெட்டித் தொடர்களும் கோயம்பேடு பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன.

- 10 கி.மீ. நீளத்திற்கு உயர்த்தப்பட்ட வழித் தடப்பகுதியில் தண்டவாளங்கள் அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.

❖ ❖ ❖

# உலகமெலாம் பரவிடும் தேமதுரத் தமிழோசை !



- தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என இருந்த விளம்புகைச் சட்டம் நீக்கப்பட்டு, சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினம் என அறிவிக்கப்பட்டது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 13.4.2012 அன்று தமிழ்ப் புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்குரிய போட்டியில் வெற்றி பெற்ற நூலாசிரியர் மற்றும் பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகையாக மொத்தம் ரூ.11,15,000/– வழங்கப்பட்டது.
- தமிழறிஞர்களைப் பெருமைப்படுத்திட கபிலர், உ.வே.சா, கம்பர், ஜி.யு.போப், உமறுப்புலவர் மற்றும் சொல்லின் செல்வர் விருதுகள் உருவாக்கம்.
- சிறந்த தமிழ் அமைப்புக்கு ‘தமிழ்த்தாய்’ விருது உருவாக்கம்.
- புதிய தமிழ் கணினி மென்பொருள் உருவாக்கு பவருக்கு ‘முதலமைச்சர் கணினித் தமிழ்’ விருது உருவாக்கம்.
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மற்றும் அவர்தம் மரபுரிமையருக்கு வழங்கப்பட்டுவரும் நிதியுதவி ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/–ஆக உயர்வு
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப் படும் மாத ஓய்வூதியத்தைப் பெற ஆண்டு வருமான வரம்பு ரூ12,000/–என இருந்ததை ரூ.24,000/– ஆக உயர்த்தப்பட்டது.

- அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 73 பேருக்குத் திங்கள்தோறும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ரூ.2,000/– ஓய்வூதியம் வழங்க ஆணை

- எல்லைக் காவலர்கள் 18 பேருக்குத் திங்கள் தோறும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியமாக ரூ.4,000/–மும் மருத்துவப்படியாக ரூ.15/–ம் வழங்க ஆணை

- எல்லைக் காவலர்களின் மரபுரிமையர் 25 பேருக்கு திங்கள்தோறும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியமாக ரூ.2,000/–மும் மருத்துவப்படியாக ரூ.15/–ம் வழங்க ஆணை

- தமிழ் இலக்கியத்தையும் பண்பாட்டையும் பாதுகாத்து வளர்த்திடச் சிறந்த முறையில் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் 2 பேருக்கு திங்கள் தோறும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியமாக ரூ.3,000/–மும் மருத்துவப்படியாக ரூ.15/–ம் வழங்க ஆணை

- தமிழ் இலக்கியத்தையும் பண்பாட்டையும் பாதுகாத்து வளர்த்திடச் சிறந்த முறையில் தொண்டாற்றிய தமிழறிஞர்களின் மரபுரிமையர் 88 பேருக்கு திங்கள்தோறும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியமாக ரூ.1,515/–ம் மருத்துவப்படியாக ரூ.15/–ம் வழங்க ஆணை

- உலகெங்கும் தமிழ்மொழியின் சிறப்பு பரவிடும் வகையில் அரபு மற்றும் சீன மொழிகளில் திருக்குறள் மற்றும் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை வெளியிட நடவடிக்கை.

- 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த மாணவச் செல்வங்கள் 72 பேருக்கு ரூ10,000/– வீதம் குறள் பரிசு

- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த முதல் பரிசுத் தொகை ரூ.1,000/–லிருந்து ரூ.10,000/– ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ.500/–லிருந்து ரூ.7,000/– ஆகவும், மாநில அளவிலான போட்டிகளுக்கு முதல் பரிசுத் தொகை ரூ.5,000/– லிருந்து ரூ.15,000/– ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ.3,000/–லிருந்து ரூ.12,000/– ஆகவும், மூன்றாம் பரிசுத் தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.10,000/– எனப் பன்மடங்கு உயர்வு.

- சிறந்த நூல் பரிசுத் திட்டத்தில் ஏற்கெனவே இருந்த 31 வகைப்பாடுகளுடன் மகளிர் இலக்கியம் மற்றும் தமிழர் வாழ்வியல் எனும் இரு புதிய வகைப்பாடுகள் சேர்த்து மொத்தம் 33 வகைப்பாடுகளில் பரிசு

- நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் நூல் வெளியிட வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டது.

- நூல்வெளியிட நிதியுதவி பெற நூலாசிரியர்களின் ஆண்டு வருமான வரம்பும் ரூ.25,000/–த்திலிருந்து ரூ.50,000/ ஆக உயர்த்தப்பட்டது.

- ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மாவட்டம் தோறும் நடத்திட வழங்கப்பட்டு வந்த செலவினத் தொகை ரூ.5,000த்தை ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

- இளம் எழுத்தாளர்களுக்குக் கவிதை, கட்டுரைப் பயிற்சியும், பேச்சாளர்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளித்திடும் வகையில் முதல் நிலையில் 100 மாணவர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 200 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.20 இலட்சம் செலவில் ‘இளம்தமிழர் இலக்கியப் பட்டறை’ நடத்திட ஆணையிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது.

- தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சித் தமிழ் நூல் அடிப்படையில் ஆட்சிமொழி வரலாறு, ஆட்சிமொழிச் சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு ரூ.9.30 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா அவர்களின் பிறந்த நாளன்று (பிப்ரவரி 19ஆம் நாள்) அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி சிறப்பு செய்யப்பட்டது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா 15.1.2013 அன்று தேனி மாவட்டம் கீழணை முகாமில் (லோயர் கேம்ப்) கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் நினைவு மணிமண்டபம் திறப்பு விழாவுடன் சேர்த்து நடத்தப்பட்டது. இவ்விழாவில் திருவள்ளுவர் விருது கலைமாமணி முனைவர் ந. முருகன் (சேயோன்) அவர்களுக்கும் பாரதியார் விருது பாரதிக் காவலர் கு. இராமமூர்த்தி அவர்களுக்கும், பாவேந்தர்



பாரதிதாசன் விருது முனைவர் சோ.ந. கந்தசாமி அவர்களுக்கும், திரு.வி.க.விருது முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார் அவர்களுக்கும், கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் நா. இராசகோபாலன் (மலையமான்) அவர் களுக்கும் வழங்கப்பட்டன.

- தமிழகத்தில் கிடைக்கப்பெறாத, வெளிநாட்டு நூலகங்களில் உள்ள, அரிய தமிழ் நூல்களுள் முதற்கட்டமாக 10 நூல்கள் மின்எண்மத்தில் பதிவு செய்து நூலாக வெளியிடப்பட்டது.
- வெளிநாட்டு மொழியியல் அறிஞர்களால் எழுதப்பட்ட தமிழ் மொழியின் வரலாறு மற்றும் சிறப்புகள் குறித்த கருத்துகள் அனைத்தும் திரட்டப்பட்டுத் தமிழில் நூலாக வெளியிடப்பட்டது.
- தமிழ் நீதி நூல்களில் மாணவர் பருவத்திற்குத் தேவையான கருத்துகளை இன்றைய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ‘அறநெறிக் கருவூலம்’ எனும் நூல் தொகுத்து வெளியிடப்பட்டது.
- தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றும் சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியில் உள்ள புகழ்வாய்ந்த பொன்மொழிகளை இலக்கியம் வாரியாகத் தொகுத்து ‘பொன்மொழிக் களஞ்சியம்’ எனும் நூல் வெளியிடப்பட்டது.
- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு இரண்டு ஈப்புகள் வாங்க ரூ.10,50,000/– நிதி ஒதுக்கீடு செய்தும், இரண்டு ஓட்டுநர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது.
- நாட்டுடைமை செய்யப்பட்ட நூல்கள் 1,470 நூல்கள் தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக வலைத்தளத்தில் பதிவேற்றம்.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உலக மகளிர் தினத்தன்று (8.3.2013) சென்னை காமராசர் சாலையில் உள்ள ஔவையார் சிலைக்கு மலர்தூவி சிறப்பு செய்யப்பட்டது.
- 2013ஆம் ஆண்டு சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டை சிறப்பு செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிதாகக் கம்பர் விருது, சொல்லின் செல்வர் ஆகிய இரண்டு விருதுகளை அறிவித்தார்கள். இதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.04.2013 அன்று ‘தமிழ்த்தாய் விருது’ தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கும், ‘கபிலர் விருது’ கவிஞர் முத்துலிங்கம் அவர்களுக்கும், ‘உ.வே.சா விருது’ திரு ம.வே. பசுபதி அவர்களுக்கும், ‘கம்பர் விருதை’ முனைவர் பால. இரமணி அவர்களுக்கும் ‘சொல்லின் செல்வர்’ விருது முனைவர் ம.லோகநாயகி அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

- தமிழ் வளர்ச்சித் துறைக்கென ரூ.4.45 இலட்சம் செலவில் தனி வலைத்தளம்.
- திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருது வழங்கும் விழாவில் (15.1.2014) 2014ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது, சீனக் கவிஞர் யூசி *(திருக்குறளை சீனமொழியில் மொழிபெயர்த்தவர்)* அவர்களுக்கு வழங்கப் பட்டது.
- தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா சென்னை தலைமைச் செயலகத்தில் 26.1.2014 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 'மகாகவி பாரதியார் விருது' முனைவர் கு. ஞானசம்பந்தன் அவர்களுக்கும், 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' முனைவர் திருமதி இராதா செல்லப்பன் அவர்களுக்கும், 'திரு.வி.க.'விருது திரு. ஜெ.அசோகமித்திரன் அவர்களுக்கும், 'கி.ஆ.பெ. விசுவநாதம் விருது' முனைவர் வ.ஜெயதேவன் அவர்களுக்கும் வழங்கப்பட்டன.
- 14.4.2014 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் தமிழ்ப்புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது.
- உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21ஆம் நாளன்று ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அளவில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- தமிழ் வளர்ச்சித் துறை, கலை பண்பாட்டுத் துறை, தொல்லியல் துறை ஆகிய அலுவலகங்கள் அடங்கிய தமிழ் வளர்ச்சி வளாகம் அமைந்துள்ள ஆல்சு சாலைக்குத் 'தமிழ்ச் சாலை' எனப் புதிய பெயர்
- எட்டு உதவி இயக்குநர் பணியிடங்களை துணை இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்து ஆணை
- ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம்.
- உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு பெருந்திட்ட கட்டட வளாகம் கட்ட ரூ.25 கோடி.
- உலகத் தமிழ்ச் சங்கத் தனி அலுவலர் அலுவலகத்திற்கு ரூ.1.02 கோடி ஒதுக்கீடு.
- சென்னை,உலகத்தமிழாராய்ச்சிநிறுவனத்திற்கு தொகுப்பு நல்கை, ஓய்வூதிய மானியங்கள், பகுதி–2 திட்டம் மற்றும் பிற திட்டப் பணிகளுக் காக மொத்தம் ரூ. 6.08 கோடி வழங்கப்பட்டது.
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் திருக்குறள் காட்சிக் கூடம்.
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உலகத் தமிழர் பண்பாட்டுத் தகவல் மையம்.
- ரூ.50 இலட்சம் மதிப்பில் தொல்காப்பியத்தின் பெயரால் சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்விருக்கை.
- தனித்தன்மை இழந்த தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மீட்டெடுத்தல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், திட்டப் பணிகள், நல்கை ஆகியவற்றிற்கென ரூ.30.60 கோடி வழங்கப் பட்டது.
- பாரதியார் படைப்புகளைச் சீனமொழியில் (மாண்டரின்) மொழியாக்கம் செய்து வெளியிடும் பணிக்கு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.36 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.
- கணினித் தமிழ் வளர்ச்சிக்கென தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.12 இலட்சம் மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டது.
- குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.5.35 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.
- தமிழாய்வுப் பணிகளுக்கென, ஆசியவியல் நிறுவனத்திற்கு ரூ.49.57 இலட்சம் வழங்கப் பட்டது.
- திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது.
- திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையின் 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு ஆண்டுதோறும் ரூ.15 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும் என ஆணையிடப்பட்டது.
- தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு தோரண வாயில் கட்ட ரூ.25 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

★ ★ ★

# திட்டங்களை சிறப்புடன் எடுத்துச் சொல்லி அரசையும் மக்களையும் இணைக்கும் பாலம்



**பத்திரிகையாளர் நலன்**

- 18.07.2011 அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- 03.08.2011 அன்று ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட தலைமைச் செயலக செய்தியாளர் அறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- பத்திரிகையாளர் ஓய்வூதியம் 14.09.2011 முதல் ரூ.5,000/– லிருந்து ரூ.6,000/– ஆகவும், 07.10.2013 முதல் ரூ.6,000/–த்திலிருந்து ரூ.7,500 ஆகவும் உயர்வு.
- பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் 14.09.2011 முதல் ரூ.2,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும், 07.10.2013 முதல் ரூ.3,000/–த்திலிருந்து ரூ.4,500 ஆகவும் உயர்வு.
- ஓய்வு பெற்ற பத்திரிக்கையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்ச வரம்பு தகுதி ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும், பணியில் இருக்கும் பத்திரிக்கையாளர்களின் ஆண்டு

வருமானத்திற்கான உச்ச வரம்பு தகுதி ரூ.1.20 இலட்சமாகவும் உயர்வு.

- ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் செய்தியாளர் ஊடக மையம் மற்றும் மென்பொருள் வசதியுடன் இணைய மையம்.

**புகைப்படப்பிரிவு மற்றும் மேற்கோள்பிரிவு மேம்பாடு**

- தலைமை செயலகத்தின் பிரதான நுழைவு வாயிலின் இருபக்கங்களிலும் அமைந்துள்ள புகைப்பட மாடம் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6.01.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் புகைப்படச் சுருள்கள் ரூ.15.89 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு முறையில் பாதுகாப்பு.
- அரசு விழா மற்றும் நிகழ்ச்சிகள் மிகத் துல்லியமாக படப்பதிவு செய்திட தலைமையிட புகைப்படப் பிரிவிற்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் அதி நவீன புகைப்படக் கருவி.
- பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை பாதுகாக்கும் வகையில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் தலைமை யிடத்தில் உள்ள மேற்கோள்பிரிவு நவீன மயமாக்கம்.

**நினைவகங்கள்**

- தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.07.2011 அன்று திறந்து வைத்தார்கள்.
- தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் அமைந்துள்ள மகாமகம் கலையரங்கம் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடம் ஆகியவற்றைப் ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09.12.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.48.70 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணி மணிமண்டபத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். 27.2.2014 அன்று திறந்துவைத்தார்கள்.
- விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடமான சேலம் மாவட்டம், சங்ககிரியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தியாகி வாஞ்சிநாதன் நினைவு மண்டபம் ஆகியவை 23.12.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தமிழிசை மூவர் மணிமண்டபம், விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூரில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மார்பளவு சிலையுடன் கூடிய மணிமண்டபம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கோபால் நாயக்கர் முழுஉருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ஆகியற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.02.2013 அன்று திறந்து வைத்தார்கள்.
- ரூ.11.91 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிடங்களில் சிசிடிவி கேமரா.
- பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மேம்படுத்தி இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைத்திட ஆணை.
- ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடங்களில் குடிநீர் வசதி.
- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடங்களில் காவல் துறை மூலம் பாதுகாப்புப் பணி.



மார்ஷல் நேசமணி மணிமண்டபம் – நாகர்கோவில்



மார்ஷல் நேசமணி மணிமண்டபம் – நாகர்கோவில்



- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடங்களில் ரூ.77 இலட்சம் செலவில் முகமை மூலம் (outsourcing) பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் தூய்மை செய்தல் பணிகளை மேற்கொள்ள ஆணை.

- கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பில் முழுஉருவச்சிலையும், திருச்சிராப்பள்ளியில் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு ரூ.8.79 இலட்சம் மதிப்பீட்டில் முழுஉருவச்சிலையும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த சிறந்த கவிஞரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் முழுஉருவச்சிலையும் அமைக்க ஆணை.

- சென்னை, இராயபுரத்தில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்கள் அமைக்க 12.07.2013 அன்று ஆணை.

- சென்னை, கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகம் ரூ.11.62 கோடி மதிப்பீட்டில் புதுப்பொலிவுடன் புனரமைப்பு.

- தமிழ்நாடு என பெயர் சூட்டுவதற்காக இன்னுயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்க ஆணை.

- சென்னை, தியாகராயநகரில் உள்ள காமராஜர் நினைவு இல்லம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள காமராஜர் மணிமண்டபம் ஆகியவற்றை ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க ஆணை.

- சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கம் இடிக்கப்பட்ட இடத்தில் ரூ.63 கோடி மதிப்பீட்டில் புதிய கலையரங்கம் மற்றும் மாநிலச் செய்தி நிலையம் ஆகியவை கட்ட ஆணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.12.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

- நினைவகங்களை மாற்றுத் திறனாளிகள் எளிதாகச் சென்று பார்வையிட ஏதுவாக ரூ.39.56 இலட்சம் மதிப்பீட்டில் சாய்வு நடைபாதைகள்.
- சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் சிலை மற்றும் அதன் சுற்றுப்புறம் ரூ.11.95 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு.
- சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுச் சின்னம் அமைக்க ஆணை.
- 30.12.2013 அன்று தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வீரபாண்டிய கட்ட பொம்மன் அவர்களுக்கு மணிமண்டபமும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோர் நினைவாக, ஒரே வளாகத்தில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்களும், சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில் வீரத்தாய் குயிலிக்கு ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுச் சின்னமும் அமைக்க ஆணை.
- மனுநீதிச் சோழன் அவர்களுக்குத் திருவாரூரில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நினைவு மண்டபம் கட்டப்படவுள்ளது.
- சுவாமி சகஜானந்தா தொண்டு செய்து வாழ்ந்த இடமான கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் அரசின் சார்பில் அவரது நினைவாக மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளது.
- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கேரளா மாநிலம், வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவகத்தைப் புதுப்பித்துப் புனரமைத்திட ஆணை.
- சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி மண்டபம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க ஆணை.

**விழாக்கள்**

- மறைந்த அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா 8.4.2012 அன்றும், தென்னிந்தியத் திரை உலகத்தின் முதல் பெண் இயக்குநர் மற்றும் முதல் பெண் படத்தயாரிப்பாளர் டி.பி.ராஜலட்சுமி அவர்களுக்கு நூற்றாண்டு விழா 19.09.2013 அன்றும் கொண்டாடப்பட்டன.
- இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆணையிடப்பட்டு 07.07.2011 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.
- கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்த நாளை நினைவு கூர்ந்து மகிழும் வகையிலும், அதற்காக அரும்பாடுபட்ட குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையிலும் நவம்பர் 1–ஆம் தேதி அன்று நாகர்கோவிலில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி அவர்களது திருவுருவச் சிலைக்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திட ஆணை.
- வீரமங்கை வேலுநாச்சியார் நினைவைப் போற்றி அவரது பிறந்த நாளான ஜனவரி 3ஆம் தேதி ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாட ஆணை.

**பொருட்காட்சி**

- வேலூர், தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆண்டுக்கொருமுறை அரசுப் பொருட்காட்சிகள்.
- ரூ.3.20 இலட்சம் தொடர் செலவினத்தில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள்.
- அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்கள் முழுமையாக தெரிந்து கொள்ளும் வகையில் தற்போது அரசுப்பொருட்காட்சிகளில் பங்கு பெறும் 15 அரசுத்துறைகளுடன் கூடுதலாக 11 அரசுத் துறைகள் அரசுப் பொருட்காட்சிகளில் பங்கேற்பு.
- அரசுப் பொருட்காட்சி அரங்கங்கள் அமைக்க, புதியதாக இரும்பு வளைவுத்தகரங்கள் மற்றும் ஒளி அமைப்பு செய்திட 85 மின்கம்பங்கள் ரூ.93.15 இலட்சம் மதிப்பீட்டில் கொள் முதல் செய்ய ஆணை.






- 21 அரசு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு அரசுக்கு ரூ.8 கோடியே 13 இலட்சத்து 3 ஆயிரம் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் பெரியவர்கள் 34,75,867 நபர்களும், சிறியவர்கள் 11,73,461 நபர்களும் மொத்தம் 46,49,328 நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.
- 31 மாவட்டங்களில் (சென்னை நீங்கலாக) 186 ஊராட்சி ஒன்றியங்களில் சிறு புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டு இதன் மூலம் 8 இலட்சத்து 44 ஆயிரம் பேர் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.
- அரசு சாதனைகளை விளக்கும் வகையில் 32 மாவட்டங்களில் 64 புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, இதன் மூலம் 6 இலட்சத்து 70 ஆயிரத்து 850 பேர் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.

**தமிழரசு**

- தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறை வாரியாகத் தொகுத்து “மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசு” என்ற சிறப்பு வெளியீடு வெளியிடப்பட்டது.
- **ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடுகள் –** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – தமிழ் (தொகுப்பு 1 & 2), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – ஆங்கிலம் (தொகுப்பு1), வெற்றிக்கதைகள், அமுத மொழிகள், புகைப்படத் தொகுப்பு நூல் (Coffee Table book), பத்திரிக்கைகளின் பார்வையில் மிளிரும் சாதனைகள் ஆகிய தமிழரசு சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டன.
- தமிழரசு அச்சகத்தில் சிப்பம் கட்டும் (Binding) பணிகளை மேற்கொள்ள நிலைச்சிப்பம் (Perfect Binding) இயந்திரம், நெளிச்சிப்பம் (Comb, Spiral Binding) இயந்திரங்கள் ஆகியவை ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டன.
- காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ் 2012 ஜூலைத் திங்கள் முதல் மாதாந்திர இதழாக வெளியிடப்பட்டு வருகிறது.
- ரூ.5.83 கோடி மதிப்பீட்டில் தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்திற்குப் புதியதாக

கட்டடம் கட்ட 13.07.2012 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

- தமிழரசு அச்சகத்திற்குக் கணினியிலிருந்து நேரடியாக அச்சுத்தகடு செய்யும் வசதி கொண்ட CTP (Computer to Plate) நவீனத் தொழில்நுட்ப இயந்திரம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனைகள் தொகுக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தமிழரசு ஓராண்டு சாதனை சிறப்பு மலர்கள் மற்றும் தமிழக அரசின் ஈராண்டுச் சாதனைகள் தொகுக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தமிழரசு ஈராண்டுச் சாதனை சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன.
- **ஈராண்டுச் சாதனை சிறப்பு மலர் வெளியீடுகள்:–** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – தமிழ் தொகுப்பு (3&4), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்– ஆங்கிலம் (தொகுப்பு–2), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டு, விதியை மாற்றிய விதி தொகுப்பு (1&2), புரட்சித்தலைவி அம்மா உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள், புகைப்படத் தொகுப்புகள் அடங்கிய (Coffee Table) புத்தகம் மற்றும் ‘பத்திரிகைகளின் பார்வையில் மிளிரும் சாதனைகள்’ ஆகியவை வெளியிடப்பட்டன
- ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நவீன நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரம் கொள்முதல் செய்ய 16.07.2013 அன்று ஆணை.

**புதிய பணியிடங்கள் உருவாக்கம், புதிய வாகனங்கள், உபகரணங்கள் கொள்முதல்**

- செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணிகளை விரைவுபடுத்தி சிறப்புடன் செயலாற்ற பழைய வாகனங்களுக்கு மாற்றாக ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் 34 புதிய வாகனங்கள். ரூ.12.07 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர், அரியலூர் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்குப் புதிய ஈப்புகள்.
- ரூ.81.58 இலட்சம் மதிப்பீட்டில் தலைமையகம் மற்றும் அனைத்து மாவட்டங்களுக்கும் நவீனத் தொழில் நுட்ப டிஜிட்டல் கேமராக்கள்.
- மாவட்டங்களில் அமைந்துள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டன.
- தலைமையகத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவு மற்றும் மேற்கோள் பிரிவிற்குப் புதிதாக இரண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பணியிடங்கள் மற்றும் ரூ.1.20 இலட்சம் செலவில் புதியதாக இரண்டு மோட்டார் சைக்கிள் வாகனங்கள்.
- புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் செயல்படும் செய்தி நிலையத்திற்கு, செய்தி மற்றும் விளம்பரப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாக ஒரு இளநிலை புகைப்படக்காரர் மற்றும் ஓர் வீடியோ ஒளிப்பதிவாளர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிப்பு.
- தலைமைச் செயலகத்தில் செய்தி சேகரிக்க வருகைதரும் பத்திரிகையாளர்களுக்கு உதவிடும் வகையில், பத்திரிகையாளர் அறையை சிறந்த முறையில் பராமரிக்கப் புதிதாக இரண்டு அலுவலக உதவியாளர் பணியிடங்கள் காலமுறை ஊதியத்தில் தோற்றுவிப்பு.
- தலைமையகத்திலுள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, மேற்கோள் பிரிவு மற்றும் புகைப்படப் பிரிவு ஆகியவற்றுக்கு ரூ. 14.70 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று நவீன தொழில்நுட்ப வண்ண நகல் கருவிகள்.
- அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில், ரூ. 68 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு விளம்பரத் திரைகள் (Digital Display Screens) அமைப்பு.
- மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்குப் பல்துறை பணிவிளக்க முகாம் மற்றும் புகைப்படக் கண்காட்சியில் வைத்திட ரூ 22.24 இலட்சம் செலவில் விளம்பரப்பலகைகள் மற்றும் உபகரணங்கள் ஆணை.
- அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கும் குறும்படங்களைப் பொது மக்கள் பார்க்கும் வகையில் திரையிட, மின்னாக்கி வசதியுடன் கூடிய மின்னணு விளம்பரத்திரை வாகனம் மாத வாடகை தலா ரூ.5.80 இலட்சம் தொடர் செலவினத்தில் திருச்சி மற்றும்









சென்னையில் முதற்கட்டமாக சோதனை முறையில் களவிளம்பரப்பணிக்கு பயன்படுத்தப்படும்.

- ரூ.20.80 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் மின்னணு விளம்பரத்திரை வாகனங்கள் வாங்க ஆணை.

- அரசு விழா மற்றும் நிகழ்ச்சிகளின் செய்தி, புகைப்படங்கள் மற்றும் வீடியோ படப்பதிவுகள் ஆகியவற்றை விழா நடைபெறும் இடத்திலிருந்தே மின்னஞ்சல் மூலம் விரைந்து அனுப்பிட, தலைமையிடம் மற்றும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ரூ.3.58 இலட்சம் மதிப்பீட்டில் 3 ஜி டேட்டா கார்டு வழங்கப்பட்டன.

- அரசு விழா மற்றும் நிகழ்ச்சிகளுக்கு பத்திரிக்கையாளர்களை அழைத்துச் செல்லும் போது அவர்களுக்கு சிற்றுண்டி, வழங்கிட ஏற்படும் செலவினம், நிகழ்வு ஒன்றிற்கு ரூ.300/– லிருந்து ரூ.500/– ஆக உயர்வு.

- மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நாளிதழ்கள் வாங்கிட ஆகும் செலவினம், மாதம் ஒன்றிற்கு ரூ.750/– லிருந்து ரூ.1,500/– ஆக உயர்வு.

- தலைமையிடம் மற்றும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.29.90 இலட்சம் மதிப்பீட்டில் அதி நவீனக் கருவிகள் மற்றும் ஏனைய சாதனங்கள்.

- கும்பகோணத்தில் உள்ள மகாமக கலையரங்கம் மற்றும் புதிதாகக் கட்டப்பட்டு வரும் எட்டு மணிமண்டபங்களுக்கும் சேர்த்து 27 பணியாளர் களை நியமித்திட ஆணை.

- இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை நடத்திய தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக

சபைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.10 கோடி நல்கைத் தொகை.

- சென்னையில் 2011ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 9ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.25இலட்சமும், 2012ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 10ஆவது சர்வதேச திரைப்படவிழாவிற்கு ரூ.50இலட்சமும், 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 11ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சமும் தமிழ்நாடு அரசு சார்பில் மானியமாக வழங்கப்பட்டது.

**எம் ஜி ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்**

- ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் நவீன டிஜிட்டல் திரைவீழ்த்திக் கருவி.
- நிறுவன வளாகத்தில், ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய நவீன படப்பிடிப்புத்தளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.01.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாணவர் படப்பிடிப்புத் தொகை ரூ.8,000/–த்திலிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.
- ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் அமைக்க ஆணை.
- ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் முன்காட்சித் திரையரங்கம் நவீனமயமாக்கம்.
- முன்காண் திரையரங்கத்திற்கு நவீன உயர்தர டிஜிட்டல் டால்பி, பார்கோ புரொஜக்டர் மற்றும் நவீன ஒலி அமைப்புடன் கூடிய உபகரணங்கள் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல்.
- ரூ.9.50 கோடி மதிப்பீட்டில், 2013–2014ஆம் கல்வியாண்டில் அனிமேஷன் மற்றும் காட்சிப் பயன் எனும் புதிய பட்டயப்படிப்புகள் தொடங்கப்பட்டு மாணவர்கள் பயின்று வருகின்றனர்.
- மாணவர்களின் கூடுதல் தேவையைக் கருத்தில் கொண்டு ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாணவர் விடுதிக் கட்டடம் கட்ட ஆணை.
- கோவாவில் நடைபெற்ற அகில இந்தியத் திரைப்பட விழாவில் திரைப்படப் பயிற்சி மாணவர்கள் தயாரித்த திரைப்படம் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு பரிசுப் பெற்றது.

**தமிழ்நாடு திரைப்படப்பிரிவு**

- அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் மற்றும் துறைகளின் சாதனைகள் குறித்து அந்தந்த அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் விளம்பரப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் விளம்பரம் மற்றும் IEC நிதியிலிருந்து தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் சாதனை விளக்கக் குறும்படங்கள் தயாரிக்க ஆணை.
- ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் செய்திப்படங்களுக்கு டிஜிட்டல் முறையில் பாதுகாப்பு.
- முக்கிய விழா நிகழ்ச்சிகளை உடனுக்குடன் ஒளிபரப்ப ஏதுவாக ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்கு ஒரு நேரடி ஒளிபரப்புக் கருவி (Live back bag).
- தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் தயாரிக்கப் படும் வீடியோ செய்தி மலர்கள், குறும்படங்கள் மற்றும் விழிப்புணர்வுப் படங்கள் ஆகியவற்றை நவீனதொழில் நுட்பத்துடன் தொகுக்க ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் நவீன படத்தொகுப்புக் கருவி.
- மக்கள் நலத் திட்டங்கள் தொடர்பான 104 செய்தி மலர்கள் மற்றும் குறும்பாடல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.




## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

- இடர்படி, ஈட்டுப்படி மற்றும் சிற்றுண்டிப் படி ஆகியன மாதமொன்றுக்கு தலா ரூ.200/– ஆகவும் மற்றும் இரவுப் படி நாளொன்றுக்கு ரூ.25/– ஆகவும் உயர்வு.
- மனமகிழ் மன்றத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.3 இலட்சம் ஆக உயர்வு.
- அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டுநர்களாகப் பணிபுரியும் கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளில் 100 சதவிகித முழு செய்மானம் அளிப்பவர்களுக்கு மாதம் ரூ.500/– ஊக்கத் தொகை.
- கடந்த 14 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த மாதாந்திரச் சிறப்பு ஊதியம் புத்தகம் கட்டுநர்களுக்கு ரூ.60/– லிருந்து ரூ.120/– ஆகவும், இளநிலை முதலாள்களுக்கு ரூ.70/– லிருந்து ரூ.140/– ஆகவும் மற்றும் முதுநிலை முதலாள்களுக்கு ரூ.100– லிருந்து ரூ.200/ – ஆகவும் உயர்வு.
- தமிழகத்தில் உள்ள திருநங்கைகளுக்கு பெயர் மாற்றத்திற்கான அறிவிப்புகள் கட்டணம் ஏதுமின்றி வெளியிடப்பட்டு வருகின்றன.
- தென்மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை அரசுக் கிளை அச்சகங்களில் அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையங்கள் தொடக்கம்.
- அரசு மைய அச்சகத்தினை நவீனப்படுத்துவதின் ஒரு பகுதியாக அதி நவீன இயந்திரங்கள் வாங்க ரூ.10.42 கோடி ஒதுக்கீடு. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.97.90 இலட்சம் ஒதுக்கீடு.
- சென்னை அரசு மைய அச்சகத்தில் 4,000 சதுர அடியில் புதிய காகிதக் கிடங்கு கட்டுவதற்காக ரூ.67.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- சென்னை அரசு மைய அச்சகத்தில் ஏற்பட்ட தீ விபத்தினையடுத்துச் சீரமைப்பு நடவடிக்கையாக இயந்திரக் கொள்முதல் மற்றும் கட்டடப் பணிகளுக்காக ரூ.22.64 கோடி நிதி ஒதுக்கீடு.

★ ★ ★

# அழகு மிளிரும் அற்புத தலங்களுக்கு சிறப்பு சுற்றுலா கட்டமைப்புகள்



- தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த அனைத்து சுற்றுலா வசதிகளையும் ஒரே இடத்தில் வழங்கும் சுற்றுலா சிறப்பு பூங்காக்கள் – 7 மாவட்டங்களில் ஊரக சுற்றுலா தொகுப்புகள் – தமிழ்நாட்டில் 4 சுற்றுலா சுற்றுகளை மேம்படுத்துதல் – திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம் – சாலையோர வசதிகள் – சுகாதாரக் கழிவறை விழிப்புணர்வு – கடல் வழி சுற்றுலா – வான்வழி சுற்றுலா ஆகிய புதிய திட்டங்கள் செயலாக்கம்.

- ரூ.500 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன் உதவியுடன் கிழக்கு கடற்கரைச் சாலை சுற்றுலா சுற்று மற்றும் தென்னகச் சுற்றுலா சுற்று ஆகிய திட்டங்களின்கீழான சுற்றுலாத் தலங்களை அழகுபடுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காகச் சிறப்பு சுற்றுலா திட்டம்.

- ரூ.21.20 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம், மன்னார்குடி, கொல்லிமலை, ஸ்ரீவாஞ்சியம், ஏலாக்குறிச்சி, திருச்சுழி, திருக்கோஷ்டியூர், சிவகங்கை, மணமேல்குடி, ஆப்குடி, தூத்துக்குடி, இருக்கன்குடி, செட்டிநாடு, இராமேஸ்வரம், திருக்கடையூர் ஆகிய சுற்றுலா தலங்கள் மற்றும் இராமநாதபுரம் திருவள்ளூர், தேனி, நாமக்கல், வேலூர், திருப்பூர், திருச்சி, அரியலூர்,

கோவை, திண்டுக்கல், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, திருவாரூர், திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு.

- ரூ.9.93 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம், விருதுநகர், சிவகங்கை ஆகிய 10 மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள்.
- ரூ.23.82 கோடி மதிப்பீட்டில் ஜவ்வாது மலை, தஞ்சாவூர், ஏற்காடு, குற்றாலம், சென்னை (இசைக்கல்லூரி), முட்டுக்காடு, சமண புனிதத் தலங்கள் ஆகிய ஏழு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள்.
- ரூ.21.38 கோடி முதல் தவணை நிதியில் கல்லணை, வைகைஅணை, திருவானைக்காவல், ஜேடர்பாளையம் ஆகிய பகுதிகளில் சுற்றுலா மேம்பாடு.
- தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலா, நலவாழ்வு சுற்றுலா ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக மைய குழுக்கள்.
- நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் புதுப்பிக்கப்பட்டுள்ள டென்மார்க் ஆளுநர் மாளிகை பராமரிப்பு மற்றும் நிதி ஆதாரங்களை நிருவகிக்க அறங்காவலர் குழு உருவாக்கம்.
- சுற்றுலாத் துறைக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காகவும், ஊடக ஆலோசனைக்காகவும் ஆலோசகரைத் தேர்வு செய்ய நடவடிக்கை.
- “தொலைநோக்கு 2023” என்ற ஆவணத்தில் வெளியிடப்பட்டதற்கிணங்க சுற்றுலாவை மேம்படுத்த புதிய சுற்றுலா வரைவு கொள்கை வெளியிட நடவடிக்கை.
- தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு வரைவு கொள்கை தயாரித்தல், “10 ஆண்டு செயல் திட்டம்” கிழக்கு கடற்கரைச் சாலை பணிகளுக்கான ஆலோசனை அமைப்பாக தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம் நியமனம்.
- ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கத்தில் கலையரங்கம்.
- ரூ.36.31 கோடி மதிப்பீட்டில் மதுரை, இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை மேம்படுத்தவும் ரூ.14.75 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூரை மேம்படுத்தவும் சுற்றுலா பெருந்திட்டப் பணிகள்.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறை மூலம் சிவகங்கை, விழுப்புரம், நாகப்பட்டினம், விருதுநகர், திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுலா சாலை மேம்பாடு.
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அலங்காரக் குப்பைத் தொட்டிகள் அமைத்தல் மற்றும் குப்பையில்லா பகுதி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.
- ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் முக்கொம்பு பகுதி சுற்றுலா மேம்பாடு.
- குறைவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் 32 சுற்றுலாத் தலங்களைத் தேர்ந்தெடுத்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க அவ்விடங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கம்.
- சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காட்டில் கோடை விழா, மாமல்லபுரத்தில் இந்தியச் சுற்றுலா விழா, உதகமண்டலத்தில் தேயிலை சுற்றுலா விழா, தரங்கம்பாடியில் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய விழா, மதுரையில் மதுரை விழா, தஞ்சாவூரில் சதய விழா.
- சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் சுற்றுலா சுற்றுச்சூழல் பூங்கா.
- இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக தியானமண்டபம்.
- இலண்டனில் நடைபெற்ற சர்வதேச பயணச் சந்தை (Word Travel Mart) மற்றும் ஜெர்மனியில் பெர்லின் மாநகரத்தில் சுற்றுலா சந்தைகளில் (International Tourism Bourse) சுற்றுலாத் துறை கலந்துகொண்டு தமிழ்நாடு பற்றிய தகவல்கள் அடங்கிய “குறும்

பதிவி" (Pen Drive) சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்பட்டன.

- ஜெர்மனியில் பெர்லின் நகர், பிரான்சில் பாரிஸ் நகர், சீனாவில் உள்ள செங்டு நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்பு.
- இராஜஸ்தானில் நடைபெற்ற "புஷ்கர் மேளா"வில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கிற்கு இரண்டாவது பரிசு.
- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 32.17 விழுக்காட்டிலிருந்து 34.01 விழுக்காடாக உயர்வு. எதிர்வரும் ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் வண்ணம் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- ரூ.6.19 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை ஏரிப்பகுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சைமலை (சுற்றுச்சூழல் சுற்றுலா), திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை கழிமுகத்துவாரம் (சுற்றுச்சூழல் சுற்றுலா) ஆகிய பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்.
- ரூ.50 இலட்சம் செலவில் இந்தியா முழுவதிலும் உள்ள தேர்ச்சி பெற்ற மற்றும் பிரபலமான நடனக் கலைஞர்களைக் கொண்டு சிறப்பான முறையில் மாமல்லபுரத்தில் நூற்றுக்கும் மேலான பல வகையான கலைநிகழ்ச்சிகள் கொண்ட இந்திய நாட்டிய விழா ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்படுகிறது.
- ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் நன்மங்கலம் காப்புக்காடுகள் பகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுப்பணி.
- ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டம் பொன்னணியாறு அணைப்பகுதி, சேலம் மாவட்டம் மேட்டூர் அணைப்பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்.
- ரூ.10 இலட்சம் செலவில் ஸ்ரீரங்கம், குற்றாலம், திருச்செந்தூர், பழனி, தாராசுரம், திருவண்ணாமலை, இராமேசுவரம், மேல்மலையனூர், பெரியபாளையம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 10 சுற்றுலாத் தலங்களில் தூய்மை விழிப்புணர்வு முகாம்கள்.
- ரூ.7 இலட்சம் செலவில் சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் திருக்கோவில் வழிகாட்டிகளுக்குத் திறன் வளர்ச்சி பயிற்சி.
- ரூ.88.80 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளாக கட்டடத்தில் ஐந்தாவது தளம் கட்டுமானம்.
- ரூ.5 இலட்சம் செலவில் சுற்றுலா தகவல் மையங்களில் "தொடுதிரை தகவல் கணினிகள்"
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உதகமண்டலத்தில் "தேயிலை சுற்றுலா திருவிழா 2013" கொண்டாடப்பட்டது.
- சுற்றுலா அலுவலகங்களுக்கு 14 ஈப்பு வாகனங்கள்.
- மாமல்லபுரத்தில் தமிழ்நாடு கடலாண்மை புராதன அருங்காட்சியகம் அமைக்க ஏற்பாடு.
- ரூ.28 இலட்சம் செலவில் சுற்றுலா இயக்குநரகம் புனரமைப்பு.
- 11 சுற்றுலா அலுவலர்கள், ஒரு உதவி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர், 14 உதவி சுற்றுலா அலுவலர் நிலை –2 மூன்று கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர், துப்புரவாளர், இரண்டு உதவி சுற்றுலா அலுவலர் நிலை –1, ஆகிய பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டது.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாட்டிற்குச் செல்வோம் 2014" என்ற உத்தியின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப் பணிகள்.
- ரூ.6.84 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் கோவில், சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருள்மிகு சிலம்பணி சிதம்பர விநாயகர் திருக்கோவில், திருநெல்வேலி மாவட்டம் உவரி சுயம்புலிங்க சுவாமி கோவில், புதுக்கோட்டை மாவட்டம் திருமணஞ்சேரி சுகந்தபரிமளேஸ்வரர் கோவில், திருபுனவாசல் சிவன்கோவில், விராலி மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் ஈரோடு மாவட்டம் காங்கேயம் பாளையம் அருள்மிகு நட்டாற்றீஸ்வரர் கோவில் மற்றும் விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரில்

உள்ள வீரட்டேஸ்வரர் கோவில், திரிவிக்கிரமர் கோவில் ஆகிய ஆன்மிகப் பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்.

- ரூ.5 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துவாக்குடியில் அமைந்துள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தை அனைத்துவிதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக உயர்த்துதல்.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்**

- ஆடி மாதம் 108 அம்மன் திருக்கோவில்களைத் தரிசிக்கும் வகையில் ஆன்மீகச் சுற்றுலாத் திட்டம்.
- மதுரை நாகனா குளத்தில் படகு சவாரி தொடக்கம்.
- முதலியார் குப்பம் படகுக் குழாமில் 32 பேர் அமரக்கூடிய சொகுசுப் படகு சவாரி புதிதாகத் தொடக்கம்.
- பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாகச் சுற்றுலா பயணத்திட்டங்கள் புதிதாகத் தொடக்கம்.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக விடுதிகளில் தங்குவதற்கும், பயணங்கள் மேற்கொள்வதற்கும் ஆன்லைன் மற்றும் "கைப்பேசி" மூலம் முன்பதிவு செய்யும் முறை செயலாக்கம்.

**கலை பண்பாட்டுத் துறை**

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டலக் கலை பண்பாட்டு வளாகம் ரூ.96 இலட்சம் செலவில் கட்டப் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- காஞ்சிபுரத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டலக் ‘‘கலை பண்பாட்டு வளாகம்’’ ரூ.92.92 இலட்சம் செலவில் கட்டப் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மதுரை மாவட்டத்தில், மண்டலக் ‘‘கலை பண்பாட்டு வளாகம்’’ ரூ.87.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது .
- திருநெல்வேலியில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டலக் ‘‘கலை பண்பாட்டு வளாகம்’’ ரூ. 1 கோடி செலவினத்தில் கட்டப்பட்டு வருகிறது.
- திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு ரூ.61.60 இலட்சம் செலவில் குடில்கள், வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது.
- சேலம் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டல ‘‘கலைப் பண்பாட்டு வளாகம்’’ ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.
- கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு மலுமிச்சம்பட்டி கிராமத்தில் ரூ.90.91 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பில் கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித்தொகையினை ரூ.250/– லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி 2012–2013 ஆம் ஆண்டு முதல் வழங்க ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.
- மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு முதன்முறையாக கல்வி உதவித்தொகை மாதம் ரூ.200/– வீதம் 2011–2012இல் வழங்கப்பட்டது. மேலும், இந்த கல்வி உதவித்தொகை 2012–2013–ஆம் கல்வி ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டு மாதம் ரூ.400/– ஆக வழங்கப்பட்டு வருகிறது.
- நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/– என்ற நிலையிலிருந்து, ஆயிரக்கணக்கானோர் பயன்பெறும் வகையில் ரூ.60,000/– ஆக உயர்த்தப்பட்டது.
- சென்னை, அருங்காட்சியகத்தில், நமது பாரம்பரியமிக்கக் கலைகளை மாணவர்களுக்கு வெளிப்படுத்த ‘பண்பாட்டுப் பலகணி’ என்ற சிறப்புக் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் மே 2011 திங்கள் முதல் 4,065 கலைஞர்கள் புதியதாக உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின்

மூலம் 1,498 உறுப்பினர்களுக்கு ரூ.33.20 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- சென்னை, எழும்பூர் ஆல்சு சாலையில் உள்ள தமிழ் வளர்ச்சி வளாகத்தின் இரண்டாம் தளத்தில் செயல்பட்டு வரும் கலை பண்பாட்டு இயக்ககத்திற்குக் கூடுதல் கட்டடம் ரூ. 66.50 இலட்சம் செலவில் கட்டட நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- சென்னை தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் பகுதி நேர கலையாசிரியர்களுக்கு ரூ.1,500/– லிருந்து, ரூ.2,000/– ஆகவும், மாவட்டங்களில் ரூ.300/– லிருந்து ரூ.1,500/– ஆகவும், ஊரக மையங்களுக்கு ரூ.150/– லிருந்து ரூ.1,000/– ஆகவும் தொகுப்பூதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்திட கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய அரசு இசைக் கல்லூரிகளில் பட்டப்படிப்புகள் தொடங்க ஆணை.

- தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் இசைக் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ரூ.12 இலட்சம் செலவில் கௌரவ பேராசிரியர்களை நியமனம் செய்ய ஆணை.

- சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள், வார விடுமுறை நாட்களில் விருப்பமுடைய இல்லத்தரசிகளுக்கும், கூடுதல் பட்டம் பெற விரும்பும் கல்லூரி மாணவர்களுக்கும், இசை, நடனம், கவின்கலை ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்கிட ஆணை.

- கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 7 அரசுக் கல்லூரிகளில் சுகாதார வசதிகள், உணவுக் கூடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள் ரூ.1 கோடி செலவில் கட்டித் தர ஆணை.

- இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நவீன அனிமேஷன் தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் கணினிக்கூடங்களும், மூன்று அரசு இசைக் கல்லூரிகளில் கணினிக் கூடங்களும் ரூ.50 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணை.

- தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்கு ஒரு கல்லூரிக்கு ரூ.12 இலட்சம் வீதம், 7 கல்லூரிகளுக்கு ''டெம்போ டிராவலர்'' வாகனங்கள் ரூ.84 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் வழங்கப்படும் விருதுத்தொகை அகவைக்கேற்றவாறு உயர்த்தி வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

- ரூ.1.08 கோடி செலவில் சென்னை, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப் பட்டுள்ளன.

- திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.5.04 இலட்சம் செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

- சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை, கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.10.41 இலட்சம் செலவில் 2013–2014 கல்வியாண்டிலிருந்து கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் புதிதாக உருவாக்கம்.

- அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் ரூ.75 இலட்சம் செலவில் கலைக்கூடம் கட்ட ஆணை.

- சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள ஆவணக்காப்பக கூடத்தினை ரூ.25 இலட்சம் செலவில் நவீனப்படுத்த ஆணை.

- 2013–2014ஆம் நிதியாண்டில் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி ரூ.1,000 லிருந்து ரூ.1,500ஆக உயர்வு. கூடுதலாக 1,500 நலிந்த கலைஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் மாதந்தோறும் ரூ.1,500/– நிதி உதவி வழங்க ஆணை.

**சென்னை அருங்காட்சியகங்கள் துறை**

- சென்னை மற்றும் 20 மாவட்ட அருங் காட்சியகங்களில் காலியிடங்களில் 27 பேர் பணி நியமனம்.
- ரூ.95 இலட்சம் செலவில் 88.5 மீட்டர் நீளத்திற்கு அருங்காட்சியகப் பாரம்பரியச் சுற்றுச் சுவர் அமைப்பு.
- ரூ.36 இலட்சம் செலவில் கருங்கல் தளம் அமைத்து சிறுவர் அருங்காட்சியகம் புதுப்பிப்பு.
- ரூ.2.83 இலட்சம் செலவில் மரச்சிற்ப வேலைப் பாட்டுக் காட்சிக்கூடம் திருத்தியமைப்பு.
- ரூ.35 இலட்சம் செலவில் பாறை மற்றும் குகைக் காட்சிக்கூடம் புத்தாக்கம்.
- ரூ.9.4 இலட்சம் செலவில் ஒரு நடைபழகு சிற்பப் பூங்கா அமைப்பு.
- ரூ.43 இலட்சம் செலவில் எஞ்சிய அமராவதிச் சிற்பங்களைப் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தும் பணி.
- ரூ. 57.5 இலட்சம் செலவில் நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடம் புத்தாக்கம்.
- ரூ.19 இலட்சம் செலவில் உள் சாலைகள் அமைப்பு.
- ரூ.1 கோடி செலவில் காட்சிக்கூடங்களுக்கென 5 மின் உற்பத்தி ஆக்கிகள் அமைப்பு.
- ரூ. 11 இலட்சம் செலவில் அருங்காட்சியகச் செயற்பாட்டு மையம் புத்தாக்கம்.
- ரூ.16 இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான கூடுதல் கழிவறை வசதிகள் உருவாக்கம்.
- தமிழ்நாட்டுக் கலைகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ‘பண்பாட்டுப் பலகணி’ என்ற கலாச்சார நிகழ்ச்சியை கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து சென்னை அருங்காட்சியகத்தில் 26.07.2012 முதல் வாரந்தோறும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.
- பண்பாட்டுப் பலகணி ‘இவ்வாரக் காட்சிப் பொருள், மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு கலைப் பயிற்சி அளித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் ஜுன் 2011 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகின்றன.
- புதிய திட்டங்களாக ‘நேர்நிகர் அருங்காட்சியகம்’ ‘சென்னை அருங்காட்சியகத்தைப் பற்றிய தகவல்கள் தரும் திரைப்படம்’ உயிருள்ள விலங்கினம் போன்ற டைனோசர் மாதிரி அமைப்பு உருவாக்கம்.
- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நெடுங்காலமாக சீர் செய்யப்படாமல் இருந்த தேசிய கலைக்கூடத்தினை ரூ.11 கோடி நிதி ஒப்பளிப்பில் புனரமைத்திட ஆணை.
- ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் சேமிப்பில் உள்ள கலைப்பொருட்களை காட்சிக்கு வைப்பதற்கு காட்சியமைப்புடன் கூடிய இருப்பறை கட்ட ஆணை.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளர்கள் வசதிக்காக வழிகாட்டிப் பலகைகள் ரூ.10 இலட்சம் செலவில் நிறுவுவதற்கு ஆணை.
- ரூ. 2 கோடி நிதி ஒப்பளிப்பில் அரியலூரில் புதையுயிரி படிவ அருங்காட்சியகம் அமைத்திட ஆணை.

**தொல்லியல் துறை**

- “தமிழ்நாடு புராதன ஆணையச் சட்டம்” 16.05.2012 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்டது.
- இந்திய மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்திலேயே இயங்கி வருகின்றது.

- ரூ.1.19 கோடி ஒதுக்கீட்டில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் உள் கட்டமைப்பு வசதிகள்.

- பொது மக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள சுவடிகளை நுண்படம் மூலம் பாதுகாக்க ரூ.3.54 கோடி ஒப்பளிப்பு.

- தொல்லியல் துறையின் வரலாற்றுச் சின்னங்கள், இடங்கள் மற்றும் தொல்பொருட்களைப் பற்றிய விவரங்களை சுற்றுலாத் துறையின் மாவட்ட வரைபடங்கள் மற்றும் கையேடுகளில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கல்வெட்டு நூல்கள், அகழாய்வு அறிக்கைகள், அகழ்வைப்பக கையேடுகள், கல்வெட்டு காலாண்டு இதழ்கள் என 19 நூல்கள் வெளியீடு.

- ரூ. 54.55 இலட்சம் ஒப்பளிப்பில், வரலாற்றுச் சின்னங்களில் இடிதாங்கிகள், தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டன.

- காஞ்சிபுரம்மாவட்டம்,செய்யூர்வட்டம்ஆலம்பரை கோட்டை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பல வகை பானை ஓடுகள், பீரங்கி குண்டுகள், செம்பு மற்றும் இரும்பு கசடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு கண்காட்சி நடத்தப்பட்டது.

- துறையின் செயல்திறன் மேம்படுத்துதல் (Autonomous Status) மற்றும் அவசரத் தேவைக்கான நிதி ஆதாரம் (Discretionary Fund)–இன் கீழ், இத்துறையின் சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களின் பாதுகாப்பு, பராமரிப்பு பணிகள், கல்வி சார் மற்றும் தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ள ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் வழங்கிட ஆணை.

- ரூ. 61.50 இலட்சம் செலவில், துறை வெளியீடுகள், அரிய நிழற்பட கருப்பு வெள்ளை எதிர்மறை படங்கள் (Negatives) மற்றும் நிழற்பட மெல்லிய சதுரத் தட்டு (Slides)களை எண்ணிலக்க நவீன நிழற்படங்களாக மாற்றுதல், கல்வெட்டு நூல்களை வெளியிடுதல், துறை நூலகத்தின் தரத்தை மேம்படுத்துதல், பாதுகாப்பு பணிகளுக்காக வேதியியல் பொருள்கள் வாங்குதல், நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார் பகுதியில் ஆழ்கடல் அகழ்வைப்பக கட்டடம் கட்டுதல் போன்ற பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

- சிவகங்கை, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் தொடர்ந்து கல்வெட்டுகள் மைப்படி எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 375 கல்வெட்டுகள் மைப்படி எடுக்கப்பட்டுள்ளன.

- பழம் பொருள்கள் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் 682 கலைப் பொருள்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் தமிழ் ஓலைச் சுவடிகள் 23,107 பக்கங்கள் டிஜிட்டல் படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

- 13 ஆவது நிதிக் குழு மானியம் (2011–2015)–இன் கீழ் இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 31 புராதனக் கோயில் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்புப் பணிகளுக்காக ரூ. 10 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அதில் 2011–2012 ஆம் நிதியாண்டு இரண்டு சின்னங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் ஆண்டு 16 கோயில் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் ரூ. 5.95 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாக மூன்று தட்டச்சர்கள் மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் ஒரு நிழற்படமெடுப்பவர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- அரசாணை (நிலை) எண். 47, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள். 12.03.2013–இல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக 16 தொழில்நுட்ப அலுவலர்களை முற்றிலும் தற்காலிக அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/–

வீதம் தொகுப்பூதியம் அளித்து பணி அமர்த்திட சிறப்பு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- தொல்லியல் துறையில் காலியாக இருந்த 16 தொழில்நுட்ப அலுவலர் பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக முற்றிலும் தற்காலிக அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் தொகுப்பூதியம் அளித்துப் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- விழுப்புரம் மாவட்டம் பெருமுக்கல் ஸ்ரீமுக்கியாசாலேஸ்வரர் கோயிலின் பாதுகாப்பு மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு.

- தமிழ்நாட்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் எண்ணிலக்கம்செய்யப்பட்டு அதனைக்கணினி மென்பொருள் மற்றும் வன்பொருளில் பதிவு செய்வதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- “அறிந்து கொள்ளுங்கள் உங்கள் பாரம்பரியத்தை” என்ற மாணவர் சமுதாயத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ.2 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் அமைந்துள்ள அகழ்வைப்பக வளாகத்தில் ரூ. 20 இலட்சம் மதிப்பில் “தொல் பழங்கால பூங்கா” அமைப்பதற்கு நிதி ஒப்பளிப்பு.

- மதுரை, மனோரா, தரங்கம்பாடி, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய அகழ்வைப்பகங்களுக்கு நுழைவுக் கட்டணம் வழங்க ரூ.20 இலட்சம் மதிப்பில் 8 நவீன கையடக்கக் கருவிகள் வழங்கிட ஆணை.

**இந்து சமய அறநிலையத் துறை**

- 323 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 2,197.41 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்து திருக்கோயில்களின் பெயர்களில் மீண்டும் பட்டா மாற்றம் செய்ய ஆணை பெறப்பட்டது.

- 85 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 475.99 ஏக்கர் பரப்பளவுடைய நிலங்களின் பதிவுகள் கணினி சிட்டாவில் தனியார் பெயரில் இருந்ததைக் கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- 181 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1,351.89 ஏக்கர் நிலங்களும் 170 கிரவுண்டு 2,187 சதுர அடி மனைகளும், 74 கிரவுண்டு 0447 சதுர அடி கட்டடங்களும் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு சுவாதீனம் பெறப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் ரூ.1,497.40 கோடியாகும்.

- அன்னதானத் திட்டம் 518 திருக் கோயில்களில் செயல்படுத்தப்படுகிறது. பழநி மற்றும் ஸ்ரீரங்கம் திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 100 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்திட ஆணையிடபட்டுள்ளது.

- ரூ1.98 கோடி அரசு மானியத்தில் முதுமலை தெப்பக்காட்டில் 2011இல் 37 யானைகளுக்கும் கோவை மாவட்டம் தேக்கம்பட்டியில் 2012 மற்றும் 2013இல் 68 யானைகளுக்கும் சிறப்பு நலவாழ்வு முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டன.

- ஒரு கால பூஜைத் திட்ட நிதி ஒரு கோவிலுக்கு ரூ.25,000 லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்வு. 11,931 திருக்கோயில்களுக்கு ரூ.119.31 கோடி வைப்புநிதி வழங்கல்.

- மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் வசதிக்காக, பெரிய வளாகம் உள்ள திருக்கோயில்களில் எளிய முறையில் சென்று தரிசனம் செய்ய ஏதுவாக 12 மின்கல மகிழுந்துகள் 9 திருக்கோயில்களில் பயன்பாட்டில் உள்ளன.

- 5,182 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது.

- 186 தொன்மையான திருக்கோயில்களில் பழமை மாறாது புதுப்பிக்க ஆண்டு ஒன்றுக்கு ரூ.22.50 கோடி வீதம் ரூ.67.50 கோடி வழங்கப்பட்டது.

- 82 திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

- 579 திருக்குளங்கள் ரூ.1.49 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளன.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்ட நிதிஉதவி ரூ.25,000/– லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தப்பட்டு, 1,630 திருக்கோயில்களுக்கு ரூ.8.15 கோடி வழங்கப்பட்டது.
- 1,262 கிராமப்புறத் திருக்கோயில் திருப் பணிகளுக்கு ரூ.6.31 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது.
- 2011–2013ஆம் ஆண்டுகளில் 96 திருக் கோயில்களுக்குத் திருப்பணிக்காக ரூ.6 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது. 2013 – 2014 முதல் அரசு மானியம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கோடியிலிருந்து ரூ. 6 கோடியாக உயர்த்தப்பட்டது.
- 569 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.36.13 கோடி பொது நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.
- துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் ரூ.800 லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி மொத்தம் 3,674 பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.
- அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர்கள், திவ்யப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.750/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டு, 386 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்
- துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கிராமப்புர பூசாரிகளுக்கான ஓய்வூதியம் ரூ.750/– லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது . இதன் மூலம் 2,923 பூசாரிகள் பயன்பெறுவர்.
- இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுபாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் 1,459 அர்ச்சகர்கள் மற்றும் 1,900 திருக்கோயில் பணியாளர்களுக்கு மனித நேயப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் 560 அலுவலர்களுக்கு, ரூ.2.12 கோடி செலவில் திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்து விவரங்களைச் சேகரித்து வைக்கவும், எந்த தருணத்திலும் விவரங்கள் அளிக்கத் தயார் நிலையில் இருக்க ஏதுவாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.
- திருக்கோயில் நிலங்களைக் கண்டறியும் பணிக்காக, ஓய்வு பெற்ற வட்டாட்சியர்கள் 5 பேர் மற்றும் நில அளவையர்கள் 4 பேர் பணி நியமனம்.
- ஒருங்கிணைந்த கன்னியாகுமரி திருக்கோயில் களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிருவாக செலவினத் தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தப்பட்டது.
- இந்து சமயத்தைச் சேர்ந்த சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை, எளிய 1,006 இணைகளுக்கு ரூ.15,000 மற்றும் 4 கிராம் தங்கத்துடன் 18.06.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், திருவேற்காட்டில் திருமணம் செய்து வைக்கப்பட்டது.
- மாவட்டம் தோறும் பாவை விழா நடத்தப்பட்டு கலந்து கொண்ட 9,999 மாணவ, மாணவிகளில் 1,812 மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்பட்டு, 25,920 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
- 2,777 திருக்கோயில்களில் பணிபுரியும் 3,488 சிப்பந்திகளுக்கு ரூ.1.56 கோடி சம்பள பாக்கி நிலுவை தொகை வழங்கப்பட்டது.
- பணியில் இருக்கும் போது இறந்த பணியாளர்களின் 223 வாரிசுதாரார்களுக்கு ரூ.2.14 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது.
- கருணை அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்களின் 77 வாரிசுதாரர்களுக்கு திருக்கோயில்களில் பணி நியமனம்.
- சிலைகள் பாதுகாப்பிற்காக ரூ.14.19 கோடி செலவில் தற்போதுள்ள 19 சிலை பாதுகாப்பு மையங்களுடன் புதியதாக 15 சிலை பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- மானசரோவர் புனித பயணத்திற்கு ஒரு நபருக்கு ரூ.40,000/– முக்திநாத் புனித பயணத்திற்கு ஒரு நபருக்கு ரூ.10,000/– மானியம்.
- ரூ.43 கோடி செலவில் ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி.

* * *

போக்குவரத்துத் துறை

# சிறப்பான சிற்றுந்துகள் - செம்மையான பேருந்துகள் எழில்மிகு போக்குவரத்தின் இனிமையான பயணங்கள்




- சென்னையில் மோனோ இரயில் திட்டத்தை ரூ.8,500 கோடி செலவில் முதற்கட்டமாக மூன்று வழித்தடங்களில் 57 கி.மீ. தூரத்திற்கு DBFOT முறையில் செயல்படுத்திட அரசு அனுமதி.
- ரூ.236.63 கோடி செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய ஒளி மூலம் 25 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திர நிலையம்.
- ரூ.1,026 கோடி மதிப்பில் 6,000 புதிய பேருந்துகள். இவற்றில் இதுவரை 4,179 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.
- ரூ.47.72 கோடி செலவில் 673 பழைய பேருந்துகள் புதுபிக்கப்பட்டு இயக்கம்.
- வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை 19,167 லிருந்து 20,684 ஆக உயர்வு.
- 1,426 புதிய வழித்தடங்கள் தொடக்கம்.
- மத்திய அரசின் டீசல் விலை உயர்வால் ஏற்படும் கூடுதல் செலவை மக்கள் மீது சுமத்தாமல் ஈடுசெய்ய போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.700 கோடி ஒதுக்கீடு.

- முதல்முறையாக மாற்றுத்திறனாளிகள் எளிதாக ஏறி இறங்க ஏழு சிறப்பு வடிவமைப்புப் பேருந்துகள் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகம்.
- தொலைதூரத் தடங்களுக்கு மின்னணுப் பயணச்சீட்டு முன்பதிவு முறை அறிமுகம்.
- புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க மின்னணுப் பயணச்சீட்டுக் கருவிகள் அனைத்து அரசுப் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளிலும் அறிமுகம். முன்னோட்டமாக மாநகரப் போக்குவரத்துக்கழகம் மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தொலைதூரப் பயணிகளின் வசதிக்காக தமிழகத்தின் பல்வேறு இடங்களில் 92 முன்பதிவு மையங்கள் துவக்கம்.
- நவம்பர் 2011 முதல் 37 பயணவழி உணவகங்கள் தரம் உயர்வு.
- கூடுதல் வருவாயை ஈட்டும் பொருட்டு சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவை அறிமுகம்.
- அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 50 இலட்சம் மாணவ, மாணவியருக்குக் கட்டணமில்லாக் கையடக்க இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- “விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு”முறை வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மாநகராட்சிகளிலும் ஜூன் 2012இல் அறிமுகம்.
- 45 வயதிற்கு மேற்பட்ட 21,885 ஓட்டுநர்களுக்கு முழு உடல் பரிசோதனை. 2013–2014 இல் இத்திட்டம் 45 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு ரூ.1.28 கோடியில் புதிய சி.டி. நிழல் ஒளிக்கூறு இயந்திரம்.
- விபத்தில்லாப் பணித் திட்டத்தின்கீழ், ரூ.91.52 இலட்சம் மதிப்பில் விபத்தில்லாமல் பணி செய்த ஓட்டுநர்களுக்கு ஊக்கத் தொகை.
- கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பணியாளர் ஓய்வறையில் ரூ.17 இலட்சம் செலவில் 223 இரண்டு அடுக்குக் கட்டில்.
- ரூ.301.44 கோடி மதிப்பில் 4.29 இலட்சம் தொழிலாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் மற்றும் கருணைத் தொகை.
- செப்டம்பர் 2010 முதல் அக்டோபர் 2013 வரை ஓய்வு பெற்ற 14,089 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.292.94 கோடி ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை நான்குக் கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளது.
- 47,649 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.45.77 கோடி அகவிலைப்படி நிலுவைத் தொகை மற்றும் 4,908 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.24 கோடி ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கப் பட்டுள்ளது.
- ஓய்வு பெற்ற 9,394 பணியாளர்களுக்கு பணிக்கொடையாக ரூ.312.77 கோடி வழங்கப் பட்டுள்ளது மற்றும் 4,480 பேருக்கு விடுப்புச் சம்பளம் ரூ.41.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- பண்டிகைக் கால முன்பணம் ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.
- 16,661 ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியிடங்கள் நிரப்பப் பட்டுள்ளன.
- மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள 569 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை.
- அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் 346 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- அரசுப்போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 9,157 பதிலி பணியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.
- ரூ.2.16 கோடி செலவில் பணிமனை மற்றும் பேருந்து நிலையங்களில் உள்ள பணியாளர் ஓய்வறைகள் மேம்பாடு.
- ரூ.12 கோடி செலவில் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் கான்கிரீட் தளம் அமைப்பு.



- போக்குவரத்துக் கழக மாற்றுத்திறனாளி ஊழியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் தேதி ஊதியத்துடன் சிறப்பு விடுப்பு அனுமதி.
- சாலைப் போக்குவரத்து நிறுவன பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் பட்டயப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.
- சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஈரோடு பொறியியல் கல்லூரியில் கட்டடப் பொறியியல் பிரிவிலும், தானியங்கிப் பொறியியல் பிரிவிலும் தலா 30 கூடுதல் இடங்கள் ஒதுக்கீடு.
- விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய விபத்து இழப்பீட்டுத் தொகை திட்டம் மூலம் ரூ.60 கோடி நிதியுதவி.
- நீதிமன்றப் பிணையில் இருந்த 219 பேருந்துகளை மீட்க ரூ.13.91 கோடி நிதி ஒதுக்கீடு.
- சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப்பள்ளி திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் ரூ.15 கோடி செலவில் அமைத்தல்.
- கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மின்னணு ஏல முறையில் ஏலமிடும் முறை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் அறிமுகம்.
- 68 புதிய பணிமனைகள் அமைக்க நடவடிக்கை. இதில் இதுவரை 7 பணிமனைகள் ரூ.5.57 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.
- தமிழகப் போக்குவரத்துக் கழகங்களின் 2011–2012 ஆம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டுத் திறனுக்காக மத்தியத் திட்டக்குழுப் பாராட்டு.
- ஒரு லிட்டர் எரிபொருளுக்கு பேருந்துகள் செல்லக் கூடிய இயக்க தூரம் 5.25 கி.மீ. லிருந்து 5.27 கி.மீ. ஆக அதிகரிப்பு.
- பயணிகள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாப்பான குடிநீர் குறைந்த விலையில் ஒரு லிட்டர் ரூ.10/–க்கு வழங்கிடும் அம்மா குடிநீர் திட்டம்.
- சென்னையில் பயணம் செய்யும் பொது மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் போக்குவரத்து இணைப்பில்லா பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையங்களுடன் இணைப்பதற்கு 100 சிற்றுந்துகள் (Small buses) 40 வழித்தடங்களில் இயக்கம்.



- சென்னையில் ஏற்படும் கூடுதல் போக்குவரத்து தேவையினை நிறைவேற்றும் வகையில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 134 லிருந்து 200 ஆக உயர்வு.

- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக ஸ்ரீரங்கம் சென்னை தடத்தில் உணவு வசதியுடன் கூடிய இரண்டு பேருந்துகள் தொடக்கம்.

- மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் மாநிலத்தில் பிற பகுதிகளுக்கு விரைவாக எளிதில் சென்று திரும்பும் வகையில் 250 சிற்றுந்துகள் இயக்க அனுமதி.

- அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நகரப் பேருந்துகளில் மூன்றில் ஒரு பங்கு சலுகை கட்டணத்துடன் கூடிய பயணச்சீட்டு வழங்கும் முறை புறநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் விரிவாக்கம்.

- தீபாவளி மற்றும் பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்கள் நீங்கலாக முன்பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் குறைந்த பட்சம் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் குழுமப் பயணிகளுக்கு பயணத்தொகையில் பத்து சதவீத தள்ளுபடி.

- சென்னை மாநகரப் பேருந்துகளில் கையடக்க பயண அட்டையை நடைமுறைப்படுத்த அனுமதி.

- கரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் ஊட்டியில் போக்குவரத்துக் கழக புதிய மண்டலங்கள் தொடக்கம்.

- அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் தாமாக முன்வந்து இரத்த தானம் வழங்கும் திட்டம் தொடக்கம். ஒரே நாளில் 53,129 பேர் இரத்ததானம் செய்து கின்னஸ் சாதனை செய்துள்ளனர்.

- அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி தலைமையகம் ரூபாய் ஒரு கோடி செலவில் கட்டுவதற்கு அனுமதி.

- குரோம்பேட்டை, பொள்ளாச்சி, கரூர் ஆகிய இடங்களில் கூடுதல் பேருந்து கூண்டுகட்டும் பிரிவு அமைத்திட அனுமதி.

- 13 மாவட்டத் தலைநகரங்களில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்கள் அமைத்திட அனுமதி.

❖ ❖ ❖

# ஊக்கம் தரும் திட்டங்கள்
# மாற்றுத் திறனுக்கு மரியாதை !

- 678 மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்க்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்குதல்.

- ரூ.14.31 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1,720 மாணவ, மாணவியர் மற்றும் பூவிருந்தவல்லி அரசுப் பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளியில் தொழிற் பயிற்சிப் பிரிவில் பயிலும் 55 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 4 இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- ரூ.27.65 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பார்வையற் றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பிலிருந்து 12ஆம்வகுப்பு வரை கல்வி பயிலும் 500 பார்வையற்ற மாணவ, மாணவிகள் பள்ளித் தேர்வுகள் எழுத, உதவியாளரை அமர்த்திக் கொள்ளத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு ரூ.100/– லிருந்து ரூ.250/– ஆக உயர்வு.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் சுமார் 1,340 பேர் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்துப் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக, 10 மற்றும் 11ஆம் வகுப்புகள் பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.1,500/–ம், 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவருக்கு ரூ.2,000/–மும் வழங்க ரூ.21 . 99 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/– லிருந்து ரூ.650/– ஆக உயர்வு.



- அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில், 12ஆம் வகுப்பில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கும், காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ, மாணவியருக்கு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெறுவோருக்கு ரூ.50,000/– ஆகவும், 2ஆம் இடம் பெறுவோருக்கு ரூ.30,000/– ஆகவும், 3ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.20,000/– ஆகவும், இதேபோன்று 10ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் இடம் பெறும் மாணவருக்கு ரூ.25,000/– ஆகவும், 2ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.20,000/– ஆகவும், 3ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.15,000/– ஆகவும் என ரூ.7.30 கோடி வழங்கப்படுகிறது.

- 23 அரசு சிறப்புப் பள்ளிகளுக்குச் சூரிய ஒளியின் மூலம் தண்ணீரைச் சூடேற்றும் கருவிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டன.

- பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்குவதற்காகப் பல்நோக்கு விடுதி மற்றும் நவீன சமையல் அறை புதிதாகக் கட்டுவதற்கு அங்குள்ள பிரெய்லி அச்சு இயந்திரத்தைப் பழுதுபார்க்கவும் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு.

- பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீத வீடுகள் ஒதுக்கீடு.

- தங்கும் வசதியுடன் கூடிய குறுகிய கால தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ.74.88 இலட்சம் செலவில் 2,400 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

- மாற்றுத்திறனாளிகளுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ், அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் வழங்குவதைக் கண்காணித்திட அரசுத் தலைமைச் செயலர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், 321 மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பணியாளர் தேர்வு நடத்தப்பட்டு அரசுப் பணிகளில் நியமனம்.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளை 100நாள் வேலைவாய்ப்புவழங்கும்திட்டத்தில் சேர்க்கப்பட்டுச் சலுகையாக 4 மணி நேரம் பணிகள் மேற்கொண்டவர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள ஒரு நாள் பணிக்கான சம்பளம் வழங்குதல்.

- ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 182 ஆசிரியர் பணியிடங்களுக்கு மாற்றுத்திறனாளிகள் தேர்வு.

- கடுமையாகப் பாதிக்கப்பட்ட / மன வளர்ச்சி குன்றிய / தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்வு. ஆண்டொன்றுக்கு ரூ.352.25 கோடி நிதி உதவி.

- மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச வயது வரம்பு 45லிருந்து 18ஆகக் குறைப்பு.

- மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பயன்பெற பாதிப்பு சதவீதம் 60 சதவிகிதத்திலிருந்து 45 சதவிகிதமாகக் குறைப்பு.

- தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.1,000/– வீதம் ரூ.6 கோடி செலவில் 5,000 நபர்கள் பயன்.



### திருமண உதவித் திட்டம்

- பார்வையற்ற / கை, கால் பாதிக்கப் பட்ட / செவித் திறன் குன்றிய மாற்றுத் திறனாளிகளைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்பட்டுவந்த திருமண உதவித் தொகை ரூ.25,000/– மற்றும் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு படித்திருந்தால், திருமண உதவித் தொகை ரூ.50,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும், பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை உச்ச வரம்பினை 490 என்று இருந்ததை முற்றிலுமாக நீக்கி, வருமான உச்சவரம்பின்றி தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்க வழிவகை. ரூ.6.75 கோடி செலவில் 1,796 பயனாளிகள் பயன்.

- இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட 1,800 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9.50 கோடி செலவில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்கள்.

- ரூ.1 கோடி செலவில் செவித் திறன் குறையுடைய 1,000 குழந்தைகளுக்குக் காதுக்கு பின்புறம் அணியும் நவீன காதொலிக் கருவிகள்.

- ரூ.50 இலட்சத்தில் பார்வைத்திறன் குறையுடைய கல்வி பயிலும் 500 மாணவர் களுக்குப் பாடநூல்களின் எழுத்துகளைப் பெரிதாக்கிக் காட்டி, சுயமாகப் படிக்க உதவும் கருவிகள் (Magnifier).

- மூளை முடக்குவாத நோயால் பாதிக்கபட்ட 600 பேருக்கு ஆண்டுதோறும் ரூ.36 இலட்சம் செலவில் சிறப்புச் சக்கர நாற்காலிகள்.

- கால் முட்டிக்குக் கீழ் மற்றும் கால் முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி களுக்கு மற்றும் முன் கை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு 378 பேருக்கு ரூ.1.05 கோடி செலவில் நவீன செயற்கை உறுப்புகள்.

- ரூ.10 இலட்சம் செலவில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் 5,000 நபர்களுக்கு நடப்பதற்கு உதவியாக ஒளிரும் மடக்குக் குச்சிகள் (Reflecting folding sticks).
- ரூ.72 இலட்சம் செலவில் 1,600 மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள்.
- ரூ.75 இலட்சம் மதிப்பில் மாற்றுத் திறனாளிகள் 5,388 நபர்களுக்குப் பலவகை உதவி உபகரணங்கள்.
- 18 மாவட்டங்களில் ரூ.57.02 இலட்சம் செலவில் 0–6 வயதிற்குட்பட்ட பார்வைத் திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள்.
- ரூ.2 கோடி செலவில் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு 20 சிறப்பு இல்லங்கள்.
- ஒரு குடும்பத்தில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்தால், அக்குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களும் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் வருமான உச்சவரம்பின்றி பயனடையும் வகையில் ஆணை.
- ரூ.5.21 கோடி செலவில் பரனூர், யா.புதுப்பட்டி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் இயங்கிவரும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்குப் புதிய கட்டடங்கள் மற்றும் நவீன சமையலறைகள்.

**பேருந்துப் பயணச் சலுகை**

- 11.51 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.30.64 கோடி செலவில் பேருந்துப் பயணச் சலுகை.
- செவித்திறன் குறையுடையோருக்கான ஆரம்பநிலை மண்டல பரிசோதனை மையங்களை 10 மாவட்டங்களில் நிறுவிட ரூ.1.98 கோடி நிதி ஒப்பளிப்பு.
- மாற்றுத் திறனாளிகள் குறித்த அருங்காட்சியகத்தை சென்னையில் ஏற்படுத்திட ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு.
- தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாதிரி மையம் சென்னையில் அமைத்திட ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- ரூ.21 இலட்சம் செலவில் கை, கால் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 250 நாட்களுக்கு பல்லூடகப் பயிற்சி.
- மாற்றுத் திறனாளிகள் சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் திட்டத்தில் மானியத்தை ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கிட ரூ.80 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 விழுக்காடு தொகையை அரசே ஏற்று வழங்கிட ரூ. 50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கிட ரூ.46.64 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- பார்வையற்ற மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும் வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தி வழங்கிட ரூ.80.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்குக் கல்வித் தொகை இருமடங்காக உயர்த்தி வழங்கிட ரூ.6.50 கோடி நிதி ஒப்பளிப்பு.
- 400 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 1,000 பயனாளிகள் பயன்பெற ஏதுவாக ரூ.5.50 கோடி நிதி ஒப்பளிப்பு.



- 32 மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கென நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கிட ரூ.4.49 கோடி நிதி ஒப்பளிப்பு.
- தருமபுரி மற்றும் தஞ்சாவூர் காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகள், திருச்சி மற்றும் பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள் மற்றும் தாம்பரம் சானடோரியத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் ஆகியவற்றில் சூரிய சக்தி மின் நிலையங்கள் அமைக்க ரூ.18.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- பார்வையற்றோருக்கான 4 சிறப்புப் பள்ளிகள், காதுகேளாதோருக்கான 6 சிறப்புப் பள்ளிகள், ஒரு மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி மற்றும் ஒரு கை, கால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்புப் பள்ளி என மொத்தம் 12 சிறப்புப் பள்ளிகளுக்கு சலவை இயந்திரங்கள் வாங்கி வழங்கிட ரூ.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உபகரணங்கள் மற்றும் இதர சலுகைகள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் வழங்குதல்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்படுவதை உறுதி செய்திடும் பொருட்டு மாற்றுத் திறனாளிகளுக்குப் பின்னடைவு பணியிடங்களாக 1,928 பணியிடங்கள் கண்டறியப்பட்டு சிறப்புத் தேர்வின் மூலம் நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது.
- தொகுதி ‘அ’மற்றும் ‘ஆ’ பிரிவு பதவிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 170 பணியிடங்கள் உகந்த பணியிடங்களாகக் கண்டறிப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

# தங்கம் வெல்வது இலட்சியம் தரணியை வெல்வது நிச்சயம் !

- ஒலிம்பிக்கில் தங்கம் வெல்பவருக்கு பரிசுத்தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்வு.
- ஆசிய, தெற்காசிய, காமன்வெல்த், விளையாட்டுப்போட்டிகளில்தங்கப்பதக்கம் வெல்பவர்களுக்கு ஊக்கத்தொகை ரூ.50 இலட்சம், வெள்ளி வெல்பவர்களுக்கு ரூ.30 இலட்சம், வெண்கலம் வெல்பவர்களுக்கு ரூ.20 இலட்சமாக ஊக்கத் தொகை உயர்வு.
- சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் ரூ.1.70 கோடி செலவில் அமைப்பு.
- ரூ.45 இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.
- நலிந்த நிலையில் உள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம் ரூ.1000/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்வு.
- தினப்பயிற்சித் திட்டம் மற்றும் வார இறுதி பயிற்சித் திட்டத்திற்கு ரூ.69.32 இலட்சம் ஒதுக்கீடு.
- தேசிய மாணவர் படை கப்பற்படை அலகு மிதவைப் பயணப் போட்டிக்கான நிதி ஒப்பளிப்பு ரூ.2 இலட்சமாக உயர்வு.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிற்றுண்டிப் படி ஒரு மாணவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.3/–லிருந்து ரூ.10/– ஆக உயர்வு.
- தேசிய மாணவர் படை குடியரசு தின முகாம்கள் செலவினம் ரூ.31.50 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்வு.



➢ தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்களுக்கான தமிழக அரசு ஊக்கத்தொகை 100 முதுநிலை மாணவ, மாணவியர்களுக்கு ரூ.200/– வீதம் 10 மாதங்களுக்கும், 100 இளநிலை மாணவ, மாணவியர்களுக்கு ரூ.100/– வீதம் 10 மாதங்களுக்கும் உயர்த்தப்பட்டது.

➢ 2012–2013இல் தேசிய அளவிலான பைக்கா போட்டிகளில் தமிழக அணி ஒட்டுமொத்த சாம்பியன் பிரிவில் இரண்டாம் இடம்.

➢ அனைத்து விளையாட்டுக் களிலும் பயிற்சி அளித்திட கூடுதலாக 79 பயிற்றுநர்கள் நியமனம்.

➢ சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் ரூ.2 கோடி நிதி உதவியுடன் நடத்தப்பட்டன.

➢ ஜார்கண்டில் நடைபெற்ற 34 ஆவது தேசியப் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ரூ.30 இலட்சம் ஊக்கத் தொகை.

➢ 5ஆவது முறையாக உலக சதுரங்க வாகையராக வெற்றி பெற்ற திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு ரூ.2 கோடி ரொக்கப் பரிசு.

➢ திருச்சிராப்பள்ளியில் செயற்கை இழை தடகள ஓடுபாதைக்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு.

➢ மதுரையில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளத்திற்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு.

➢ ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற வாய்ப்புள்ள தலைசிறந்த 5 விளையாட்டு வீரர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.25 இலட்சம் உதவித் தொகை.




➢ 10 மாவட்டங்களில் தலா ரூ.1.50 கோடியில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள்.

➢ நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தலா ரூ.2 கோடியில் நீச்சல் குளங்கள் அமைக்க ஒதுக்கீடு.

➢ உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ.70 இலட்சம் ஒதுக்கீடு.

➢ சென்னை தவிர இதர மாவட்டங்களில் கிராமம் ஒன்றில் கிராம விளையாட்டு மையம் அமைக்க ரூ.62 இலட்சம் ஒதுக்கீடு .

➢ குடியரசு தின விழா முகாம் மற்றும் அதைச்சார்ந்த முகாமில் பங்கேற்கும்தேசியமாணவர்படைமாணவ,மாணவியர்களுக்கு ரொக்க ஊக்க தொகை ரூ.5,80,400/–ஆக உயர்வு.

➢ கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.25.05 கோடி ஒதுக்கீடு.




- கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர், திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதிகள் ரூ.4.15 கோடி ஒதுக்கீடு.
- உலகத்திறனாளர்களைக்கண்டறியும்திட்டத்தில் 3,240 திறமைமிக்க விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.6,000/– ஊக்க உதவித் தொகை.
- ரூ.33.60 கோடி செலவில் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் உள் விளையாட்டரங்கில் உள்கட்டமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மற்றும் பயிற்சி ஓடுபாதை அமைப்பு.
- அரியலூர், நாமக்கல், சிவகங்கை, தேனி, பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.5.04கோடி செலவில் புதிய விளையாட்டு விடுதிக் கட்டடங்கள்.
- விருதுநகரில் ரூ.80 இலட்சம் செலவில் நீச்சல் குளம்.
- ரூ.7 கோடி செலவில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் செயற்கை இழை வளைகோல் பந்து மைதானம்.
- 2012 இல் ரூ.5.52 கோடி செலவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.
- தேனியில் கட்டப்பட்டு வரும் நீச்சல்குளப் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் நிதியாக ரூ.72.50 இலட்சம் ஒதுக்கீடு.
- ரூ.4.50 கோடி செலவில் சென்னை டென்னிஸ் விளையாட்டரங்கம் மேம்படுத்துதல்.
- ரூ.30 இலட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் மாற்று திறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.25 இலட்சம் செலவில் கடற்கரை மாவட்டங்களில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.
- 2013– 2014 இல் ரூ.8.09 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.36.88 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில் பல்நோக்கு ஊடக வகுப்பறை.
- ரூ.2.20 கோடி செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில் விளையாட்டு அறிவியல் மையம்.
- ரூ.20 இலட்சம் செலவில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்குப் பயிற்சிக்காக எடை குறைந்த சரி நுட்பத் திறன் வாய்ந்த நவீனரகத் துப்பாக்கிகள் வாங்குதல்.
- கடற்படை என்.சி.சி. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கப்பல் மாதிரி வடிவமைப்பு மானியம் கல்லூரி ஒன்றுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– மற்றும் பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.
- விமானப் படை என்.சி.சி. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு வானூர்தி மாதிரி வடிவமைப்பு மானியம் கல்லூரி ஒன்றுக்கு

ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– மற்றும் பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.

- 'பிடே' உலக சதுரங்க வாகையர் போட்டிகள் ரூ.29.15 கோடி செலவில் சென்னையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.
- குடிசைப் பகுதி மக்களுக்கு விளையாட்டு வசதிகளை உருவாக்கிட ரூ.26.44 இலட்சம் ஒதுக்கீடு.
- சென்னை பல்நோக்கு விளையாட்டரங்கில் குளிர் சாதனம், மின் விளக்குகள் போன்றவற்றை மாற்றுவதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு.
- சென்னை ஓப்பன் சூப்பர் பேட்மின்டன் போட்டிகள் நடத்துவதற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு.
- மாநில அளவிலான குடிமைப்பணிகள் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.40.36 இலட்சம் ஒதுக்கீடு.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தவும், உடற் பயிற்சிக்களம் அமைத்திடவும் ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு.
- 2010இல் சீனாவில் நடைபெற்ற பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் மாற்றுத் திறனாளி களுக்கான வாள்வீச்சுப் போட்டியில் வெண்கலம் வென்ற திரு.எஸ்.நூருதீன் அவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- 2010இல் ஜெர்மனியில் நடைபெற்ற உலகக் கோப்பை டென்னிகாய்ட் விளையாட்டுப் போட்டியில்வெண்கலம்வென்றதிரு.G.நாராயண சூர்யா அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- 2010 இல் சீனாவில் நடைபெற்ற 16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.13.50 இலட்சம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- 2010 இல் புது டில்லியில் நடைபெற்ற 19ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.16.50 இலட்சம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- 2009 இல் மலேசியாவில் நடைபெற்ற 2ஆவது இளையோர் ஆசிய மாணவ, மாணவிகள் கபாடி சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற செல்வி. ஆர்.எம்.பியாரா அவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.5 இலட்சம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- தலைமைச் செயலக ஊழியர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- ஒப்பந்த பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் ரூ.8,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.
- சென்னை மற்றும் திருச்சி விளையாட்டரங்கில் இருப்பிடம், உணவருந்துமிடம் மற்றும் சமையலறை வசதிகள் செய்ய ரூ.3 கோடி ஒதுக்கீடு.
- ரூ.1.50 கோடி செலவில் ஸ்ரீரங்கம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய ஊர்களில் உலகத்தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்க ஆணை.
- சிறப்பு விளையாட்டு விடுதிகள் மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கான உணவுப்படி ரூ.250 ஆக உயர்வு.
- ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஒருங்கிணைந்த விளையாட்டரங்கம் அமைப்பதற்காக ரூ.12 கோடி ஒதுக்கீடு.
- விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெறுவோருக்கான சத்துணவு சமச்சீர் உணவுப்படி ரூ.75லிருந்து ரூ.250 ஆக உயர்வு.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டரங்கங்களை புனரமைக்க ரூ.5 கோடி மானியம்.
- சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம் அமைத்திட ரூ.3.50 கோடி ஒதுக்கீடு.
- உலகக்கோப்பை கபடிச் சேம்பியன்ஷிப் போட்டிகளை சென்னையில் நடத்துவதற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு.
- மதுரையில் தேசிய மாணவர் படைக்கென தனியாகப் பயிற்சி அகாடமி அமைத்திட ரூ.12 கோடி ஒதுக்கீடு.

❖ ❖ ❖

# சட்டக் கல்வி மேம்பாட்டுக்கு திட்டமிட்ட செயலாக்கம் !

- ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்துகொள்ளத் தேர்வான டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியினை சார்ந்த 12 மாணவர்களுக்காக, ரூ.9 இலட்சம் உதவித்தொகை.

- அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாஷிங்டன்னில் நடைபெற்ற பிலிப் சி. ஜெசப் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தேர்வான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியினைச் சார்ந்த 5 மாணவர்களுக்கு ஒரு சிறப்பு நேர்வாக, தலா ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 5 இலட்சம் உதவித்தொகை.

- சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி வழங்கிட ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் தேசிய சட்டப்பள்ளி நிறுவிட, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/2012) இயற்றப்பட்டு ரூ.75 கோடி மதிப்பில் நிறுவப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.8.2013 அன்று திறக்கப்பட்டது.

- தமிழகத்தில், தனியார் சுயநிதி சட்டக் கல்லூரிகள் துவங்குவதற்கான தடையில்லா சான்றிதழ் பெறுதலுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு ஆணை.

- அரசு சட்டக் கல்லூரிகளுக்கு பகுதி – II திட்டத்தின் கீழ் புத்தகங்கள் வாங்க ரூ.21 இலட்சமும், திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள், பேராசிரியர் அறைகள்



மற்றும் சிறிய கருத்தரங்கக் கூடம் கட்டுவதற்கு ரூ.85.58 இலட்சமும், மற்றும் விடுதி கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்திட ரூ. 13.68 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.



- சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியின் முழுநேர உறைவிட காப்பாளருக்கான குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்கு பகுதி – II திட்டத்தின் கீழ் ரூ.9 இலட்சமும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் உணவு விடுதியின் மீது விருந்தினர் அறைகள் கட்டுவதற்காக ரூ.13,40,000/– நிதி ஒதுக்கீடு.
- அரசு சட்டக் கல்லூரிகளில் 13 பேர் விரிவுரையாளர்களாக நியமனம்.
- சட்டத்துறையின் அலுவலக மற்றும் பிரிவு களுக்கு 25 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கும் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு.
- சட்டத்துறையின் பிரிவுகளுக்குச் சிற்றறைகள் அமைப்பதற்கு ரூ.9 இலட்சம் ஒப்பளிப்பு.
- திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதியில் இரண்டாம் தளம் கட்டுதல், மாதிரி நீதிமன்றம் மற்றும் கூடுதல் இரு சக்கர வாகனம், மிதிவண்டி நிறுத்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.92.57 இலட்சம் ஒப்பளிப்பு.
- சட்டக் கல்வி இயக்குநரகத்திற்குக் கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கிட ரூ.9.50 இலட்சம் ஒப்பளிப்பு.
- செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு குளிர்மையான குடிநீர் வழங்க குளிரூட்டும் உபகரணங்கள் வாங்கிட ரூ.1.30 இலட்சம் ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கணினிகள், மடிக்கணினிகள், அச்சுப் பொறிகள், நகல் பெருக்கிகள் மற்றும் தொலை நகலிகள் வாங்கிட ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக மாற்றி ஆணையிடப்பட்டு, அக்கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்ட அப்பல்கலைக் கழகத்தால் செலவிடப்பட்ட தொகை ரூ.1.72 கோடியை அப்பல்கலைக் கழகத்திற்கு வழங்கிட ஆணையிடப்பட்டது.
- அரசு சட்டக் கல்லூரிகளில் 2012–2013 ஆம் கல்வியாண்டில் மணிநேர அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வரும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும்

மதிப்பூதியம் ரூ.10,000/- லிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.

- சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்களுக்கு 2012 மார்ச் மற்றும் 2013 மார்ச் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறுகின்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்ளத் தேர்வான 14 மாணவர்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் ரூ.10.50 இலட்சத்தை ஒப்பளித்து ஆணை.

- வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தர கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.6.88 கோடி செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டடம் கட்டும் பணிக்கு ரூ. 1.72 கோடி நிதி ஒப்பளிப்பு.

- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு பெருங்குடி கொட்டிவாக்கம் கிராமத்தில் ஒரு முழுமையான வளாகக் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.59.27 கோடி நிதி ஒப்பளிப்பு.

- தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி மாணவர் சேர்க்கையில் இனவாரியான ஒதுக்கீடு செய்திட ஆணை.

- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் செயல்பாட்டிற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கி ஆணை.

- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் ஆசிரியர் தேர்வு தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து ஆணை.

- மதுரை அரசு சட்டக் கல்லூரியில் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் சட்டம் சார்ந்த பட்டய மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு பயிலகம் நிறுவிட அனுமதியளித்து ஆணை.

- தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அலுவலர்களை அனுமதித்தும் மற்றும் அப்பள்ளிக்கு மானியமாக ரூ. 4.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை.

- மதுரை அரசு சட்ட கல்லூரி மாணவியர் விடுதி கூடுதல் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.56.63 இலட்சம் ஒப்பளித்து ஆணை.

- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் தடயவியல் ஆய்வுக்கூடம் நிறுவிட ரூ.10 இலட்சமும், சட்டகல்வியறிவு இயக்க தனிப்பிரிவு நிறுவிட ரூ.30 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு.

- சட்டக் கல்வித்துறையிலுள்ள சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக்கல்லூரிகளில் எம். எல். பட்ட மேற்படிப்பிற்கு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்களை 15–லிருந்து 20 ஆக உயர்த்தி ஆணை.

- தலைமைச் செயலகம், சட்டத்துறையில் அச்சுப் பொறி இயந்திரங்கள், இரண்டு நகலி இயந்திரங்கள் வாங்கிட ரூ.7 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு பி.ஏ., பி.எல்., (ஹானர்ஸ்) சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தை சேர்ந்த முதல் பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை வழங்கிட ஆணை.

- தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியின் பொது கழகம், நிருவாகக் கழகம், கல்விக் கழகம் மற்றும் நிதிக்கழகம் ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டது.

- தமிழ்நாடு மாநில சட்ட ஆணையம் அரசால் திருத்தியமைக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் தலைவராக ஜார்கண்ட் மாநில உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி, நீதியரசர் திரு. என். தினகர் அவர்களை நியமித்து அரசு ஆணை. மேலும் திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் உறுப்பினர்களாக 3 ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற சட்டத்துறை கூடுதல் செயலாளர்கள் இருவர் என ஐவர் நியமனம்.

❖ ❖ ❖

பொதுத்துறை

# தியாகிகள் - தீரர்கள் நலம் பேணும் திட்டங்கள் !





- விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் 15.8.2012 முதல் ரூ. 5,000/– லிருந்து ரூ. 7,000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.2,500/– லிருந்து ரூ.3,500/– ஆகவும், 1.8.2013 முதல் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.7,000/–லிருந்து ரூ.9,000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.3,500/– லிருந்து ரூ.4,500/– ஆகவும் உயர்வு.
- விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவப்படி 14.9.2011 முதல் ரூ.15/– லிருந்து ரூ.100/– ஆகவும், 15.8.2012 முதல் ரூ.100/– லிருந்து ரூ. 500/– ஆக உயர்வு அரசு மருத்துவமனைகளில் "அ" வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சை, புதிய மருத்துவமனைகளில் உயர்தர சிகிச்சை.
- வீரபாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்கள், மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித் தோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நேரடி வாரிசுப் பேரன் திரு. ஆ.உலகநாதன் ஆகியோருக்கு வழங்கப் பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் ரூ.1,000/– லிருந்து ரூ.2,000/– ஆக உயர்வு.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களில் வீர தீரச் செயல்கள் / சிறப்பாக பணிபுரிந்தமைக்கான விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு வழங்கப்படும் பணமுடிப்பு மற்றும் நிலம்



வழங்குவதற்குப் பதிலாக வழங்கப்படும் பணப் பயன்கள் உயர்வு

- கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.
- படைப்பணியில் உயிர்நீத்தோரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதற்கான நடைமுறை எளிமைப் படுத்தப்பட்டு 90 நபர்களுக்கு அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு.
- 273 முன்னாள் படைவீரர்கள், பல்வேறு அரசு / தனியார் நிறுவனங்களில் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மூலமாக பணியமர்த்தம்.
- முன்னாள் படைவீரர்களின் பெயர்களைப் பதிவு செய்தல், பணியிலமர்த்துதல் மற்றும் நலத்திட்டங்களை நிருவகித்தல் ஆகியவற்றை முறைப்படுத்த முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசிய தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் அறிமுகம்.
- இரண்டாம் உலகப் போர் மாதாந்திர மானியங்கள் படைவீரர்களுக்கு ரூ.2,000/– லிருந்து ரூ.3,000/– ஆகவும், படைவீரர்களின் கைம்பெண்களுக்கு ரூ.1,500/– லிருந்து ரூ. 2,000/– ஆகவும் உயர்வு.
- வேலூரில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் முன்னாள் படைவீரர் மையக் கட்டடம் கட்டும் பணி ஆரம்பம்.
- தருமபுரி, நாமக்கல் திருவாரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்குப் புதிய முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் தோற்றுவிப்பு.
- முன்னாள் படை வீரர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு மின்திருட்டு தடுப்புப் படையில் முன்னாள் படைவீரர்களை பணியமர்த்த வழிவகை செய்யப்பட்டு, அதன் விளைவாக இதுநாள் வரை 200 முன்னாள் படைவீரர்கள் 2011 ஆம் ஆண்டு முதல் பணியமர்த்தம்.
- ரூ.25 இலட்சம் செலவில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ரூ.3 இலட்சம் வரை பயன்பெறும் வகையில் 'பணியாளர்கள் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்' அறிமுகம்.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு பல்வேறு பணிகளில் சிறப்புப் பயிற்சிகள்.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலம் தொகுப்பு ஊதியத்தில் பணி புரியும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தில் 10% உயர்வு.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலமாக 1,168 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தம்.
- 9,200 பணியாளர்கள் பயனடையும் வகையில் ரூ.65 இலட்சம் செலவில் இலவச சீருடை.
- 62 முன்னாள் படைவீரர்களின் குடும்பங்கள் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் ஈட்டுறுதி காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.5,000 முதல் ரூ.1,32,000 வரை இழப்பீட்டு தொகை.
- ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.1.78 கோடி முதலீட்டுடன் குழு ஓய்வூதிய நலத்திட்டம்.
- படைப்பணியில் உயிர்நீத்தோரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும், படைப்பணியில் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை முறையே ரூ. 3 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாகவும், ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும் உயர்வு.
- இராணுவத்திலும், எல்லைப் பாதுகாப்புப் படையிலும் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களுக்கு தற்போது வழங்கப்படும் நிதி உதவித் தொகை போன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து வகையிலான துணை நிலை இராணுவப் படையினருக்கும் வழங்க ஆணை.

**இலங்கைத் தமிழர் நலன்**

- தமிழகத்தில் உள்ள 113 முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் மற்றும் வெளிப்பதிவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீட்டித்த மற்றும் உயர்த்தப்பட்ட நிவாரண திட்டங்கள் பின்வருமாறு :–
- தமிழக மக்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டங்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிப்பு.
- விலையில்லா அரிசி, மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழ் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.
- இலங்கை தமிழ் அகதிகள் முகாம்களில் வசிக்கும் மற்றும் முகாம்களுக்கு வெளியே வெளிப்பதிவில் வசிக்கும் அனைவருக்கும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நீட்டிப்பு.
- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்திற்கு ரூ. 50,000/– எனவும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ. 25,000/– எனவும், ஒவ்வொரு குழந்தையின் மீதும் 20 வருடங்களுக்கு வைப்பீடு என்ற திட்டத்தின் கீழ் ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் 66 பெண் குழந்தைகளின் பேரில் நிதி வைப்பீடு.
- சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகள், முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மணமாகாத முதிர் கன்னிகள் 3,808 பேருக்கு தலா ரூ. 1,000/– மாத ஓய்வூதியம்.
- முகாம்களில் உள்ள தையல் கலை தெரிந்த 3,719 பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
- +2 பயிலும் 724 மாணவ / மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள்.
- அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியருக்கு சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, புத்தகப்பை, கணித

உபகரணப் பெட்டிகள்(Geometric box) மற்றும் மிதிவண்டிகள் (440 எண்ணிக்கை)

- முகாம்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்.
- ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறியியல் கல்வி பயின்று வரும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் உள்ள முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ, மாணவியர்களுக்கு 18 பேர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை.
- பொதுப்பிரிவின் கீழ் தகுதியின் அடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பில், இளநிலை மற்றும் முதுநிலை கல்வியைத் தொடர இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அனுமதி.
- முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியர், நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.இ/பி.டெக்/எம்.பி.ஏ/எம்.டெக்/எம்.ஆர்க் பட்டப்படிப்புகளுக்குத் தகுதியின் அடிப்படையில் பொதுப்பிரிவின் கீழ் அனுமதி.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையி னருக்கான 2,532 நல விடுதிகளில் தலா 5 இடங்கள் கூடுதலாக உருவாக்கி முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியருக்கு ஒதுக்கீடு.
- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவி ரூ. 6,000/– லிருந்து ரூ. 12,000/– ஆக உயர்வு. 2,083 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் பட்டம் / பட்டயம் பயின்ற பெண்களுக்கு ரூ. 50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம். இதரப் பெண்களுக்கு ரூ. 25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம். 290 பெண்கள் பயனடைந்துள்ளனர்.
- முகாம் வாழ் இலங்கைத்தமிழ்க் குடும்பங் களுக்கு மாதாந்திரப் பணக்கொடை குடும்பத் தலைவருக்கு ரூ. 400/– லிருந்து ரூ. 1,000/– ஆகவும், பெரியவர்களுக்கு ரூ. 288/– லிருந்து ரூ.750 ஆகவும் 12 வயதுக்கு உட்பட்ட சிறியவர்களுக்கு ரூ.180/- லிருந்து ரூ. 400/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 66,918 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இறந்தவர்களுக்கான ஈமக்கிரியை நிதி உதவி ரூ. 2,500/– லிருந்து ரூ. 5,000/– ஆக உயர்வு. 226 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.
- முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து, முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் விபத்து காரணமாக இறப்பவருக்கு வழங்கப்படும் நிவாரணநிதி ரூ. 15,000/– லிருந்து ரூ. 25,000/– ஆக உயர்வு. 11 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.
- இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்படும் 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 10,000/– வீதம் ரூ. 41.60 இலட்சம் சுழல் நிதி.
- ரூ.25 கோடி செலவில் இலங்கைத் தமிழர் முகாம்களில் அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் மேம்பாடு.
- ரூ.19.86 கோடி ஒதுக்கீட்டில் 1,655 புதிய நீடித்து நிலைக்கும் வீடுகளுக்கான கட்டுமானப்ப ணிகளுக்கான ஆணை.
- இயற்கை இடர்பாடுகள், தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் ஏற்படும் பொருட்சேதத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தொகை முழுமையான சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.5,000/- ஆகவும், பகுதியாக சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.1,000/- லிருந்து ரூ.2,500/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ரூ.100 ரொக்கத் தொகை உள்ளடக்கிய ரூ.152 மதிப்பிலான பொங்கல் பரிசு அனைத்து முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்க ஆணை.

❖ ❖ ❖

## சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை

# இல்லத்தரசிகளின் சுமை நீக்கும்
# இனிய மாணவர்க்கு நலம் சேர்க்கும்!



- அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்திட முதன்முறையாக தனித்துறை உருவாக்கம்.

**விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கல்**

- மகளிரின் குடும்பப் பணிச்சுமையைக் குறைக்க ரூ. 4,380.20 கோடி நிதி ஒதுக்கீட்டில், 1.85 கோடி பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில், விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் படிப்படியாக வழங்க வகை செய்யப்பட்டு, இதுவரை 89.84 இலட்சம் பெண் பயனாளிகளுக்கு விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மாணவ / மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கல்**

- ரூ.4,265.44 கோடி நிதி ஒதுக்கீட்டில் 16.18 இலட்சம் மாணவ/மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. ❖

# ஜனநாயகத்தின் பெருமை மக்களாட்சியின் மகிமை !




- பாரம்பரியம் மிக்க புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 23.5.2011 முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மீண்டும் கூடத் தொடங்கியது.

- சட்டமன்றப் பேரவை வளாகத்தில் ஆண் மற்றும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென தனித்தனியே குளிர்சாதன வசதி கொண்ட நவீன ஓய்வறைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8.8.2011 அன்று திறப்பு.

- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற பெண் உறுப்பினர் களுக்கென தனியே நவீன உடற்பயிற்சிக் கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1.2.2012 அன்று தொடக்கம்.

- சட்டமன்ற வைர விழாவையொட்டி, சட்டமன்ற வரலாற்றுப் பதிவுகள் அடங்கிய கவின்மிகு புகைப்படக் கண்காட்சி 23.11.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு ஒரு வார காலம் நடைபெற்றது.

- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 30.11.2012 அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது முன்னிலையில் நடைபெற்ற வைர விழா நிகழ்ச்சியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு

உரையாற்றியதோடு சென்னை அரசினர் தோட்டத்தில் கட்டப்படவுள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் விடுதிக்கு அடிக்கல் நாட்டினார்.

- தொகுதி சீரமைப்பின் காரணமாக ரூ.3.81 கோடி செலவில், மாவட்டங்களில் 28 புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள்.
- சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேரவை நிகழ்ச்சி நிரல், வினாக்கள் பட்டியல், கொள்கை விளக்கக் குறிப்புகள், பேரவைச் செய்தித்தாள் உள்ளிட்ட ஆவணங்கள் அஞ்சல் மூலமும் 2011ஆம் ஆண்டு முதல் மின்னஞ்சல் மூலமும் அனுப்பும் முறை தொடக்கம்.
- பேரவைக் கூட்டத்தின்போது உறுப்பினர் களும் பத்திரிகையாளர்களும் தங்களது கைப் பேசிகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள பெட்டக வசதி உருவாக்கம்.
- சட்டமன்றப் பேரவை வளாகத்தில் பி.எஸ்.என். எல். நிறுவனத்தின் ஸ்மார்ட் பே ஃபோன் வசதிகள்.
- ரூ.11.82 இலட்சம் செலவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு C.C.T.V. கேமிராக்கள்.
- ரூ.19.05 இலட்சம் செலவில் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச்சுவர்.
- ரூ.73.35 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள சாலைகள் மின் விளக்கு வசதியுடன் சீரமைப்பு.
- சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மடிக்கணினி / மேசைக்கணினி, அச்சு இயந்திரம் மற்றும் இணைய டேட்டா கார்டு வழங்கும் திட்டத்தை 17.10.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.
- பேரவை விதி 110 இன் கீழ், 19.02.2014 வரையில் 110 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மருத்துவப்படித் தொகை, ரூ.10,000/–லிருந்து ரூ.12,000/– ஆக 1.04.2013 முதல் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டுகிறது.
- வெளிமாநிலங்களிலிருந்து வரும் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள, சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புத் வளாக தொகுப்புகளிலுள்ள 10 குடியிருப்புகளுக்கு, நிரந்தர குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூ.1.86 இலட்சம் செலவிலும், கண்ணாடியுடன் கூடிய 10 டிரஸ்ஸிங் டேபிள் ரூ.1.65 இலட்சம் செலவிலும், கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகப் பாதுகாப்பு கருதி, வெளிநபர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தாமலிருக்க, இரும்புக் கதவு மற்றும் காவல் சாவடி ரூ.3 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

✶ ✶ ✶

## எனது இலக்கு

தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிப் பெற்ற ஒரு முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என்னுடைய குறிக்கோள் அல்லது கனவாகும். அதனைச் செயல்படுத்துகின்றபோது கனவுகள் உண்மையாகும். முறையாகத் திட்டமிடப்பட்டால் அதுவே பாதி இலக்கை அடைந்தது போல் ஆகும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

“தமிழகமே எனது குடும்பம்.
தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்.
தமிழக மக்களின் நலனே என் நலன்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



**தமிழரசு**